௨௯

ஜீவகவி : தந்தை பெரியார்

மாநாட்டு நினைவு வெளியீடு

12.1.05

JL
R 34ப N29
N29
139520




JL
R34 ഴ m79
N79.
139520

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளில்
பொதுமக்களுக்கு எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள் !



பஸ் ரூட்கள் :

தஞ்சை To ஒரத்தநாடு

தஞ்சை To ராஜாமடம்

தஞ்சை To பூண்டி மாதாகோவில்

M/s. மாரியப்பா பஸ் சர்வீஸ்

பார்ட்னர் : K. வடுகநாதன் B. com.,

காளி மார்க் சோடா கலர் கிரஷ்
பானங்கள்

ஏஜண்ட் : K. சந்திரமோகன்

PHONE : 317

1275, பழைய நெல்லுமண்டித் தெரு,
கீழவாசல், தஞ்சாவூர்.

# நினைவிடம் நோக்கி...



நம்மை 'மானமும் அறிவும்' உள்ள மனிதராக்க தனது ஒரு நூற்றாண்டு வாழ்வையும் அர்ப்பணித்த அந்த வரலாற்றுத் தலைவருக்கு வையத்தில் இன்று நூற்றாண்டு நிறைவு விழா !

நமக்கு, அவரின்றி—வேறு தலைவரில்லை.
அவர் கொள்கையன்றி—வேறு கொள்கை தெரியாது.
அவர்விட்ட பணியன்றி—நாம் தொடர வேறு பணி ஏது ?
அவர் பாதை—நம் பாதை !

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளி எல்லார்க்கும் எல்லாம் கிட்ட, இமயமாய் தொண்டு செய்த ஏந்தலின் நூற்றாண்டு நிறைவு விழாவில் அவர் கொள்கைக்கு நிறைவு காணும் வகையில் ஒய்தல் இன்றி, தலை சாயுதல் இன்றி உழைப்போம்! கடுமையாக உழைப்போம்! இன்னல் எது வரினும் இன்முகத்துடன் ஏற்று உழைப்போம் !

எங்களை ஆட்கொண்ட தலைவனே, தத்துவமே ! எங்கள் பேறே, எங்கள் வாழ்வே, எங்கள் வளமே வாழி ! வாழி ! !

ஆசிரியர்,
"விடுதலை"

சென்னை
17-9-79



# மலரினுள்ளே ...!


1. நினைவிடம் நோக்கி ... 1
2. கொள்கை நிறைவு காணும் வரை ஓயமாட்டோம்
—கி. வீரமணி, பொதுச்செயலாளர், திராவிடர் கழகம் ... 3
3. தன்னைப்பற்றி தந்தை பெரியாரின் கருத்துக்கள் ... 9
4. அந்த 125 — நாகை, என். பி. காளியப்பன் ... 20
5. ஆதரித்த நேரத்தில் கிளர்ச்சிகள் ! ... 21
6. அறிவுலக சக்கரவர்த்தி அய்யா !—டாக்டர் கலைஞர் ... 25
7. பெரியாரின் எண்ணங்கள்—ஒரு புரட்சிக்கனல் ! — பேராசிரியர் க. அன்பழகன் ... 27
8. எங்கள் கொடி !—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ... 30
9. தந்தையுடன் சில சந்திப்புகள் !—மலேசிய தி.க. தலைவர் கே. ஆர். ராமசாமி ... 31
10. ஆராய்ச்சியாளர் அணுகும் அய்யா ... 33
11. பெரியார் கண்ணோட்டத்தில் நிலவும் பொதுவுடைமையும்—மார்டின் டெய்லர் ... 34
12. அய்யா தொடுத்த முதல் இந்திப் போர் !—ஆ தங்கராஜ் ... 37
13. பெரியாரும் தமிழகமும்—சே. இராசேந்திரன் ... 41
14. பெரியாரின் மொழிக்கோட்பாடு—அஞ்சலா ரிச்சர்டு ... 44
15. பெரியாரின் வீச்சும் கலைஞரின் படைப்பும்—மு. சரோஜா ... 47
16. தந்தை பெரியார் நூற்றாண்டு விழா படத்தொகுப்பு ... —
17. பெரியாரும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமும் ஓர் ஆய்வு—கே. எல் கருப்பசாமி ... 49
18. பாரதிதாசன் கதைப்பாடல்களில் திராவிடர் கழகத்தின் வீச்சு !—டாக்டர் இளங்கோ... 52
19. ஒப்பீட்டுப்பார்வை—தந்தை பெரியாரும் சமகாலத்தலைவர்களும் ... 55
20. ஆரியர் வெறுத்த சீரியர் தந்தை பெரியாரும்—அய்ன்ஸ்டைனும்—பி குமாரசாமி ... 56
21. பெரியாரும் மாவோவும்—புரட்சி வண்ணன் ... 58
22. தந்தை பெரியாரும் பெர்ட்ரண்டு ரஸ்ஸலும்—பி. எஸ். சந்திரபாபு ... 61
23. தந்தை பெரியாரும் பெர்னாட்சாவும்—பாதரசம் ... 65
24. பெரியாரும் அம்பேத்கரும்—எம். கந்தசாமி ... 69
25. போராட்டவீரர் !—கவியரசு முடியரசன் ... 72
26. தந்தை பெரியாரின் பயணக் கட்டுரைகள் ... 73
27. பெரியாரின் மனிதன்—பேராசிரியர் மா. நன்னன் ... 79
28. ஒரு தோழரின் கடிதத்திற்கு தந்தை பெரியாரின் பதில் ! ... 83
29. தந்தை பெரியார் நூற்றாண்டு விழா படங்கள் ... —
30. கடந்த ஆண்டில் கழக டைரி ... 89
31. வகுப்புரிமை பெற்றே தீருவோம் !—தந்தை பெரியார் ... 150
32. வகுப்புக்கு ஏற்ற நீதி—பேரறிஞர் அண்ணா ... 151
33. தந்தை பெரியார் நூற்றாண்டு விழா படங்கள் ... —
34. தந்தை பெரியார் பற்றி திரு. வி. க. ... 153
35. ஞாயிறு ஒன்றே ஒன்று !—நெ. து. சுந்தரவடிவேலு ... 155
36. திரிபு வாதங்கள்—என். எஸ். சம்பந்தம் ... 159
37. தமிழகத்தின் நல்வாழ்வுக்கான ஒளி !—பேராசிரியர் ந. இராமநாதன் ... 161
38. பெரியாரே பெரியார் !—சங்கமித்ரா ... 163
39. எதனால் பெரியாருள் பெரியார் ?—என். செல்வேந்திரன் ... 167
40. பெரியார் ஒரு சகாப்தம்—அண்ணாமலை பல்கலைக் கழக துணை வேந்தர்
—ஜஸ்டிஸ் பி. எஸ். சோமசுந்தரம் ... 169
41. அய்யா அவர்களின் மெய்யான பண்புகள்—கவிஞர் கருணானந்தம் ... 171
42. இயக்கத்தின் ஏறு நடை !—கவிஞர் கவி பூங்குன்றன் ... 173
43. Periyar and his Great Achievements—Pro. A. M. Dharmalingam ... 177
44. Propet of Freedom M. Prabha ... 180
45. The Ayya I Have Known—Dr. T. Jayavelu ... 185
46. Great Athiest Revolutionary—Dr. G. Vijayam ... 189
47. தந்தை பெரியார் நூற்றாண்டுவிழா படங்கள், ... —
48. வாழ்ந்தோம் ( வாழ்வோம் ! !—வழக்கறிஞர் கோ. சாமிதுரை ... 193
49. வேம்பு இனிக்காது !—அ. இறையன் ... 197
50. சூத்திரர்களின் கல்வித் தடை—ஓட்டம் ... 201
51. இளைஞர்களே, போர்முனைக்கு வாருங்கள்—தந்தை பெரியார் ... 212


# கொள்கை நிறைவு காணும் வரை ஓயமாட்டோம்!

நமது அறிவு ஆசான் வணக்கத்திற்குரிய தந்தையின் நூற்றாண்டு விழாவை சென்னையில் துவங்கி, மாவட்டந்தோறும் நடத்தி, இறுதியில் நிறைவு விழாவினைத் தஞ்சையில் நடத்துவதென நமது இயக்கத்தின் மத்திய நிர்வாகக் குழு முடிவு எடுத்ததற்கேற்ப, 1978 செப்டம்பர் 16ல் துவங்கிய அப்பெரு விழா, வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற மாபெரும் கொள்கைப் பிரசாரப் பெருவிழாவாக நடைபெற்று, வரும் செப். 17ல் தஞ்சையில் நிறைவு எய்த இருக்கின்றது!

நமது கழகக் குடும்பத்தவர்களும், சகோதர, தோழமைக் கட்சி அணியினர்களும், பெருந்தகைகளும், பெருமக்களும் காட்டிய ஈடுபாடு, அவ்வெற்றிக்கு அருரிய ஒப்புவமையற்ற உழைப்பு, ஒத்துழைப்பு நமது நெஞ்சார்ந்த பாராட்டுதலுக்கும் நன்றி உணர்வுக்கும் உரிய ஒன்றாகும்.

## இன எதிரிகளுக்கு உணர்த்தினோம்

நமது கழகப் பொறுப்பாளர்கள் ஒவ்வொரு மாவட்டம், வட்டம், நகரந்தோறும் காட்டிய உணர்ச்சி, தந்த கடும் உழைப்பு, இளைஞர் முதல் முதியோர்கள் வரை அனைவரும் எந்தவித பேதமும் இன்றி உழைத்த பான்மை—தந்தை பெரியார் அவர்கட்குப் பின், அன்னை மணியம்மையார் அவர்கட்குப் பின் இக்கழகக் குடும்பம் அவர்கள் விட்ட பணிகளைத் தொய்வின்றித் தொடர வேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர் என்பதைப் பொதுவாக உலகுக்கும், குறிப்பாக நம் இன எதிரிகளுக்கும் உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது !

## தமிழக அரசின் தகாத செய்கைகள்

நூற்றாண்டு விழாவினைத் தமிழக அரசும் ஓராண்டு கொண்டாடி, அய்யா அவர்கள் பெயரில் மாவட்டம், கல்லூரி, சில பல நினைவுச் சின்னங்கள் இவைகளைச் செய்திருக்கின்றனர். அதற்காக நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அதே நேரத்தில் அய்யாவிற்கு விழாக் கொண்டாடிடும் அரசு, அவர்தம் உயிர்மூச்சுக் கொள்கைகளை ஆழமாகக் குழி தோண்டிப் புதைப்பதைப் போன்று இன்று தமிழர்களின் கல்வி, உத்தியோக வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும் வகுப்புரிமை ஆணையை, வருமான வரம்பைக் காட்டி, இல்லாததாக்க தன்னால் ஆன எல்லாவற்றையும் செய்கிறது ! 'பெரியார் இதைத்தான் விரும்பினார்' என்று திரிபுவாதங்கள் செய்வதிலும் ஈடுபட்டுள்ளது கண்டு நாம் தாங்கொணாத வேதனையும் வெட்கமும் அடைகிறோம். இதைத் தடுத்து நிறுத்திடுவது தமிழர்களது தலையாய கடமையாகிவிட்ட நிலையில்தான் நிறைவு விழா நடைபெறுகிறது.

## அய்யாவின் 101வது பிறந்த நாள் வேலைத் திட்டம்

சாதிகள் இருக்கும் வரை, சாதி அடிப்படையில்தான் சலுகைகள் நீடிக்க வேண்டும் என்பதே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளாகும். அய்யா வழி, அண்ணா வழி என்று பேசிக் கொண்டே வேறு ஏதோ ஒரு வழிக்குக் கொண்டு செல்லும் நிலையில் இன்றைய தமிழக ஆட்சியின் போக்கு இருப்பது கண்டு இன உணர்வும் நடுநிலை உணர்வும் உள்ள எந்த ஒரு சமுதாயப் பணியாளனும் வாளாவிருந்திட முடியாது! எனவே, அய்யா நூற்றாண்டு விழாவின் நிறைவு, வாழ்க்கை முழுவதும் போராட்டக் களத்தில் நின்ற வைக்கம் வீரருக்கு கொள்கை ரீதியாக எடுக்கப்படும் விழாவாக இருக்க வேண்டும் என்றால், இந்த அரசு ஆணை திரும்பப் பெறப்படும் வரை வேறு வழியின்றி போராடித்தான் தீர வேண்டியவர்களாக இருக்கிறோம்,

அய்யாவின் 101வது பிறந்த நாள் விழாவின் முக்கிய வேலைத் திட்டங்களில் இது முதலாவதாக இருப்பது தவிர்க்க இயலாததாகி விட்டது !

கிளர்ச்சி, பிரசாரம், கிளர்ச்சி என்ற பெரும்பணிதானே தந்தை பெரியார் தம் அரும்பணி - அயராத பணி. அவர் விட்ட பணி முடிக்க எடுத்த சூளுரை நம்மைப் பொறுத்தவரை வெற்று உரை அல்லவே !

## இராணுவ முகாம்!

அய்யாவின் நூற்றாண்டில் திருத்தணி (வடக்கெல்லை) வட்டத்து பொதட்டூர் பேட்டையில் துவங்கி தஞ்சை வரை வழிநடைப் பிரசாரம் செய்துவரும் படை, கன்னியாகுமரியில் (தெற்கெல்லை) துவக்கப்பட்ட படை, சென்னையில் துவக்கப்பட்ட படை, தஞ்சை மாவட்டத்திற்குள்ளேயே பிரசாரத்தில் ஈடுபடும் பிரசாரப் பெரும் படை—ஆகிய நான்கு பிரசாரப் பெரும் படைகளும் நமது இயக்கம் எப்படிப்பட்ட மாபெரும் கட்டுப்பாடுமிக்க கடமை வீரர்களைக் கொண்ட இராணுவ முகாம் என்பதை உலகுக்குப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது!

வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத அந்தத் தூய தொண்டு மாமணிகள், வரலாற்றில் நிலைத்துவிட்ட மாமனிதர்களாகி விட்டனர். கைம்மாறு கருதாத தன்னல மறுப்பின் உருவங்கள் அல்லவா அவர்கள்?

## பாராட்டுக்குரிய படை வீரர்கள்!

படைத் தலைவர்கள் மதிப்பிற்குரிய ஆம்பூர் பெருமாள், லால்குடி தேவசகாயம், குடந்தை இராசசேகரன், நன்னிலம் ராசமாணிக்கம் ஆகியோரும், மதிப்பிற்குரிய தளபதிகளான திருவத்திபுரம் வேல் சோமசுந்தரம், கொளத்தூர் டி. எஸ். மணி, விடுதலைபுரம் தங்கவேலு, சீவளூர் அண்ணாதுரை ஆகியவர்களும் தமிழ்ப் பெரு மக்களின் மரியாதைக்குரியவர்களாவார்கள்.

படைத் தலைவர், தளபதிகட்குப் பாராட்டு என்றால் வீரர்களையும் அது உள்ளடக்கியது தான்! அதை விளக்கவா வேண்டும்?

தந்தையின் நூற்றாண்டு விழாவை நாம் மாத்திரம் மட்டும் கொண்டாடவில்லை. வெளி நாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, குவைத், இங்கிலாந்து போன்ற பற்பல நாடுகளில் வாழும் தமிழ்ச்சமுதாயத்தினரும் மற்ற சமூகத்தினருடன் இணைந்து விழாஎடுத்துள்ளது அய்யா அவர்கட்கு 'உலகப் பெரியார்' என்ற உன்னத-உண்மைக்குச் சரியான சான்று அல்லவா?

## கடல் கடந்த தமிழர்களுக்கு நன்றி

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நாம் நேரிற்சென்று கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றது—நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை யொட்டி அய்யாவின் அரிய கொள்கைப் பிரசாரத்தினைத் தீவிரமாகச் செய்து ஆங்காங்கே பரப்பப் பெரிதும் உதவியது. இதற்கு ஏற்பாடு செய்த இலங்கைப் பகுத்தறிவாளர் கழக நண்பர்கள், கலைஞர் கருணாநிதி மன்றத்தினர், மலேஷிய திராவிடர் கழகத்தினர், சிங்கப்பூர் திராவிடர் கழகத்தினர், தமிழர் சீர்திருத்த சங்கத்தினர் அனைவருக்கும் இயக்கத்தின் சார்பில் நமது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அய்யா நூற்றாண்டு விழாவினை அகிலமே சிறப்பிக்கின்றது என்ற பெருமையும் பூரிப்பும் நமது இலட்சியப் பயணத்தினை மேலும் வலிவுடன் செய்யத் தருகின்ற ஊக்க மாத்திரை அல்லவா?

அதைவிட, இயக்கத்தின் சரித்திரத்தில் மிக முக்கியமானதொரு சம்பவம்—அய்யா நூற்றாண்டு நிறைவின்போது நடைபெற்றது.

## வருமானவரி வழக்கில் நியாயத்தின் வெற்றி

தந்தை பெரியார் அவர்கள் மனதை அலைக்கழித்து, எதற்கும் கலங்காத உள்ளம் படைத்த தலைவரின் உள்ளத்தையும் ஒருகணம் கலங்கும்படி வைத்த மிகப்பெரும் தொல்லையாக, வருமான வரி இலாகாவினரால் நமது இயக்கத்தின் அறக்கட்டளைக்குப் போடப்பட்ட வரிவிதிப்பும், அதை வசூலிப்பது என்ற பெயரால் நெருக்கடி கால நிலையின்போது மேற்கொண்ட அந்த (Excess) நடவடிக்கைகளும் நாடு அறியும். கழகத் தோழர்கள் வெகு நன்றாக அறிவார்கள்.

நமது அன்னை மணியம்மையார் அவர்கள் அந்த நெருக்கடியான நேரத்தில் அதற்குத் தலை கொடுத்து சமாளிக்கச் சங்கடப்பட்ட நிலைகளையும் நன்கு அறிவார்கள்.

அந்த வருமானவரி வழக்கு; வருமானவரி மேல் முறையீட்டு மன்றத்தில் (Income-Tax Appellate Tribunal) விசாரிக்கப்பட்டு, இயக்கத்தின் அறக்கட்டளை, ''அறக்கட்டளை''தான் என்றும், அவ்வறக்கட்டளைக்கு ஏதும் வருமான வரி பாக்கிக் கிடையாது என்றும், அவ்வறக் கட்டளை வருமான வரியிலிருந்து விலக்குப் பெறவேண்டிய தகுதிபெற்ற ஓர் அறக்கட்டளைதான் என்றும் தெளிவாக, திட்ட வட்டமானதொரு தீர்ப்பைத் தந்தது. நியாயம் கிடைத்ததே நமக்கு என்ற பெரு மகிழ்ச்சியோடு உள்ளோம். இதற்குப் பெரிதும் காரணமாக இருந்து வழக்கிற்காக நமது தரப்பில் வாதாடி இவ்வெற்றியை ஈட்டித் தந்தவர்கள், நியாயத்தைப் பெற்றுத் தந்தவர்கள்



பிரபல வழக்கறிஞர் திரு. உத்தமரெட்டி அவர்களும், பி. பி. நாயுடு அண்கோ என்ற ஆடிட்டர் நிறுவனத்தின் உரிமையாளர்களில் ஒருவருமான திரு. பி. சுரேந்தர் அவர்களும் ஆவார்கள்.

அவர்களுடைய இந்த மாபெரும் உதவிக்கு நாமும் நமது சமுதாய மக்களும் எப்படி நன்றி சொல்லுவது என்பதே புரியவில்லை. நாம் அவர்கட்கு மிகப்பெரிய அளவில் கடன்பட்டிருக்கிறோம். பணத்திற்காக நமக்கு அவர்கள் வாதாட முன்வராது, ஒரு மிகப்பெரிய கொள்கை நிறுவனமான அறக்கட்டளைக்கு—அதன் நிறுவனத்திற்கு அநீதி இழைக்கப்படுவதா என்று கண்டு மனம்குமுறி அதற்குப் பரிகாரம் தேட பல மாதங்கள் உழைத்து, இப்பெரு வெற்றியை ஈட்டித் தந்தனர்.

## இனி நமது செயல் திட்டங்கள்

அறக்கட்டளைப் பணிகள் அயராது நடைபெற இருந்த தடைக் கற்களை அவர்கள் அப்புறப்படுத்தி விட்டனர். இனிப் பணிகள் மும்முரமாக நடைபெறும் என்பதில் அட்டியேதும் இல்லை.

அய்யா அவர்களது 101ம் ஆண்டு பிறந்த ஆண்டாகிய இனி வரும் ஆண்டில் நமது செயல் திட்டங்களும் செயல்களும் மேலும் தீவிரமாக வேண்டும்,

நமது இயக்கம் ஒருபோதும் அடுத்தத் தேர்தலைப் பற்றிக் கவலை கொள்கிற இயக்கம் அல்ல; மாறாக, அடுத்தத் தலைமுறையைப் பற்றிக் கவலையுடன் சிந்திக்கின்ற இயக்கம் அல்லவா?

அய்யா விட்ட பணி முடிக்க அய்யாவின் தலைமையில் சூளுரைத்து, அதற்குப் பின் அதைப் புதுப்பித்து, அதே நோக்கில் இலக்கினைக் குறி வைத்து நடை போடத் தவறாத கருஞ் சட்டைக் கடமை வீரர்கள் பாசறையான நமது பாசறைக்குப் பணிகள் பல காத்துக் கிடக்கின்றன.

## பிரசாரம்—கிளர்ச்சி!

பிரசாரம், கிளர்ச்சி, பிரசாரம்—என்ற 'பெண்டுல' (Pendula)ப் போக்கு நம் இயக்கத்தின் இன்றியமையாத போக்கு ஆகும்!

அய்யாவின் நூற்றாண்டை கொண்டாடிக் கொண்டே அவர்தம் உயிர் மூச்சான வகுப்பு வாரி உரிமை கொள்கைக்கு வைக்கப்பட்டு விட்ட பெருங் கொடுமையை நாம் கண்டு சும்மா இருந்திட முடியுமா? பிரசாரத்தில் ஈடுபட்டு மக்கள் மன்றத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நாம் முயற்சிகளை சளைக்காமல் ஆற்றி வருகிறோம்.

## வகுப்புரிமை காக்க போராட்டம்

மக்கள், பொதுநலச் சான்றோர் உட்படப் பலரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு இந்தப் புதிய அரசு ஆணை எப்படிப் பிற்படுத்தப்பட்டோருக்குப் பேரிடி என்பதைச் சுட்டிக் காட்டியும் கூட அதில் பிடிவாதம் காட்டுகின்ற தமிழக அரசின் போக்கு நமக்கு இரட்டிப்பு வேதனையைத் தருகின்ற காரணத்தால், அது குறித்து அடுத்துச் செய்ய வேண்டிய அறப் போராட்டம் எப்போது எப்படி என்பதை யெல்லாம் குறித்து நமது இயக்கத்தின் மத்தியக் கமிட்டி எடுக்கின்ற முடிவுகளை ஒரு இயக்கத்தின் முடிவாகத் தமிழ் மக்கள் கருதாமல் ஒரு இனத்தின் முடிவாக, கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக மதித்து. அவ்வன்பழைப்பினை ஏற்றுக் களம் காணத் தயாராகிவிட வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

## அர்ச்சகர் உரிமைப் போராட்டம்

அது மட்டுமா? அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் அரசியல் சட்டத்தினைத் திருத்தி, ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் காரணமாக முடக்கி வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு அரசின் 'மனித உரிமைச் சட்டத்தினை' எழுந்து நடமாடச் செய்ய நாம் எல்லாவித முயற்சிகளிலும் ஈடுபட்டாக வேண்டும்.

## தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு

இதற்குப் படிப்பு வாய்ப்பு இல்லாத மக்களான நமக்கு அண்மைக் காலத்தில் ஓரளவு வாய்ப்புக்கள் ஏற்பட்ட போதிலும், படித்துவிட்டு எவ்வித வேலை வாய்ப்பும் இல்லாமல் பல ஆண்டுகளாக விரக்தியுடன் வேதனையில் ஈடுபட்டும் திசை மாறும் தீப்பிழம்புகளாக மாறிடும் லட்சோப லட்சம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உரிமை யைப் பெறுவதற்கும் நாம் இடையறாத கிளர்ச்சிகளை வரும் ஆண்டில் மேற்கொண்டே ஆக வேண்டும். 100க்கு 3 சதவீத உயர் சாதியினர் இன்று கல்வி, உத்தியோக மண்டலங்களில்

அனுபவிக்கும் விகிதாச்சாரம் எவ்வளவு, நூற்றுக்கு 90 விழுக்காடு உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் பெறுகின்ற விழுக்காடு எவ்வளவு என்பதையெல்லாம் எடுத்துச் சுட்டிக் காட்டிப் போராட்டம் நடத்தி ஆக வேண்டியது காலத்தின் கட்டாயங்களில் ஒன்று; நியாயத்தின் தேவைகளில் முதன்மையானது.

### முப்முனைப் போராட்டம்

பொருளாதார அடிப்படையில் இல்லாது, சாதி அடிப்படையில் அமைந்து அதன் தீய விளைவுகளைப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அனுபவித்து வரும் சமூகத்தில் வேலையில்லாத பட்டதாரிகளில் இப்படி இனம் பிரித்துப் பார்த்துப் பரிகாரம் கேட்பது மிகவும் தேவை. பார்வையில் பழுது உற்றோரின் பிரசாரம் பற்றி நாம் கவலைப்படாமல் இப்பழி ஏற்றிட வேண்டும்!

மேற்காட்டிய மும்முனைப் போராட்டம், பெரியார் 101ம் ஆண்டின் முக்கிய வேலைத் திட்டமாக இருக்கும்.

### மாவட்டந்தோறும் வழிநடைப் பிரசாரம்

பிரசாரத்தில் வழிநடைப் பிரசாரம் மிக முக்கியப் பங்கினை வரும் ஆண்டில் வகிக்கும் வண்ணம் திட்டங்கள் தீட்டப்படும்.

மாவட்டங்கள் தோறும் வழிநடைப் பிரசாரப் பெரும்படை கடவுள், மத, இதிகாச, புராண மூட நம்பிக்கைகளை எதிர்த்துச் சூறாவளிப் பிரசாரத்தினை—கிறிஸ்துவ மத மிஷனரிகள் பிரசார பாணியிலேயே—நடத்தி வரும்.

### பறக்குப் பிரசாரப் படை

எங்கெல்லாம் திருவிழாக்கள் என்ற பெயரால் மூட நம்பிக்கை முடுக்கி விடப்படுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கு 'பறக்கும் பகுத்தறிவுப் பிரசாரப் படைகள்' சென்று அற வழியிலே ஆணித்தரமான தொடர் பகுத்தறிவுப் பிரசாரத்தை நடத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பிரசார முறையில் ஒரு சில மாற்றம் மாவட்டந்தோறும் பிரசார வகுப்புகள் மும்மூன்று நாட்கள் நடத்தி, அப்பிரசாரப் பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும், பகுத்தறிவு பிரசாரத் தோழர்களையும் கொண்ட; ஒவ்வொரு முக்கிய நகரங்கள், ஒன்றியங்கள், கிராமங்கள் தோறும் கடவுள் தொடர் சொற்பொழிவு, மதம் தொடர் சொற்பொழிவு, சாஸ்திரம் தொடர் சொற்பொழிவு, இதிகாச, புராணங்கள் தொடர் சொற்பொழிவு, இன உணர்ச்சித் தேவைகள் முதலியவைகள் பற்றி இருக்கும். இவை அரசியல் அறவே கலப்பற்ற சமுதாயப் பிரசாரங்களாகவே இருக்கும்.

### பெண்கள் பெரும்படை

பகுத்தறிவுப் பிரசார பெண்கள் பெரும்படை ஒன்று விரைவில் துவங்க இருக்கிறோம்.

எங்கெங்கே கடவுள், மத, புராணப் பிரசாரம் செய்யப்படுகிறதோ அதே ஊரில் வேறு ஒரு இடத்தில் பகுத்தறிவுப் பிரசாரம் அதே காலட்சேப பாணியில், இசை நிகழ்ச்சிகளுடன், பக்கவாத்தியங்களுடன் நடைபெறும்.

வரும் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சாதி, மத, மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடும், பெண்கள் விடுதலை மாநாடும் நடைபெறும்.

### தந்தை பெரியார் திரைப்படம்

தந்தை பெரியார் அவர்கள் பற்றிய திரைப் படங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் ஒரு ஆண்டு முழுதும் காட்டப்பட்டு பகுத்தறிவுப் பிரசார வாய்ப்பும் ஏற்படுத்தப்படும்.

இம்மாதிரி கழகப் பிரசாரம் தீவிரமாக நடத்தப்பெறுவதற்கேற்ப, கழக அமைப்புகளில் தேவைப்படும் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படின் அதனைச் செய்வோம். கழகப் பிரசாரமும், பணியும் ஏதோ ஓய்வு நேரப் பணிகள் போலத் தோற்றமளிக்காது, போர்க்காலப் பணிகள் என்பது போன்ற உத்வேகத்துடன் நடைபெற வேண்டும் என்பது நமது பெரு விருப்பமாகும்.

### அறக்கட்டளைப் பணிகள்

அய்யாவின் அறக்கட்டளையும், பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தின் சார்பாக நடைபெறும் கல்விக் கூடங்களையும் மேலும் சிறப்பான வகையில் வளர்ச்சிபெறும் திட்டங்கள்



தீட்டப்படும். எடுத்துக்காட்டாக, திருச்சி பெரியார் நகரில் (கோ. அபிஷேகபுரத்தில் ஓர் பகுதி) கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த 'பெரியார்—மணியம்மை உயர்நிலைப் பள்ளி' இவ்வாண்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுப் பீடுநடை போடுகிறது.

பெரியார்-மணியம்மை அறக்கட்டளை சார்பாக அய்யாவின் கொள்கை விருப்பத்திற்கேற்ப இங்கிலீஷ் பள்ளிகள் இரண்டு இவ்வாண்டு தொடங்க அனுமதி பெற்றுவிட்டோம். ஒன்று "பெரியார்—நாகம்மை மெட்ரிகுலேஷன் பள்ளி", மற்றொன்று, 'பெரியார் நூற்றாண்டையொட்டிய முன் துவக்கப்பள்ளி' ((Pre Primary English Medium School)-

ஆதரவற்ற முதியோர்கட்காக இல்லம் ஒன்று அய்யா நூற்றாண்டு நினைவாக துவக்கப்பட உள்ளது.

### பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனை

சென்னையில் பெரியார் திடலில் துவங்கப் பெற்ற "பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனைக்கு 4 மாடி கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டு, முதல் அடிப்பகுதி (Ground Floor) பணி துவங்கிவிட்டது. இது ஒரு பல கட்டத் திட்டமாகும் (Phased Programme). அய்யாவின் டாக்டர் பெருமைக்குரிய பிரபல டாக்டர் திரு. கே. இராமச்சந்திரா அவர்கள் கவுரவ டாக்டராக பொறுப்பேற்று பணிபுரியும் இம்மருத்துவமனை, பேறுபெற்ற மருத்துவமனை ஆகிவிட்டது!

'கடவுளை மற' என்று மாத்திரம் அய்யா அவர்கள் சொல்லவில்லை; 'மனிதனை நினை' என்றும் கூறினார். அவரை ஓர் அழிவு வேலைக்காரர் என்று எவரும் அலட்சியப்படுத்திவிட முடியாது; அவர் ஓர் ஆக்கவேலைக்காரரும் கூட என்பதை பின்வரிகள் புலப்படுத்தும்; அதனைத்தான் அவரது அறக்கட்டளை மேற்கொள்ளும். அவரை 95 ஆண்டுவரை காத்த நம் அன்னையார் கண்ட அறக் கட்டளைப்பணி உலகுக்குப் பறை சாற்றும் உன்னத முயற்சிகளாக இருக்கும்.

### 'காளாச்சேரியில் பெண்கள் பாலிடெக்னிக்'

தஞ்சையில் தரவிருக்கும் பொன், பெண்கள் விடுதலைக்கான தந்தையோர் பொற்காலத்தினை உருவாக்கும் அஸ்திவாரத் தளவாடங்களாக அமையும் தஞ்சை மண்ணின் நீண்ட நெடுநாள் தேவையான 'பாலிடெக்னிக்' 'மகளிர் பாலிடெக்னிக்' தந்தை பெரியார் அவர்கள் விவசாயப் பண்ணை கிராமமான நீடா மங்கலம் அருகில் உள்ள "காளாச்சேரி" கிராமத்தில் 21 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும். எதிர்காலத்தில் அது ஒரு 'பெரியார் தொழில் நுட்ப பல்கலைக்கழக'மாக மிளிரும் அளவுக்கு வளரவேண்டுமென்ற ஆவலில்தான் துவங்கியுள்ளோம்.

### வேலைவாய்ப்புப் பிரச்னைகள்

நமது இயக்கக் குடும்ப இளைஞர்கள் பலர் பட்டதாரிகளாகப் பாஸ் செய்தும் ஆண்டுகள் கணக்கில் வேலையற்றவர்களாக இருக்கும் நிலையைப் பார்க்கிறோம். கொள்கை உணர்வை மனமாற விட்டுவிட்டு, "அடிமைகளாக" வேலைத் தேடிச் செல்லும் அவலமும், அவ்வேலையும் எளிதில் கிடைக்கமுடியாத நிலையும் இன்றைய கண்கூடான காட்சியாகும்.

இந்நிலை போக்கிட, சுதந்திரவேலை வாய்ப்புகள் பற்றி ஆய்ந்து அறிவு கூறி நடத்திட ஓய்வுபெற்ற தலை சிறந்த நிர்வாகிகளான பெருந்தகைகள் திரு. பண்டரி நாதன் அய். ஏ.எஸ். (Retired) அவர்களைக் கன்வீனராகக்கொண்டு, ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் திரு. சி.வே. பத்மநாபன், ஓய்வுபெற்ற துணைப் பதிவாளர் திரு. பகீரதன் ஆகியோர்களின் அரிய ஆலோசனைகளை நல்ல வண்ணம் பயன்படுத்திக்கொள்ள இருக்கிறோம். அவர்களும் பேரன்போடு ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். வேலை வாய்ப்புக்கான முறையில் மாவட்டந்தோறும் எங்கெங்கே எந்த சிறு தொழில் தொடங்கினால், 'சிறுகக் கட்டிப் பெருக வாழவும்,' இளைஞர்களை உழைக்க வெட்கப்படாமல் முன்வரும் மனப்பான்மையை பெருக்கிக்கொள்ளவும், சுயதேவைப் பூர்த்திக்கும் வழிவகுக்கவுமாக வழிமுறைகளை கூட்டுறவு அடிப்படையில் காண திட்டமிட்டு அய்யா பெரியார் பெயரில் ஒரே சீர்மையான நிறுவனமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அது இயங்கும்.

ஒவ்வொரு இளைஞரும் அவர்கள் மூலமாகவோ, அவர்களது பெற்றோர், நண்பர், உறவினர் மூலமாகவோ ரூ. 2000/-(இரண்டாயிரம்) அதிக பட்சம் 10 என்ற முறையில் 20 ஆயிரம் மூலதனத்துடன், வங்கி உதவிகளை (Bank Credit Facilities) வைத்து சிறப்பான தொழில்களை, மேற் கூறிய தொழில் ஆலோசனைக் குழுவின் மேற் பார்வையில் நடத்திடவும்,

பரீட்சார்த்தமாக, முதல் 2 மாவட்டங்களில் வரும் 101-ம் பெரியார் ஆண்டிலேயே தொடங்கவும்,

### பெரியார் பெயரில் கூட்டுறவுத் தொழில் நிலையம்

தந்தை பெரியார் அவர்கள் பெயரில் 'பெரியார் கூட்டுறவு தொழில் நிலையம்' (Periyar Industrial Co-operative Center) என "Picc" பிக் என அழைக்கப்படவும் திட்டமிடப் பட்டுள்ளது.

### பிறமொழிகளில் அய்யா நூல்கள்

தந்தை பெரியார் அவர்கள் பேசிய, எழுதிய கருத்துக்களை பிறமொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டத்தினை வரும் 101-ம் ஆண்டு முடிவதற்குள் செய்து முடிக்க, ஏற்கனவே திட்டமிட்டப்படி பணி துவங்கப்படும். ஆங்கில மொழிபெயர்ப்புகள், ஏனைய பிறமொழிகள், மலையாளம், தெலுங்கு, மராத்தியம், இந்தி, (கன்னடத்தில் மொழிபெயர்ப்புப் பணிகள் பாராட்டத்தக்க அளவில் பெங்களூர் கருநாடக கழகத்தோழர்கள் செய்கின்றனர்) ஆங்கில மொழியில் பல நூல்களை குறைந்த விலையில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### பெரியார் மியுசியம்—ஒலி—ஒளி காட்சிகள்

சென்னை பெரியார் திடலில் அய்யா அவர்கள் வசித்த பகுதி 'பெரியார் இல்லம்' என்று பெயர் சூட்டப்பட்டு, அய்யா அவர்களுக்குத் தோழர்கள் அளித்த அத்தனைப் பரிசுப் பொருள் களையும் எல்லோரும் காணும் வண்ணம் காட்சியகமாக ஆக்கி, அய்யாவின் புகைப்பட ஓவியங் களையும் கொண்டு வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பாகவும், அதை விளக்கும் நிரந்தர ஒலி, ஒளிக்காட்சியும் 1980 செப். 17-ல் செய்து முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 'டெம்மி சைசில்' விடுதலை

அய்யா கண்ட நமது அறிவு ஆயுதங்களில் முக்கியமான 'விடுதலை' நாளேட்டினை தற்போது வருவதைவிட பெரிய அளவில் வெளிவரும்படி டெம்மி அளவில் ('முரசொலி' அளவில்) 30 காசு ஆக விலை உயர்த்தி மேலும் பல செய்தித்தொகுப்புகள், சுவையான அம்சங்களுடன், வரும் டிசம்பர் 24-ம் நாளில் அய்யா நினைவு நாளிலிருந்து (1980 ஜனவரி முதல்) கொண்டு வரும் வேலைத் திட்டத்தையும், வரும் அய்யா நூற்றாண்டில் செய்து முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்குக் கீழ்க்கண்ட தோழர்களைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றினையும் அமைத்துள்ளோம்.

திருவாளர்கள் என். எஸ். சம்பந்தம், கா. மா. குப்புசாமி, கோ. சாமிதுரை, அருப்புக் கோட்டை முத்து முருகன், சங்கமித்ரா ஆகியோர் அக்குழுவில் உள்ளனர்.

### அய்யாவழியில் பயணம் தொடருவோம்

இப்படி அய்யா ஏற்றிய அறிவுச்சுடர் அணையாது மேலும் பேரொளிச் சுடர் விட்டு எரிய நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் பாடுபடுவோம் என்ற மனங்குலையா உறுதியுடன் நமது பயணம் அய்யாவின் லட்சியத்தைத் தொடரட்டும்—தொடரட்டும்! அறியாமை முடியட்டும்—முடியட்டும்! புதிய சமுதாயம் மலரட்டும்—மலரட்டும்! கோடானு கோடி மக்களின் வாழ்வு விடியட்டும்—விடியட்டும்! சாதி சனாதனங்கள் மடியட்டும்—மடியட்டும்.



பொதுச்செயலாளர்
திராவிடர் கழகம்



# என்னைப் பற்றி நானே சொல்கிறேன்

ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற் போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு 'யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற் போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

இதைத் தவிர வேறு பற்று எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத்தொண்டுக்கு தகுதியுடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.



2

# எனது தொண்டு



நான் ஏறக்குறைய சுமார் 50 ஆண்டு காலமாகவே பார்ப்பன—மேல் சாதி மக்கள்—என்பவர்கள்— சட்டப்படி—சாஸ்திரத்தின்படி—மதத்தின்படி என்று தாங்கள் அடைந்திருக்கும் வசதியையும், உயர்நிலையையும் பார்ப்பனரல்லாத 'கீழ்' மக்கள் நலனுக்குக் கேடாகப் பயன்படுத்தும் வாய்ப்பை ஒழிக்கவேண்டுமென்று பாடுபட்டு வருகின்றேன். என்னுடைய பிரதானமான ஒரே தொண்டு இதுதான். இனியும் என் வாழ்நாள்வரையிலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற தொண்டும் இதுதான். இவ்வளவு நாள் வரையிலும் பாடுபட்டும், இந்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்குப் பார்ப்பனர்களால் ஏற்பட்டு வருகிற கொடுமைகள், அவர்கள் தலையெடுக்க வொட்டாமல் அழுத்தப்பட்டு வருகிற துணிச்சலான அநீதிகள் ஒரு குறிப்பிடத் தகுந்த அளவுக்காவது குறைந்திருக்கிற அளவு நிலைத்திருக்குமா என்றும் சொல்லமுடியாது. என்னுடைய தொண்டிலே எத்தனையிலோ ஒரு பாகமான காரியத்திற்காக ஏற்பட்ட இந்த வழக்கில் பிரஸ்தாப ஜட்ஜுகளை நான் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை. பிரஸ்தாப வழக்கில் தனிப்பட்ட முறையில் தாக்கவில்லை என்பதோடு, நான் 'இராமசாமி' என்ற தனிப்பட்ட (Personal) தன்மையில் பேசவில்லை. பொதுஜனத் தொண்டன், பொதுமக்களுக்காகப் பாடுபடுகிறவன், அவர்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறவன் என்ற முறையில், கீழ் சாதிக்காரர்கள் 'சூத்திரர்கள்' என்று சொல்லப்படுகிற அவர்களின் பிரதிநிதி என்ற முறையில் பேசியிருக்கிறேனே தவிர, என் சொந்த நலத்திற்காக நான் அவ்விதம் பேசவில்லை.

[அய்க்கோர்ட் அவதூறு வழக்கில் தந்தை பெரியார் கொடுத்த ஸ்டேட்மெண்ட்—23-4-1957]



# எனது புகழைப் பார்!

1922ம் வருஷத்திய சகல கட்சி மாநாட்டில் காந்தியாரின் ஒத்துழையாமையைப் பற்றிக் கவலைகொண்டு லார்ட் ஆர்டிஞ்ச், காந்தியாருக்கு என்ன வேண்டும் என்று கேட்கும்படி ஒரு சர்வ கட்சி மாநாட்டை பம்பாயில் கூட்டி கேட்டு வரும்படிச் செய்தார். அதில், சங்கரன் நாயர் தலைமை வகித்து காந்தியாரை, ''உமக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அப்போது காந்தியார், ''எனக்கு என்ன வேண்டும் என்பதை ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்மணிகளைக் கேட்டு பதில் சொல்லுகிறேன்'' என்று சொன்னார். அந்த இரண்டு பெண்மணிகள் யார்? என் மனைவியும், என் தங்கையும்தான். இது 1922ம் வருஷம் ஜனவரி மாதம் 19ந் தேதியிலோ, 20ந் தேதியிலோ 'இந்து' பத்திரிகையில் இருந்தது. இதை திருச்சி டாக்டர் ராஜன் கத்தரித்து எனக்கு அனுப்பினார். இதற்குமேல் எனக்கு இன்னும் என்ன வேண்டும்? அதனால் பயனில்லை என்று உணர்ந்தேதான் தேசத் துரோகி, மதத் துரோகி, நாஸ்திகன், கோழை, சர்க்கார் தாசன் என்கின்ற பட்டம் கிடைப்பதானாலும், நாம் செய்யும் வேலையில் மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படவேண்டுமென்றும் கருதி, சில திட்டங்களைக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து, அதில் என் இஷ்டப்படி உழைத்து வருகிறேன்.

இனியும், சாகும் வரை அந்தப்படியே உழைத்து வரத்தான் செய்வேன்.

—"குடி அரசு," *29-3-1936*



# எனக்கு வீரப்பட்டம் தேவை இல்லை



இந்த இயக்கம் எந்தத் தனிப்பட்ட மனிதனும் வீரனாவதற்கும், வீர சொர்க்கம் போய்ச் சேரவும் ஏற்பட்டதல்ல. எனக்கு வீர சொர்க்கத்தில் நம்பிக்கை கிடையாது. வீரனாவதிலும் பயன் உண்டு என்று நம்பிக்கை கிடையாது. காந்திக்குமேல் ஒருவன் வீரனாகவோ, மகாத்மாவாகவோ விளம்பரம் பெற முடியாது. ஆனால் அவரால் மனித சமூகத்துக்கு ஒரு காதொடிந்த ஊசி அளவு பயனும் ஏற்படவில்லை, ஏற்படப் போவதுமில்லை. வேண்டுமானால் அவருக்கும் அவர் சந்ததிக்கும் பெரிய மதிப்பு ஏற்பட்டுவிடும். கோவிலும் ஏற்படும். ஆனால், நான் அப்படிப்பட்ட புகழை விரும்பவில்லை. எனக்குப் புகழ் வேண்டியதுமில்லை. புகழ் பெறுவதற்கு எவ்வளவு அயோக்கியத்தனம் செய்ய வேண்டுமென நான் நன்றாய் அறிவேன். அத்துறையிலும் நான் இருந்து பார்த்துவிட்டுத் தான் இந்த ''இழிவு'' பெறும் வேலைக்கு மனப்பூர்த்தியாகவே வந்தேன். ஆதலால் நான் புகழ் பெறும் மார்க்கமோ, வீரப்பட்டம் பெறும் மார்க்கமோ அறியாதவன் அல்ல,

*—''குடி அரசு'' 29-3-1936*



# என்னையே நம்பி இப்பணி ஏற்றேன்!

நாங்கள் நாஸ்திகக் குடும்பக்காரர்கள் அல்ல. எங்கள் குடும்பம் மிக மிக வைதீகக் குடும்பம். இந்த ஊர் கோவில்கள் மிக சிகஸ்தாய் இருக்கிறது என்றும் 15 நாளில் இடித்துவிட வேண்டும் என்றும் இன்ஜினியர் ரிப்போர்ட்டின் மீது தாசில்தார், கமிட்டி மெம்பர்களுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் நோட்டீசு அனுப்பியவுடன் அவர்கள் அவைகளைக் கொண்டு வந்து என் தகப்பனாருக்குக் காட்டியவுடன், அவர் பதறி அந்தத் திருப்பணியைச் செய்து முடித்து கும்பாபிஷேகம் செய்தவர். அதை இன்றும் அந்தக் கோவில் கல்வெட்டுகளில் காணலாம்.

நான் சுமார் 25 வருஷ காலம் கமிட்டி மெம்பராகவும், காரியதரிசியாகவும், கமிட்டித் தலைவனாகவும் இருந்து இந்தத் தாலுக்காவில் உள்ள கோவில்களில் சுமார் 20, 25 கோவில்களைக் கமிட்டிப் பொருளைக் கொண்டும் வசூலைக் கொண்டும் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யச் செய்திருக்கிறேன். கடைசியாக நான் ராஜிநாமாச் செய்ததற்குச் காரணம், கோவிலுக்குள் ஆதிதிராவிடரை விடத் தீர்மானம் செய்து அந்தப்படி சில ஆதி திராவிடர்கள் உள்நுழைந்ததை சர்க்கார் கேசு எடுத்து அவர்களைத் தண்டித்ததால் என் தீர்மானத்திற்கு மதிப்பில்லாமல் போய் விட்டதே என்று ராஜிநாமாச் செய்தேன். நான் ராஜிநாமாச் செய்யும்போது சுமார் 50,000 ரூ. கமிட்டியில் மீதி வைத்துவிட்டு வந்தேன்.

ஆகவே, நாங்கள் கோவில்களை இடித்துக் கொண்டிருந்தவர்கள் அல்ல.

மற்றும் ஈரோட்டிற்கு பக்தரோ, பாகவதரோ, பரதேசியோ, கவிராயரோ, புராணபிரசங்கியோ யார் வந்தாலும் எங்கள் வீடு அவர்களுக்குச் சொந்த வீடாக இருந்தது. எங்கள் சத்திரச் சாப்பாடு அவர்களுக்கு எத்தனை நாளைக்கு இருந்தாலும் கிடைக்கும். இதைச் சர்க்காரே பாராட்டி 1912 ஆம் வருஷம் சக்ரவர்த்தி பட்டாபிஷேகத்தின்போது ஒரு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். அதில் நாங்கள் செய்த ''பொது தர்மத்துக்கு ஆகக்



கொடுக்கப்பட்டது'' என்று எழுதி இருக்கிறார்கள்.

பார்ப்பனர்கள் விஷயத்திலும் அவர்களுக்கு எங்களைப் போல் கொடுத்த குடும்பம் அப்போது மிகச் சுருக்கம் என்றே சொல்லுவேன். அவர்களுடன் மிக்க நேசமாகவே இருந்தேன், இன்றும் இருக்கிறேன்.

இப்படிப்பட்ட நான், இந்தக் காரியம் செய்கிறேன்! இதனால் ஏதாவது இலாபம் உண்டா? இதைச் செய்யாமல் பார்ப்பன நண்பனாக இருந்திருந்தால், இன்று தமிழ் நாட்டின் நிலை வேறாயிருக்கும்; என் நிலையும் வேறாயிருக்கும், இன்றைய அரசியல் 'டெட்லாக்' கூட இருந்திருக்காது. ஆகவே, இதில் எனக்கோ என் நண்பர்களுக்கோ எவ்வித இலாபமும் இல்லை; பார்ப்பனர்கள் தங்கள் இனம், மேன்மை ஆகியவைகளுக்கு எப்படி எப்படி இவ்வளவு துணிவாய், வெளிப்படையாய் உழைக்கிறார்களோ அதுபோல் உழைக்க நம்மில் ஒருவர் இருவர் கூடவா இல்லை என்கின்ற ஆத்திரத்தினால் இறங்கினவர்களே யாவோம். யாரையும் எதிர்பார்த்து இதில் இறங்கவில்லை; இராவணன் சொன்னதாக இராமாயணக் கதையில் சித்தரித்து இருப்பது போல் ''என்னையே எண்ணி இப்பெரும் பழி ஏற்றேன்'' என்பதுபோல், எங்கள் சொந்த பலத்தையும் பொறுப்பையும் ஏற்றே இப்பணியில் இறங்கினோம். அப்பணிக்கு பொதுமக்கள் இன்று கைதட்டி வாய் புரைப்போக சிரித்து மகிழ்ந்து ரூ. 5000 காணிக்கை செலுத்தி இருக்கிறார்கள்.

இது இப்படியே நிலைக்குமா என்பது சந்தேகம் தான். தமிழர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் இருக்கும் சுயமரியாதை உணர்ச்சியும், அறிவு உணர்ச்சியும் இந்தக் கொட்டகையை விட்டு வெளியே போகும்போதும் அவர்களைத் தொடருமாஎன்று சந்தேகிக்கிறேன். உங்கள் ஆதரவும் இடையறா மான உணர்ச்சியும் இருந்தால்தான் இது முன்னுக்கு வரும்.

நாம் யாரையும் வையவில்லை, இழிவு படுத்தவில்லை. நம்ம முட்டாள் தனங்களையும் ஏமாந்த தனங்களையும் நினைப்பூட்டுகிறோம். எப்படி எப்படி நாம் முட்டாள்கள் என்றும், எப்படி எப்படி நாம் ஏமாறுகிறோம் என்றும், எதெதில் நமக்கு மானத்தைப் பகுத்தறிவை பயன்படுத்துவது இல்லை என்றும் எடுத்துக் காட்டுகிறோம். இதனால் ஏமாற்றுகிறவர்களுக்குச் சங்கட மேற்படலாம்; அது பரிதாபப் படத்தக்கதல்ல!

—''குடி அரசு'' 27-11-43



## வகுப்புரிமை வேண்டாதவன் யார்?



வகுப்பு உரிமை வேண்டாதவன் தன் வகுப்பை உணர முடியாதவனோ — தன் வகுப்பைப் பற்றி சந்தேகப்படத் தக்கவனோ ஆவான். ஒருவன் தன் வகுப்புரிமை கேட்பது தேசத் துரோகம் என்று சொல்லப்படுமானால், அப்படிச் சொல்லுகிறவன் ஒரு தேசத்தையும் சேர்ந்திராத நாடோடி லம்பாடி வகுப்பைச் சேர்ந்தவனாகத்தான் இருக்கமுடியும்.

—தந்தை பெரியார்

(குடி அரசு,'' 22-9-1940)

# முடியைக் கட்டி மலையை இழுக்கிறேன்!

நம்மைப்பற்றி பலர் குற்றம் சொன்ன காலத்திலும் நமதியக்கம் இதுவரை என்ன சாதித்ததென்று கேள்விகள் கேட்கவந்த காலங்களிலும் நாம் அவர்களை லட்சியம் செய்து பதில் சொல்லிக் கொண்டிராமல். நமது லட்சியத்திலேயே கவலை வைத்துக் கொண்டு, ''நாம் அப்படித்தான் செய்வோம், இவ்வளவுதான் நாம் செய்தது. இஷ்டமிருந்தால் பின்பற்றிவா; இல்லாவிட்டால் உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ; நாம் சொல்லுவதுதான் நமது கொள்கை. அதன் பேரில், நமது கொள்கையின் பேரிலோ, நமது செய்கையின் பேரிலோ ஆதிக்கம் செலுத்த வேறு யாருக்கும் உரிமையில்லை'' என்று சொல்லிக் கொண்டு வந்த உறுதியான நிலைமையேதான், நல்லதோ, கெடுதியோ நமதியக்கத்தின் தற்கால நிலைமைக்குக் காரணமாக இருந்து வருகிறது. ஏனெனில், நாம் யாரிடத்திலும் நமதியக்கத்திற்காக ''இப்படிச் செய்கிறேன் அப்படிச் செய்கிறேன்'' என்று வியாபாரம் பேசி ஒப்பந்தம் செய்து, அட்வான்சு வாங்கவில்லை. ஒருவருக்கும் கட்டுப்பட்டு எவரையும் ஏதாவதொரு விஷயத்தை நம்பச்செய்து அதனால்நஷ்டத்தை அடையுங்களென்று யாருக்கும் நஷ்டத்தையுண்டு பண்ணவோ, யாருடைய தயவையும் எதிர்பார்க்கவோ இதுவரையில் வைத்துக் கொள்ளவில்லை. நாம் சொல்லுவதற்கும், செய்வதற்கும், சொல்லாததற்கும், செய்யாததற்கும் நம்மையே பொறுப்பாளியாக்கிக் கொண்டிருக்கிறோம். இதில் கலந்து ஒத்துழைத்ததாக சொல்லப்படக் கூடியவர்களெல்லாம் நமது கொள்கையும், அவர்களது கொள்கையும் ஒன்றாயிருக்கிற முறையில் நம்முடன் சேர்ந்து இருக்கின்றவர்களே தவிர, அவை சிறிது மாறினவுடன் பிரிந்து போய்விட வேண்டியவர்களே யாகையால், கொள்கை மாறாமலிருக்கும் வரையிலுந்தான் யாரும் ஒத்துழைக்க ஏற்றுக்கொள்ள வேண்டியவர்

களென்று கருதி, சேர்ந்து வேலை செய்து கொண்டு வந்தவர்களென்று நினைத்தோமே யொழிய யாரையும்—கூட்டுவியாபார ஒப்பந்த மாக ஒருவருக்கொருவர் எப்படி இருந்தாலும் ஒத்துப்போக வேண்டிய நிர்பந்தமுடைய குடும்ப வாழ்க்கை காரியமாக கருதவேயில்லை.

### மன உறுதி, நிர்தாட்சண்யம்

அன்றியும், நாமும், நாம் இதுவரை என்ன செய்துவிட்டோமென்று கவலைப் படவுமில்லை. ஏனெனில், தம்முடைய லட்சியம் மிகப்பெரியது; இதற்காக நாம் செய்யும் முயற்சி மிகச்சிறியது. இதனுடைய நஷ்டம் நமக்கொன்றும் பிரமாத மானதல்ல. அன்னியருக்கும் நம்மால் ஏற்பட்ட நஷ்டமோ, கஷ்டமோ சிறிதும் கணக்கிடத் தகுந்ததேயல்ல. ஏதோ, நமக்குத் தோன்றி யதை பேசுவது, எழுதுவது, ஊரூராய்ச் சுற்றுவது என்பதைத் தவிர நாம் ஒன்றும் பிரமாதமாகக் கஷ்டப் பட்டுவிடவுமில்லை. இதற்காக செலவழிக்கப்பட்ட பொருளோ, ஊக்கமோ எதிர்பார்க்கும் காரியத்திற்கு எத்தனையோ மடங்கு சிறியதேயாகும். முன் ஒரு சமயம் நாம் சொன்னதுபோல் ''மலை போன்ற ஒரு பெரிய காரியத்தைக் கொண்டு வருவதற்காக தலைமுடிபோன்ற அற்ப சக்தியைக் கொண்டு கட்டியிழுக்கப் பார்க் கிறோம். வந்தால் மலைபோன்ற கொள்கைகள் வரட்டும்; வராமல் அறுந்துபோனால் முடி போன்ற நமது அற்ப முயற்சிகள் வீணாப் போகட்டும். நமக்கு அதைப்பற்றி பெரிய கவலை யொன்றுமில்லை. இதனால், பெரிய நஷ்டமொன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை யென்று கருதிக்கொண்டே முன் செல்லு கிறோம்.

ஏனெனில், இவ்வளவு பெரிய இயக்கத் திற்கும், நமது மன உறுதியும், நிர்தாட்சண்ய முந்தான் ஆஸ்தியாகவும் மூலப்பொருளாகவும் இருக்கிறன்தே தவிர வேறில்லை.

—"குடி அரசு," *31-5-1931*



# நான் யாரைத்தான் எதிர்க்கவில்லை?



பொதுவாக நமது பிரசங்கத்தினாலும், ''குடி அரசு'' வினாலும் நான் செய்து வந்த பிரசாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவை களைக் கண்டித்தேன், அரசியல் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதம் என் பதைக் கண்டித்தேன், மதத்தலைவர்கள் என் பவர்களைக் கண்டித்தேன், மதச்சடங்கு என் பவைகளைக் கண்டித்திருக்கிறேன், குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன், சாமி என்பதைக் கண்டித்திருக்கிறேன், வேதம் என்று சொல்வதைக் கண்டித்திருக்கிறேன், சாஸ்திரம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், புராணம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், பார்ப்பனீயம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், சாதி என் பதைக் கண்டித்திருக்கிறேன், அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்சிறேன், உத்தியோகம் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன், நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், நியா யாதிபதி என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன், நிர்வாகஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித் திருக்கிறேன், ஜனப் பிரதிநிதித்துவம் என் பதைக் கண்டித்திருக்கிறேன், ஜனப் பிரதி நிதிகள் என்பதைக் கண்டித்திருக்கிறேன், தேர்தல் என்பதைக் கண்டித்திருக்கிறேன், சுயராஜ்யம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, சி. ராஜகோபாலாச் சாரியார் முதலிய ஒரே துறையில் வேலை செய்துவந்த நண்பர்களைக் கண்டித்திருக் கிறேன்.

### எதை நான் விட்டு வைத்தேன் ?

இன்னும் என்ன என்னவற்றையோ யார் யாரையோ கண்டித்திருக்கிறேன். கோபம்

வரும்படி வைதுமிருக்கிறேன். எதைக் கண்டிக்கவில்லை, யாரை வையவில்லை என்பது எனக்கு ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாம் என்று பேனாவை எடுத்தாலும், பேசலாம் என்று வாயைத்திறந்தாலும் கண்டிக்கவும் வையவும் துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய வேறில்லை. கண்டிக்கத்தகாத, வையத் தகாத இயக்கமோ, திட்டமோ, அபிப்பிராயமோ என் கண்களுக்குப் பட மாட்டேன் என்கிறது. இவைகளன்றி எனது வார்த்தைகளும், எழுத்துக்களும், செய்கைகளும் தேசத்துரோகமென்றும், வகுப்பு துவேஷமென்றும், பிராமணத் துவேஷமென்றும், மான நஷ்டமென்றும், ராஜ துரோகமென்றும், ராஜ துவேஷமென்றும், நாஸ்திகமென்றும், மத தூஷணை என்றும், சிலர் சொல்லவும் ஆத்திரப்படவும் ஆளானேன். அரசியல் தலைவர்கள், தேசாபிமானிகள், தேச பக்தர்கள், என்பவர்கள் என்னை வையவும் என்னை தண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான் ஏன் செய்ய வேண்டும்? சிலருக்காவது மன வருத்தத்தையும் அதிருப்தியையும் கொடுக்கத்தக்க காரியத்தை ஏன் செய்ய வேண்டும்? என்று நானே யோசிப்பதுண்டு. சிற்சில சமயங்களில், யாரோ எப்படியோ போகட்டும்; நாம் ஏன் இக்கவலையும் இவ்வளவு தொல்லையும் அடைய வேண்டும்? நமக்கென்ன இதனால் ஜீவனமா, பணம், புகழ், கீர்த்தி, சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிக்கையாவது உதவியுண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவது உதவியுண்டா? இமயமலை வெய்யிலில் காய்கிறது என்று குடைபிடிப்பது போல் இருக்கிறது என்பதாக நினைத்து, விலகி விடலாமா என்று யோசிப்பது முண்டு. ஆனால் விலகுவதில்தான் என்ன லாபம்; ஏறக்குறைய நமது ஆயுள் காலமும் தீர்ந்து விட்டது; இனி நாலோ, அய்ந்தோ, அல்லது அதிகமாயிருந்தால் பத்து வயது காலமோ இருக்கலாம், இந்தக் கொஞ்ச காலத்தை ஏன் நமது மனசாட்சிக்கு விட்டுவிடக் கூடாது? விலகித்தான் என்ன பெரிய காரியம் செய்யப்போகிறோம்? என்பதாகக் கருதி மறுபடியும் இதிலேயே உழன்று கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை.

உண்மையில் நாம் முன் சொன்ன அரசியல் மதவிஷயம் முதலியதுகளைக் கண்டிக்க நேரிட்ட போது உண்மையான அரசியல் மத இயல் இவைகளை நாம் கண்டிக்கவே இல்லை. எதைப் பார்த்தாலும் புரட்டும் பித்தலாட்டமும் பெயரைப் பார்த்து ஏமாறத் தகுந்ததாயிருக்கிறதே அல்லாமல், தத்துவங்கள் எல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் கொஞ்சங்கூட 'ரிபேர்' செய்வதற்கில்லாமல் அடியோடு அழித்து மறுபடியும் புதிதாய் உண்டாக்க வேண்டியதாகவே இருக்கிறது. நமது காலத்தில் இவை திருத்தப்பாடடையும் என்கிற நம்பிக்கை கொஞ்சமும் இல்லாவிட்டாலும் வேறு யாராவது மகாத்மாவைப் போன்ற மகான்கள் வந்தால் அவர்களுக்குப் பக்குவம் செய்து வைத்திருக்கக் கூடாதா என்றும், அதுவும் முடியா விட்டால் பலன் எப்படியானாலும் கடமையைச் செய்ய வேண்டியது தானே என்கிற முடிவும் கிடைக்கிறது. ஆகவே, இக்கஷ்டமானதும், மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கக் கூடுமானதுமான இக்காரியத்தில் இறங்கி விட்டோம். உலகம் ஒப்புக்கொண்டாலும் சரி; தள்ளிவிட்டாலும் சரி நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. நமது கடமையை எப்படி நாம் பிரதானமாய்க் கருதி இறங்கி இருக்கிறோமோ அதுபோலவே பொது ஜனங்களும், அதாவது இக்கடமையைச்சரி என்று எண்ணியவர்கள் தங்கள் கடமையையும் எண்ணி அக்கடமையைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

"குடி அரசு" 1-5-1927

## நினைவுகூர்ந்து மகிழ்கிறோம்!

தந்தை பெரியார் அவர்களின் 95-வது ஆண்டு பிறந்தநாளன்று அவர்களது முன்னிலையிலே நாதசுரம் வாசித்து அய்யா அவர்களால் ''நாதசுரச் சக்கரவர்த்தி'' என்று பட்டம் நாமக்கல்பேட்டை கிருஷ்ணன் அவர்களுக்கு சூட்டப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்ட பசுமையான நிகழ்ச்சியை நினைந்து நினைந்து பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கின்றோம்.

— நாமகிரிப்பேட்டை
கிருஷ்ணன் குடும்பத்தினர்





மலேசியா, சிங்கப்பூரிலிருந்து தந்தையின் விழாவில் தஞ்சையில் கலந்துகொள்ள, விமானத்தின் மூலம் வருகை தந்த, திராவிடர் கழகத் தோழர்கள், அய்யா, அம்மா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தனர். சென்னை—12-9-79.



# அந்த 125

1930 ஆம் ஆண்டு, தந்தை பெரியார் அவர்கள் கிழக்கு ஆசிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு தம் உடன் தோழர்களுடன் நாகைத் துறை முகத்தில் வந்து இறங்குகிறார். அவருக்குக் காலஞ்சென்ற மொகைதீன் மரைக் காயர் தலைமையில் நாகைப் பொதுமக்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க வரவேற்பு விழா எடுக்கிறார்கள். நாகை வி. பி. காயாரோகனம் அவர்களின் இல்லத்தில் பெரும் விருந்தொன்று அளிக்கப்படுகிறது.

விருந்துக்குப் பின்னர் மாயவரத்திற்கு, தோழர் நடராசன் இல்லத்திற்கு அய்யா தோழர்களுடன் செல்கிறார், அங்கிருந்து அய்யாவும் அன்னை நாகம்மையாரும் ஈரோட் டுக்குப் புறப்படுகிறார்கள். ரெயில் வண்டியில் ஏறும்போது என்னை நோக்கி, ''நீயும் எங்களோடு ஈரோட்டுக்கு வருகிறாய்'' என்கிறார். அய்யா அவர்களின் அன்புக் கட்டளையை யாரால் மீற முடியும்? வீடாவது ஒன்றாவது!......

*அய்யாவின் ஆணை !*

உடன்பட்டு, அய்யா-அம்மா ஆகியோருடன் வண்டியேறுகிறேன். ஈரோட்டு மண்ணைமிதித் தவுடனேயே அய்யா அவர்கள் ''இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாடு கூட்டுவதற் கான முன்னேற்பாடுகளைக் கவனி'' என்கிறார். எம். ஆர். ஜெயகரின் தலைமையில் மிக வெற்றிகரமாக மாநாடு நடந்தேறியதும், நான் ''என் ஊர்ப்பக்கம் தலையைக் காட்டி விட்டு வருகிறேன்'' என்கிறேன். ''மாநாட்டுப் பந்தலைப் பிரித்துவிட்டுப்போ''—ஆணையிடு கிறார் அய்யா. அதன்படி செய்கிறேன். பிரித்த பந்தலை ஏலம் போட்டுவிட்டுப்போ''—மறு படியும் கட்டளை. அதையும் செய்து முடித்து விட்டு அய்யா முன்னிலையில் வந்து நிற்கிறேன்.

மிகவும் திருப்தியான உள்ளத்தோடு, ''குடி அரசு கேஷியரிடம் நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு ஊருக்குப் போயிட்டு வா'' என்று கூறிய அய்யாவின் முன்னால், மேலும் பணம் தேவைப்பட்ட நான் தயங்கித் தயங்கி நிற்கிறேன்.

''என்ன?'' என்று கேட்ட அய்யாவிடம், ''இன்னுமொரு இருபத்தைந்து ரூபாய் தேவைப்படுகிறது அய்யா'' என்று எப்படியோ கேட்டு விடுகிறேன் நான்!

எந்தவொரு கேள்வியும் கேட்காமல், ''சரி, வாங்கிக் கொண்டு போ'' என்று பரி வோடு விடை கொடுத்து அனுப்புகிறார். 125 ரூபாயைப் பெற்றுக்கொண்ட நான் ஈரோட்டில் பட்டிருந்த சிறு சிறு கடன்களையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டு 62 ரூபாயுடன் மகிழ்ச்சிகரமாக வீடு வந்து சேருகிறேன்.

*அய்யா தந்த அந்த 125 !*

இந்தக் காட்சிகளெல்லாம் இப்போது என் கண்முன் நிழலாடுகின்றன. அந்தக் காலத் தில் அய்யா தந்த 125! பெருமிதப்படுகிறேன் என்றாலும் அன்பிற் சிறந்த அய்யா அவர்கள் இப்போது நம்மிடையே இல்லையே என்று ஏங்குகின்றேன். கலங்குகின்றன என் கண்கள்!






சமதர்மம் தழைக்க போராடுவோம்
நீதிக் கட்சி ஆட்சியில் சமதர்மக் கொள்கைப் பிரச்சாரத்திற்காகச் சிறையேகினார் - 1933
RAILWAY.
இந்தி ஆதிக்கம் ஒழிக
இந்தி ஆதிக்கம் ஒழிக
ஆச்சாரியாரோடு
நண்பரான ஆச்சாரியார் ஆட்சியில் இந்தி எதிர்ப்பு - 1938
இந்தி ஒழிக


குமாரசாமி ராஜாவோடு
பொன் மொழி ஈ.வெ.ரா
குமாரசாமி ராஜா காலத்தில் பொன்மொழிகள் வழக்கில் சிறை - 1949
-1953
ஆரம்பப் பாடசாலை
ஆச்சாரியார் காலத்தில் குலக்கல்வி எதிர்ப்பு
விநாயகர் சிலை
விநாயகர்சிலை உடைப்பு
காமராஜர் ஆட்சியில்
இராமன் பட எரிப்பு -1956
அரசியல் சட்டப் பிரிவு எதிர்ப்பு-1957
கோர்ட்
கோர்ட் அவமதிப்பு வழக்கு -1957






# அறிவுலகச் சக்கரவர்த்தி அய்யா!

டாக்டர் கலைஞர்

அரை நூற்றாண்டு காலம் அய்ரோப்பாவின் அறிவுலகச் சக்கரவர்த்தியாக கொலுவீற்றிருந்த வால்டேருக்குப் பின்னால், பகுத்தறிவினைப் பரப்பிடும் பணியே தமது வாழ்நாளின் இலட்சியமாகக் கொண்டு நம்மிடையே சிங்கமென உலவிய தந்தை பெரியார் அவர்கள் பிறந்து ஒரு நூற்றாண்டு முடிவடைகிறது.

ஆயிரமாயிரம் ஆண்டுக்கால அழியாத வரலாற்றைப் படைத்திருப்பது தமிழகம் என்றாலும், கடந்த ஒரு நூறாண்டு கால வரலாறு தான் தமிழகத்தையும் தமிழர்களையும் புதுமை உலகத்தாரோடு போட்டியிடத் தகுதியானதாக்கி யிருக்கிறது.

பெரியார் பிறக்காதிருந்தால் இந்த நாட்டில் இன்னமும் ''கஙப்பிரர் காலமே'' நடந்து கொண்டிருக்கும் என்பதை நினைக்கும் யாருக்கும், அவருடைய வாழ்வும் உழைப்பும் நினைக்கப்படும் போதே ஒரு பணிவினை அளிக்கும்; அவர் வாழ்ந்த காலத்துத் தலைமுறையைச் சார்ந்தவர் என்கிற பெருமை உணர்வை ஊட்டிடும்.

பிறந்தபோது நாடு இருந்த தாழ்ந்த நிலையை-சமுதாயம் வாழ்ந்த அவலநிலையை-மொழி வைக்கப்பட்டிருந்த கீழ்நிலையை தனது வாழ்நாளிலேயே மாற்றியமைத்த மாபெரும் வீரர்கள் உலகத்தில் பத்துப் பதினைந்து பேர்தாம் நம் கவனத்திற்கு வரமுடியும். அவர்களில் முதல்வரிசையில் வைக்கத்தக்க தலைசிறந்த தலைவர் தந்தை பெரியார்.

## அய்யாவின் அறைகூவல்!

சமுதாயத்தின் அனைத்துத் துறைகளும் அவருடைய அறைகூவலுக்கு உள்ளாயின. ''சாதிப் பாகுபாடு-மதமூட நம்பிக்கைகள் - சமுதாய இழிவு ஆகியவைகள் நீங்குவதை மதமும் கடவுளர்களும் மறுத்தால், இந்த இரண்டையுமே நான் மறுக்கிறேன்'' என்று சொல்லித் துணிச்சலாக போராடக் கிளம்பியவர் அவர்.



பெரியாரின் மறுப்புக்கு உள்ளான எதுவும் தமிழர்களின் வெறுப்புக்கும் உள்ளாயின என்பது தான் கடந்த அய்ம்பதாண்டு கால தமிழகத்தின் சமுதாய வளர்ச்சியின் சரித்திரமாக தொகுக்கப்படுகின்றது.

தன்மானம் என்பது இன்னதெனத்தெரியாதிருந்த தமிழர்களைத் தட்டியெழுப்பியவர் அவர்; சூடும் சொரணையும் குன்றிப் போய்க் கிடந்த தமிழர்களிடையில் நெருப்பை மூட்டியவர் அவர். கடவுளர்களிடம் சிறைப்பட்டிருந்த நெருப்பை உலகத்தார் நன்மைக்காகப் போராடிச் சிறைமீட்டு மக்களிடம் கொண்டுவந்ததாக பிரமோதியஸ் என்பவனைப் பற்றி கிரேக்க இதிகாசங்கள் புகழ்கின்றன. கடவுளர்களிடம் மனிதர்களுக்காகப் போரிட்ட முதல் வீரனாக அவனை அந்த இதிகாசங்கள் சொல்கின்றன. அவனைப்போலவே, இந்த நாட்டில், அனைத்து நலன்களையும் ஒரு சிலரே கைவசப்படுத்திக் கொண்டிருந்ததை மாற்றி ''எல்லோர்க்கும் எல்லாம்'' என்கிற நிலையை உருவாக்கியவர் தந்தை பெரியார்.

## இன எழுச்சிக்குக் காரணமானவர்

பதினெட்டாம் நூற்றாண்டை பிரான்சில் வால்டேர்-ரூசோ நூற்றாண்டு என்று சொல்வதை சிலர் கடைப்பிடிப்பதாகச் சொல்கிறார்கள். அதேபோல் இருபதாம் நூற்றாண்டை இனி பெரியார்-அண்ணா நூற்றாண்டு எனச் சொல்லத் தொடங்குவார்கள். ஏனெனில், இந்த இருவரும் சேர்ந்து உருவாக்கியது தான் இன்றைய தமிழகம்—இன்றைய தமிழ்ச் சமுதாயம்—இன்றைய தமிழ் இன எழுச்சி!

இவர்கள் இருவர் சொற்களை மீறி நடப்பதற்கு இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு இந்தச் சமுதாயம் துணியாது என்று நான் அடிக்கடிச் சொல்வதுண்டு.

இதற்கு மாறாக—பெரியார்—அண்ணாவின் 'கட்டளை' களை மீறி நடப்பதற்கு துணிந்து விட்ட ஒரு அரசின் தன்னிச்சையான

நடவடிக்கை தான் இன்று நம்மிடையே கள்ளிக் காடாகக் காட்சியளிக்கும் பிற்பட்டோர் நலன்களுக்குப் பாதகமான புதிய அரசாங்க உத்தரவு.

### பிற்படுத்தப்பட்டோர் தலையில் விழுந்த பேரிடி !

இந்த உத்தரவு பிற்பட்டோர் தலையில் விழுந்த பேரிடியாக மட்டும் நான் கருதவில்லை. தமது வாழ்நாளை அர்ப்பணித்து நமது சமுதாயத்தை மேல்நிலைக்கு உயர்த்திய பெரியார்—அண்ணா ஆகியோருக்கு இழைக்கப்படும் துரோகச் சின்னமாகவே இந்த உத்தரவை நான் கருதுகிறேன்.

ஆகவே தான், பெரியாரின் நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவதாக வெளியுலகத்துக்குப் போக்குக் காட்டி ஏமாற்றி அவருடைய கொள்கைகளின் ஊற்றுக்காலான சமுதாய நீதிக்குக் குழிவெட்டும் செயலை எப்படி சகிப்பது ?

கதே, ஷில்லர், பீத்தோவன், ஹெகல் ஆகிய பேரறிஞர்கள் பலரும் ஒரே காலத்தில் தம்மிடையே வாழ்ந்ததாக ஜெர்மானியர்கள் பெருமைப்பட்டுக் கொண்ட காலம் ஒன்றிருந்தது. அதேபோல், பெரியார், அண்ணா, காமராசர், ஆகிய பெருமக்கள் ஒரே காலத்தில் வாழ்ந்ததாக நாம் பெருமைப்பட்டு செம்மாந்து நின்ற நிலை கடந்த பத்தாண்டு காலத்திற்கு முன்பு இருந்தது.

இந்த மூவரும் பகிர்ந்து தமிழகத்தின் நலன்களைக் காப்பாற்றிய நாட்கள்தாம் தமிழகத்தின் உண்மையான பொற்காலம். இவர்களை மீறி தமிழர்களைத் தட்டிக் கேட்க, இந்த உலகத்தில் எந்தச் சக்திக்கும் துணிச்சல் இருந்ததில்லை.

ஆனால், கடந்த பத்தாண்டு காலத்தில் இவர்கள் அனைவரையும் ஒருசேர இழந்து விடும் அவலத்திற்கு நாம் ஆளாகிவிட்டோம்.

### தி. க.; தி. மு. க. வின் பொறுப்பு

தமிழகத்திற்குள் நுழையும் தீய சக்திகளை இமயமென நின்று தடுத்து வந்த இவர்கள் மறைவுக்குப் பிறகு, தமிழர்களின் நலன் காக்கவே தொண்டாற்றும் திராவிட இயக்கத்தின் பொறுப்பும் கடமைகளும் பெருகி விட்டிருக்கின்றன.

பெரியார் போராடிச் சேர்த்த சமூக நலன்கள்—அறிஞர் அண்ணா நமக்கு விட்டுச் சென்றுள்ள ஜனநாயக உணர்வு ஆகியவைகளை வருங்கால சமுதாயத்திற்குக் காப்பாற்றித் தரும் பெரும் பொறுப்பு இன்று தி. மு. கழகத்துக்கும் திராவிடர் கழகத்துக்கும் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பொறுப்பை எத்தகு விலை கொடுத்தும் தமிழர்களுக்குக் காப்பாற்றிக் கொடுப்போம் என்கிற சூளுரையை பெரியார் நூற்றாண்டு நிறைவு நாட்களில் தெரிவித்துக் கொள்வது நமது கடமை. வாழ்க பெரியார் ! வாழ்க அண்ணா ! வளர்க, வலிமை பெறுக அவர்கள் வளர்த்த உணர்வு !

*





# பெரியாரின் எண்ணங்கள் — ஒரு புரட்சிக் கனல்!

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஈரோடு நகரில் பிறந்து வளர்ந்த (பெரியார்) ஈ. வெ. ராமசாமி அவர்கள் இன்று தமிழ்நாட்டு மக்களின் வாழ்விலும், எண்ணத்திலும் ஒரு புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கி, அறிவுப் புரட்சிக்கு வழிவகுத்து மக்கள் தன்னம்பிக்கை கொள்ளச் செய்தவராக விளங்குவதால் வரலாற்றில் போற்றிக் குறிப்பிட வேண்டிய ஒரு புதிய சகாப்தம் (புதிய நூற்றாண்டு) படைத்தவர் ஆவார். எனவே பெரியார் அவர்களின் நூற்றாண்டு, தமிழர் வாழ்வு காண முற்பட்ட நூற்றாண்டாக, தன்மானமும், பகுத்தறிவும் முளைத்துத் தழைத்த நூற்றாண்டாக, அடிமை மனப்பான்மை அகலச் செய்த நூற்றாண்டாக தமிழ் நாடெங்கும் கொண்டாடப்படுவது எல்லா வகையிலும் ஒரு எழுச்சியூட்டும் கடமையாகும்.

புதிய எழுச்சிகொண்ட, தன்மான உணர்வும், பகுத்தறியும் மனப்பான்மையும் கொண்ட தமிழினத்தை உருவாக்கிய தந்தை பெரியார், புதிய தமிழகத்தின் — தமிழ் இனத்தின் தந்தையாவார்.

### இயற்கையிலே சுதந்திர உணர்வு

செல்வச் சிறப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தவராதலால், பிறர் தயவில், ஆதரவில் வாழ வேண்டிய நிலைக்கு என்றும் ஆளாகாதவர், பெரியார். சிறு வயது முதலே எதையும் — தமது அறிவிற்குட்பட்ட வகையில் ஆராயும் மனப்பான்மை கொண்டவர். ஒருவகையில் இயற்கையிலேயே 'சுதந்திர' உணர்வு கொண்டவர். மற்றவர்கட்கு அஞ்சுவதும் அடங்குவதும், கட்டுதிட்டங்களை ஏற்பதும் அவருக்கு இயல்பல்ல.

உலகத்தார் நம்பிக்கைகளையும், செயல்களையும் தாம் கண்டறியும் போதெல்லாம் அவற்றைக் கூர்ந்து நோக்கி, அவை ஏன்? எப்படி? எதனால்? என்னும் முறையில் ஆராய்ச்சியில் ஈடுபடுவார். தமக்குத் தோன்றும் உண்மையை மற்றவர்களிடம் உரைத்து அவர்தம் பதிலையும் ஆராய முற்படுவார்.

முறையான பள்ளிப் படிப்பு முக்கியத்துவம் பெறாத காலமாகையால், அவருக்குப் பள்ளிப் படிப்பில் ஆர்வமில்லை. அதைக் கண்ட பெற்றோர்கள் அவரைத் தமது வணிகத் தொழிலிலேயே ஈடுபடுத்தினர். அதுவும் ஒருவகையில் நாட்டுக்கே நன்மையாயிற்று எனலாம். முறையான பள்ளிப்படிப்பும், ஆசிரியரிடம் பாடம் கேட்கும் முறையும் ஒருவரது உள்ளத்தில் ஆழமாகப் பதித்து விடக்கூடிய ஒரு பழமைச் சுவடு அவருள்ளத்தில் பதியாமல் தப்பினார் எனலாம்.

### அனுபவ அறிவு

செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போன்று, எண்ணங்களும் மனப்பழக்கமாகி, அந்த எண்ணங்களினின்றும் புதிய எண்ணங்களைச் சிந்திப்பது என்பது இயற்கையில் எளிதல்ல. எனவே அவரது மனம் புதிதாகத் தோன்றக் கூடிய எண்ணங்களைப் பழைய எண்ணங்கட்கு அடிமைப்படுத்த வேண்டிய நிலைக்கு ஆட்படவில்லை.

ஏட்டுக் கல்வியினை முறையாகப் பயில்வதில் நாட்டம் செலுத்தாவிடினும், அவரது இயல்பான அறிவுக் கூர்மையால், உலகம் என்னும் விரிந்த ஏட்டினைக் கண்டு, கேட்டு, உரையாடி, சிந்தித்து, தனிவழியில் தமது கருத்துக்களை—காரண காரிய விளக்க அடிப்படையிலான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளலானார்.

பின்னர், மக்கள் ஏன் பல்வேறு மூட நம்பிக்கைகட்கு ஆளாகின்றனர் ? சாதி, சமய வேற்றுமைகளை ஏற்கின்றனர் ? என்றெல்லாம் சிந்திக்கத் தலைப்பட்டு, அவர்கள் அப்படிப்பட்ட நம்பிக்கைகொள்ள ஏதுவாக உள்ள இதிகாச புராண சாஸ்திர ஏடுகளையும் அவராகவே படித்து அவற்றை ஆராயலானார். அவற்றில், அறிவுக்கு ஒவ்வாத, உண்மைக்கு

மாறான கற்பனையும் பொய்யும் கலந்து மயக்க உணர்வு வளர்க்கும் பலப்பல செய்திகள்—கருத்துக்கள் இருப்பதைக் கண்டார். இந்தக் கற்பனைக் கதைகளும்—பொய்மைகளும் பாமர மக்களை மட்டுமன்றிப் படித்த மக்களையும் கூட உண்மையைத் தெரியவிடாமல் தடுக்கின்றன என்பதையும் உணர்ந்தார். தாம் உணர்ந்த உண்மையை உலகத்திற்கு உணர்த்துவதே தமது வாழ்நாள் குறிக்கோள் ஆகக் கொண்டார்.

## உலகம் இதுவரை காணாத தலைவர் !

பெரியார் அவர்களின் அறிவு கூர்மையானது, சுறுசுறுப்பானது, நினைவாற்றல் மிக்கது, ஓய்வை ஏற்காதது. எப்பொழுதும் எதையாவது படித்துக் கொண்டோ, எழுதிக் கொண்டோ, உரையாடிக் கொண்டோ, சிந்தித்துக் கொண்டோதான் இருப்பார்கள். புதிது புதிதாக அறியக் கூடியவற்றை அறிந்து—தெளிவதிலே அவருக்கு ஒரு பேரார்வம்.

இயல்பிலேயே அவரிடம் காணப்பட்ட ஊக்கம், சுறு சுறுப்பு, விடா முயற்சி, மடியின்மை ஆகியவையே, முதிர்ந்த வயதில் உடல் நலக் குறைவு ஏற்பட்ட பின்னரும் தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட நிலையிலும், பிறர் உதவியின்றி நடமாட முடியாத போதும், தமது குறிக்கோள் வெற்றிபெற, நாடு நகர் பட்டி தொட்டி எங்கும் மக்களைச் சந்தித்துத் தமது கொள்கைகளை எடுத்துக்கூறி விளக்கும் 'இலட்சியப் பயணம்' மேற்கொள்ளக் காரணமாயிற்று எனலாம். அந்தக் கடுமையான உழைப்புடன் நடத்தப்பட்ட சுற்றுப் பயணத்தில்தான் அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி, மனநிறைவு ! 'உடல்' வலிமை இழந்து தளர்ந்தபோதும் 'அறிவு' உரம் குன்றாமலும் கூர்மை இழக்காமலும், 'உள்ளம்' ஊக்கம் தளராமலும் தொண்டார்வம் தடைப்படாமலும் தந்தை பெரியார் அவர்கள் 'ஓய்வு' விரும்பாது இந்தச் சமுதாயத்துக்காகப்பாடுபட்டார். சுறுசுறுப்பு இயல்பு கொண்ட அவரது அறிவே அவரை இயங்கவைத்தது எனலாம். அப்படிப்பட்ட ஒருவரை 'உலகம்' இதுகாறும் கண்டதில்லை.

பெரியார் அவர்கள் பெற்றிருந்த செல்வத்துக்கும், செல்வாக்குக்கும், தொண்டினால் அவர் அடைந்திருந்த புகழுக்கும் அவர் இருக்குமிடந்தேடிப் பல்லாயிரக் கணக்கானவர் தேடி வருவர். உட்கார்ந்த இடத்தில் இருந்தே உலகோர்க்கு அறிவுரை வழங்கி இருக்க முடியும். எந்த ஒரு ஞானியும் மடாதிபதியும் அடையாத பெருமையோடு அவ்வாறு செய்திருக்கமுடியும். ஆனால்-மக்களிடத்திலே அவர் கொண்டிருந்த தாயன்பும், தானும் மற்றவர்களைப் போன்று ஒரு சராசரி மனிதனே என்னும் எண்ணமும், தொண்டு செய்பவன் மக்களை நாடிச்செல்வதே முறை என்னும் கருத்தும், தமது கொள்கையை எதிர்நீச்சல் முறையில் எடுத்துச் சொல்ல வேண்டியிருப்பதால் தாமே—அறியாமையில் மூழ்கியுள்ள மக்களைத் தேடிச் செல்வதே தமது கடமை என்னும் ஆர்வமும் அவரை அப்படிப்பட்ட சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள வைத்தன.

மக்கள் பலர் தமது கருத்தினைக் காது கொடுத்து கேட்கிறார்கள் என்பதே அவரது களைப்புக்கு மருந்து. அவர்கள் தமது கொள்கையைச் சிந்திக்கின்றார்கள் — ஏற்க முற்படுகிறார்கள் என்பதே அவருக்குத்தேன். அதுவே அவரது முதுமையில் அவர் பருகிய இளமையின் பால்.

பெரியார் அவர்களிடம் பழகியவர்கள் அறிந்தது இது. தம்முடன் உரையாடுவோரைக்கூர்ந்து கவனிப்பார். அவர் தம் உரையையும் காதுகொடுத்துக் கேட்பார். அவரது சிந்தனை தம்முடன் பேசுவோரையும் அவரது எண்ணத்தையும் ஆராயும். ஒருவர் ஏன் அப்படிப்பட்ட கருத்தைக்கூறுகிறார் என்பதை அவர் ஆழ்ந்து சிந்திப்பதை அவரது துருவிப்பார்க்கும் கண்கள் புலப்படுத்தும்.

தம்மிடம் உரையாடுவோர், ஏதேனும் ஒரு முடிவான கொள்கையில் தம்மை ஒப்படைத்துக் கொண்டவர் என்று தோன்றுமானால், அவருக்குள்ள இலட்சியம் அவருக்கு—நமக்குள்ள இலட்சியம் நமக்கு என்று உள்ளங்கொண்டு, அவர்களிடம் அதிகம் வாதாடத் தலைப்படமாட்டார். அவர்கள் மாறுபட்ட கொள்கையுடையவராயினும், ஏதேனும் ஒருவகையில் சமுதாயத்துக்குப் பயன்படுபவர்களானால், அவர்கட்கு உரிய மதிப்பினை வழங்கி, பாராட்டுதல் செய்து, தனிப்பட்ட முறையில் அவர்களுடன் மாறுபாடு இல்லை, கொள்கையிலேதான் என்பதை அவர்களை உணருமாறு செய்திடுவது அவரது இயல்பு. அவர்களையெல்லாம் தம்முடைய பண்பாட்டினாலேயே பெரிதும் கவர்ந்தவர் தந்தை பெரியார்.

பெரியார் அவர்கள் எதையும் சாஸ்திரம்—சம்பிரதாயம் என்றோ, முன்னோர் உரைத்தது என்றோ, மக்கள் நம்பிக்கை என்றோ ஏற்பதில்லை. உண்மை, நியாயம், தேவை, மக்களுக்குப் பயன்தருவது என்று உறுதியாகத் தெரிந்தால்தான் ஏற்பார். ஆகவே, அவரது தனித் தன்மை வாய்ந்த சிந்தனையாக வளர்ந்து, உரையாகி, எழுத்தாகி, அவரது குறிக்கோள் ஆகவே வடிவுகொண்டது.

## புதிய மதிப்பீடு

மக்கள் உள்ளத்தில் பதிந்துள்ள பழமையான எண்ணங்களை எல்லாம், பழைய பொன் நகையை உருக்கித் தூய பொன்னாக்கிப் புது அணி செய்யப்படுவது போன்று, புதிய மதிப்பீடு செய்யலானார்.

மனிதன்—மனிதத் தன்மைபெற, பகுத்தறியும் ஆற்றல்பெற, சமத்துவ சகோதரத்துவ சுதந்திரத் தகுதிபெற, தன்மானம் இழக்காது வாழ, எவை எவை எப்படி எப்படித் தடையாயினும் அவற்றைத் தகர்த்து எறிவதே அவருடைய குறிக்கோள்.

சாதி, குலம், உயர்வு, தாழ்வு, பார்ப்பனீயம், புரோகிதம், சடங்குகள், மத நம்பிக்கை, தலை விதி தத்துவம், கோவில்—வழிபாடு — கடவுள் நம்பிக்கை, மறுபிறவி, மோட்சம்—நரகம் முதலான அனைத்தும் அவரது பகுத்தறிவுக் கேள்விக் கணைகளால் தூளாக்கப்பட்டன.

## ஒரு தலைகீழ் மாற்றம்

பெண்ணடிமை நிலை மாறவும், கலப்புத் திருமணமும் — விதவை மணமும் ஏற்கப்படவும் அவர் ஆற்றிய தொண்டு பெண்ணினத்தின் விடுதலைக்கு வழிகோலின.

உழைப்பவர்கள் உருக் குலையவும் வறுமையில் வாடவும், உழைக்காதவர்கள் உண்டு கொழுத்து ஆதிக்கம் செலுத்தவுமான நிலையை எதிர்ப்பதற்கான துணிவையும் மக்களிடம் தந்தை பெரியார் உருவாக்கினார்.

பொதுவாகக் கூறின் — இன்றைய சமுதாய அமைப்பே ஒரு நீதி, நியாயமற்ற அடிப்படையில் அமைந்துள்ளதால், அதன் எண்ணத்தையும் நம்பிக்கைகளையுமே மாற்றி அமைப்பதன் மூலம், அறிவையும், உழைப்பையும் மதித்து வாழும் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க கால்கோள் நடத்தினார் பெரியார். எண்ணங்களில் புரட்சியும், செயலில் முயற்சியில் நம்பிக்கையும் ஏற்படச் செய்து சமுதாய அமைப்பையே ஒரு தலைகீழ் மாற்றத்தை ஏற்க வைத்திடப் பாடுபட்டார்.

ஆம், சமுதாயத்தின் எண்ணமெனும் நீரோட்டத்தை எதிர்த்து — தமது வல்லமை மிகுந்த அறிவுத் துணைகொண்டு எதிர் நீச்சல் போட்டவர் பெரியார், தமது ஓய்வற்ற உழைப்பாலும், உறங்காத அறிவாலும், தோல்வி அறியாத மனத்தாலும், ஒரு புதிய சமுதாயத்திற்கான அடித்தளத்தை அமைப்பதில் வெற்றி கண்டவர் பெரியார்.

தந்தை பெரியாரின் எண்ணமும்—கருத்தும், ஏதேனும் ஒருவகையில் மாற்றம் செய்திடாத மனிதனே தமிழகத்தில் இல்லை. இன்று வாழ்பவர் எல்லோருமே—அவருக்குக் கடமைப்பட்டவர்களாகவே இருப்பர்.

வாழ்க பெரியார் வளர்த்த சிந்தனை !

வளர்க சுயமரியாதை !

BEST COMPLIMENTS OF :

**MATHURA NILAYAM**

OFFSET PRINTING DIVISION

Phone : 812988 Grams : 'GOODNEWS'

5-A, AZIZ MULK 9TH STREET,
(Opp: Church Park Convent)
THOUSAND LIGHTS,
MADRAS - 600 006.



# எங்கள் கொடி!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



வைகறை இருட்டையும் செங்கதிர் நகைப்பையும்
திராவிடர் மணிக்கொடி குறிக்கும்
வாழ்விருள் தவிர்ப்போர்
தனிப்பெரும் புரட்சியை
வரவேற்றல் கொடியின் நோக்கம்
துய்யபன் னூறாயிரம்
திராவிட மக்கள்
கொடி நெடுந்தறியினைச் சூழ்ந்தே
தோய்கருஞ் சட்டையால்
துயருளம் காட்டியும்
சுடர்விழிகள் நாளின்மேல் வைத்தும்,
அய்யகோ வாரீரோ
திராவிட மக்களே
ஆனஉம் மானத்தைக் காப்பீர்
அடிமையினை மிடிமையினை
மாற்றுவீர் என்னவே
அழைத்தனர்; இதை மறுத்தே
வையகம் எதிர்க்கட்டும்
அதிகார மக்கள்தாம்
வாட்படை யோடும் வரட்டும்;
வன்சிறை இதோ என்று
காட்டட்டும் திராவிடம்
மீட்பதெம் குறியாகுமே.

—"குயில்," 1-4-1948









# தந்தையுடன் சில சந்திப்புகள்

மலேசியா திராவிடர் கழகத் தலைவர்

கே. ஆர். இராமசாமி

தந்தை பெரியார் நூறாவது ஆண்டு நிறைவில், அவர்களைச் சந்தித்து மகிழ்வுடன் உரையாடிய மூன்று நினைவுகளை நினைந்துப் பார்க்க ஒரு நல்லவாய்ப்பு கிட்டியதால் மகிழ்கிறேன்,

1949-ல் என்னுடைய பள்ளிவாழ்க்கையில் அய்யா அவர்களைக் குறித்து கடுமையான விமர்சனங்கள் மலேசிய நாளேடுகளில் வெளியிடப்பட்டன.

அய்யா அவர்களின் கொள்கைகளை மலேசிய கழகத் தோழர்கள் காப்பிகடைகள், ஒன்று கூடும் இடங்களில் விவாதிப்பதை நின்று ஆர்வமாகக் கவனித்து வந்த எனக்கு, அவரது திருமண நடவடிக்கை சரியானது என இளமையான நிலையில் என் மனதில் முடிவெடுத்தேன்.

கோவில் அறநிலையத் தலைவராகஇருந்த என்னுடைய தந்தையார் என்னுடன் விவாதித்தார். என் கருத்தை உறுதியாகக் கூறினேன்.

## முதல் சந்திப்பு

1954ம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் மலேசியாவிற்கு இரண்டாவது முறையாக வருகை தந்தபோது அய்யா அவர்களைக் காணவும் அவரது அரிய உரைகளைக் கேட்கவும் நல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

மலேசிய திராவிடர்கழக கோலக் கிள்ளான் கிளையின் துணைச் செயலாளர் பொறுப்பேற்றிருந்த நான், அய்யா அவர்களுக்குக் கழக சார்பில் வரவேற்பு மடல் வாசித்தளிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

அய்யா அவர்களது பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதுடன் வாய்ப்புக்கிட்டும் பொழுது கொள்கை விளக்கம் குறித்து அவர்களிடம் பேசிட வாய்ப்பு ஏற்பட்டது.

அவர்கள் மலேசிய மக்களுக்குத் தந்த அறிவுரைகளை ஏற்று வாழ்வில் ஏற்றம் பெற்றவர்கள் பலரைக் காணலாம். அவர்களது அரிய கருத்துக்களை உள்ளத்தில் தேக்கிக் கொண்ட நிலை,

மலேசியாவில் கழகத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகளையெல்லாம் எளிதாக வெற்றி கொள்ள முடிந்தது. அய்யா அவர்கள் 1954ல் மலேசியா வந்தபொழுது 10 கிளைகளாக இருந்த திராவிடர்கழகம் இன்று 90 கிளைகளைப் பெற்று வளர்ந்திருக்கிறது.

அய்யா அவர்கள் மலேசிய மண்ணில் விதைத்த கொள்கை வெற்றிதரும் நிலைக்கு உருவாகியிருக்கிறது.

## இரண்டாம் சந்திப்பு

1968 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26ஆம் நாள் அய்யா அவர்களை சென்னையில் கழகத்தோழர்கள் நாற்பதுபேர்களுடன் சந்தித்து மரியாதை செலுத்திக் கொள்ளும் வாய்ப்பு இரண்டாவது முறை கிட்டியது. 1968-ல் என்னுடைய தலைமையில் மலேசியத் தோழர்கள் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்கு வந்த வாய்ப்பில் இச்சந்திப்பு ஏற்பட்டது.

கொள்கைப்பேரொளி அய்யாஅவர்களிடம் கழகத்தோழர்கள் மகிழ்ச்சியுடன் விடுத்த வினாக்களுக்குத் தெளிவான விளக்கமளித்தார்கள்.

ஒப்பற்ற தலைவரைச் சந்தித்த அந்த இனிய நிகழ்ச்சிகளை கழகத்தோழர்கள் இன்றும் பெருமையாக நினைவு கூர்வர்.

## 3வது முறை சந்திப்பு

அய்யா அவர்களை 1973 டிசம்பர் 19-ஆம் நாள் மூன்றாவது முறையாக சென்னையில்

சந்திக்கும் வாய்ப்பைப்பெற்றேன். காலையில் விடுதலைப் பணிமனையில் அய்யா அவர்களுடன் இரண்டு மணி நேரம் சந்தித்துப் பேசிய வாய்ப்பு என் மனதைவிட்டு நீங்காத ஒன்றாகும். அய்யா அவர்களை மலேசியாவிற்கு பத்துநாட்கள் அழைத்துச் சென்று இளைய தலைமுறையினருக்கு அவரது அரிய கருத்துகளைக் கேட்க, தந்தையின் ஒப்புதலையும் மகிழ்ச்சியுடன் பெற்றேன். என்னுடைய இலங்கைப் பயணம் முடிந்தபின் மலேசிய பயணம் குறித்து இறுதி முடிவு செய்யலாமென அய்யா அவர்கள் கருத்துரைத்தார்கள்.

அன்று மாலை சென்னை தியாகராய நகரில் நடந்த கூட்டத்தில் அய்யா அவர்களின் இறுதி கொள்கைச் சாசன உரைகளைக் கேட்கப் போகும் நிலை அமையுமென நான் எண்ணிப் பார்க்காதநிலை. அந்த சிறப்புக் கூட்டத்தில் அய்யா அவர்களுடன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவும் வாய்ப்பு கிட்டியது என்ற உணர்வும், அய்யா அவர்களின் மறைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரிய மரியாதைகளையும் செலுத்த வேண்டிய சூழ்நிலையும் எதிர்பாரமல் அமைந்தது.

## உறுதி கொள்வோம்

அய்யா அவர்களின் இலட்சியங்களை மலேசிய மண்ணில் வேருன்றச் செய்வதில் தளராத பணியை மேற்கொண்ட அய்யா அவர்களின் இறுதி நிகழ்ச்சியில் உறுதி கொண்டேன்.

மலேசிய மண்ணில் 5 மாடிக் கட்டடம் 15 லட்சம் ருபாய்க்கு அய்யா நூறாவது ஆண்டு விழாவில் வாங்கப்பட்டது. அக்கட்டடத்தை அய்யாவின் பெரும் பணிக்குக் காணிக்கையாக அறிவித்தோம்.

அய்யாவின் பணியை தமிழகத்திற்கு ஈடாக மலேசிய மண்ணில் சிறப்பாகச் செய்வோம் என்ற உறுதியை நூறாவது ஆண்டு நிறைவு விழாவில் மேற்கொண்டுள்ளோம்.

வாழ்க அய்யாவின் கொள்கைகள்! வளர்க பகுத்தறிவு!

*


*With best compliments from:*

Phone: 842020 Grams: "FACSIMILE"

**THE PHOTO LITHO PRESS**

SPECIALISTS IN COLOUR REPRODUCTION

746, TRIPLICANE HIGH ROAD,

MADRAS - 600 005.






## பெரியார் கண்ணோட்டத்தில்

# நிலமும் பொதுவுடமையும்

மார்டின் டெய்லர் M.A.,

[ இந்த ஆய்வுக் கட்டுரையாசிரியர், மதுரை மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள நாராயணத்தேவன்பட்டியைச் சேர்ந்தவர். 'சமூகப் பணியியல்' படிப்பில் எம். ஏ. பட்டம் பெற்றவர். ''தமிழக நிலமற்ற விவசாயக் கூலிகளின் வாழ்க்கை நிலைமை—ஓர் ஆய்வு'' என்னும் தலைப்பில், 'பெல்லோஷிப் (Fellowship) பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்து வருகிறார். இவர் தமது ஆராய்ச்சிக்காக பெரியார் பகுத்தறிவு நூலகம்— ஆய்வகத்தை துணை ஆய்வுக் கூடமாகப் பயன்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ]

நாம் வாழுகின்ற இந்த 20-ம் நூற்றாண்டு ஒரு புதிய சோசலிச சகாப்தத்தை எதிர் நோக்கியுள்ள ஒரு காலக்கட்டம் ஆகும். ஒரு நாடு 'பொதுவுடமை' உள்ள அரசாக மாறினால் அங்கு காணப்படும் அனைத்துச் செல்வமும் அந்நாட்டையே சேரும். நிலமென்றால் அந்நாட்டு விவசாயிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் பாடுபடுதல் அவ்வாறே தொழில் நுணுக்கம் பயிற்சி பெற்ற அனைவரும் முதலாளி, உழைப்பாளி யென்ற பாகுபாடின்றி தொழில் செய்வது. பாடுபட்டு வரும் பொருள் அனைத்தையும் எல்லோரும் அனுபவிப்பது ஆகும்.

*விவசாயியின் அவலம் !*

இன்றையநிலையில் நமதுநாட்டில்தனியுடமையினாலும், மற்றும் கிராம நகரங்கள் என்ற பேதமை பெருகிக் கொண்டிருக்கிற இந்தச் சூழலில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் கிராம மக்களின் (கூலிவிவசாயிகள், சிறுவிவசாயிகள், நடுத்தரவிவசாயிகள்) தொல்லை குறைந்த பாடில்லை. அவர்கள் பாடுபட்டு பயிராக்கி தானியமாக்கி நகரத்துக்குக் கொண்டுவந்தால் நகரவியாபாரிகள் கிராமத்தாரின் பயிர் செலவு, முட்டுவழிச்செலவுக்கும் கூட பத்தும் பத்தாலும் கணக்குப் போட்டு விலைபேசி, ஒன்றுக்கு ஒன்றேகாலாக மாற்றி ஏமாற்றி அளந்து வாங்கிக் கொண்டு மொத்தக் கிரயத்தை தரகு, மகமை, சாமிக் காசு, நோட்டு, வட்டம், வாசல் காரிக்கு, காவல்காரனுக்கு, வெற்றிலை பாக்குச் செலவு என்றெல்லாம் பல செலவுக்கணக்குப் போட்டு பிடித்தம் செய்து கொண்டு மீதி ஏதோ கொஞ்சம் கொடுக்கிறான். பணத்தை மொத்தமாக கண்டறியாத கிராம விவசாயி தன் மீது கருணைவைத்து கடவுள் இவ்வளவு ரூபாய் கைநிறையக் கொடுத்தார் என்று கூறிக் கொண்டு வாங்கித் துணிகளில் முடிந்துகொண்டு காப்பி சாப்பிட்டு, சினிமா பார்த்துவிட்டு ஊர் போகிறான். (கிராமச் சீர்திருத்தங்கள் — கிராமங்கள் ஒழியவேண்டும். (''குடி அரசு'' 11-11-1944)

ஆனால் அதே விவசாயி, வறட்சி, பஞ்சம் முதலிய காலங்களில் ரேஷன் வாங்குவதற்காக (நகரத்தாரிடம்) நகரத்திற்குச் செல்ல வேண்டியதிருக்கிறது. அதாவது, பாடுபட்டு விளைவித்ததைக் கொண்டு வியாபாரியிடம் கொடுத்து விட்டு அதையே திருட்டுத்தனமாக கள்ளச் சந்தையில் வாங்கவேண்டியது இருக்கிறது.

மேலும், லேவாதேவிக்கு வட்டி கொடுத்து வரும் கிராமங்களான தஞ்சை நிலவசதியுள்ள நீர் பாசனமும் பருவம் தவறாமல் மழைபெய்யும் நீர் வசதியுள்ள நிலப்பரப்புக்கு மத்தியில் உள்ள கிராம நிலைகள் எப்படியிருக்கின்றன என்பதைவிட பொட்டல்காடு, கானல்காடு, பாலைவனங்கள் ஆகியவற்றில் குடியிருக்கும் லேவாதேவித் தொழிலாளர்களான நாட்டுக் கோட்டை, மார்வாடிமார் ஆகியவர்களின் வீடுகள் எப்படியிருக்கின்றன; இவர்களிடம் சரக்கு வாங்கி விற்ற நகர வியாபாரிகள் வீடு அவர்களது வாழ்வு எப்படியிருக்கிறது.

*முதலாளி—தொழிலாளி உறவு*

ஏழை விவசாயியின் உழைப்பும் விளை பொருளும் நிலச்சுவான்தார்கள், நகரத்தார்கள் அனுபவிக்கவும், அரசாங்கம் நடக்க வரி கொடுக்கவும், அரசாங்கம், நகர மக்கள் ஆகியவர்கள் மாத்திரமல்லாமல், கடவுள், கோயில்கள், கூட அங்கிருப்பவர்களுடன் சேர்ந்து தேவதாசை சட்டப்படி ஒழுங்காக சகல இன்பங்களும் அனுபவிக்க வசதியாக இருந்து வருகின்றன.

இன்றைய நிலையில் கூலி விவசாயி, நிலச்சுவான்தார், ஏழை, பணக்காரர், தொழிலாளி, முதலாளி, கிராமத்தார், நகரத்தார் அவர்களின் வாழ்க்கை முறைகளில், பிரச்னைகள் பெருகிக் கொண்டேயிருக்கிறது. உதாரணமாக தொழிலாளி, முதலாளி உறவை அலசிப் பார்த்தால் முதலாளிக்குத் தன்னுடைய தொழிலாளியைப் பற்றிய கரிசனை கிடையாது. தொழிலாளி கூலிக்குத்தானே உழைக்கிறான் என்ற எண்ணமும், அதே சமயம் தொழிலாளியும் தன் முதலாளி தனக்கு சும்மாவா படியளக்கிறான்? வேலையை வாங்கிக் கொண்டுதான் சம்பளம் கொடுக்கிறான் என்ற உணர்வும் காணப்படுவது கண்கூடு.

தொழிலாளி என்பவன் யார்? தனது உழைப்பை விற்பவன். முதலாளியானவன்— உழைப்பை மாற்றுப் பண்டமாக விலை பேசுபவன்!! நம் நாட்டில் இப்போது தொழிலாளிகள் என்று சொல்லப்படுபவர்களெல்லாம் தொழிலாளிகளல்லர். அவர்கள் எல்லாம் கூலிக்காரர்கள்தாம். தொழிலாளி என்பவர் நாட்டின் நன்மைகளை ஒரு தொழிலாகக் கற்று அத்தொழிலைத் தனதாக சுயேட்சையாக செய்து அதன் பலன் முழுவதையும் தானும் தன் நாட்டு மக்களும் அடையும் படியான முறையில் தொழில் செய்பவன் தான் தொழிலாளி.

i) முதலாளி—தொழிலாளிமுறை வேற்றுமைகள் நிறைந்து, தாழ்வு மனப்பான்மை, ஒடுக்குதல் மனப்பான்மை நிறைந்து காணப்படுகிறது.

ii) பாடுபடுபவர்களின் நிலை தாழ்ந்து, பாடுபடாதவர்களின் நிலைஉயர்ந்து—ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

iii) தொழிலாளிகளின் சம்பளம், உணவு, உடை, இருப்பிடம் பிறரோடு ஒப்பிடும் போது தாழ்வாக உள்ளது.

iv) ஏழை, பணக்காரன், எஜமானன், அடிமை, நிலப்பிரபு — கூலி வேறுபாடுகள் நமது நாட்டில் நிலவிவரும் ஜாதி பேதங்களினால் மேலும் மேலும் பெருக வளர்ந்து வருகிறது. ('விடுதலை' 20-9-52–பொன்மலை சொற்பொழிவு, 10-9-52 )

(நாகை சொற்பொழிவு 25-5-26–குடி அரசு 30-5-26, 'குடி அரசு' 1-10-33, விடுதலை 9-5-61)

இந்த அளவில் நமது இந்திய வாழ்வு கவலைகள் நிறைந்த நிம்மதியற்ற வாழ்வாக நடைபெற்று வருகிறது.

*பொதுவுடைமையும்—பொதுவுரிமையும் !*

பொது உடமை என்ற கருத்து (சோசலிசம்) 1955 லிருந்து உதட்டளவில் பேசப்பட்டு வருகிறது. இன்று காணப்பட்டிருக்கும் அரசியல் பொருளாதார சமூக நெருக்கடி தீரமுடியாமல் இருப்பதற்குக் இதுவே காரணம் எனலாம். பொதுவுடமை என்பது உதட்டளவிலிருந்து மாறி அஃது நமது அரசியலின் அடித்தளமாக அமைகின்றபோது அங்கே இந்தியர்கள் கவலையற்ற ஒரு வாழ்வு வாழ அது வழி வகுக்கும் சொந்த உடமை என்பது கவலை நிறைந்த வாழ்வு ஆகும்.

மனிதனுடைய கவலைக்கும், குறைபாட்டிற்கும் பரிகாரமாக முடிந்த முடிவாக அறிஞர்கள் பலராலும் சிந்திக்கப்பட்டு ஏற்பட்டது தான் பொதுஉடமைத் தத்துவம்.

இதன்மூலம் சந்தோஷமான கவலை துக்கமற்ற தெளிவுள்ள வாழ்க்கை மக்களுக்கு கிடைக்கின்றது. மனிதன் சிந்தித்து அறிவை வளர்த்துக் கொண்டே போனால் அங்குதான் (பொதுஉடமையில்) கொண்டு போய்விடும்.

பொதுஉடமைவேறு; பொதுஉரிமைவேறு. பொதுஉடமை என்பது சமபங்கு ஆகும். பொதுஉரிமை என்பது சம அனுபவம் என்பதாகும். தனிஉரிமையை முதலில் ஒழித்து விட்டோமானால் தனியுடமையை மாற்ற அதிகப்பாடுபடாமலே இந்த நாட்டில் பொதுவுடமை ஏற்பட வசதி உண்டாகும். உண்மையான பொதுவுடமை நிலைத்து நிற்கும். பொதுவுரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்து கொண்டேயிருக்கும்.

மேல்நாட்டில் சாதிகள் இல்லாததால் பொதுவுடமைக்கு நேரடியாகவே வழிவகுக்கப் பட்டது. ஆனால் இங்கு சாதியிருப்பதால் முதலில் சாதிச்சண்டையை ஒழிக்க வேண்டியுள்ளது.

நமது நாட்டில் கிராமங்களை எடுத்துக் கொண்டால் 100-க்கு 90 சதம் உடல்

உழைப்பை நம்பி வாழவேண்டியது யிருக்கிறது. நகரங்களில் 100-க்கு 90 சதம் உடல் உழைப் பினால் வாழ்க்கை செய்வதில்லை.

நமது நாட்டில் விவசாயம் உடலுழைப் பினால் நடைபெறுவதை மாற்றி அதை ஒரு தொழில் முறையாக—அதுவும் இயந்திரத் தொழில்முறையாக (Industrial) ஆக்கிவிட வேண்டும். உழுவதும், விதைப்பதும், அறுப் பதும் இயந்திரத்தால் செய்யப்படவேண்டும். கிணறுவெட்டுவதும், தண்ணீர் இறைப்பதும், பாச்சுவதும் இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும். அந்த அளவுக்குப் பூமியைத்திருத்தி இணைக்க வேண்டும். இதற்கு பயன்படாத பூமியைத் தனிப்படுத்தி அடிக்கடி பாடுபட வேண்டிய அவசியம் இல்லாத பயிர் செய்ய வேண்டும். விளைபொருளால் ஆக்கப்படும் பண்டங்களை ஆங்காங்கே விவசாயிகளால் கூட்டுறவு முறையாக ஆக்கப்பட்டு அந்தப் பயன் விவசாயிகளுக்குக்கே கிடைக்க வேண்டும்.

(கிராமங்கள் ஒழிய வேண்டும், ''குடி அரசு'' 11-11-1944)

பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக்கி, அதில் பள்ளிக் கூடம், ஆஸ்பத்திரி, பார்க்கு, டிராமா, தாமஷா அறை, வாசகசாலை, ரேடியோ ஒலிபெருக்கி நிலையம், நல்ல ரோடு கால அளப்படி போக்கு வரவு பஸ்டாண்டு போலீஸ் ஸ்டேசன், நன்றாகப் படித்த ஒரு நீதிபதி, சகலசாமான்களும் கிடைக்கத்தக்க கடைகள் ஆகியவை ஏற்படுத்த வேண்டும்.

ஆங்காங்கு இயந்திரத்தால் செய்யப்படும் சிறுசிறு தொழிற் சாலைகளை நிறுவி அவர்கள் வேறு ஊருக்குப் பிழைப்புக்குப் போகாதபடி பிழைப்பு ஏற்படுத்த வேண்டும்.

கீழான தொழில், ஈனமான தொழில், கஷ்டமான தொழில், சரீர உழைப்பு அதிக மாகவும், பயன் மிக்க அற்பமாகவும் குறை யாகவும் வாழ்வில் இழிவாகவும் இருக்கும் படியான தொழில் முறைகளை நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும். அதுவே பொது உடமை பொதுஉரிமையுள்ள நாட்டின் கவுரவம், தர்மம், முன்னேற்றமும் ஆகும்.

*பிரச்னை தீர வழி !*

இஃது தற்போது முடியாவிட்டால் அப்படி இழிவான கீழான பிராயாசையான வேலை செய்பவர்களுக்கு அதிக லாபமும் சலுகையும் மேன்மையும் இருக்கும்படியான பிரதிபலன் அடையச் செய்யவேண்டும். இரசாயன முறை, விஞ்ஞான முறை, இயந்திர முறை தொழில் முறைகளைக் கையாண்டு அவைகளை கிராமங்களிலிருந்து தொடங்குவோமானால் இந்தப் பிரச்னை சுலபத்தில் தீர்ந்துவிடும். (''குடி அரசு'' 11-11-1944)

ஆகவே,

''பொதுவுடமை என்பது ஒரு குடும்பத்தில் உள்ள சொத்துக்கள், வரும்படிகள், தொழில்கள், இலாப நஷ்டங்கள் இன்ப துன்பங்கள் போக போக்கியங்கள் பொறுப்பு கவலைகள் முதலா கியவை, எல்லாம் எப்படி அக்குடும்பத்திற்கு பொதுவோ அதுபோல்தான் ஒரு கிராமத்திலோ ஒரு பட்டினத்திலோ ஒரு மாகாணத்திலோ ஒரு தேசத்திலோ ஒரு கண்டத்திலோ ஒரு உலகத்திலோ உள்ள மேற்கண்டவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள அவ்வளவுப் பேருக்கும் பொதுவானது என்பதாகும். அதாவது, பொது வுடமைக் கொள்கையின் கட்சி இலட்சியம் உலகம் பூராவும் ஒரு குடும்பம்; உலகமக்கள் எல்லோரும் சகோதரர்கள்; உலகத்தில் உள்ள செல்வம் இன்பம் போக போக்கியம் முதலியவை எல்லாம் அக்குடும்பத்தின் சொத்து; குடும்ப மக்கள் (உலக மக்கள்) எல்லோரும் அக்குடும் பத்தின் சொத்தில் (உலகச் சொத்தில்) சரி பாகம் என்கிற கொள்கையேயாகும். ஆக, பொதுவுடமை என்பது ஒரு கணக்குப் பிரச்னை (Mathematical Problem) ஆகும்.

*பொதுமனித தர்மம் !*

இன்றைக்கு பொதுவுட்மையை ஏற்றுக் கொண்டமக்கள் 100 கோடிகளுக்கு மேல் உலகில் வாழ்கிறார்கள். ரஷிய பொதுவுடமை நாடு; அங்கு 25 கோடி மக்கள் வாழ்கிறார்கள். அடுத்து சீனா-அங்கும் கம்யூனிஸ்ட் ஆட்சிதான். அங்கு 75கோடி மக்கள் வாழ்கிறார்கள். மேலும் பிலிப்பைன்ஸ் அங்கேரி, போலந்து, செக்கோஸ் லாவாக்கியா, ஆஷ்டிரியா, கிழக்கு ஜெர்மனி மற்றும் பல நாடுகள் பொதுவுடமைக்கு வழிவகுத்துள்ளன.

பொதுவுடமை—என்பது பொதுமனித தர்மமென்றும் சகோதரத்தன்மையும் சமத்து வத்தன்மையும் கொண்டதென்றும் வேதாந்தத் திற்கும் ஆத்தீகத்தன்மைக்கும் தத்துவத்திற்கும் ஏற்றது என்றும் மதத்தலைவர்களுக்கும் தேசியத்திற்கும் நீதிக்கும் பகுத்தறிவிற்கும் செல்வவான்களுக்கும், பாதிரி புரோகிதர் கூட்டங்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய தென்றும் பொதுவுடமை தத்துவமே மோட்சம் என்கிற உன்னத நிலைக்கு அடிகோலும்.'' 'குடி அரசு' 10-9-33.

*



# அய்யா தொடுத்த முதல் இந்திப் போர் !

ஆ. தங்கராசு M.A (வரலாறு) M.A (அரசியல்)

[இவ்வாராய்ச்சிக் கட்டுரையாளர் திரு. ஆ. தங்கராசு அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் ஆறுமுகம்—தாயம்மாள் ஆகியோரின் புதல்வர். திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில் வரலாற்றுத்துறைத் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர், தம் பணிக்கு விடுப்புப் போட்டுவிட்டு, "Linguistic Factor in the politics : The history of anti Hindi movement in the politics of Tamil Nadu" என்னும் தலைப்பில் பி. எச். டி. பட்டத் துக்கு ஆராய்ச்சி செய்கிறார். சென்னை பல்கலைக்கழக, மாநிலக் கல்லூரி வரலாற்றுத்துணைப் பேராசிரியர் டாக்டர் சாலினி கோபிகார் அவர்களின் மேற்பார்வையில் தம் ஆய்வுப் பணியை மேற்கொண்டிருக்கும் இவர், பெரியார் பகுத்தறிவு நூலகம்-ஆய்வகத்தை துணையாகக்கொண்டு தம் ஆராய்ச்சிப் பணியை செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.]

1920ஆம் ஆண்டு வாக்கில், தமிழ்நாட்டில் இந்தியைப் பரப்பக் காரணமாக இருந்தவர் களில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் ஒருவர் என்ற உண்மை நம்மில் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். 1922இல் அகில இந்தியக் காங்கிரஸ் இந்தி மொழியை இந்தி யாவின் தேசியப் பொதுமொழியாக ஏற்றுக் கொண்டபின், காங்கிரஸ் இயக்கத்தின் தீவிரத் தொண்டரும், காந்தியடிகளின் சீடருமான தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டின் பல இடங்களில் இந்திமொழி போதனா வகுப்பு களை துவக்கினார்.(1) ஆனால் அதே பெரியார் தான் 1938 ஆம் ஆண்டில் இந்தி மொழியை எதிர்த்து முதல் போர் தொடுத்தார். பெரியார் தொடுத்த இந்திப்போர் இன்னும் ஓய்ந்த பாடில்லை. பெரியார் தொடுத்த இந்திப் போரின் வரலாற்றுப் பின்னணி என்ன என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*காங்கிரசை விட்டு பிரிந்ததேன் ?*

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினை, பார்ப் பனர்களின் ஆதிக்கத்திலிருந்து விலக்கி, அதை சீர்திருத்த இயக்கமாக ஆக்கிட முயற்சி செய்து அம்முயற்சி தோல்விகண்டபின், பெரியார் அவர்கள் 1925ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய பிறகு இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்ற நிலையை தந்தைபெரியார் கடுமையாக எதிர்க்கத் தொடங் கினார். அவர், 1929ஆம் ஆண்டு சனவரி 20ஆம் நாள் 'குடி அரசு' இதழில் எழுதிய தலையங்கத்தில், இந்தி ஓர் ஆரிய மொழி என்றும், பிராமணீயத்தின் கருவி என்றும் கடுமையாக எதிர்த்து எழுதினார்.*(2) மேலும் 1931ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் நாள் 'குடி அரசு'வில், ''எதையும் கண்மூடித்தனமாக நம்பக்கூடிய தமிழ்நாட்டு மக்கள் மீது, ஆரிய கலாச்சாரத்தை திணிக்க பிராமணீயம் கையா ளும் சூழ்ச்சிதான் இந்திமொழியை பரப்பும் செயல்'' ஆகும் என்று தெளிவாகக் குறிப்பிட் டுள்ளார். தமிழ் மக்களை, இந்தி பரப்பு வதற்கு பொருளுதவி செய்யவேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.(3) 1929 ஆம் ஆண்டு பிப்ரவரி 17ஆம் நாள் செங்கற்பட்டில் நடை பெற்ற மாநில சுயமரியாதை முதல் மாநாட்டில், தந்தை பெரியார் அவர்கள், ''வேதம், சமஸ் கிருதம், இந்தி'' இவற்றைப் பரப்ப நிதி வழங்க வேண்டாம் என்று தீர்மானமே கொண்டுவந் தார்.(4) 1931இல் விருது நகரில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில், இந்தியைப் பரப்பு வது ஒரு பிற்போக்குத்தனமான செயல் என்றும், அது பார்ப்பனர்களுக்கு மட்டுமே பயனளிக்கக் கூடியது என்றும் கண்டனம் செய் தார்.(5) எனவே தந்தை பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் முதல்வராக மாறி யதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை.

*ஆச்சாரியார் ஆட்சிக்கு வந்தார்*

1937இல் சென்னை இராஜதானிக்கு சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் காங் கிரஸ் கட்சியின் அமைச்சரவை அமைத்தபோது,

தமிழ் நாட்டு மக்களில் பார்ப்பனரல்லாதார் கலக்கம் அடைந்தனர். இராஜாஜி ஒருபார்ப்பன ராகையால், அவரால் வடவர்களின் ஆதிக்கம் பெருகும் என்றும், அதனால் தமக்கு தீங்கு விளையும் என்றும் தமிழர்கள் அஞ்சினார்கள். அவர்களது அச்சம் நியாயமானதே என்பதை இராஜாஜியின் இந்தித் திணிப்பு நிருபித்து விட்டது.

இராஜாஜி தலைமையில் அமைச்சரவை பதவியேற்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு, அவர் பத்திரிக்கைநிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியில், ''இந்தியாவிற்குஒரு பொது மொழி அவசியம் தேவை, அதற்குப் பொருத்த மான, பொது மொழியாக இருக்க இந்தி மொழிக்கே தகுதி இருக்கிறது'' என்றும் கூறி யுள்ளார்,(6) 1937 சூலை 14ஆம் நாள், இராஜாஜி பதவி ஏற்ற பிறகு, அதே ஆண்டு ஆகஸ்டு 11-இல் ''இந்தி மொழி கட்டாயப் பாடமாகப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப் படும்'' என்று அறிவித்தார்.(7) இந்தியை திணித்தபோது இராஜாஜி அவர்கள் ''இந்தி மொழியை போதிப்பது காங்கிரஸ் கட்சியின் கொள்கை என்றும், இந்தி தெரியாவிட்டால் தென்னாட்டவர் இந்திய அரசியலில் ஈடுபட முடியாது(8) என்றும், தன் இந்தி திணிப்புச் செயலுக்கு காரணம் காட்டினார். இதுதான் தமிழ் மக்கள் இந்திமொழிக்கு எதிராக கிளர்ந்து எழுந்ததற்கு உடனடிக் காரணமாகும்.

### கட்டாய இந்தி

கட்டாயமாக இந்தி பயிற்றுவிக்கப்படும் என்ற அறிவிப்புக்கே பொது மக்கள் கடுமை யான கண்டனக்குரல் கொடுத்தனர். கட்டாய இந்தி ஆணை 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் நாள் வெளியிடப்பட்ட போதிலும், (9) தமிழினத் தலைவர்கள் 1938 ஆம் ஆண்டிலேயே இந்திக்கு எதிராகப் போர் தொடுத்து விட்டனர்.

தமிழின வரலாற்றில் தமிழ்மக்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து தமிழ்காக்க இந்தியை எதிர்த்து ஒன்றுபட்டனர் நீதிக்கட்சியினர். சுயமரியாதை இயக்கத்தினர், தமிழ்த்துறவிகள், கல்வி நிபுணர்கள், பார்ப்பனரல்லாத தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினரில் சிலர் இந்தி எதிப்பு என்ற ஓர் அணியில் திரண்டனர். இந் திக்கு எதிராக இந்தியாவிலேயே முதல் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார்தான். அண்ணா மலை பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியரும், காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவருமான நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலை யடிகள், அப்பாத்துரை ஆகியவர்கள் இந்தி எதிர்ப்புஇயக்கத்தினை தோற்றுவித்து, தந்தை பெரியாருக்கு துணைநின்றார்கள். நாவலர் பாரதியார் 25-10-1937 ஆம் நாள், இராச கோபாலாச்சாரியாருக்கு ஒரு வெளிப்படையான கடிதம் ஒன்றுஎழுதினார், கட்டாய இந்தி நீக்கப் பட வேண்டுமென்றும், இல்லையேல் தமிழ் மக்கள் கொதித்து எழுவர் என்றும் எச்சரிக்கை விடுத்தார். தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி திருநெல்வேலியில் தமிழ் பாதுகாப்புக் கழகம் என்னும் அமைப்பைத் துவக்கி வைத்தனர். இந்தி நுழைந்தால் தமிழுக்கும் தமிழருக்கும் எத்தகைய ஆபத்து ஏற்படும் என்பதை பொது மக்களிடம் விளக்கிட, சிறு நூல் வெளியீடுகளை வெளியிட்டனர்; மாநாடுகளும் நடத்தினர்.

தமிழர்களால் 4-10-1937-இல் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு முதல் மாநாடும்,

26-12-1937 முதல் 29-12-1937 வரை திருச்சியில் நடைபெற்ற முதல் தமிழ் மாநாடும், 27-2-1938 இல் அரசியல் அறிஞர்களால் நடை பெற்ற காஞ்சிபுரம் இந்தியெதிர்ப்பு மாநாடும்,

1-8-1938 முதல் 11-9-1938 வரை திருச் சியிலிருந்து சென்னை வரை பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் தலைமையிலும், மணவை ரெ. திருமலைசாமி அவர்கள் முன்னிலையிலும் நடந்து முடிந்த பேரணியும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் நடைபெற்ற துவக்க காலநிகழ்ச்சி களாகும். மேற்சொன்ன நிகழ்ச்சிகள், இந்திப் போராட்ட புயல் தோன்றி வீசிடுவதற்கு முன்னோடி அறிகுறிகளாக அமைந்தன.

இந்தித் திணிப்பினால், தீமையிலும் ஒரு நன்மையுண்டு என்ற பழமொழிக்கு ஏற்ப தமிழர்க்கு ஒரு நன்மையும் ஏற்பட்டிருந்தது. அதாவது, 20 வது நூற்றாண்டின் தொடக்கத்தில் முளைவிட் டிருந்த தமிழ் தேசிய உணர்வு கொடிவீசிப் பறக்க ஆரம்பித்தது. ஒற்றுமையின்றி பல்வேறு கோணங்களில் பிரிந்து கிடந்த தமிழ்ச் சமுதாய மக்கள், இந்திப் பேராபத்தால் ஒன்றுபட்ட உள்ளத்தினராயினார்கள். வடமொழியாம் இந்தி ஆதிக்கத்திலிருந்தும், இந்திக் கலாச்சார ஊடுருவலில் இருந்தும், தமிழும், தமிழ்க் கலாச் சாரமும் காக்கப்பட வேண்டும் என்ற உணர்வு, ஒன்றுபட்ட தமிழர்களிடம் மேலோங்கியது. இத்தகைய சூழலில்தான், 20 ஆம் நூற்றாண் டின் இணையற்ற சமூகச் சீர்திருத்தவாதியும். பார்ப்பனீயத்தை வாழ்நாள் முழுவதும் எதிர்த்த போர் வீரருமான தந்தை பெரியார் இந்தி



எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணி தலைவ ரானார்.

### பாமர மக்களை ஈர்த்தார்

தமிழறிஞர்கள் மத்தியில் மட்டும் இருந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தை, தந்தை பெரியார் அவர்கள் தனக்கே உரிய பாமரப் பொதுமக் களை ஈர்க்கும் வலுவான சக்தியால், மக்கள் இயக்கமாக மாற்றினார். இந்த நேரத்தில் எழுந்த தமிழ் தேசிய உணர்வை ஒன்றுபடுத்தி ஒருமுகப்படுத்தி, ''தமிழ் நாடு தமிழர்க்கே!'' என்ற அறைகூவலை தந்தை பெரியார் வெளியிட்டார். கலாச்சாரப் புரட்சி இயக்க மாகத் தோன்றிய இந்தி எதிர்ப்பு இயக்கத்தை, தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும் காப்ப தற்காக அரசியல் இயக்கமாக தந்தை பெரியார் மாற்றி, சுதந்திர தமிழ் நாட்டை அடைவது தான் தமிழ் மக்களின் குறிக்கோள் என்பதை வரையறுத்தார். இந்தி எதிர்ப்பு இயக்கம் என்னும் தாய்க்கு பிரிவினை இயக்கம் சேயானது எனலாம். அந்த சேய்க்கு தகப்பன் — தந்தை பெரியார் அவர்கள் ஆவார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் துவக்க நிலையில் பெரியார் தனது 'குடி அரசு' இதழில், இந்தித்திணிப்பை கண்டனம் செய்து, தமிழ் தேசீய உணர்வைத் தூண்டும் வகையில் பல கட்டுரைகளை எழுதினார். அவ்வப்பொழுது இந்தி எதிர்ப்புக் கூட்டங்களிலும் இந்தித் திணிப்பை எதிர்த்தும் பேசி வந்தார். தனது சுயமரியாதை இயக்கத்தையே இந்தியை எதிர்த்து தமிழ்மானம் காக்கும் இப்போராட்டத்திற்கு அர்ப்பணம் செய்தார். கட்டாய இந்தித் திணிப்பு ஆணை, 1938ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் அறிக்கப்பட்டவுடன் இந்தி எதிர்ப்பு இயக்கம், அரசியல் சட்ட வரம்புக்கு உட்பட்ட போராட்ட இயக்கமாக மாறியது எனலாம். காந்தியடிகளின் சத்தியாக்கிரக முறைகளைப் பின்பற்றி, 1938ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் நாள் முதற்கொண்டு, இந்தி எதிர்ப்பா ளர்களின் சத்தியாக்கிரக முறை—அறவழிப் போராட்ட முறை துவங்கியது.(10) அப்போ தைய முதல் அமைச்சர் இராசகோபாலாச்சாரி யின் வீட்டு முன்பும், சென்னை தங்க சாலையிலுள்ள இந்து தியாலஜிக்கல் உயர் நிலைப் பள்ளி முன்பும், தினந்தோறும் நூற்றுக்கணக்கானோர் மறியல் நடத்தினர். இந்த இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத்தில் ஈடு பட்ட தொண்டர்களும் தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வறப்போர் தமிழகம் முழுவதிலும் தீவிர மாகப் பரவியது.

### சிறையில் தோழர்கள்

ஈழத்து சிவானந்த அடிகள், சண்முகானந்த அடிகள், விபுலானந்த அடிகள் ஆகிய தமிழ் அறிஞர்களும், அண்ணா உட்பட நூற்றுக்கணக் கான சுயமரியாதை, நீதிக் கட்சியைச் சார்ந் தோரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இராஜாஜி அவர்கள். பெரியார் தொடுத்த இந்தி எதிர்ப்பு முதற்போரை எள்ளி நகையாடி னார். விரக்தி அடைந்த அரசியல்வாதிகளும், பிராமண துவேஷத்தினால் உந்தப்பட்ட அறிவி லிகளும் இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வ தாகக் கருதினார் ராஜாஜி. (11) ராஜாஜியின்



காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்களில் மிக முக்கியமான திரு. வி.க., டாக்டர் வரதராஜுலு ஆகியோர் அறிவுரை களை புறக்கணித்துவிட்டு, இந்தி எதிர்ப்புப் போரை, தன் இரும்புக்கரத்தால் நசுக்கத் தலைப்பட்டார். இராஜாஜியின் இந்தப் போக்கு தமிழினத் தலைவர்களின் இந்திப்போரை, மேலும் மேலும் வலுவடையச் செய்தது. தலை வர்கள் எல்லாம் சிறைக்கு ஏகிய இக்கட்டத்தில், தந்தை பெரியார் அவர்கள், இந்தி எதிர்ப்பு முதல்போருக்கு நேரடியாக போர்க்களத்தில் இறங்கினார். தமிழகம் முழுதும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து, இந்தி எதிர்ப்புப் போருக்கு வலுவூட்டினார்.

தந்தை பெரியாரின் இந்தி எதிர்ப்புப் போர்க்குரல், 'குடிஅரசு', 'விடுதலை', மற்றும்

சில பத்திரிக்கைகளிலும் எதிரொலித்து பிரதிபலித்ததால், இந்திப் போர் மேலும் மேலும் வலுவடைந்து, தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே ஆயிரக்கணக்கானோர் இந்தியை எதிர்த்து அறப்போர் வழியில் சிறை செல்ல தூண்டி வைத்தது. கடுங்கோபத்துக்கு ஆளான ராஜாஜியின் அரசாங்கம், ''இந்தி எதிர்ப்பு முதல்போரின் மூளை'' என்று வருணிக்கத் தக்க பெருமைக்கு உரியவரான தந்தை பெரியார் அவர்களை, 1938ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாள் கைது செய்து—1938 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் ஓர் ஆண்டு கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாக்கியது. தந்தை பெரியார் அவர்கள் சிறைக்குள் இருந்துகொண்டே, அரசாங்கத்துக்கு அபாயகரமான எதிரியாகவும், தமிழ் மக்களின் தன்னேரில்லா தலைவராகவும், தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களிலே உலா வந்தார். இந்தியை எதிர்த்து சிறையில் இருந்த தந்தை பெரியாரை நீதிக்கட்சி தனது கட்சியின் தலைவராகப் பிரகடனம் செய்தது. இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் முதல்போரினால் ஒன்றிணைக்கப்பட்ட சுயமரியாதை இயக்கமும், நீதிக் கட்சியும் சேர்ந்து, 1938ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி வாரத்தில் நடத்திய மாநாடும்—மாநாட்டு ஊர்வலமும், ராஜாஜியின் அரசாங்கத்தை அதிர்ச்சியடைய வைத்தது; (14) இந்தியை எதிர்த்துப் போரில் இறங்கிய தமிழ் மக்களின் உணர்வினையும், இந்த இந்தி எதிர்ப்பு உணர்வுத் தீயை மூட்டிய தந்தை பெரியார் அவர்களின் காந்த சக்தியையும், இராஜாஜி வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் உள்ளத்தால் ஒப்புக்கொண்டார்.

### *தாளமுத்து, நடராஜன் பலி!*

இந்திப் போரில் சிறையில் அடைக்கப்பட்ட தோழர்களான தாளமுத்து, நடராஜன் ஆகியோர் சிறையில் இறந்தனர். இவர்கள் இறப்பு, இந்திப்போரை மேலும் மேலும் தூண்டிவிட்டதால், ராஜாஜி அரசாங்கம் ஆட்டம் கண்டுவிட்டது; (15) அடக்கு முறையைக் குறைத்துக் கொண்டு, தந்தை பெரியார் அவர்களை 1939 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாள் (பெரியார்பெற்ற சிறைத் தண்டனை முழுகாலமும் முடிவதற்கு முன்பாகவே) விடுதலை செய்தது.

இதை அடுத்தாற்போல, 1939 அக்டோபர் மாதம் இராஜாஜியின் அமைச்சரவை ராஜினாமா செய்தது. ஆனால் இந்திப்போர் நீடித்தது. 1940 ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள் சென்னை இராஜதானி கவர்னர் இந்தித் திணிப்பு ஆணையை ரத்து செய்தார். இது பெரியார் தொடுத்த முதல் இந்திப் போருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

### *பிரிவினை இயக்கம்*

தந்தை பெரியாரின் உடனடியானநோக்கம் நிறைவேறிவிட்டது. கட்டாயப் பாடத்திட்டத்திலிருந்து இந்தி அகற்றப்பட்டுவிட்டது.

இப்போராட்ட காலத்தில் தோன்றி, கொழுந்து விட்டு எரிந்த தமிழ் தேசிய உணர்வும், தமிழ் தேசிய உணர்வால் தோன்றிய பிரிவினை உணர்வும் நீடித்தன. ஆங்கில ஆட்சி அகற்றப்பட்டவுடன் தமிழகத்தில் பார்ப்பன ஆட்சி ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அஞ்சிய பெரியார் அவர்கள், தனித் தமிழ்நாடு திட்டத்துக்குப் போராட முன்வந்தார்.(17) இந்தியையும் பிராமணீயத்தையும் எதிர்ப்பதற்காகத் தோன்றிய முதல் போரின் விளைவுதான் தமிழ்நாடு பிரிவினை இயக்கம் ஆகும்.

### *குறிப்புகள்*

1. விடுதலை 5-8-1948 'நான்யார்' தலைப்பில் பெரியார் கட்டுரை; திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள். பக்கம் 436.
2. குடி அரசு 20-1-1929 பெரியார் தலையங்கம்.
3. குடி அரசு 10-5-1930 பெரியார் தலையங்கம்.
4. ஜஸ்டிஸ் ஆண்டு மலர் 1929. பிரிவு iv பக்கம் 130.
5. நமது குறிக்கோள் பக்கம் 12 (விடுதலை வெளியீடு)
6. (Mail) மெயில் 12-7-1937
7. மெயில் 11-8-1937; ஹிந்து 11-8-1937
8. மெயில் 5-10-1937
9. M.R.O. Miscellaneous public Education, G. O. No. 911, 21, April 1938.
10. மெயில் 4-6-1938, ஹிந்து 4-6-1938.
11. மெயில் 1-10-1938.
12. மெயில் 21-8-1938
13. M. R. O. Public, Ordinary series, G.O. No. 241, 3, Feb. 1939, Mail, 6-12-1938, குடி அரசு 10-12-1938.
14. குடி அரசு 7-1-1939
15. குடி அரசு 14-1-1939, 21-1-1939, 28-1-1939.
16. குடி அரசு 28-2-1910.
17. குடி அரசு, 26-11-1939, 28-1-1940.

*





# பெரியாரும் தமிழகமும்

— கே. இராசேந்திரன் M.A.,

*[இந்த ஆய்வுரை வழங்கியுள்ள கட்டுரையாளர், தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். சுயமரியாதை இயக்க உணர்வு உள்ளவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ''தமிழ் இலக்கியத்தில் திராவிட இயக்கத்தின் தாக்கம்'' (Impact of Dravidian Movement in Tamil Literature) என்னும் தலைப்பில் 'பி.எச்.டி.' பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்து வருகிறார். தம் ஆய்வுப் பணிக்காக, ''பெரியார் பகுத்தறிவு நூலகம்—ஆய்வகத்தை'' துணை ஆய்வு நிலையமாகக்கொண்டு ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.]*

தந்தை பெரியார் அவர்கள் மனித நலக் கோட்பாட்டுக் கொள்கையாளர். மனித உரிமைகளைப் பாதிக்கும் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும் என்பதில் தெளிவானவர். முன்னோர் சொன்னவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளாத அறிவாளர். அறிவுக்குத் தடையாக மதமோ, மொழியோ, கடவுளோ இருக்கக் கூடாது. அப்படியே இருக்குமானால் அத்தடைகளை அகற்றுவதற்குத் தயங்கக்கூடாது என்பதில் உறுதியானவர். அறிவையும் மனித உரிமையையும் அடிப்படை அளவுகோலாகக்கொண்டே எதையும் ஆராய்கின்ற பண்பாளர்.

அவர் சொல்லிய கருத்துக்கள் புதியவையாகவும், சிந்தனையைத் தூண்டுபவையாகவும் அமைந்தன. தமிழ்ச் சமுதாயம், பொதுவுடைமைப் பொருளாதாரம், கல்வி, தமிழ், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், இந்தி எதிர்ப்பியக்கம் ஆகியவற்றில் பெரியார் அவர்களின் புதுவழிச் சிந்தனைகளை இவ்வாய்வேட்டில் தொட்டுக் காட்ட முயன்றிருக்கிறேன்.

### *தமிழகமும் சமுதாயச் சீர்திருத்தமும்*

சங்க காலத்திற்கு முன்னாலேயே தமிழகத்தில் ஆரிய வருணமுறை புகுத்தப்பட்டது (1) எனினும் வருணமுறை தமிழகத்தில் செல்வாக்குப் பெறவில்லை. ஆனால் வருணத்தில் பிரிவுகளுள் ஒன்றான சாதி 3,000க்கு மேலாகப் பல்கிப் பெருகியிருந்தது. (2) வேத காலத்தில் சமயச் சடங்குகளில் மட்டுமே (3) இருந்துவந்த சாதி உயர்வுஉணர்ச்சி கி. மு. 3 ஆம் நூற்றாண்டுக்குப் பின் எல்லா நிலைகளிலும் இடம் பெறலாயிற்று. (4) தீண்டாமை என்பது பழந் தமிழகத்தில் இடம் பெறவில்லை. இராசராசன் காலத்தில் கல்வெட்டொன்றில் 'பறையன், புலையன் என்னும் தீண்டப்படாதோர் என்போர் அவரினும் இழிந்தவர்' என்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே தமிழகத்தில் தீண்டப்படாதவர் வடிவம் பெற்றது, ஆரியர் ஆரியரல்லாதார் வேறுபாட்டை மனுசாத்திரம்தான் முதன்முதலில் சுட்டிக் காட்டியது. (5) மனுதரும காலத்தில் கடவுளரும் பார்ப்பனருக்குக் கட்டுப்பட்டோராகப் படைக்கப் பட்டனர். (6) இப்படி, மெல்ல மெல்லத் தமிழகத்தில் கால் கொண்ட சாதிச் செல்வாக்குப் பல்லவர் காலத்தில் வேரூன்றி (7) சோழர் காலத்தில் தழைத்தோங்கியது. இதற்குக் காரணம் தமிழகத்தை ஆண்ட பெருவேந்தர்களுள் மிகப் பலர் தமிழரல்லர். அவர்கள் சமுதாய மாற்றத்தை விரும்பவில்லை ; சமய மாற்றத்தில் மட்டுமே ஈடுபட்டார்கள். இடைக்காலத்தில் பார்ப்பனர்கள் வேதமோதும் அந்தணர், வீட்டுச் சடங்குகளை நடத்தி வைக்கும் அந்தணர். கோயில் அந்தணர் என உழைப்பின் பாற்படாத தொழில்களையே (9) செய்து வந்தனர்.

பல்லவர் வரிமுறைகளில் சில செக்குக் காணம், தட்டாரக்காணம், பறைக் காணம் எனத் தொழில் வரிகள் இருந்தன. செங்கழுநீர், மருதாணி ஆகியவற்றைப் பார்ப்பனரைத் தவிர மற்றவர் பயிரிட்டால் அவர்கள் வரிச் செலுத்த வேண்டியிருந்தது. உணவு முறையில்

6

கூட பசுவின் ஊனினை இன்னின்ன பகுதியை இன்னின்னரர் உண்ண வேண்டும் என்று விதிக் கப்பட்டிருந்தது. சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் அடிப்படை வாழ்க்கை முறை ஆரியந்தான் என்றாயிற்று. கடவுள்-வேதம்-பார்ப்பான்-வீடுபேறு என்ற மரபுவழிச்சிந்தனை இடம் பெற்று விட்டது. நந்தனார் ஆரிய வழியைப் பின்பற்றித்தான் வீடு பேறு பெற்றார். சாதிகளை ஒப்புக் கொள்ளாத ஒழுக்கமே உயர்வளிக்கும் (10) என்னும் கொள்கையுடைய அறிவுச் சமயங்களான சமணமும், பௌத்தமும் கி. பி. 7ஆம் நூற்றாண்டு சமயப் போரில் அழியும் நிலை பெற்றுவிட்டன. இந்தப் போராட்டக் காலத்தில் தமிழ் ஆரியத்தின் பிடியில் சிக்கி விடுபட முடியாமல் இருந்தது. திருமூலரின் திருமந்திரந்தான் தமிழ் மொழியில் தோன்றிய முதல் சைவ சித்தாந்த நூலாகும். (11) தமிழ் நாட்டில் தமிழ் முதன்மையானது என்று கூற முடியாத நிலையில் இறைவன் வேதங்களுக்கும் உரியவன், தமிழ் நூல்களுக்கும் உரியவன் (12) என்பதை 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்' எனப் பொதுமை பேசினர். தமிழ் மறைகளான தேவாரத் திருவாசகமும் ஆரியச் செல்வாக்கைப் பின்பற்றித்தான் பாடப்பட்டன. ஏன் சங்க இலக்கியமும் இத்தாக்குதலுக்கு உட்பட்டது தான். ஆரியர்களின் செல்வாக்கைக் குறைக்க எண்ணிய சித்தர்களின் நோக்கம் சமய அடிப்படையில் அமைந்திருந்தது. எனவே, சித்தர்களைப் பொறுத்தவரை கதைத் தலைவர்கள் சமயத்தவர்களே. இந்து சமயமோ தனி மனித நலனைப்பற்றிக் கவலைப்படுவது. இசுலாமியச் சமயத் தாக்குதலினால். தாயுமானவர் எல்லாரும் இன்புற்றிருக்கப் பாடினார். நாவுக்கரசரும், திருமூலரும் சமுதாயத் தொண்டு அடிப்படையில் பாடினார்கள். எல்லா நிலைகளிலும் 19 ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் வைதிகச் சடங்குநெறி முதன்மை பெற்றிருந்தது. மக்களைச் சிந்திக்கவொட்டாமல் செய்த சமயச் சடங்குக் கேட்டினை, 19 ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் இராமலிங்கர் ஓரளவுக்குச் சமய உண்மைகளை உணர்ந்து போற்றுகிற சீர்திருத்தங்களைச் செய்தார். முதன்முதல் இயக்கம் கண்டு மக்களிடையே சீர்திருத்தத்தைப் புகுத்திய பெருமை இராமலிங்கருக்கு உண்டு.

சங்ககாலந் தொடங்கி இந்த நூற்றாண்டு வரை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு செழித்துக் கிளைத்திருந்த சமுதாயத்தில் சாதிச் சமய வேறுபாடற்ற பகுத்தறிவுச் சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவித்து திருமணம், காட்சி, உடை, பிறப்பு, இறப்பு, ஆகியவற்றின் மரபுவழிச் சிந்தனையிலிருந்து மக்களைப் புது நோக்குக்குக் கொண்டு வந்து சிந்திக்க வைத்து வெற்றிகண்ட இயக்கம் தமிழக வரலாற்றில் திராவிட இயக்கம் மட்டுந்தான். தந்தை பெரியாரின் இம்மகத்தான வெற்றி தமிழக வரலாற்றின் திருப்பு மையம் எனலாம்.

பொதுவுடமை :

சமய உணர்வுகளில் இருந்து விடுபட்டால் பொதுவுடமை மலர்ந்துவிடும் என்பது தந்தை பெரியார் அவர்களின் கருத்து. (13) அவர் பேசிய பொதுவுடமைக் கருத்துகள் சிந்தனையைத் தூண்டுவன.

''எவனொருவன் தன் தேவைக்குமேல் சொத்தும் ஸ்திதியும் வைத்திருக்கிறானோ அவனைக் குற்றவாளியாக்கித் திருடனுக்குண்டான தண்டனையைக் கொடுப்பது என்கின்ற ஆட்சியை ஏற்படுத்துவதுதான் நல்லது'' (1930).( 4)

'கைத் தொழில் பைத்தியத்தை விட்டொழித்து இயந்திரத் தொழில் முறையை ஆதரித்தால்தான் நாட்டில் பொதுவுடமை நிலை பெறும். (1931). (15)

'ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சம அந்தஸ்தும், சம உரிமையும் உண்டோ அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும்' (1934).(16)

விவசாயத் தொழிலாளருக்கு 60%ம் நில உரிமையாளருக்கு 40%ம் இருக்க வேண்டும் என்று பேசியது இன்று தமிழக அரசில் சட்டமாக்கப்பட்டிருக்கிறது.

பொதுவுரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்து கொண்டே இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் பாலபாடம் என்பதை மக்கள் உணர வேண்டும். பொதுவுரிமை பெறத் தனி நாடு வேண்டும் (1944).(18)

மேனாடுகளில் கிருத்துவச் சமயம் மட்டுமே உண்டு. மக்களில் சாதிமத வேறுபாடில்லை. எனவே, பொருளாதாரச் சமத்துவம் மேலை நாடுகளில் சரியாகலாம். நம் நாட்டில் முதலில் ஏற்படுத்த வேண்டியது சாதிமத ஒழிப்பே (1950) (19). இக்கருத்து இந்திய நாட்டில் பொதுவுடமைப் பொருளாதாரம் நினைத்தளவுக்கு வெற்றி பெறாததற்கான காரணத்தைக் காட்டுகிறது.



புரட்சிக் கவிஞர் தந்தை பெரியார் அவர்களின் பொதுவுடைமைப் பொருளாதாரக் கொள்கையைச் சுருக்கமாக.

' எல்லாரும் தொழிலாளர்
எல்லாரும் ஆளவந்தார்என்றாக்குவோம்'

என்றார். (பக். 16 குயில் 9-6-1959)

இந்த நாட்டில் மனுதர்மம் ஒழிந்து மனிதத் தன்மை ஏற்படப் பாடுபட்டு வரும் கழகம் திராவிடர் கழகமாகும். அதற்குக் குறள்தான் வழிகாட்டி (22) என்று கூறியதோடு அமையாது 1948 ஆம் ஆண்டுத் திருக்குறள் மாநாடு நடத்தினார்: திருக்குள் நாள் கொண்டாடச் செய்தார். அவரால் மேடைகளிலும் செய்தி ஏடுகளிலும் குறள் செல்வாக்குப் பெற்றதோடு பாமரர் பார்வைக்குக் குறளைக் கொண்டு வந்த பெருமைக்கும் உரியவரானார். அவராலும் அவரைச் சார்ந்தவர்களாலும் நடத்தப்பட்ட ஏடுகளில் பெரும்பாலானவை தனித் தமிழ்ப் பெயர் கொண்டு தமிழர்க்கு உழைத்தன அவற்றுள்,

''குடி அரசு'' (1925)
''முன்னேற்றம்'' (1929)
''வெடிகுண்டு'' (1933)
''புரட்சி'' (1933)
''பகுத்தறிவு'' (1934)
''விடுதலை'' (1935)
''திராவிட நாடு'' (1943)
''தோழன்'' (1947)
''உண்மை'' (1970)

புதுவாழ்வு, திராவிடன், முரசொலி, மறவன்மடல், மன்றம், தமிழ் உலகம் என்பன சில.

## திராவிடர் பெயர் ஏன்?

'நாம் இந்தியர்' என்பதை மறுக்கிறபடியாலும், இனஉணர்ச்சியும் எழுச்சியும் பெறவேண்டுவதாலும் 'திராவிடர்' என்னும் பெயரைக் கொண்டோம். இது புதிதாக உண்டாக்கியதல்ல மறந்ததை நினைத்துக் கொண்டதே யாகும். நம்மைக் குறிக்க, பார்ப்பரைல்லாதார் என்கிறோம். அல்லாதார் என்பதைச் சேர்த்துக் கொள்ள நாம்



என்ன நாடோடிகளா? நாம் ஏன் அல்லாதாராக வேண்டும்? சிலர் திராவிடன் என்பது வடமொழி யென்பார்கள். அதைப் பற்றி கவலையோ ஆராய்ச்சியோ தேவை இல்லை. 'காபி' என்பது ஆங்கிலச் சொல் என்று எவனாவது 'காபி' குடிக்காமல் இருக்கிறானா? மேலும் நமக்குத் திராவிடர் என்பது பெயரல்லவானால் வேறு எது தான் பெயராகும்?

—தந்தை பெரியார்

ஆதாரம் : 'குடி அரசு' 9-12-44

குறிப்புகள்


1. Dr. K. K. Pillai, The Caste system in Tamilnadu, p. 15.
2. Ibid, ,, p. 2.
3. Ibid, ,, p. 7.
4. Ibid, ,, p. 7.
5. Ibid, ,, p. 10
6. Ibid, ,, p. 11.
7. Ibid, ,, p. 15.
8. Ibid, ,, p. 21.
9. Arnold J. M. Politics and National Awakcning in South India 1852–1891, Introduction, p. 8.
10. இராமசமாணிக்கம், டாக்டர் மா. ரா., பல்லவர் வரலாறு. ப-ள் 31,32
11. ,, ,, பக். 93.
12. ,, ,, பக். 291
13. ,, 7. 9. 1930 'குடி அரசு'
14. ,, 14.12. 1938 'குடி அரசு'
15. ,, 14. 6. 1931 'குடி அரசு'
16. ,, 9 9 1934 பக்த்தறிவு
18. ,, 'குடி அரசு' 25.3.1944
19. ,, விடுதலை 22.2.1950. எழுத்து
22. ,, விடுதலை5.11.48




[இக்கட்டுரையாசிரியர் திருமதி அஞ்சலா ரிச்சர்டு அவர்கள், சென்னை பெண்கள் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராய்ப் பணியாற்றி வருகிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் சென்னை மாநிலக் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் மேற்பார்வையில் பகுதி நேர ஆராய்ச்சியாளராக 'எம். பில்' பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்து வருகிறார். இந்த அம்மையார் அவர்கள் ஆராய்ச்சி செய்துவரும் ஆய்வுத் தலைப்பு ''பெரியாரின் மொழிக் கோட்பாடு'' என்பதாகும். தம் ஆய்வுக்கு, பெரியார் பகுத்தறிவு நூலகம் ஆய்வகத்தை துணையாகக்கொண்டு ஆராய்ச்சி செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.]

மனித இன வரலாற்றுடன் இணைத்து செல்வது மொழி வரலாறாகும். மக்களிடையே பல்வேறு இனங்கள் கிளைத்துப் பெருகினாற் போன்று பல்வேறு மொழிகளும் கிளைத்துப் பெருகியுள்ளன. இயற்கைச் சூழலாலும் தட்ப வெப்ப நிலை வேறுபாட்டாலும் பல திறப்பட்ட சமுதாயப் பிரிவுகளைக் கொண்ட நம் நாடு ஒரு துணைக் கண்டமென்று கருதப்படுவதற்கு அடிப்படையான ஒரு காரணம் பல மொழியினர் இங்கு வாழ்வதேயாகும்.

*தீவிர போராட்டங்கள்*

இந்நிலையில் தான் ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் மொழிப் பிரச்சினை தோன்றலாயிற்று. எந்த ஒரு கருத்தையும்பகுத்தறிவின் அடிப்படையில் சிந்தித்து ஆராய்ந்து அன்றைய சூழலில் அக் கருத்தை ஏற்றுக் கொண்டால், தன் சமுதாயத்தினரை முன்னேற்றப்பாதையில் வழி நடத்திச் செல்லுமா என்று கண்டே முடிவெடுப்பார் பெரியார் ஈ. வெ. ரா. அவ்வாறே இப்பிரச்சினை குறித்தும் பெரியார் முடிவெடுத்துச் சில தீவிரப் போராட்டங்களையும் நடத்தி வெற்றி கண்டார்.

ஆங்கிலேயன் ஆட்சித்தளையிலிருந்து விடுபட வேண்டித் தொடங்கிய சுதந்திரப் போராட்டம் அனல் கொள்ளும் வேளையில் தான் ஆங்கிலேயன் மொழியிலிருந்தும் விடுபட வேண்டாமா என்ற பிரச்சினையைக்கிளப்பலாயினர். விளைவு 1934, 35. 36 ஆம் ஆண்டுகளில் இந்தியைத் தேசிய மொழி என்று அழைக்கத் தொடங்கினார்கள், பெரியாரும் இதற்குத் தம் மறுப்புக் குரலை எழுப்பத் தொடங்கினார்.

*அறுவை சிகிச்சை முறை*

சமுதாயத்தில் எந்த ஒரு நோய் கண்டாலும் அதற்கு அறுவை சிகிச்சை முறையைத்தான் கையாள்வார் பெரியார். (தமிழும் தமிழ் இலக்கியங்களும்.' ப. 31. பார்க்க) காரணம், தமிழ்ச் சமுதாயம் திராவிடச் சமுதாயம்—தென்னாட்டுச் சமுதாயம்'பழங்கால காட்டுமிராண்டிக்கொள்கையையுடைய வட நாட்டானுக்கு உலகில் வேறு எங்கும் இல்லாத மாதிரியாக அடிமைப் பட்டுக் கிடக்கின்றது' (தந்தை பெரியார் 'மொழியும் அறிவும்' ப. 34) என்ற உறுதிப்பாடே. இந்நீண்ட கால அடிமை வாழ்வால் தமிழ்ச் சமுதாயம் நன்மை, தீமை பகுத்தறியும் அறிவிழந்து, தனக்கென்று சிந்திக்கும் ஆற்றல் இழந்து, சிந்தித்ததைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் துணிவிழந்து வீழ்ந்து கிடக்கும் இழி நிலையிலிருந்து அதனைத் தூக்கியெடுத்து நிலைநிறுத்த பெரியார் கங்கணம் கட்டிக் கொண்டார். அம்முயற்சியில் எவரேனும் குறுக்கிடுவார்களானால் அவர்களுடைய ஆற்றல்களையும் முறியடிக்க உறுதி பூண்டார்.



இதனையே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்ட பெரியார் இந்திமொழியைத் தேசிய மொழியாக்குவதால் வடநாட்டானின் ஆதிக்கமே இங்கு வலுப்பெற்று தொடர்ந்து நீடிக்கும் எனக் கண்டார்.

*தேசியம் ஒரு புரட்டு*

இந்தியைத் தேசிய மொழி என்று கூறுவது அடிப்படையிலேயே தவறு என்பதைத் தமக்கே யுரிய காரசாரமான முறையில் சுட்டிக் காட்டினார். ''தேசியம் என்பது மகாப் புரட்டு! இந்தியா என்கிறீர்களே, இந்தியா என்பது மிகப் பெரிய கற்பனை'' (பேரறிஞர் அண்ணா, 'பெரியார்—ஒரு சகாப்தம் நூல் ப. 19) என்று பெரியார் வன்மையாகத் தாக்கினார், இந்தியைக் கொண்டு வந்தவர்கள் இந்தத் தாக்குதலுக்கு எதிர் நிற்கக் கூடாதவர்களாய் 'தேசியம்' என்று சொல்லிபதை மாற்றிக் கொண்டு. இந்தியாவில் 14 தேசிய மொழிகள் உள்ளனவென்றும், பெரும்பாலானவர்களால் பேசப்படும் இந்தி ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்றும் கூறினார்கள். அதற்கும் பெரியார் உடன்பட்டாரா? இல்லவே இல்லை. ''ஆட்சி மொழி என்பது பின்னால் இருக்கட்டும் உங்களுடைய ஆட்சியின் லட்சணம் என்ன? யார் யாரை ஆளவேண்டும்? எதற்காக ஆள வேண்டும்?'' என்று ஆட்சி முறையைப்பற்றி பெரியார் தாக்க ஆரம்பித்தார். முடிவில் இணைப்பு மொழி என்ற இடத்திற்கு இந்தி வந்ததற்கு மிகப் பெரிய காரணம் பெரியார் அவர்கள் நடத்திய அறப்போராட்டம் தான் என்பதை அண்ணா அவர்கள் தெளிவுற எடுத்துக் காட்டியுள்ளார். (பெரியார் ஒரு சகாப்தம் ப. 19).

*'கரண்டு' ஏட்டின் பாராட்டு*

இது பற்றியே 'கரண்ட்' என்ற ஆங்கில வார ஏடு தனது 7-5-55 இதழில் தென்னாட்டை வடநாடு ஆதிக்கம் கொள்ள வழி செய்யும், தமிழுக்கு இழுக்கு வரும் என்ற அடிப்படையில் 1937 லேயே இந்தியை எதிர்க்க தமிழ் நாட்டை ஒன்று திரட்டிய முதல் அரசியல் வாதி. ஈ. வெ. ரா. இன்னும் அவர்தான் ரயில்வே போர்டுகளிலும், மணியார்டர் பாரங்களிலும் இந்தி நுழைப்பதையும், வட நாட்டு வியாபாரிகள் தென்னாட்டில் நுழைவதையும் முழுக்க முழுக்க எதிர்த்த முதல் அரசியல்வாதி,'' எனப் பாராட்டியுள்ளது.

பெரியாரைப் பொறுத்தவரையில் தமிழ்ச் சமுதாயம் போற்றிக் கைக் கொள்ள வேண்டிய மொழி அதனைப் பல்லாற்றானும் உயர்த்தக் கூடிய மொழியாக இருத்தல் வேண்டும். மனிதனுக்காக—மனித நல வாழ்வின் முன்னேற்றத்திற்காக மொழியே யல்லாமல் மொழிக்காக மனிதன் வாழ்வதில்லை. ஆகவே மொழி, ''பற்றுக் கொள்வதற்கு அவசியமானதல்ல மொழியானது, சமுதாயத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்றதே ஒழிய, பொது வாழ்வுக்கு, உணர்ச்சிக்கு ஏற்றதல்ல.'' (தந்தை பெரியார் ''மொழியும் அறிவும்'' ப. 1)

*இந்திக்கு எதிர்ப்பு—*
*தமிழுக்கு ஆதரவு இல்லை!*

ஆகவே இந்திக்கு எதிர்ப்பு தெரிவித்த பெரியார் தமிழ் மொழியால் தமிழர் வாழ்வு வளம் பெறும் என்றோ, அறிவியல் முன்னேற்றத்தால் விரைந்து வளரும் பிற நாடுகளுடன் தமிழ்நாடு போட்டிப்போட முடியும் என்றோ ஒரு சிறிதும் நம்பினார் இல்லை. மாறாக, தமிழபிமானிகளே தமிழினத்திற்கு அதிகக் கேடு விளைவிக்கின்றனர் என்றும் நம்பினார். அதனால்தான் தமிழபிமானிகளைப் பார்த்து, ''நீங்கள் கெட்டது போதும், கல்லூரியைக் கெடுத்து விடாதீர்கள்'' ('மொழியும் அறிவும்' ப 24) என்று கேட்டுக் கொண்டார். மேலும் தமிழ்நாட்டில் ஆங்கிலம் தொடர்ந்து பெற வேண்டிய இடத்தைக் குறித்தும் துணிந்து தம் கருத்துக்களை வற்புறுத்தலானார்.

''தமிழ் வடமொழியை விட இந்தி மொழியை விடச் சிறந்தது என்பதிலும், பயன்படத்தக்கது என்பதிலும் எனக்கு அய்யமில்லை என்றாலும் நாம் இன்றை நிலைமையை விட வேகமாக முன்னேற வேண்டுமானால் ஆங்கிலம் தான் சிறந்த சாதனம் என்றும், ஆங்கிலமே அரசியல் மொழியாகவும் போதனா மொழியாகவும் இருந்தாக வேண்டுமென்றும், ஆங்கில எழுத்துக்களே தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களாவது அவசிய மென்றும், ஆங்கிலமே நம் பேச்சு மொழி ஆவது நல்லம் பயக்கத்தக்கது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன் ''(கோவை 'கலைக்கதிர்'க்காக 1957 இல் எழுதப்பட்ட கட்டுரை; ஆதாரம் தந்தை பெரியார் 'மொழியும் அறிவும்' ப. 7)

*பயனைக் கருதிப் பார்ப்பவர் பெரியார்*

ஒரு மொழியின் இனிமை, சிறப்பு முதலானவற்றை வி- அம்மொழியின் பயன்பாடே (Utility value of the language) முக்கியமானது என்பது பெரியாரின் அடிப்படைக் கோட்பாடு. காரணம் சிதம்பரனார் கூறுவது போல, ''சாக்ரடீசைப் போல ஒரு பொருளின் அழகை விட அதன் பலன் என்ன என்பதில் தான் பெரியாருடைய முழு எண்ணமும் செல்லும்'' ('தமிழர் தலைவர், ப. 242) ஆகவே தமிழர் வாழ—அவர் வாழ்வு வளம் பெற ஒரு குறிப்பிட்ட மொழிவேண்டும் என்று முடிவு செய்யும் போது (1) அம்மக்களின் தற்போதைய நிலையையும் (2) அம்மக்கள்

கையாளும் மொழியில் எதிர்காலத்தில் அவர்கள் அடையப்போகும் மேனிலையையும் கருத்தில் கொண்டு முடிவுசெய்ய வேண்டும் என்று பெரியார் விரும்பினார்.

ஆரியர் செல்வாக்கால் தமிழில் தோன்றிய சமய இலக்கியங்களும் வடமொழி, தமிழ் மொழி வாயிலாக தமிழரிடையே ஆரியர் பரப்பிய கருத்துக்களுமே தமிழரின் பிற்போக்கான நிலைக்கு மூலகாரணம் எனக்கருதிய பெரியார் பகுத்தறிவுவாதிக்குத் தமிழ் இலக்கியங்களால் யாதொரு பயனுமில்லை எனச்சான்றுகள் தந்து விளக்கினார். (''தமிழும் தமிழ் இலக்கியங்களும் பக். 20—25 ).

புலவர்களைப் பற்றியகணிப்பு

''நம் புலவர்கள் தமிழரானாலும் பார்ப்பனரானாலும் வடநாட்டாரானாலும் 'இந்து' மதத்திற்கு 'இந்து' கலாச்சாரம் 'இந்து' இலக்கியம் ஆகியவைகளுக்கு அடிமையே ஆவார்கள். இவர்களிடம் விஞ்ஞானத்தை எதிர்பார்ப்பது என்பது 'மலடியைப் பிள்ளை பெறச்செய்வது 'போலவே ஆகும்' ('மொழியும் அறிவும்' ப. 20.)

'பெரியாரின் மொழியாராய்ச்சி' என்ற நூல்வழி பெரியார் தமிழ் மொழியின் தொன்மையையும் தலைமையையும் ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவுறும். ''தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு எல்லாம் ஒரே மொழி ; எல்லாம் திராவிட மொழியே ; ஒன்றிலிருந்து மற்றவை தோன்றவில்லை'' ('பெரியாரின் மொழியாராய்ச்சி, ப. 16) என்பது பெரியார் செய்த உண்மையான மொழியாராய்ச்சியாகும். எனினும், தமிழ் மொழியில் தமிழ் பேசும் மக்களுக்குப் பயன் ஒன்று மில்லை எனத்தமிழரிடமே பெரியார் துணிந்து கூறினார்.

## வேலூர் அ. மணி எழுதுவது

பெரியாருடன் குற்றாலத்திலும், ஈரோட்டிலும் ஒரு மாத காலமிருந்தேன். அவர் உடல்நிலை மிக்க பலவீனமாகவும், நாளுக்கு நாள் மெலிவாகியும் வருகிறது. அவர் அதைப்பற்றி கவலைப்படவில்லை. அவருக்குப் பின் இயக்க காரியத்தைப் பார்க்கத் தகுந்த முழுநேரக்க ரரும், முழுக்கொள்கைக்காரரும் கிடைப்பார்களா என்கின்ற கவலையிலேயே இருக்கிறார். இயக்கத்துக்காக என்று தன் கைவசமிருக்கும் சொத்துக்களை



என்ன செய்வது என்பது அவருக்கு மற்றொரு கவலையாய் இருப்பதையும் கண்டேன். அதோடு, இயக்கத்துக்கு வேலை செய்ய சில பெண்கள் வேண்டுமென்றும் அதிக ஆசைப்படுகிறார். அப்பெண்களுக்கு ஜீவனத்துக்கு ஏதாவது வழி செய்துவிட்டுப் போகவும் இஷ்டப்படுகிறார். இந்தப்படி பெரியாரை நான் ஒரு மாத காலமாக ஒரு பெருங் கவலையுருவாகவே கண்டேன். அவர் நோய் வளர அவை எருப்போலவும், தண்ணீர் பாய்வதுபோலவுமே இருக்கிறது. நான் ஒரு பெண்—என்ன செய்யமுடியும்? இன்னும் சில பெண்கள் முன்வர வேண்டும். அவர்கள் பாமர மக்களால் கருதப்படும், ''மானம், ஈனம், ஊரார் பழிப்பு'' யாவற்றையும் துறந்த நல்ல கல்லுப் போன்ற உறுதியான மனதுடைய நாணயவாதிகளாகவும், வேறு தொல்லை இல்லாதவர்களாயும் இருக்கவேண்டும். அவர்களது முதல் வேலை பெரியாரைப் பேணுதலும், பெரியார் செல்லுமிடங்களுக்கெல்லாம் சென்று இயக்க மக்களை அறிமுகம் செய்துகொள்ள வேண்டியதும், இயக்கப் புத்தகங்களைப் படிக்கவும், எழுதவும், நன்றாய்ப் பேசவும் தெரிந்துகொள்ள வேண்டும். வீடுகள் தோறும் இயக்கப் புத்தகங்களும், ''குடி அரசு''ம் இருக்கும்படியாகச் செய்து, அவற்றை நடத்தும் சக்தி பெறவேண்டும். இந்நிலையில் சுயமரியாதை இயக்கம் இருக்கிறது. பெண் மக்களே யோசியுங்கள்.

[''குடி அரசு'' 23-10-1943 இதழில், வேலூர் அ. மணி என்று எழுதியவர் பின்னர் நமது இயக்கத் தலைவராகத் திகழ்ந்த அன்னை மணியம்மையார் அவர்களே ஆவார்கள்.]



# பெரியாரின் வீச்சும் கலைஞரின் வடிப்பும்



மு. சரோஜா எம்.ஏ

[இக்கட்டுரை ஆசிரியர் திருமதி மு. சரோஜா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். சென்னை வடக்குப் பகுதியிலுள்ள அரசினர் மகளிர் கல்லூரியில் தமிழ்த் துறை துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ''கலைஞர் கருணாநிதியின் இலக்கியங்கள்—ஓர் ஆய்வு'' என்னும் தலைப்பில் பி. எச். டி. பட்டத்துக்காக, பகுதி நேர ஆராய்ச்சியாளராக ஆய்வு செய்து வருகிறார். தம் ஆய்வுக்காக, ''பெரியார் பகுத்தறிவு நூலகம்—ஆய்வகத்தை'' துணை ஆய்வகமாகப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.]

''திருவரங்கப் பெருமாள்போல் படுத்திருந்த
தமிழ் உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார்.''

தமிழகத்தின் மிகச்சிறந்த சிந்தனையாளரும் சீர்திருத்தச் சிங்கமுமான தந்தை பெரியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் சமுதாயம் பண்பாட்டுப் புரட்சியே. ''ஜாது மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில், 'சுயமரியாதை இயக்கம்' ஆரம்பித்தேன்'' என்று எழுதியுள்ளார் தந்தை பெரியார்.

அரசியல் செல்வாக்கு சமூக அந்தஸ்து போன்ற காரணங்களால், தென்னிந்திய மக்களிடையே வேர்விட்டிருந்த மனக்குறை 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கமாகமுளைத்து 'சுயமரியாதை இயக்கமாக வளர்ந்து, 'திராவிடர் கழகம்' என்ற மரமாகி நிலைத்தது இதிலிருந்து பிரிந்து 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற அமைப்புத் தோன்றி வளரலாயிற்று. இவ்வியக்கத் தலைவர்கள் பலரும் 'திராவிடர் கழகத்திலிருந்தே பிரிந்து வந்தவர்களாதலால், இவர்களிடை ''அடிப்படைக் கொள்கைகளில் — கருத்துக்களில் — மாறுதல் மோதுதல் எதுவும் கிடையாது''

'ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்றது, பொதுத் தேர்தலில் வாக்குக்கேட்டு மக்களையணுகிய காலத்தில் தீவிரப் பார்ப்பனத் தாக்குதலைத் தவிர்த்தது, ஆகியன தவிரப் பெரியாரின் சீர்திருத்தக் கொள்கைகளே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளாக விளங்கின. தங்கள் கொள்கைகளை மக்களிடையிற் கொண்டுபோக இலக்கியக் குதிரை இவர்கட்கு வாகனமாயிற்று. அடுக்கு மொழியும், அழகிய தமிழும் அதற்கேற்ற சேணமும் கடிவாளமுமாயின.

தி. மு. க. முன்னணித் தலைவர்களுள் ஒருவரான கலைஞர் கருணாநிதியவர்களுடைய இலக்கியங்களனைத்தும் பிரசார நோக்கில் அமைந்தவையே. அப்பிரச்சாரங்களில் பெரியாரின் கொள்கைகளைப் பெரிதுங் காணலாம் ஏனெனில்.

''அவர் தலைமை ஏற்று......அவருடனே.
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்
தெட்டில்
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே
இணைந்து
..........................................
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்றவர்''

கலைஞர், ஆகையால்.

சாதிவேற்றுமை: சாதிக்கொடுமைகளில் தீண்டாமை ஒரு புறம் இருக்க மறுபுறம்

பார்ப்பனர் ஆதிக்கம் பெரிதாக இருந்தது. விடுதலைப் போராட்ட காலத்தில் அரசியல் செல்வாக்கும் அவர்களுக்கே ஏற்பட்டது. எனவே தான் பெரியார், ''இந்தியருக்குக் கொடுங்கள் என்று கேட்டு அந்தச்சலுகை கள் முழுவதும் பார்ப்பான், தான் நுழை வதற்கே பயன்படுத்திக் கொண்டான்'' ''குருட்டு நம்பிக்கைகளும் மூடவழக்கங்களும் ஒழிய வேண்டுமானால் முதலாவது பார்ப் பனியம் ஒழிந்தாக வேண்டும்'' என்று தீவிரமாக எதிர்த்தார். இத்தகைய கருத்துக் களை மட்டுமன்றி, பெரியார், சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கே காரண மாயமைந்த சேரன்மாதேவி, குருகுல நிகழ்ச் சியையே 'தூக்குமேடை' என்ற தன் நாடகத்தில் அமைக்கிறார் கலைஞர். அந்நாட கத்தில் ஒரு காட்சி.

அபிநய சுந்தர முதலியார்: நீ பிராமணனோடு உட்கார்ந்து சாப்பிடுகிறேன் என்கிறோயே...இது நியாயமாடா?

பாண்டியன்: நாமும் அவர்களும் மனிதர். அவர்களை ஒரு ஆண்டவன் படைத் திருந்தால் அவன்தான் நம்மையும் படைத் திருப்பான். சாப்பிடுகிற இடத்திலே வேறுபாடு இது கொடுமை இல்லையா?

அபிநய சுந்தர முதலியார்: இங்கே என்ன பிரசங்கமா பண்ண வந்திருக்கிறாய்?

பாண்டியன்: பிரசங்கமல்ல பின்ன டைந்து போன தமிழர் நிலைகண்டு மனம் புண்ணடைந்து புலம்பவந்தேன்.''

மூடநம்பிக்கைகள்: ''வாழ்க்கையில் இருந்து வரும் பழக்க வழக்கம், மூடபக்தி, குருட்டு நம்பிக்கை எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம், நகரம் என்பவைகளின் பெயர்களாலேயே...... நடைபெற்று வருகின்றன,'' என்பார் பெரியார். இக்கருத்தை 'நச்சுக்கோப்பை' நாடகத்தில் காணலாம். அந்நாடகத்தில் சின்னையாபிள்ளை, தன் மகளுடைய திருமண நாளில் மழை பெய்யக்கூடாது என்று கடவு ளுக்குத் தேங்காய் உடைக்கப் போகிறார். கன்னையா செட்டியோ நிலம் வறண்டு விட்டது, மழைபெய்ய வேண்டு மென்று மாரியம்மனுக்குத் தேங்காய் உடைக்கப் போகிறார் ''இதில் கடவுள் யாருக்கு அனுக் கிரகம் செய்வார்?'' என்று கேட்கிறான் பழனி என்ற சீர்திருத்தவாதி. இதேநாடகத்தில் சகுனம், நாள் நட்சத்திரம் பார்த்தல் போன்ற வற்றின் அர்த்த மின்மையையும் உணர்த்து கிறார். சகுனம் பார்த்து நாள் தேர்ந்து அய்யர் நடத்திய திருமணம் சாந்தா வினுடையது, அவளோ, சில நாட்களிலேயே கணவனையிழக்கிறாள்; வாழ்ந்த நாட்களும் சுகமில்லை.

பேய், பிசாசுகளில் நம்பிக்கை, மாய மந்திரங்களில் பற்று போன்ற மடமைகளையும், அவ்வறியாமையை விரட்டும் போது அறியாத மக்களின் எதிர்ப்பும் அப்பாவி மக்களின் திகைப்பும் சுருளிமலை, புதையல் போன்ற புதினங்களில் காட்டப்படுகின்றன.

மதப்பண்டிகைகளை முற்றிலும் வெறுத் தார் தந்தை பெரியார். ''நம் நாட்டு விழாக்கள் என்பவை இன்று பெரும்பாலும் எந்தக் காலத்திலோ யாருடைய நன்மை கருதியோ, யாராலோ, எதனாலோ ஏற்படுத்தப் பட்டன வாயிருக்கின்றனவே யொழிய பெரிதும் நம்முடைய முன்னேற்றத்திற்கு ஏற்றனவாக அமைந்திருக்க வில்லை'' என்பது அவர் கருத்து. கலைஞருடைய 'நடுத்தெரு நாராயணி' என்ற நெடுங்கதையில் காணப்படும் ''தீபாவளி தமிழரின் திருநாளல்ல; தமிழன் இறந்த நாளைக் கொண்டாடும் ஆரியப்பண்டிகை, கருத்துக்கு ஒவ்வாத கதை அளப்பு, அதை நமது பண்டிகையாகக் கொண்டாடிக் குதூ கலிப்பது குருட்டுக் கொள்கை, ஆகவே அதில் கலந்து கொள்ளக்கூடாது'' ''அறிவுக்கு அணைகட்டி, இன உணர்ச்சியைத் தடுக்கப் பெரும் சுவரும் எழுப்பி வைக்கும் அந்தப் பண்டிகை'' என்ற வரிகள் ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

கடவுள்: ''கடவுள் இல்லை'' என்பது பெரியார் தத்துவம். 'வெள்ளிக்கிழமை' என்ற புதினத்தில் இக்கருத்தை, ''பொய்யைப் பத்து முறை வலியுறுத்திச் சொன்னால் மெய்யாகத் தோற்றமெடுக்கும்'' என்பார்கள். அப்படிச் சொல்லித்தானே கடவுள் என்ற சொல்லை வாழ்க்கை அகராதியிலே பெரிய எழுத்துக்களில் அச்சடித்து வைத்திருக்கிறார்கள்'' என்ற இடத்தில் சந்திக்கலாம்.

இவ்வாறு பெரியாரின் சிந்தனைகளை கலைஞர் பலவிடங்களிலும் இலக்கியத் துளி களாய்த் தெளிக்கக் காணலாம். மேற்காட்டியன மிக மிகச் சிலவே. கலைஞருடைய படைப்புகள் மட்டுமன்று, தமிழிலக்கியத்தின் ஒரு பகுதியே 'சுயமரியாதை இயக்கத்'தின் எதிரொலியாய் விளங்குகிறது. காரணம், தமிழிலக்கியத்தைத் தாக்கிய முப்பெரும் இயக்கங்களுள் சுயமரி யாதை இயக்கமும் ஒன்று.



# பட விளக்கம்

1, 2. பம்பாயில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

3. ஆஸ்தான கவியை நீக்க அறப்போராட்டம்.

4. மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்றுவந்த கழகப்பொதுச் செயலாளருக்கு, பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் வரவேற்பும்—பாராட்டும்.

5, 6. திருச்சியில் உள்ள பெரியார்–மணியம்மை பெண்கள் உயர் நிலைப்பள்ளி, மேல் நிலைப் பள்ளியாக பெயர் மாற்றும் விழா.

7, 8. திருப்பத்தூரில் (வ. ஆ. மா.) தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

9. 10, 11. சேலத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

12. சேலத்தில் பிற்படுத்தப் பட்டோர் உரிமை காப்பு மாநாடு.

13, 14. மதுரையில் தந்தை பெரியார் நூற்றாண்டுவிழா

15. மேலே: காரைக்குடியில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

கீழே: புதுக்கோட்டையில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

16, 17. பெண்கள் விடுதலை மாநாடு—சென்னை.

18. சென்னை—தஞ்சை வழிநடைப் பிரசாரப்படை துவக்க விழா.

19, 20. கல்லக்குறிச்சியில் தந்தைபெரியார் நூற்றாண்டு விழா

21. பெரியார்—நாகம்மை இல்லக் குழந்தைகள்.

22. திருச்சியில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

23. திருச்சி விழா ஊர்வலம்.

24, 25. கோவையில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

26, 27. ஈரோடில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

28. மேலே: மலேசியாவிலிருந்து திரும்பிய பொதுச் செயலாளருக்கு கழக மகளிர் அணி சார்பில் வரவேற்பும் —பாராட்டும்.

கீழே: இலங்கை சென்று திரும்பிய கழகப் பொதுச் செயலாளருக்கு சென்னை விமான நிலையத்தில் வரவேற்பு.

29. மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்று வந்த கழகப்பொதுச் செயலாளர், பொருளாளர், வ. ஆ. மாவட்ட செயலாளர்.

30. சென்னையில் பிற்படுத்தப் பட்டோர் உரிமை காப்பு மாநாடு.

31. நாகையில் நடந்த அய்யா நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற பொதுச் செயலாளருக்கு புகைவண்டி நிலையங்களில் வரவேற்பு

32. நாகையில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.

1



















# பெரியாரும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமும் ஓர் ஆய்வு

— கே.எல். கருப்புசாமி எம்.ஏ.

[இக்கட்டுரை ஆசிரியர் கே. எல். கருப்புசாமி அவர்கள் வரலாற்றுத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஆசிரியர் பயிற்சியும் முடித்தவர். மதுரைப் பல்கலைக்கழகத்தில், பேராசிரியர் கே. ராஜய்யன் அவர்கள் மேற்பார்வையில், "Periyar E. V. Ramasami and Reform Movement" என்னும் தலைப்பில் பி.எச்.டி. பட்டத்துக்கு ஆய்வுசெய்து வருகிறார். தம் ஆய்வுக்காக, ''பெரியார் பகுத்தறிவு நூலகம்—ஆய்வகத்''தைத் துணை ஆய்வு நிலையமாகப் பயன்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.]

புத்தர் காலத்திலிருந்து தந்தை பெரியார் காலம்வரை தோன்றிய சமுதாய சமய சீர்திருத்தவாதிகள் எல்லாம் காலத்தால் வேறுபட்டும், போராடிய முறைகளில் மாறுபட்டும், போராட எடுத்துக் கொண்ட கருத்துக்களிலும் மற்றவர்களோடு முரண்பட்டும் கூட இருந்தாலும் ஒரு வகையில் எல்லோருமே ஒன்றுபட்டிருந்தார்கள். இந்து சமயத்தை மையமாக வைத்துப் போராடுவதில், சிலர் இந்து சமயத்தைச் சாடினார்கள்; வேறு சிலர் இந்து சமயத்தைத் திருத்துவதில் முனைந்தார்கள்; சிலர் இந்து சமயத்திற்குப் புது விளக்கம் தந்தார்கள். தந்தை பெரியார் இந்து சமயத்துச் சாஸ்திரங்களும், புராணங்களும், புரோகிதர்களுமே தமிழர்களின் தாழ்ச்சிக்குக் காரணம் என்று கூறி, அந்த அடிப்படையில் இந்து சமயத்தை எதிர்த்துப் போராடினார்.

## பார்ப்பனர் ஆதிக்கம்

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை மாகாணத்து மக்கட் தொகையில் மூன்று சதவிகிதம் மட்டுமே உள்ள பார்ப்பனர், பெரும்பான்மை வகுப்பாரான பார்ப்பனர் அல்லாதாரை 'கல்வி, அரசு, நிர்வாகம், சமயம், ஆகிய துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சிறுபான்மையினர் ஆதிக்கத்தை அழித்து, சமுதாயத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதுதான் தந்தை பெரியாரின் மிகப் பெருங் கடமையாயிற்று.

சென்னை மாகாணத்தில் கல்வித்துறையில் பார்ப்பன வகுப்பார் முன்னணியில் நின்று கல்விக் கூடங்களில் கல்வி பயின்று வந்தனர். பார்ப்பனரல்லாதார் கல்வியைக் கற்கக் கூடாது என்று காலங்காலமாக தடுக்கப்பட்டு உரிமையிழந்திருந்ததால், அவர்களுக்குக் கல்வி வாய்ப்பு ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்டிருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளும் திறன் அற்றவர்களாய் இருந்தனர். இந்தஉண்மையை கீழே தரப்பட்ட 3 அட்டவணைகள் நன்கு விளக்கும்.

I. 1871 ஆம் ஆண்டில் சென்னை நகரத்தில் தொடக்கப்பள்ளிவரை படித்தவர்கள் சாதிவாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

| எண் | சாதிகள் | நகரமக்கள் தொகையில் சதவிகிதம் | படித்தவர்கள் சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | பார்ப்பனர் | 3·0 | 40·7 |
| 2. | செட்டியார் | 8·5 | 25·9 |
| 3. | கைக்கோளர் | 2·1 | 12·1 |
| 4. | கணக்கர் | 0·7 | 37·2 |
| 5. | பறையர் | 17·4 | 10·4 |
| 6. | சாணார் | 1·7 | 11·5 |
| 7. | வன்னியர் | 12 6 | 10·4 |
| 8. | வேளாளர் | 22·9 | 28·2 |

II. 1918 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளில் படித்த மாணவர்கள்.

| துறை | பார்ப்பனர் | பார்ப்பனரல்லாதார் | மற்றவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை, அறிவியல் | | | | |
| பி. ஏ. | 10,269 | 3213 | 1734 | 15216 |
| எம். ஏ. | 389 | 65 | 55 | 509 |
| ஆசிரியப் பயிற்சி | 1094 | 163 | 241 | 1498 |
| சட்டம் | 48 | 4 | 2 | 54 |
| பொறியியல் (சிவில்) | 121 | 15 | 23 | 159 |

1872–73ஆம் ஆண்டு முடிய 15 ஆண்டு களில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மெட்ரிக்குலேசன் தேறியவர்கள் சமயவாரியாக.

| | | |
|---|---|---|
| 1. | பார்ப்பனர் | 2,058 |
| 2. | பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 856 |
| 3. | அய்ரோப்பியர்களும் அய்ரோப்பிய ஆசிரியர்களும் | 424 |
| 4. | இந்திய கிறிஸ்துவர்கள் | 294 |
| 5. | முகம்மதியர்கள் | 61 |

## தந்தை பெரியாரின் குறிக்கோள்

சமுதாயத்தில் சிறுபான்மையினர் ஆதிக்கம் கல்வித் துறையில் மறைந்து ஒவ்வொரு சாதி யாரும் கல்வி வாய்ப்புப் பெறக் கூடிய சமூக நீதியை ஏற்படுத்துவதை தந்தை பெரியார் குறிக்கோளாகக் கொண்டார். அதில் வெற்றி யும் பெற்றிருக்கிறார்.

கல்வித் துறை போன்று அரசாங்க பதவி களை வகிப்பதிலும் பார்ப்பனரே முன்னணி யில் இருந்தனர், கீழே தரப்பட்ட இரு அட்ட வணைகள் இந்தக் கருத்தினை உறுதிப் படுத்தும்.

I 1916 ஆம் ஆண்டில் அரசாங்க அலுவலகங் களில் பல்வேறு பதவிகளில் இருந்தவர்கள் எண்ணிக்கை சமய வாரியாக.

| சம்பளம் | பார்ப்பனர் | பார்ப்பன ரல்லாதார் | முகமதியர் | இந்திய கிறித்துவர் | மற்றவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 50-99 | 128 | 52 | 8 | 18 | 2 | 208 |
| ரூ. 100-209 | 78 | 18 | 1 | 7 | 6 | 110 |
| 300-499 | 8 | 3 | — | 2 | — | 13 |
| 500உம் அதற்கு மேலும் | 7 | — | — | 2 | 18 | 27 |
| | 221 | 73 | 9 | 29 | 26 | 358 |

II அரசாங்கப் பணிகள், பிறபணிகள்-குறிப் பிட்ட சில சாதியார்கள்

| | அரசாங்க நிர்வாகப் பதிவுபெற்ற அதிகாரிகள் | | மற்றவர்கள் | | வழக்குரைஞர்கள், மருத்துவர், ஆசிரியர்கள் | | காண்ட்ரேக்டர்கள், எழுத்தர், கேஷியர்கள். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் | ஆடவர் | மகளிர் |
| பார்ப்பனர் | 22 | — | 4071 | — | 5452 | 89 | 1577 | 5 |
| பலிஜாகைக் | — | — | 967 | — | 492 | 48 | 683 | 87 |
| கோளர் | 1 | — | 103 | — | 216 | 18 | 97 | 1 |
| கள்ளர் | — | — | 508 | — | 200 | 14 | 299 | 30 |
| மறவர் | — | — | 796 | — | 150 | 17 | 860 | 17 |
| சாணார் | — | — | 66 | — | 108 | 15 | 280 | 26 |

பார்ப்பனர், சூத்திரர், தீண்டத்தகாதவர் என்ற சமுதாயப் பாகுபாடுகள் மனு காலத்திலி ருந்தே தமிழர்களிடைய உயர்ந்தசாதி, தாழ்ந்த சாதி என்ற அவல நிலை நிலவி வருகின்றன. உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியாரோடு சேர்ந்து உண்ணக்கூடாது; தாழ்ந்த சாதியார் கோயில்களுக்குள் செல்லக் கூடாது! ஏன்? கோயில்கள் உள்ள தெருக்களில் கூட செல்லக் கூடாது போன்ற கட்டுப் பாடுகள் மனிதர்களின் ஒரு பகுதியினரை இழிந்தவர்களாக—மரியாதை அற்றவர்களாக ஆக்கிற்று. அரசு அலுவலகங் களில் அலுவலர்கள் நீர் குடிக்கும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பானையில் பார்ப்பனரல்லாத அலுவலர்கள் நீர் மொண்டு குடிக்கக்கூடாது; பார்ப்பன அலுவலர்களும் அங்கு வருவார்கள் என்பதினால் பார்ப்பனரல் லாதாருக்கு நீர் கொடுப்பதற்கென்றே பார்ப்பன நீர் மொண்டு கொடுக்கும் ஊழியர்கள் அரசின ரால் அமர்த்தப்பட்டிருந்தனர். (10)

## புதுக்கோட்டை மன்னனுக்கு எதிர்ப்பு!

புதுக்கோட்டை மன்னர் அய்ரோப்பியப் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டது இந்துச் சமயத்திற்குப் பெருங்களங்கம் ஏற்பட்டு விட்டதென்று உயர்ந்த சாதியினர் கண்டனக் குரல் எழுப்பினர். விதவைகளும் உணர்ச்சி படைத்த மானிடப் பிறவிகள் தான் என்பது மறுக்கப்பட்டது. சாதி முறைகளில் உள்ள உயர்வு தாழ்வுகளைப் போக்க எடுக்கப்பட்ட சட்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன.(11) மக்களிடத்தில் எல்லா வகையான மூட நம்பிக் கைகள் மலிந்து கிடந்தன. உயர்ந்த சாதியார் சமயத்தின் பேரால் மற்றவர்களைச் சுரண்டி வாழ்ந்தனர். இந்து சமயம் பார்ப்பனர்களுக்கு சமுதாய அந்தஸ்து கொடுத்ததோடு, கோவில் கள் அவர்களுக்கு நல்ல வருமானத்தையும் அளித்து வந்தன. (12) இந்தச் சூழ்நிலையில் தம் சீர்திருத்த இயக்கத்தைத் தந்தை பெரியார் தோற்றுவித்தார். சாதிகள் மனிதர்களில் உயர்வு தாழ்வை ஏற்படுத்துகின்றன. எனவே இச் சாதிகளை ஒழித்து மக்களிடையே சமத்து வத்தை நிலை நாட்டப் பெரியார் பாடுபட்டார். சாதிகளை வேதங்களே சொல்லுகின்றன என் றார்கள்; அப்படியானால் அந்த வேதங்களையே எதிர்க்கிறேன் என்றார் பெரியார்; வேதங் களை ஆண்டவனே எழுதினான் என்றார்கள்; அப்படியானால் அந்த ஆண்டவனையே எதிர்க் கிறேன் என்றார் தந்தை பெரியார். (13)

## FOOT NOTES

5. Census of India, 1871, Madras Vol. I, P. 191.
6. G. O. No. 22, January 27, 1919, Public, T.N.A.
7. Census of India 1871, Madras Vol. I, P. 195.
8. S. Saraswathi, Minorities in Madras State, Impex India, Delhi, 1974, P. 47.
9. Census of India, 1911; Madras Vol. XII, Part II (Madras 1912) P. 270.
10. Native News Paper Report, April—June 1961, P. 691.
11. G. Gajendragadgar, op. c.t., P. XV.
12. E. SA. Viswanathan, Political career of E. V. Ramasami Naicker: A Study in the politics of Tamilnad 1920—1949. un published Thesis, 1973, P. 107.
13. S. Aranganayagam, Hon'ble Minister for Education Tamilnadu, in his presidential address in the Periyar Centenary Celebration function held in Tiruchy on 26-5-79.

## புட்டு சாப்பிட்ட சங்கதி!

சேலம் ஜில்லா, திருச்செங் கோடு தாலுகா மல்ல சமுத்திரம் என்ற ஊரில் ஒரு மாநாட்டுக்குச் சென்றிருந்தோம். மாநாட்டின் வரவேற்புக் கமிட்டியார் அவசர அவசரமாக சமையல் வேலை யில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், நாயக்கருக்குப் பசி தாங்க முடியவில்லை. "ஊரைச் சுற்றிப் பார்த்து வருவோம் வாருங்கள்" என என்னை அழைத்தார். ஒரு திண்ணை யில் ஒருஅம்மாள் புட்டுச் சுட்டுக் கொண்டிருந்தாள். நாயக்கர் மள மளவென்று உள்ளே நுழைந்து புட்டுகள் வாங்கினார். நாங்கள் இருவரும் வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டுக் கை கழுவும் சமயத்தில், எங்க ளைத் தேடி ஊரெல்லாம் சுற் றிய மாநாட்டுப் பிரமுகர்கள் அங்கே வந்து மூக்கிலே கையை வைத்துக் கொண்டார்கள்.

—கோவை அ.அய்யாமுத்து

நூல்: 'நான் கண்ட பெரியார்'



# பாரதிதாசன் கதைப்பாடல்களில் திராவிடர் கழகத்தின் வீச்சு!

டாக்டர் இளங்கோ எம்.ஏ.,பிஎச்.டி.,

[இக்கட்டுரை ஆசிரியர் மதுரை மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தைச் சேர்ந்த ஆனை மலையன்பட்டியில் பிறந்தவர். தம் ஊரிலுள்ள பகுத்தறிவாளர்கள் கழகத்துக்குத் தலைவராக இவர் இருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழகத்தில், 'புரட்சிக் கவிஞரின் கதைப் பாடல்கள்' பற்றி ஆய்வு செய்து, டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழக அரசின் 'பாரதிதாசன் திறனாய்வாளர்' என்னும் சிறப்பு விருது பெற்ற நால்வரில் இவரும் ஒருவர். பெங்களூர் பல்கலைக் கழக நிஜலிங்கப்பா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் பணியில் இருந்துவரும் இவர் இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் ''பாரதிதாசன் நாடகம், சினிமா'' பற்றி 'டி.லிட்.' பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் வரும் பாத்திரங்கள் பல திறத்தன; பல நோக்கின; பல உணர்வின; அவற்றைப் பற்றிப் புதுமைப்பித்தன் பின்வருமாறு கூறுகின்றார் :

''இருபதாம் நூற்றாண்டு வார்ப்புடனே பாரதிதாசன் காவியங்களில் வரும் பாத்திரங்கள் மழை பெய்தவுடன் சாயம் வெளுத்துப் போகும் பண்ணுருட்டி பொம்மைகள் அல்ல. உயிருடன் உணர்ச்சியுடன் நடமாடும் பாத்திரங்கள்.(1)

''பெரும்பாலும் பிற்கால இலக்கியத்தில் மக்களுக்குக் காட்டப்பட்ட மனிதர்கள் பெரும்பாலும் பிற்காலத்து மக்களே. அவர்களும் அக்காலத்தில் வாழ்ந்த எதார்த்த மனிதர்கள் அல்லர் ; எல்லாரும் மத மூடநம்பிக்கைகளால் ஊதிப் பெருக்கப்பட்ட இராமன், சீதை, அரிச்சந்திரன், தருமன், வீமன், கண்ணன் போன்ற அதிலட்சிய மனிதர்கள்''(2) என்ற நிலைக்கு மாறாக இரத்தமும், சதையும், எலும்பும், தோலும் கொண்ட உண்மைப் பாத்திரங்களைப் படைத்தவர் பாரதிதாசன்.

பாரதிதாசன்தம்கதைப்பாடல்களில்உருவகமாகச் சில பாத்திரங்களைப் படைத்துள்ளார் ; சில பொருள்களும் நிகழ்ச்சிகளும்கூட உருவகத் தன்மை பெற்று விளங்குகின்றன. அவை வரலாற்றுச் சமுதாயப் பின்னணியில் ஆராயப் பெற்றால் ஒழிய, தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாதவைகளேயாகும்.

அவர் கதைப் பாடல்களில் சில முழு உருவகக் கதைப் பாடல்களாக விளங்குவன என்பதை முன்னரே கண்டோம்.(3) வேறு சில வற்றில் மறைமுகமாகச் சில உருவகப் பாத்திரங்கள் அமைந்துள்ளதாக அறிஞர் கருதுவர். அவற்றுள் சில ஈண்டு விளக்கத்திற்காகக் குறிக்கப் பெறுகின்றன.

## 1. பாண்டியன் பரிசு :

இக்கதைப் பாடலில் இடம் பெற்றுள்ள 'பாண்டியன் பரிசு' என்னும் பேழை கவிஞர் உயிராகக் கருதிய 'பைந்தமிழ்' மொழியே ஆகும்.(4)

'' என்பேழை மன்னவரின் வாளின் நீளம் !
உள் அகலம் மூன்றுசாண் !''(5)

என்று தொடங்கி, அதன் அமைப்பு விளக்கம் தரப்படுகிறது. மேலும், அதனுள்ளே நகை, ஆடை, அழகிய வாள், பட்டயம் ஆகியன(6) இருந்ததாகவும் குறிக்கப்பெறுகின்றன.

அகலம் மூன்று சாண் என்பது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைக் குறிப்பது என்றும், உயரம், நாற்சாண் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தைக் குறிப்பது என்றும், தமிழ் இலக்கியங்களை நகைகள் என்றும், ஆடைகள் அகத்தைக் குறிப்பது என்றும், வாள் புறத்தைக் குறிப்பது என்றும், தமிழரின் பெரும் புகழ் வரலாற்றை பொற்பட்டயம் என்றும் கவிஞர் கொண்டு பைந்தமிழையே பேழையாக உருவகித்தார் எனலாம்.

இக்கதைப் பாடலில் வரும் நரிக்கண்ணன் வெளிப்பகையாகவும், நீலன் உட்பகையாகவும், பூதம் அச்சத்தின் உருவாகவும், அன்னம் ஆட்சியாகவும், வேலன் தமிழ் வீரனாகவும் உருவகித்து காணத்தக்க பாத்திரங்களாகும். இந்த நோக்கில் கதைப் பாடலை ஆராயின், பாரதிதாசன் தமிழ் விடுதலைக்காகவே, அகத்தேயும் புறத்தேயும் உள்ள தமிழ்ப் பகைமையை விரட்டுவதற்காகவே பாண்டியன் பரிசு என்னும் நூலை உருவாக்கினார் என்ற கருத்து புலப்படும்.

## காதலா ? கடமையா ?

மாழை நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுதலை கோரும் கொன்றை நாட்டு மறவர்கள், வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுதலை கோரும் திராவிடர் கழகத்தாரின் உருவகம் எனலாம். (மாழை நாடு—வடநாடு; கொன்றை நாடு—திராவிடநாடு)

## 3. புரட்சிக்கவி :

புரட்சிக் கவியில் வரும் மன்னன், சாதிக் கட்டுப்பாட்டின் உருவகமாக வருகிறான். குன்றினும் கொடும்பாம்பினும் கொடிய நெஞ்சினனாக, 'ரத்தவெறி' கொண்டு அலையும் நால்வருணத்தின்படி நிகராளியாக— விளங்கும் மன்னன் சாதிக் கட்டுப்பாட்டின் உருவமே ஆவான்.

## 4. எதிர்பாராத முத்தம் :

பொன்முடி இன்றைய தமிழகத்தின் உருவகம் ; பூங்கோதை புதுமையின் உருவகம்; பூங்கோதையின் பெற்றோர்கள் பழமையின் உருவகம் ; வடநாட்டு ஆரிய முனிவர்கள் வைதீக நெறியின் உருவகம்—என்று கூறும் வகையால் எதிர்பாராத முத்தத்தின் கதை அமைந்திருக்கிறது.

## 5. சஞ்சீவிபர்வதத்தின் சாரல் :

மூடப்பழக்கங்கள் நிரம்பப்பெற்று வையம் அறியாதவனாக வருகின்ற குப்பன் அறியாமையின் உருவகமாகப் படைக்கப்பட்டவன். தன் அறியாமையை எண்ணி நாணிக் குப்பன்,

''ஏஏஏ நான் இன்றைக் கேன்னத்துக்
காளானேன்
நீயேன் இதை யெல்லாம் நிச்சயமாய்
சொல்லவில்லை ?''(7)

என்று வஞ்சியிடம் கூறுகிறான்.

''மன்னும் உலகம் மறைந்தொழியும்
காலமட்டும்
மின்னும் மலைதூக்கும் மனிதன் பிறப்ப
தில்லை ?''(8)

என்று குப்பனது அறியாமைக்கு வஞ்சி அதிர்வேட்டு வைக்கிறாள். எனவே அவளை அறிவுடைமையின் உருவகம் என்று கூறலாம்.

## 6. கடல்மேற் குமிழிகள் :

''ஏட்டினில் உள்ளதுவோ—தமிழர்
இனத்தினில் வேற்றுமைதான் ?''(9)

என்று வினவும் மின்னொளி 'சமத்துவ'த்தின் உருவகமாகத் திகழ்கிறாள், கடல்மேற் குமிழிகள் என்னும் கதைப் பாடலில்.

வையத்திறல் சமத்துவத்தை விரும்பும் இன்றைய தமிழ் வையத்தின் உருவகமாக விளங்குகின்றான்.

புலித்திறலும் அவ்னைச் சார்ந்தோரும் நால்வருணத்தின் உருவகமாகப் படைக்கப் பட்டவர் எனலாம்.

செம்மறித்திறல் திராவிடக் கழகத் தாராகவும், பொன்னி கருஞ்சட்டை மறத்தியாகவும் எண்ணப்பட வேண்டியவர்கள்.

மின்னொளி என்ற சமத்துவத்தை வையத்திறல் என்னும் தமிழ் வையம் அடைய துடிக்கிறது. புலித்திறல் முதலான நால்வருணம் தடுக்கிறது, செம்மறித்திறல் என்னும் திராவிடக் கழகம் அதனை உடைக்க மக்கள் சக்தியைத் தூண்டுகிறது. நால்வருணம் சாய்கிறது. தமிழ் வையத்தோடு சமத்துவம் இணைகிறது என்பது இக்கதைப் பாடலில் உருவகப் பொருளாம்.

## 7. தமிழச்சியின் கத்தி :

தேசிங்கு, சுதரிசன் சிங் முதலானோர் வடநாட்டு ஆதிக்கத்தின் உருவகமாக விளங்குகின்றனர். குப்பு, முருகி ஆகியோர் அவர்களுக்கு உதவி செய்யும் அய்ந்தாம் படையினர் ஆவர்.

''முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை காண்''(10)

என்று கூறும் சுப்பம்மா என்னும் தமிழச்சி, உரிமை உணர்வின் (விடுதலையின்) உருவகமாகும்.

இன்றைய தமிழகத்தை, துயருற்றுத் தூங்கிக்கிடக்கும் தமிழகத்தை, திம்மன் என்னும் பாத்திரம் வாயிலாக உருவகித்துள்ளார். அவன் பெறத் துடித்த அரசியல் பதவி ''சிப்பாய் வேலை'' சிலருக்குக் கிடைக்கும் அரசாங்கச் சலுகையின் உருவகமாகும்.

ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறத் திருவண்ணாமலைத் தமிழர் என்னும் திராவிடர்க் கழகம் இனவுணர்வு என்னும் கூரிய கத்தியினை தமிழ் மக்களுக்கு அளிக்கிறது என்பது உள்ளுறையாகும்.

இவ்வாறு உருவகித்துப் பார்க்குமாறு தமிழச்சியின் கத்தியின் பாத்திரங்கள் அமைந்து இருக்கின்றன. பாவேந்தர் இந்நூல்களை எழுதும்போது அத்தகைய மறைமுகமான கருத்துக்களை எழுதவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தார் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

8. குறிஞ்சித்திட்டு

''மதமில்லை குறிஞ்சித் திட்டில்
மதம்பெற்ற சாதி யில்லை !''(11)

என்றும்,

''பிறர்நாட்டை எதிர்பார்க்கின்ற
பிற்போக்கு நிலைமை இல்லை''(12)

என்றும் காட்டப்படுகின்ற குறிஞ்சித்திட்டு, கவிஞர் கண்ட ஆரியர் கலப்பற்ற பழந்தமிழகத்தின் உருவ்கம் ஆகும்.

''பொய்க்காடு வஞ்சக் குன்று
புன்செயல் பெருக்கு நெஞ்சில்
எக்கேடும் நிறைந்த பள்ளம்
இரக்கமொன் றில்லா ஏரி''(13)

என்று கவிஞரால் கூறப்பெறும் விநோதை ஆரியப்படையெடுப்பின் உருவகமாகும்.

''அவளின் நோக்கம்
திருநாட்டை அவள்நாட்டுக் கடிமை
யாக்கல்.''(14)

என்னும் சேந்தன் கூற்று இதனை உறுதிப் படுத்துகிறது.

''நச்சும் நம்தாய் நாட்டு வாழ்வின்
அச்சை முறிக்கும் விநோதை''(15)

என்று விடுதலைத் தோழர்கள் அவளைப் பற்றிக் குறிப்பிடுவதும் அவள் ஆரியப் படையெடுப்பின் உருவகம் என்பதைத் தெளிவாக்குகிறது.

ஆரியக் கோட்பாடுகளான மதம், சாதி, வடமொழி, சோதிடம், புரோகிதத் திருமணம் ஆகியவற்றின் உருவங்களாக அமைந்தவர்களே சிவசம்பந்தர், சிவானந்தர், திருமாலடிமை ஆகியோர் விநோதைக்குத் துணைச்செய்யும் கதையுறுப்பினர்.

வேலன், நெடுமாறன் முதலியோரால் குறிஞ்சித்திட்டு ஆரியக் கலப்புக் களையப்பட்டு செம்மை எய்துகிறது என்பது திராவிடர்க் கழகத்தினரால் தமிழகம் ஆரியமாயையில் இருந்து விடுபடும் என்றக் கருத்தைக் குறிப்பதாகும்.

9. கடவுளைக் கண்டீர் :

பாம்பு பச்சைக்குழந்தையைத்தீண்டுவது— வடநாட்டு இந்தி தமிழகத்தைச் சூழ்வதனைக் குறிப்பது ; மாம்பூ மலை மூலிகை என்பது பொதிய மலையிற் பிறந்த தமிழ் ஆகும். மருத்துவச்சி—திராவிடர் கழகம் ; அவள் பல தடைகளையும் மீறிச் செல்வது, திராவிடர் கழகத்தார் தமிழகத்தில் மொழியுணர்வை எழுப்ப முனைந்தபோது பகைவர்களால் பெற்ற கல்லடிகளும் பிற தொல்லைகளும் ஆகும்.

''ஊனெடுத்தோம் என்ன பயன் ? ஊருக் குழைப்போமே'' என்று மருத்துவச்சி கூறுவது, தமிழகத்தை உயிர்ப்பிக்க இந்தி எதிர்ப்புப் போராட்ட எழுச்சிச் சூழ்நிலையைக் காட்டுவது.

மருத்துவச்சியும், மருத்துவனும் மலைமேல் ஏறும்போது சிறுத்தை குறுக்கிடுவதும், பின் ஓடுவதும், திராவிடர்க் கழகத்தார் எழுப்பிய தமிழ் உணர்வுக்கு எதிராக எழுந்த பார்ப்பனீயத்தைக் குறித்தது எனலாம்.

இறுதியில் மருத்துவனும், மருத்துவச்சியும் பச்சிலை கொணர்ந்து பாம்பு கடித்த பிள்ளைக்குக் கொடுத்தல் என்பது திராவிடர்க் கழகத்தார், இந்தி யென்னும் பாம்புக் கடித்தகடியால் மயக்கமுற்றிருந்த தெற்குத் தமிழகத்துக்குப் பொதிகை மலையிற் பிறந்த தமிழ் உணர்வை ஊட்டி விழிப்புற்று எழுந்திடச் செய்த செயலை குறிப்பதாகும்.

'கடவுளைக் கண்டீர்' என்னும் இக் கதைப்பாடல் 1948-ல் நடந்த இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் கவிஞரால் எழுதப் பெற்றது என்பதும், ''இந்தி எதிர்ப்புப் பாட்டு'' என்னும் கவிஞரின் ஒரு நூல் இந்தக் காலத்தே வெளியானது என்பதும் இங்கு நினைவுக் கூறத் தக்கது.

இங்குக் காட்டப்பெற்ற உருவகங்களைப் போல வேறு பல, பாரதிதாசனின் கதைப் பாடல்களின் உள்ளே புதைந்து இருக்கக்கூடும். அவை பாரதிதாசன் வேண்டுமென்றே மறைமுகமாய்த் தமிழர்க்கு உணர்த்த எழுதியவை எனலாம்.


1. முத்தையா (ப) : புரட்சிக் கவிஞர் (தொகுப்பு) பக்கம்-108.
2. சாலை இளந்திரையன்: சமுதாயநோக்கு பக்கம்-121
3. (அ) உரிமைக் கொண்டாட்டமா ?
(ஆ) வீட்டுக்கோழியும் காட்டுக்கோழியும்.
(இ) விடுதலை வேட்கை உயிரின் இயற்கை.
4. கணபதி (ப) : 'பாண்டியன் பரிசு'— கேரளப் பல்கலைக் கழகத் தமிழ் முதுகலைத் தேர்வுக்கு அளிக்கப்பட்ட ஆய்வுரை 1967-68.
5. பாண்டியன் பரிசு பக்கம்-56.
6. பாண்டியன் பரிசு பக்கம்-56.
7. பாரதிதாசன் கவிதைகள், முதற் தொகுதி, பக்கம்-15.
8. பாரதிதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி பக்கம்-41.
9. பாரதிதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி பக்கம்-41.
10. தமிழச்சியின் கத்தி, பக்கம்-58.
11. குறிஞ்சித் திட்டு, பக்கம்-2.
12. குறிஞ்சித் திட்டு, பக்கம்-3.
13. குறிஞ்சித் திட்டு, பக்கம்-228
14. குறிஞ்சித் திட்டு, பக்கம்-207.
15. குறிஞ்சித் திட்டு, பக்கம்-249.
16. குயில் : 15-7-1948, பக்கம்-43.




# ஒப்பீட்டுப் பார்வை
# தந்தை பெரியாரும் சமகாலத் தலைவர்களும்


அய்ன்ஸ்டீன்


பெர்னாட்ஷா


ரஸ்ஸல்


மாசேதுங்







# 'ஆரியர் வெறுத்த சீரியர்'

# தந்தை பெரியாரும்-அய்ன்ஸ்டைனும்

பி. குமாரசாமி B.E (Hons) F.C.A.E.S (M.I.T U.S.A).,

[விஞ்ஞானி பொ. குமாரசாமி நீரியல், நீர்நிலையியல் ஆகியவற்றில் உலக நிபுணர்களில் தலைசிறந்தவராக இருப்பவர். தேர்ந்த பகுத்தறிவாளர். தந்தை பெரியார் அவர்களை விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்து, ஆராய்ந்து, அய்ன்ஸ்டைனும்—அய்யாவும் எப்படி ஆரியரால் வெறுக்கப்பட்டனர் என்பதை வெகு துல்லியமாக மதிப்பிடுகிறார். ஹோமி பாபா, ஜவகர்லால் நேரு நினைவாக இரண்டு ஃபெலோஷிப்புகளைப் பெற்று, ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தீட்டி, உலகப் புகழ் அடைந்தவர். யுனெஸ்கோவின் சார்பில் உகாண்டா நாட்டிற்குச் சென்று அங்கு நீரியல்பற்றி ஆய்ந்து அறிக்கை கொடுத்தவர்.]

உலகில் ஆரியரால் வெறுக்கப்பட்ட சீரியர்கள் இருவர் : ஒன்று தந்தை பெரியார் ; மற்றொன்று ஆல்பர்ட் அய்ன்ஸ்டைன். இருவருமே சிறந்த விஞ்ஞானிகள். தாங்கள் பிறப்பதற்கு முன் நிலவி வந்த தவறான பல அடிப்படை நம்பிக்கைகளை தகர்த்தெறிந்த பெருமை இருவருக்குமே உண்டு. ஆரியரின் எத்தகைய சூழ்ச்சிகளும் அவர்களது வெற்றி நடையைச் சிறிதளவுகூட நிறுத்திட இயலவில்லை.

தந்தை பெரியார் தமிழ்நாட்டிலே ஈரோட்டிலே 1879-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் தேதி பிறந்தார். அய்ன்ஸ்டைனும் அதே ஆண்டு மார்ச் 14லே ஜெர்மனியில் உல்ம் என்ற ஊரில் தோன்றினார்.

ஈ. வெ. ராமசாமி திண்ணைப் பள்ளியில் 1885-ல் சேர்க்கப்பட்டு, பின்னர் படிப்புக்கே முழுக்குப் போட்டது 1890-ம் ஆண்டு. 1896-ல் ஸ்விஸ் ஃபெடரல் பாலிடெக்னிக் பள்ளியில் சேர்க்கப்பட்டார், அய்ன்ஸ்டைன். பள்ளிப் படிப்பில் இருவருமே எந்த ஆர்வமும் காட்டாது இருந்தது ஒரு ஒற்றுமை.

அய்ன்ஸ்டைனின் சூழ்நிலைக் கொப்ப அவரின் அறிவு முன்னேற்றம் ஏற்பட்டது போல், ஈ. வெ. ராமசாமியின் சுற்றுப்புறத்துக் கேற்ப அவரின் சிந்தனைச் செறிவு ஏற்பட்டது. உலகிலேயே எங்குமிலாத கொடுமையான ஜாதி, தமிழ்நாட்டில் தலை நிமிர்ந்து நின்ற காலம் ; நாட்டு மக்கள் சுதந்திரம் இன்றி நலிந்த காலம், 1907-ம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டங்காட்டினார் பெரியார். 1919-ல் திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அய்ன்ஸ்டைன் 1905-ல் ஜூரிச் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். 1909ல் அதிலேயே பேராசிரியர் ஆனார். பின்னர் 1910ல் ப்ராக் நகரிலுள்ள ஜெர்மன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தார். 1913ம் ஆண்டு பெர்லின் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகவும், கெய்சர் வில்ஹெம் நிறுவனத்தின் இயக்குநராகவும் திகழ்ந்தார். ''ஜெனரல் தியரி ஆஃப் ரிலேட்டிவிட்டி'' என்ற புதிய புரட்சி பூத்த அறிவியற்கோட்பாட்டை, 1916ம் ஆண்டு ஒரு கட்டுரையின் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தினார். அய்ன்ஸ்டைனின் இந்த கொள்கையைப் பின்பற்றி உருவாக்கப்பட்டது தான் அணுகுண்டு. அவ்வண்ணமே, பெரியாரின் வகுப்புவாரி உரிமைக் கொள்கையைப் பின்பற்றி வெடித்தவையே, பார்ப்பன ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்த பல்வகைப்பட்ட புரட்சி இயக்கங்களும்.

1921ம் ஆண்டு யூதர்களின் இயக்கத்தை ஆரம்பிப்பதற்காக அய்ன்ஸ்டைன் அமெரிக்க நாடு சென்றார். திராவிடர்களின் இயக்கத்தை வலுப்படுத்துவதற்காக, 1922ம் ஆண்டில் மனுதர்ம சாஸ்திரத்தையும், ராமாயணத்தையும் கொளுத்த வேண்டுமென்று முழங்கினார் பெரியார்.

1922ம் ஆண்டு அய்ன்ஸ்டைன் நோபெல் பரிசு பெற்றார். 1924ம் ஆண்டு வைக்கத்தில் தீண்டாமை ஒழிப்பு அறப்போர் நடாத்தி, இரு தடவைகள் சிறைப்பட்டு, தீண்டாமையை ஒழித்துக் கட்டி, 'வைக்கம் வீரர்' என்ற அரிய தோர் பட்டத்தைப் பெற்றார் ஈ.வெ. ராமசாமி, இந்தியாவிலேயே முதல் முதலாக தீண்டாமையை எதிர்த்துப் போர் துவக்கி வெற்றி



கண்டவர் பெரியார் என்பது சரித்திரத்தில் மறைக்கப்பட்ட ஒரு செய்தியாகும்.

அமெரிக்க நாட்டில் ப்ரின்ஸ்டன் நகரிலுள்ள 'இன்ஸ்டிட்யூட் ஃபார் அட்வான்ஸ்ட் ஸ்டடி' என்ற தலைசிறந்த அறிவியற் கழகத்தில் ஆல்பர்ட் அய்ன்ஸ்டைன் 1933ல் இணைந்தார் 1940ல் அமெரிக்கக் குடிமகன் ஆனார். 1924லிருந்து 1943 வரை பெரியார் ஆற்றிய சாதனைகள் பலவற்றில் குறிப்பிட்ட சில இதோ :

* 3-5-1925 — ஈரோட்டில் 'குடி அரசு' துவக்கியது.
* 1926 — இந்திக் கொள்கையைக் கண்டித்தது. மதுரையில் டிசம்பரில் பார்ப்பனரல்லாதார் முதல் மாகாண மாநாட்டைக் கூட்டியது.
* 1928 — 'ரிவோல்ட்' ஆங்கில இதழைத் துவக்கியது.
* 1929 — மலேயா நாட்டில் சுற்றுப் பயணம்.
* 1931-32 — எகிப்து, ரஷ்யா, ஃப்ரான்ஸ், போர்ச்சுகல், இங்கிலாந்து, இலங்கை முதலிய நாடுகளில் 11 மாதங்களுக்குமேல் சுற்றுப் பயணம்.
* 1933 — 'புரட்சி' வார ஏட்டைத் துவக்கியது.
* 1938 — ராஜகோபாலாச்சாரி திணித்த கட்டாய இந்தியை எதிர்த்தது. ரெயில்வே நிலையங்களில் உள்ள உணவு விடுதிகளில் 'பிராமணாள்—இதராள் சாப்பிடும் இடம்', என்றிருந்த இழிவை ஒழித்தது.
* 1943 — ஆண்—பெண் உறவின்றியே, சோதனைக் குழாயிலேயே மனிதக்குழந்தையை உருவாக்க முடியும் என்ற சுயசிந்தனை முடிவை உலகுக்கு அறிவித்தது.

அய்ன்ஸ்டைன் எப்படி அமெரிக்க நாட்டுத் தலைவர் ரூஸ்வெல்ட்டுக்குக் கடிதம் எழுதி, தன்னுடைய அறிவியற் கோட்பாட்டைப் பின்பற்றி அதன் மூலம் அணுகுண்டு தயாரிக்கச் செய்து, ஜெர்மானிய ஆரியர்களின் கொட்டத்தை அழிக்கச் செய்தாரோ, அதேபோல் 1952-ல் சென்னையில் காங்கிரஸைப்படு தோல்வி அடையச் செய்து, 1953-ல் பிள்ளையாரை உடைத்து, ரெயில் நிலையப் பெயர்ப் பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்து, 1956ல் ராமனை எரித்து, 1957-ல்



ஜாதிக்குப் பாதுகாப்பாகவுள்ள அரசியல் சட்டப்பகுதியை எரித்து, இந்நாட்டு ஆரியரின் ஆணவத்தைப் பெரியார் அடக்கினார்.

இஸ்ரேல் நாடு ஏற்படுத்தப்பட்டவுடன், உலகில் வாழ் யூதர்கள் பலரும் அய்ன்ஸ்டைனைச்சந்தித்து, அந்த நாட்டுக் குடியாசுத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அவரோ, ''உங்களுக்கு என்ன தீங்கு நான் செய்தேன் ? இப்படித்தண்டிக்க விரும்புகிறீர்கள் !'' என்று வேடிக்கையாகக் கூறி மறுத்துவிட்டு, தன் அறிவியற்பணிகளையே தொடர்ந்து செய்துவந்தார்.

1940 ஏப்ரலில் ஒரு முறை, 1942 ல் மற்றும் இரண்டாம் முறையாக, கவர்னர் ஜெனரலும், கவர்னரும், ராஜகோபாலாச்சாரியும், பெரியார் அவர்களை நேரில் சென்று பலமுறை வேண்டியும், மந்திரிசபைப்பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். திராவிட சமுதாயத்தைத்திருத்தி, உலகிலுள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல், மானமும் அறிவுமுள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டினை, வேறு யாரும் செய்ய வராததினால், தானே அதைத் தன்மேற்போட்டுக்கொண்டு, சமுதாயத் தொண்டாற்றி வருவது தான், தன் வாழ்வின் குறிக்கோள் என்று கூறி, வாழ்வின் கடைசி நாள் வரை பதவி எதையும் ஏற்றுக்கொள்ள, திட்டவட்டமாக மறுத்து வந்தவர் தந்தை பெரியார்.

அறிவியற் சாதனைகளின் மேம்பட்ட நிலையைப் போன்றதே அய்ன்ஸ்டைனின் குணமும் சுபாவமும். எளிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். எதையும் பகுத்தறிவுக் கண் மூலம் கண்டு, அனுபவங்கள் வாயிலாகவே உண்மையைக் கண்டறிய முடியுமென்று கூறி வந்தார். அன்னாரது குழந்தை உள்ளத்தை அவரது செயல்கள் வெளிப்படுத்தின. நற்குணமுடைய அவர் யாவருக்கும் நன்மையே புரிய விரும்பினார். நல்ல நகைச்சுவையுடையவர். பந்த பாசங்கள், பற்று, சுற்று எதுவுமில்லாதவர். ஆயினும், சமுதாய நீதிக்காக எத்தகைய தியாகமும் செய்ய முன்வந்தவர். ''அய்ன்ஸ்டைன்'' என்ற சொல்லுக்குப் பதில் 'பெரியார்' என்று எழுதிவிட்டால், மேற்கண்ட சொற்றொடர்களைத் திருப்பி ஒருமுறை எழுத வேண்டிய அவசியமில்லை.

1955 ஏப்ரல் 18ல் அய்ன்ஸ்டைன் மறைந்தார். பெரியாரோ இன்னும் பலவாண்டுகள் பணியாற்றி, 1973 டிசம்பர் 24 அன்று இயற்கையெய்தினார். உலகிற் சிறந்த அறிவியல் வல்லுநர், புரட்சியாளர், சீரியர் இவ்விருவரையுமே ஆரியர் வெறுத்து வந்தது அவரிருவரின் ஒற்றுமையைக் குறித்திடும் துல்லிய உண்மையாகும்.

*



# பெரியாரும் மாவோவும்

புரட்சி வண்ணன் எம்.ஏ.,

[இக்கட்டுரை ஆசிரியர் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் நகரைச் சேர்ந்தவர். இவர் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டமும், சட்டத்துறையில் 'இளங்கலை' பட்டமும் பெற்றவர். இக்கட்டுரையில், மாவோ சீனாவில் செய்த கலாச்சாரப் புரட்சியையும், தந்தை பெரியார் தமிழகத்தில் செய்த கலாச்சாரப் புரட்சியையும் ஒப்பிட்டு திறனாய்வு செய்துள்ளார். இவ்வாய்வுரை பெரியார் பகுத்தறிவு ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.]

'புரட்சி' என்ற ஒரு மகத்தான பொருள் பொதிந்த 'ஒரு அரசியல் பொருளாதார சமுதாயத் தத்துவம், இந்தியாவில் இன்று வாய் கிழிய பேசவும், பதவியைப் பிடிக்கவும், பயன்படும் ஒரு வேடிக்கைச் சொல்லாகிவிட்டது. ஆனால் ஆசியாவைப் பொருந்தவரை அந்தப் புரட்சியை நடத்திக் காட்டிய இருவர், இந்தியாவில் தந்தை பெரியாரும் சைனாவில் மவோவும் ஆவர்.

ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த மாவோ இளமையிலேயே புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டு நீண்ட பயணத்தை (The Long March) நடத்தி, சப்பானுடைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் அந்த நாட்டின் நிலபிரபுக்கள், முதலாளிகள் முதலியோர் பலரை எதிர்த்தும் இன்று உலகமே வியக்கும் புதிய சீனாவை படைத்தார்; அதைப்போலவே தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசுக் கட்சியில் இருந்தபோது ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், பின் அதைவிட கொடுமையான பார்ப்பன ஏகாதிபத்தியத்தையும், அதன் பின்னணியாய் அமைந்திருக்கும் சாதிய, மூட பழக்கங்களையும், கொடுமைகளையும் எதிர்த்துப் போரிட்டு வெற்றிகண்டார், அபினி மயக்கத்தில் மயங்கிக் கிடந்த சீன மக்களை தட்டி எழுப்பினார் மாவோ. இந்தியாவில் பார்ப்பனீயம், அல்லது இந்துமதம் என்ற போதை மயக்கத்தில் மயங்கிக் கிடந்த இந்திய மக்களை தட்டி எழுப்பினார் பெரியார்.

மார்க்ஸ் சொன்னார், ''மதம் மக்களுக்கு ஒரு அபினி'' என்று. அந்த மார்க்சீசிய கோட்பாட்டை சீனாவில் கலாச்சாரப் புரட்சியின்மூலம் மாவோவும், தமிழகத்தில் சமுதாய சீர்திருத்தம் எனும் 'பேரால் பெரியாரும் நடத்தி வெற்றி கண்டார்கள்.

## கலாச்சாரப் புரட்சியும் பெரியாரும்

கலாச்சாரப் புரட்சியில் மாவோ கீழ்க்கண்ட கொள்கைகளை செயல்படுத்ததிட்டமிட்டார். 1. பெண்கள் சம உரிமை : பெண்கள் படுக்கையறையில் ஒரு போகப் பொருளாகவும் சமையலறையில் ஒரு சமையல் பொருளாகவும் ஆகாமல் அவர்களும் உரிமைப் பெற்று ஆண்களுடன் சமவாழ்வு வாழவேண்டும் என்று விரும்பினார். 2. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற பழங்கொள்கைகளில் தங்கள் உரிமைகளை இழந்து நிற்கும் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் மாவோ சொன்னதாவது: தங்கள் தாய், தந்தை, ஆசிரியர், தெய்வம் ஆகியவற்றில் பற்று இருக்கலாமே தவிர அவருடன் ஒரு அடிமையைப் போல் பழகி வரக் கூடாது என்று கூறினார். 3. மூளை உழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையே உள்ளே வேறுபாடு நீங்க வேண்டுமென்றால் கிராமத்திற்கும் நாகரத்திற்கும் உள்ள அந்த நாகரிக இடைவெளி தீர்க்கப்படவேண்டும் என்றார்.

மேற்கண்ட கலாச்சாரப் புரட்சியின் மூன்று முக்கிய கருத்துக்களுடன் தந்தைப் பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களும் ஒற்றுமைப்பட்டு வருவதைக் காணலாம்.

இந்தியாவில் பெண்கள் விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களில் தந்தை பெரியார்



முன்னணியில் இருக்கின்றார். பெண் அடிமைக்கு முக்கிய மூல காரணமாக இருப்பது நமது வைதீகத் திருமண முறை என்பதை உணர்ந்த அய்யா அவர்கள் அந்தத் திருமண முறையையே ஒழிக்கப்பாடுபட்டார். அதன் முதற்படியாக சீர்திருத்தத் திருமணம் என்ற ஒரு புதிய முறையை செயல்படுத்தி, தாலி கட்டாத—பார்ப்பனர் அல்லாத — கணவன் மனைவி என்ற அடிமை உறவு அற்ற—துணைவன் துணைவி என்ற ஒரு வாழ்க்கை அமைப்பை தமிழகத்தில் தோற்றுவித்து பல்லாயிரக்கணக்கான சீர்திருத்தத்திருமணங்களை தமிழகமெங்கும் நடத்தி வைத்துள்ளார். பெண்ணை அடிமையாக்கும் மற்றொரு கருவியாக நமது இலக்கியங்கள் இருப்பதை அறிந்த பெரியார் தமிழை ஒரு காட்டுமிராண்டிமொழி என்று சொன்னதோடு அத்தகைய இலக்கியங்களை (புராண இதிகாசங்களை) அழித்து ஒழிக்க வேண்டும் என்றும் சொல்லி, — சொன்னதோடு மட்டுமல்லாமல் அத்தகைய இலக்கியங்களை கொளுத்தியும் உள்ளார். கண்ணகி, பாஞ்சாலி, சந்திரமதி, நளாயினி, தமயந்தி போன்ற புராண இதிகாச கதாபாத்திரப் படைப்புக்களில் பெண்ணடிமை நிலைநாட்டப்பட்டிருப்பதை அய்யா அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் எடுத்து விளக்கி, அத்தகைய இலக்கியங்களை அழித்து ஒழிக்க எண்ணினார்.

இந்திய சமுதாய அமைப்புப்படி மூளை உழைப்பையே நம்பிவாழும் பார்ப்பனர்கள், உடல் உழைப்பையே நம்பி வாழும்படி செய்யப்பட்ட திராவிட இனத்தவரை நாலாஞ் சாதியினராக்கி, கொடுமைப்படுத்தி வைத்திருக்கும் இந்தச் சமுதாய அமைப்பைச் சீர்திருத்தி, இந்த வேறு பாட்டிற்கு மூலகாரணமாக விளங்கிய கோயில், கடவுள், புராண இதிகாசங்கள், மதங்கள் ஆகியவற்றிலும் பெரும் மாறுதல் ஏற்பட, அவற்றில் உள்ள அறிவீனங்களை, பகுத்தறிவற்றத்தன்மையை விளக்கிப் பிரசாரம் செய்தார். ''குருட்டு நம்பிக்கைகளை அழிவு 'வேலைகளின் மூலம்தான் ஒழிக்க முடியும். மகத்தான உறுதியும் சிறிதும் சந்தேகமற்றத்தெளிவும் பழிப்பிற்கும் சாவிற்கும் கவலையற்ற துணிவும் உள்ளவனால்தான் அது முடியும்,'' என்று தென்னிந்திய சீர்திருத்த மாநாட்டில் அய்யா ஆற்றிய உரையிலிருந்து அவர் நடத்திய உயிருக்கு அஞ்சாத அந்த சீர்திருத்தப்பணி ஒரு இந்திய கலாச்சாரப் புரட்சியாகக் காட்சியளிக்கிறது.

''பல விஷயங்கள் மீது நாம் குருட்டுத்தனமாக விமர்சன பாவமின்றி நம்பிக்கை வைத்தால் அவை நமக்கு ஒரு சுமையாக தடைகளாக மாறலாம்'' என்று நமது பகுத்தறிவற்றத்தன்மையால் விளையும் விபரீதத்தை மாவோ ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

## பகுத்தறிவுக் கொள்கையில் பெரியாரும் மாவோவும்

''எதனை எவர் கூறினும் எத்தனை பெரிய தலைவர் கூறினும் அது உண்மையா அல்லவா? சரியா தவறா? என்று கண்டு உண்மையானதையும் நியாயத்தையும் ஏற்க வேண்டும்; அல்லாததை எதிர்த்து போரிடத் துணியவேண்டும் அந்தகைய தன்மை கொண்டவனே ஒரு பொதுவுடைமைவாதி'' என்று மாவோ கூறுகிறார்.

தந்தை பெரியார் அவர்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசும் போதும், ''நான் சொல்கிறேன் என்று மட்டும் கேட்காதே; நீயே



சிந்தித்துப் பார்த்து உன் அறிவுக்குப் பட்டதை மட்டும் எடுத்துக்கொள்; மற்றதை தள்ளிவிடு'' என்று கூறுவார்கள்.

## அரசாங்க நடப்பில் மக்களின் பங்கு

கலாச்சாரப் புரட்சியில் முக்கிய அங்கமாக மாவோ குறிப்பிட்டதாவது: ''அரசாங்கப் பணிகளில் இடம் பெற்றிருந்த நிலப்பிரபுக்கள், பணக்காரர்கள், முதலாளிகள் ஆகியவர்களை நீக்கிவிட்டு பெரும்பான்மை இனத்தவர்களான விவசாயிகளும் தொழிலாளிகளும் அப்பதவிகளை வகிக்க வழிவகைச் செய்ய வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார். தமிழகத்தில் பெரியார் அவர்களும் பெரும்பான்மை இனத்தவர்

களாகிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும் விவசாயிகளும் தொழிலாளிகளுமாகிய இவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சில உயர்சாதி இனத்தவர்களுக்கேச் சொந்தமாக இருந்த கல்வியையும், அரசாங்க அலுவல்களையும் இவர்களும் பெறவேண்டும் என்று போராடி அவர்களுக்கென்றே வகுப்புவாரி வுரிமையை சட்டத்தின் மூலம் ஏற்படுத்தும் அளவுக்கு போராடி வெற்றி கண்டார். அவர் போராடியதன் பலனாகத்தான் இன்றைய சமுதாய அமைப்பில் உடலுழைப்பை மூலதனமாகக் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் கல்வி வேலை வாய்ப்புக்களில் உயர்நிலையில் இருப்பதைக் காண்கிறோம்.

## சமுதாய சீர்திருத்தமும் பொருளாதார சீர்திருத்தமும்

நம் இழிநிலைக்குக் காரணமான சாதிமதம் கடவுள், இலக்கியங்கள் (புராண இதிகாசங்கள்) என்பதை அறிந்த பெரியார் அவைகளை ஒழித்து புதுமையை நாடவேண்டும் என்று தனது வாழ்நாளின் இறுதி கட்டம்வரை போராடினார். மேற்கண்ட கொடுமைகளை ஒழிப்பதையே தனது முழு மூச்சாக அய்யா கொண்டிருந்ததற்குக் காரணம், நமது இந்தியாவில் சமுதாயத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும் புரட்சி ஏற்படாமைக்குக் தடையாக இருக்கும் நமது சாதி, மத, கடவுள், கலை, இலக்கியங்கள் ஆகியவைகளே ஆகும். எனவே இவைகளை ஒழித்தால்தான் நமது நாட்டில் பொருளாதாரப் புரட்சி தோன்றி அது முழு வெற்றி அடைவதற்கு சுலபமாக இருக்கும்; இவைகளை சமுதாயத்தில் வைத்துக்கொண்டு பொருளாதாரத்தில் புரட்சி நடத்துவது என்பது ஒரு மரத்தை அழிப்பதற்கு - அதன் ஆணிவேரை அழிப்பதற்குப் பதிலாக கிளையை வெட்டுவதுபோல்தான் ஆகும் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இந்தக் கலை இலக்கியங்களைப் பற்றி மாவோ கருத்தும் அய்யா அவர்களின் கருத்தும் ஒரே கருத்துடையதாக உள்ளது. ''இன்றைய உலகில் கலாச்சாரம் அனைத்தும், கலை இலக்கியம் அனைத்தும் குறிப்பிட்ட வர்க்கங்களுக்குச் சொந்தமானவை. குறிப்பிட்ட அரசியல் மார்க்கங்களில் முடுக்கிவிடப்படுகின்றன. கலை கலைக்காக, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட கலை, அரசியலிலிருந்து பிரிந்த அல்லது விடுதலைபெற்ற கலை என ஒன்று உண்மையில் கிடையாது'', என்பது மாவோவின் கருத்து. இதே கருத்தைத்தான் தந்தை பெரியாரும் கூறி, அத்தகைய கலை இலக்கியங்கள் நம் தமிழ் மொழியிலும் இருப்பதால் அக்கலை இலக்கியங்களை தீயிட்டுக் கொளுத்தினார்; காட்டுமிராண்டி கலை இலக்கியங்கள் என்று குறிப்பிட்டார்.

நமது இந்திய மண்ணின் நடப்புக்களைத் தனது சுய சிந்தனையின் மூலம் கண்டறிந்து அதற்கென்று ஒரு தனிப்புரட்சியை ஏற்படுத்தி வெற்றியும் கண்டவர் பெரியார். பெரியார் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றாமலேயே மாபெரும் புரட்சிகளைச் செய்து வெற்றி கண்டார். ஆட்சியைப் பிடித்து புரட்சி செய்ய விரும்பாமைக்குக் காரணம் நமது ஆட்சிமுறையும், அரசியல் சட்டமும் ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் நலனுக்காகவே ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் ஆளுகைக்கே உட்பட்டு இருந்ததால் ஆட்சியையும் சட்டத்தையும் அடியோடு மாற்றி அதன் பிறகே சமுதாய பொருளாதாரத் துறையில் ஆட்சியின் முலம் பலன்பெற முடியும் என்ற கொள்கையை உடையவர் தந்தை பெரியார் அவர்கள். நமது சனநாயக அமைப்பில் சாதி முறையிலேயே தேர்தலில் வெற்றி தோல்விகள் அடங்கியிருப்பதால் முதலில் சாதியை ஒழிக்கப் பாடுபட்டார். எனவேதான் பெரியார் அவர்கள் அரசியல் புரட்சியோ பொருளாதாரப் புரட்சியோ தொடங்குவதற்கு முன் சமுதாயப் புரட்சியைத் தொடங்கினார். அய்யா தொடங்கிய அந்த சமுதாயப் புரட்சியினைப் போலவே தான் செஞ்சீனத்தில் மாவோவும் கலாச்சாரப் புரட்சியைத் தொடங்கினார். அய்யாவின் அயராத பணியினால் நம் தாழ்ந்த சமுதாயம் தலைநிமிர்ந்து நடந்து கொண்டிருக்கிறது; இருந்தும் இன்னும் முழுமையான அளவுக்கு அய்யாவின் உயர் எண்ணங்கள் நாட்டில் நடைமுறைக்கு வரவில்லை; அதற்கு இன்னும் எத்தனை பெரியார்கள், எத்தனை மாவோக்கள் தேவை என்பதை வரலாறு பதில் சொல்லட்டும்.

கட்டுரைக் குறிப்புகள் :

1. பெரியார் மலர்கள்
2. பெரியார் பொன்மொழிகள் (தடை நீக்கப்பட்டது)
3. கிராமச் சீர்திருத்தம்
4. சமுதாயச் சீர்திருத்தம்
5. தலைவர் மா. சே. துங் —மேற்கோள்கள்
6. From Marx to Mao tse tung: A study in Revolutionary dialectics.

*



# தந்தை பெரியாரும் பெட்ரண்ட் ரஸ்ஸலும்

பி.எஸ்.சந்திரபாபு

[இக்கட்டுரையாளர் பி. எஸ். சந்திரபாபு அவர்கள், செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரிக்கு அருகிலுள்ள தோட்டக்காடு என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் வரலாற்றுத் துறையில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். சென்னை தாம்பரம் கிருத்துவக் கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியர் டாக்டர் நிர்மல் அவர்கள் மேற்பார்வையில். ''சுயமரியாதை இயக்கத்தைத் தழுவிய சமூக எதிர்ப்புகளும், தமிழகத்தில் அதன் விளைவுகளும்'' என்னும் தலைப்பில் பி.எச்.டி. பட்டத்துக்காக இந்திய வரலாற்றுக் கழகத்தின் (I.C.H.R.) ஆராய்ச்சியாளராக மானிய உதவியுடன் ஆராய்ச்சி செய்து வருகிறார். சென்னை பெரியார் நூலகம்—ஆய்வகத்தைத் துணையாகக் கொண்டு, தம் ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.]

மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் நெடுங்காலமாகவே பல்வேறு துறைகளில் ஒரு நிரந்தரப் பிணைப்பு இருந்து வருகிறது என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்,

குறிப்பாக இந்தியாவில் எத்துறையிலாவது ஒரு கணிசமான வளர்ச்சி—முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்றால் அதற்கு மேலை நாடுகளின் அறிவு பூர்வமான பாதிப்புதான் காரணமாகச் சொல்ல முடிகிறது.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டை அடிமைப்படுத்தி சுமார் 200 ஆண்டுகள் ஆண்ட பிறகு இப்பாதிப்பு சமுதாயத்தில் சற்று அதிகமாகவே—நேரிடையகேவே தென்படலாயிற்று.

## மேலை நாட்டுச் சிந்தனை

செயல்முறையில் உடனடியாக சமுதாயத்தில் பெரும் மாற்றங்கள் தோற்றுவிக்கவில்லையானாலும், சிந்தனை பூர்வமாக ஒரு விழிப்புணர்வை ஆமை வேகத்தில் நமதுநாட்டில் கொண்டுவர, மேலை நாட்டு அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள், தத்துவ ஞானிகள் சிந்தனையாளர்கள் கணிசமான அளவு பணி புரிந்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது.

தத்துவ ஞானிகள் — சிந்தனையாளர்கள் வரிசையில், வெவ்வேறு குடும்ப சூழ்நிலை, சமூகப் பின்னணியில், பெரியார் ஈ. வெ. ராமசாமிக்கு 7 வருடங்களுக்கு முன்னால் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த பெர்ட்ரண்ட் ரஸ்ஸலும், தமிழகத்தில் ஈரோட்டில் பிறந்த பெரியாரும் சமகாலத்தவர் என்பதை அறிகிறோம்.

ரஸ்ஸல் ஒரு வளர்ந்து வரும் சமுதாயத்தின் உன்னத அங்கத்தினராகவும், பெரியார் ஈ. வெ. ரா. செல்லரித்துப்போன சமுதாயத்தின்—அதனை அழித்து புதுமை உலகைப் படைக்கும் சிற்பியாகவும் இருந்தார் என்று தெரிகிறது.

உலக மனித நல்வாழ்வுக்கான சீரிய பகுத்தறிவு கருத்துக்களைக் கொடுத்த அறிஞர் ரஸ்ஸல் அவர்கள் அவர் வாழ்ந்த சமுதாயத்தின் ''அவசியத் தேவையாக'' இல்லை. ஆனால், பெரியார் அவர்கள் தான் வாழும் நாட்டுக்கு—தமிழ் நாட்டுக்கு—அதன் இழிவு நீக்க பகுத்தறிவு கருத்துக்களைப் பரப்ப முழு மூச்சுடன் உழைத்தவராகையால் அவரது தொண்டு ஒரு ''வரலாற்று அவசியம்'' (Historical necessity) என்றே சொல்லலாம்.

## பாமரர் இயக்கம்

அறிஞர் ரஸ்ஸல் அவர்களின் கருத்துக்கள் பெரும்பாலும் அறிவு ஜீவிகளே (intellectuals) அதிகம் படித்துணர்ந்து பயன்பெறும் வகையில் அமைந்திருந்தன. ஆனால், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஒரு இயக்கத்தின் தலைவராய் இருந்து அதன் கருத்துக்கள் செயல்வடிவம் பெறுகின்றனவா என்று தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் சென்று ஏழை, எளியவர், படிக்காதவர் ஆகியோரும் விழிப்புணர்வுடன் தத்தம் உரிமைக்காக போராடி நல்வாழ்வை அமைத்துக் கொள்ள, ''பாமர இயக்கமாக'' தாமே மாறி செயல்பட்டார்.

மேலும் அறிஞர் ரஸ்ஸல் அவர்கள் வளர்ந்த குடும்பத்தில் அவரது பெற்றோர் பகுத்தறிவாதிகளாய் இருந்தனர். தங்களது

பிள்ளைகள் நன்கு கற்று, உயர்ந்து, சிறந்த பகுத்தறிவாதிகளாக வாழ்ந்திட வேண்டும் என்று விரும்பி அந்த முறையிலேயே ரஸ்ஸலும் அவரது சகோதரர்களும் வளர்க்கப்பட்டனர். சிறு வயது முதற்கொண்டே தாய்ப்பாலால் பகுத்தறிவு ஊட்டப்பட்டது அறிஞர் ரஸ்ஸ லுக்கு. அவர் கற்க—கற்க, வளர—வளர, அத்தகைய அடிப்படை—மேலும் மேலும் பலரின் அனுபவத்தைச் சேர்த்துக் கொள்ளும் அறிவுக்கு உறுதுணையாக இருந்தது; அது எளிதாகவும் இருந்தது.

## பெரியார் வளர்ந்த சூழல்

ஆனால், பெரியார் ஈ. வெ. ரா. வளர்ந்த வளர்க்கப்பட்ட குடும்பச் சூழ்நிலையோ முற்றிலும் மாறுபட்டது. போதிய கல்வி அறிவில்லாத பெற்றோர்; வைதீகத்திற்கு அடிமை; சாதி, மத, பேதங்கள்—மூட நம்பிக்கைகள் பாராட்டும் சமுதாயத்தின் ஒருபகுதி அவரது குடும்பம்; அர்த்தமற்ற பள்ளிப்படிப்பு; தொடர்ந்து படிக்க விருப்பமின்மை; தகப்பனார் வியாபாரத்தின் மூலம் சேர்த்து வைத்த கணிசமான சொத்து; இங்ஙனம் அடிப்படை பின்னணி இல்லாமல், அனுபவ அறிவு—காட்சி அறிவு பெற்று சமுதாய சிந்தனையாளராக மாறியவர் பெரியார்.

அறிஞர் ரஸ்ஸலின் சிந்தனை வளர்ச்சி, முன்னேறியவன் முன்னேற்றங்காண விழைவது போலவும், பெரியாரின் சிந்தனை வளர்ச்சி, பின்தங்கியவன் முன்னேற்றமடைய துடித்து எழுவது போலவும் இருந்திருந்தது. பெரியாரின் அறிவு வளர்ச்சியில் இயற்கையான பரிணாம வளர்ச்சியை காண முடிகிறது.

அறிஞர் ரஸ்ஸல் அவர்கள் தான் பிறந்து வாழ்ந்த நாடு அறிவுத் துறையில்—பல்துறை முன்னேற்றத்தில் மற்ற உலக நாடுகளுக்கு முன்னோடியாக இருந்த பின்னணியை கவனித்துப் பார்க்கும்போது, அவரால் ஒரு அகில உலக தத்துவ ஞானியாக இருக்க முடிந்தது எனலாம். அவரது கருத்துக்களுக்கு உலக நாடுகள் மதிப்பளித்தன. அதற்கு செய்தி, பத்திரிகைத் துறைகளின் தாராளப் போக்கும் காரணமாய் இருந்தது எனலாம்.

பெரியார் ஈ. வெ. ரா.வின் இயக்கம் சில மேனாட்டார்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் அமைந்திருந்ததே யொழிய அறிஞர் ரஸ்ஸலின் கருத்துக்களைப்போல் உலகப் பிரசித்தி பெறவில்லை. காரணம், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், தனது இயக்கம், தனது தொண்டு முழுதும் வெற்றிபெற, அதன் பலனை அனுபவித்து தான் பிறந்த நாட்டு மக்கள் முன்னேற இந்தியாவின் ஒரு பகுதியை தேர்ந்தெடுத்து உழைத்தார். மேலும் நமது தனித் தன்மை பொருந்திய சமுதாய இழிவுகள் அவைகளை நீக்கக் கூறும் வழிமுறை கொண்ட தத்துவங்கள் உலக முன்னேற்றத்திற்காக பொதுமைப்படுத்த முடியாதவையாகும்.

## ஒரே கருத்தே கொண்டனர்

கடவுள், மதம், மூடநம்பிக்கை, பெண்ணுரிமை, கல்வி, கலை, இலக்கியம், தொழிலாளர் நலன், ஜனநாயகம், சமத்துவம், பொது ஒழுக்கம் போன்ற சமுதாயத்தை நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளில் பொதுவாக இருவரும் (ரஸ்ஸலும் பெரியாரும்) ஒரே கருத்தையுடையவராகவே இருந்திருக்கின்றனர்.

## கடவுளைப் பற்றிய கருத்து

கடவுளைப் பற்றி கவலைப் படாதவர் (Agnostic) அறிஞர் ரஸ்ஸல். கடவுள் உண்டா இல்லையா என்ற தர்க்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அவர் கூறுகிறார்: ''ஒவ்வொன்றின் தோற்றத்திற்கும் ஒரு காரண காரியம் இருக்க வேண்டுமானால் கடவுளும் அதற்கு விதிவிலக்கல்ல, எதுவும் காரண காரியத்திற்கு உட்பட்டதல்ல என்றால் இவ்வுலகத்தைப் போன்றதே கடவுள். ஆகையால் இதைப்பற்றி தர்க்கம் செய்வதில் பயனில்லை'' இது அவரது முடிவான கருத்தாக இருந்தது.

''கடவுள் இல்லை; அதனால் பயனில்லை. மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் கடவுளை மறுக்கிறானோ, மறக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு சமுதாய முன்னேற்றம் இருக்கிறது என்பது எனது உறுதி......கடவுள் கண்டுபிடிக்கப்பட்டதுமல்ல; தானாக தோன்றி இருப்பது மல்ல. முட்டாளால் உண்டாக்கப்பட்டது என்பதாகும். அதை, அதாவது கடவுளை ஒரு மனிதன் உண்டாக்கினான் என்பதாக நினைத்தாலே அல்லது அதை நீ ஒப்புக் கொண்டாலோதானே கடவுளை உண்டாக்கினவன் முட்டாள் என்றால் நீ கோபித்துக் கொள்ள வேண்டும்.'' என்கின்றார் பெரியார் ஈ. வெ. ரா.

இங்ஙனம் கடவுளைப்பற்றி அறிஞர் ரஸ்ஸல் அவர்களும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், சமுதாய நலனுக்கும், விஞ்ஞான ரீதியான அறிவு வளர்ச்சிக்கும் அது ஒரு தடைக்கல் என்றே கருத்து தெரிவிக்கின்றனர்.

## மதத்தைப் பற்றி

மதத்தைப் பற்றி — அது எத் தன்மை வாய்ந்தது பற்றி அறிஞர் ரஸ்ஸல் அவர்கள்



கூறும்போது, ''எல்லா மதங்களும் பொய்யானதும், துன்பத்தை தரக் கூடியதும் ஆகும்... அங்ஙனம் இல்லையெனில் அவைகள் சந்தேகம், பயம், துவேஷம் போன்ற பயங்கர இழிவுகளினின்றும் நீங்கி இருக்க வேண்டுமே...?'' என்று வினாயெழுப்பி நிற்கின்றார். பொதுவாக ''மதம் எல்லாவற்றிற்கும் முதன்மையாக பயத்தின் மேல் எழுப்பப்பட்டதாகும்'' என்றே அவர் திட்டவட்டமாக நம்பினார்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அதன் அவசியமில்லாமையை கீழ்கண்டவாறு வலியுறுத்துகிறார். ''மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. மனிதனுக்கு அறிவும், பிரத்தியட்ச அனுபவமும், பஞ்சேந்திரிய உணர்ச்சியின் பலாபலனும் இருக்கும்போது இவைகளை லட்சியம் செய்யாமல் மாறுபட்டதான மதம் என்பது உலகிற்குத் தேவையில்லை.''

எனவே, மதம் பகுத்தறிவுக்குப் புறம்பானது; பயத்தின் அடிப்படையில் எழுந்த ஒரு குருட்டு நம்பிக்கை என்ற பொதுக்கருத்தை இரு சிந்தனையாளர்களும் கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

## பெண்ணுரிமை

சமுதாயத்தில் பெண்கள், தங்களது ஆண்களோடு சமமான சொத்துரிமை போன்ற உரிமைகள் பெற்று, விடுதலை பெறவேண்டும் என்று அறிஞர் ரஸ்ஸல் அவர்கள், தன் எழுத்திலும் பேச்சிலும், சென்றவிடமெல்லாம் நிலை நாட்டினார். அதன் (பெண்ணுரிமை) அவசியத்தை வலியுறுத்துமாறு ''பெண் விடுதலை என்பது ஜனநாயக இயக்கத்தின் ஒரு பகுதியாகும்...அவர்கள் (பெண்கள்) திருமணம், நெறி வாழ்வு—இவைகளில் சமுதாய விடுதலை பெறவேண்டும். அது மிகமுக்கியமானதாகும்'' என்கின்றார்.

## திருமணம்

மேலும் சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருணம் எத்தகையது என்று கூறுகின்றார் அறிஞர் ரஸ்ஸல், ''திருமணம் என்பது ஒரு நியாய நிறுவனம். அதில் (திருமணத்தில்) இரு சாராரும் சமமானவர்கள் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்; அவர்களது பரஸ்பர சுதந்திரத்தில் ஒருவருக் கொருவர் தலையிடுவதை தவிர்க்க வேண்டும். இருவரின் உடலும் உள்ளமும் ஒருமித்ததாய் இருக்க வேண்டும். அவரின் வாழ்க்கைக்கான நெறி முறைகளில் ஒற்றுமை இருக்க வேண்டும்'' என்கிறார்.

இவ்வாறே திருமணத்திற்கு தொடர்பான பிரச்சினையான விவாகரத்தைப்பற்றி அவர் கருத்து தெரிவிக்கும்போது, ''குழந்தைகளின் நலனை முன்னிட்டு, பாலுணர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இருவரும் சேர்ந்து வாழ்க்கையை நடத்துவதென்பது திருமணத்தில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தும்'' என்கின்றார். இங்ஙனம் தனிப்பட்டவர் அபிலாஷைகளுக்கு முக்கித்துவம் கொடுக்காமல், சமுதாய நலனே முக்கியமாகக் கருதுகிறார் அறிஞர் ரஸ்ஸல். இத்தகைய உறவுமுறை, தாம்பத்திய பலன், பரந்தநோக்கு அற்ற திருமணம், மண முறிவில்தான் முடியும்; அதை தவிர்க்க முடியாதது என்கிறார்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், பெண்ணுரிமைக்கு அத்தியாவசியத் தேவைகளாக சொத்துரிமை, திருமணம், விவாகரத்து, நல்லொழுக்கம் ஆகியவைகளைக் கருதினார்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், பெண் விடுதலைக்கும், உரிமைக்கும் தடைக்கல்லாக இருக்கும் பலவற்றில் அவர்களுக்கு மறுக்கப்படும் சொத்துரிமை முதலாவதாகும் என்று சொல்லுகின்றார்.

அவர் கூறும் திருமணம் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும் (Life Contract) அத்தகைய ஒப்பந்தம் ஓரளவுக்கு சமவயதொத்த இருவருக்குள், இருவரும் சமம் என்ற அடிப்படையில், கருத்தொருமித்து செய்து கொள்ளுதலை வலியுறுத்துகிறது. மேலும் கற்பும், நல்லொழுக்கமும் இருபாலருக்கும் பொதுவானதே யென்றும், அவையில்லா இடத்தும், இருவரில் ஒருவருக்கு நோய், குழந்தை பெறஇயலாமை போன்ற குறைகள் இருந்த இடத்தும், மனவேற்றுமை ஏற்பட்ட போதும், விவாகரத்து தயக்கமில்லாமல் செய்து கொள்ளலாம் என்று சொல்லுகின்றார் அவர்.

மறுவிவாகம், விதவைத்திருமணம்போன்றவைகளையும் சமுதாயம் அனுமதித்தால், ஆண்கள் பெண்களின் மீது செலுத்தும் ஆதிக்க வெறியும் பெண்ணை ஒரு படுக்கையறைப் பொருளாக (Bed-room commodity) நடத்திடும் இழி நிலையும் மாறி பெண்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கும் என்கின்றார் அவர்.

இவற்றால் இருபெரும் சிந்தனையாளர்கள், சமுதாயம் பெண்களுக்கு இழைத்திருக்கும் கொடுமைகளை எதிர்த்து, அவர்கள் விடுதலைப் பெறவேண்டும் என்ற ஒரு உயர்ந்த மனிதாபி

மானக் கருத்தைக் கொள்வதில் இனைந்தே இருந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

*கல்வி பற்றி*

அறிஞர் ரஸ்ஸல் அவர்கள் விஞ்ஞான ரீதியான கல்வியைத்தான் மாணவர்களுக்குப் புகட்டவேண்டும்; அதுதான் மனித வளர்ச்சிக்கு உதவும் என்பதை திட்டவட்டமாகச் சொல்கிறார். "கேள்வி ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விதான் தேவையானது. இத்தகு சூழ்நிலையில் மாணவர்கள் கோட்பாடுகளை நம்பாமல், உண்மை, ஆதாரங்களைத் தழுவிய கல்வியை மேற்கொள்வர். வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை நம்பாமல் ஆதாரங்களைப் போற்றும் சிறப்பானது மனித இனத்துக்கு விஞ்ஞானம் கண்ட ஒரு பெருஞ்சாதனையாகும்."

இதையேதான் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் கல்வி எத்தன்மையதாய் இருத்தல் அவசியம் என்பதை வலியுறுத்துகிறார். "கல்வி விஷயத்தில் நம் நாட்டு மக்களுக்கு இரண்டு முக்கிய விஷயம் கையாளப் படவேண்டியது அவசியம் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒன்று கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் ஏற்படவேண்டும், மற்றொன்று மேன்மையான வாழ்வுக்குத் தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்படவேண்டும்."

*அரசியல்பற்றி*

அரசியலைப்பற்றி அறிஞர் ரஸ்ஸல் அவர்கள், அது பொருவாரியான மனித சமூகத்திற்கு சேவை செய்திடும் நிறுவனமாக இருத்தல் வேண்டும்; குறுகிய நோக்கோடு செயலாற்றிடும் தற்போதைய அரசியலைப் பற்றி அவர், இத்தகைய அரசியலிலிருந்து பொதுஜன நன்மை, நீதி, நேர்மை—ஆகியவைகளை எதிர்பார்க்க முடியாது என்பதே அவரது முடிவான கருத்தாக இருந்தது.

பொதுவுடைமை, தனிச்சொத்துடைமை இவைகளின் நியாயமான தீமைகளிலிருந்து விடுபட்ட ஒரு அரசியல் அமைப்பே ஒரு நாட்டிற்குத் தேவை என்கின்றார் அவர்.

*அரசியல் வேறு சமுதாயம் வேறா?*

அறிஞர் ரஸ்ஸலைப் போன்றே பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், ஒட்டு மொத்தமான சமுதாய நன்மைக்காக இருக்க வேண்டிய அரசியல் அமைப்பு, நாணயம், நீதி அற்ற சுயநலவாதிகளால் களங்கப்படுத்தப்பட்டுள்ளது என்பதை கீழ்கண்டவாறு அறிவுறுத்துகின்றார். "அரசியல் என்று தனியாக ஒரு விஷயம் இல்லை; அரசியல் என்பது மக்கள் வாழ்வில் சுமத்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சேர்த்துக் கூறுவதுதான். அதாவது, சமுதாயம், பொருளாதாரம், கல்வி, வியாபாரம் கைத்தொழில், பகுத்தறிவு இன்னும் மற்றும் அனேக காரியங்களைக் கொண்டதுதான் அரசியல். ஆனால், இன்றையதினம் மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், அரசியல் என்பது வேறு, சமுதாயம் வேறு என நினைத்துக் கொண்டு, தனித்தனியாகப் பிரித்துப் பேசுகிறார்கள்.

"ஆகவே, சமுதாயம் வேறு, அரசியல் வேறு என்று நினைத்துக் கொண்டு பிரிப்பதன் காரணம் என்ன? அதாவது அரசியல் விஷயமாகப் பேசுவதாய் இருந்தால் அது 'பொலிடிகல்' என்றும், சமுதாய விஷயமாக இருந்தால் அது 'சோஷியல்' என்றும் பிரித்து மக்களுடைய சமுதாயத்துறை சீர்படுவதற்கு இல்லாமல் செய்வதற்காகவே செய்த ஒரு தந்திரம் இது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாட்டிலேதான் இப்படிச் சொல்லுகிறோமே தவிர வேறு எந்த நாட்டிலும் இப்படித்தனியாக பிரித்துக் கையாளுவது கிடையாது."

*சாதிபேதமற்ற சமுதாயம்*

மேலும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், அறிஞர் ரஸ்ஸல் அவர்கள் விரும்பியதைப் போலவே ஒரு அரசியல் அமைப்பை விரும்பினார். அதுதான் சாதி மதபேதமற்ற, ஏழ்மை, செல்வத்தேக்கம் அற்ற, பகுத்தறிவு போற்றும் ஒரு சமுதாயத்தைத் தரவல்லது என்பதே அவர் கருத்தாக இருந்தது.

*இருபெரும் அறிஞர்கள்*

இங்ஙனம், மனித சமுதாயம் அறியாமை இருளினின்றும் விடுதலை பெற, மனிதர்களாக நன்மக்களாக வாழ்ந்திட, தடையற்ற உயர்ந்த மனிதாபிமான வளர்ச்சிக்கு முக்கிய தேவை பகுத்தறிவுதான் என்று, அதனை சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக, கொள்கைப்பிடிப்புடன், பல எதிர்ப்புகளைக் கண்டு தளராது, உள்ள உறுதியுடன் போராடி தாம் பிறந்த பயனை அடைந்தனர் அறிஞர் ரஸ்ஸல் அவர்களும், பெரியார் ஈ.வெ.ரா. அவர்களும். அவர்கள் வாழ்ந்த காலத்திய சமுதாயத்திற்கும், வருங்கால சமுதாயத்திற்கும், விட்டுச் சென்ற சொத்து—உயர்ந்த கருத்துகள்; பணிகள் ஆகும்.





# தந்தை பெரியாரும் பெர்னாட்சாவும்

பாதாசம் எம்

[இக்கட்டுரை ஆசிரியர் முகவை மாவட்டம், காரைக்குடி நகரைச் சேர்ந்தவர். பொருளியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர். முல்லைச்சரம், தேன்துளி முதலிய இதழ்களில் கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். பல ஆய்வுரைகள் தந்தை பெரியார் பற்றி பெரியார் பகுத்தறிவு ஆய்வகத்தில் எழுதிக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.]

மாக்ஸ் மீர்போம் என்ற ஷாவின் சமகாலக் கேலிச் சித்திரக்காரனும், இலக்கிய திறனாய்வாளனும், ஷாவை சித்திரமாகத் தீட்டுகையில் ஷா அவர்கள் ஒரு சைத்தானை பாம்பாகச் சித்தரித்து கையில் சுற்றியிருப்பதாகவும், ஷா தலை கீழாக நின்று உலக விவகாரங்களை நோக்குவதுபோலும் படம் வரைந்து கேலி செய்தான். ஆனால், உண்மை என்னவென்றால், தலைகீழாக உலகம் இருப்பதால்தான் ஷாவும் உலகத்திற்குத் தலைகீழாகத் தெரிந்தார் என்பதே உண்மையாகும். இதுபோன்றே பெரியாரையும், "எதனையும் எதிர்க்கின்றார்! இவர் எதிர்ப்புவாதியே" என்று கூறுவோர் உண்டு. மாக்சு மீர்போம், ஷா அவர்களை இருவித ஷா என்றும், அயர்லாந்து விடுதலைக்கு அரசியலில் நுழைந்து, மேடையிற் பேசியும் எழுதியும் வந்த ஷாவும், இசைக்கலை திறனாய்வோன் ஷாவும் முதற்கட்டமான ஷா என்றும்,

பின்னர் 1900—1950 வரை அதாவது அவர் இறக்கும் வரை வாழ்ந்த ஷா, சோசலிஸ்ட் ஷா என்றும், சீர்திருத்த ஷா என்றும், பின்னவரையே நான் பாராட்டுகின்றேன் என்ற வகையில் படம் வரைந்து காட்டினார்.

இதுபோன்றே ஆரம்பகாலத்தில் இந்திய நாட்டு விடுதலைக்குழைத்த — கதர் சுமந்து விற்ற பெரியார், கள்ளுண்ணாமையைப் பரப்பிய பெரியார், உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட பெரியார், தம் மனைவியையும், சகோதரியையும் அரசியலில் ஈடுபடுத்திய பெரியாராகிய முதற்பெரியார் அரசியல்வாதி பெரியாரென்றும்,

சுயமரியாதைச் சிங்கமாக மாறிய இரண்டாம் நிலைப் பெரியாரே தம் சிந்தனையாலும் செயலாலும் உயர்ந்து நிற்கின்றார் என்றே

9

கருதுகின்றேன். ஏனெனில், இரண்டாம் நிலைப் பெரியாரில் அரசியல் உலகுக்கும் சிந்தனை உலகுக்கும் புரட்சிக் கருத்துக்கள் தந்ததோடு செயலாற்றியும் காண்பித்த பெருமை இருபதாம் நூற்றாண்டுக்குப் பின் அரை நூற்றாண்டு காலவரலாறு விளக்கும். திருவள்ளுவர் கூறிய முரண்பாடான—காலத்துக்கு ஒவ்வாத குறள்கள் பல உண்டு. இதனைப் பெரும்பாலும் தமிழறிஞர்கள் ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், பெரியார் அவர்களோ வள்ளுவரின் பெரும்பான்மையான குறள்கள் காலத்துக் கொவ்வாதவை என்று துணிந்து கூறி பல தமிழறிஞர்களின் கோபத்துக்கும் சாபத்துக்கும் கூட ஆளானார்கள். இக்குறள்கள்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி
தாழாது உஞற்றுபவர்"

என்ற குறள்,

"ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான்முந்துறும்" இவ்விரு குறளிலும் ஊழ்பற்றிய கருத்து முரண்பாடு உள்ளது. இம் முரண்பாடுகளுக்கு குறளில் தெளிவான இழைமுறியாத கருத் தோட்டம் இல்லை என்பதை பெரியார் அவர்கள் யாருக்கும் அஞ்சாது எடுத்துரைத்தார்கள். இவ்வகையே ஷா அவர்களும் உலகப் புகழ் நாடகாசிரியர் சேக்ஸ்பியர் அவர்களை, அவர் கல்லறையினின்றும் உயிர் பெற்று வந்தால் நான் கல்லாலடித்துக் கொல்லுவேன் என்றும், ஷேக்ஸ்பியர் கொள்கையில்லாதவன் என்றும் ஷா அவர்கள் ஷேக்ஸ்பியரை விமரிசித்தார்கள். ஆனால் (Ibsen) இப்சன் நாடகங்களையும் (Wagner) வாக்னரின் இசை நுணுக்கங்களையும் ஷா பாராட்டவே செய்தார். எனவே,

பிறரை ஏளனம் செய்வதற்காகவே ஷாவின் முழுத்திறமையும் செலவானது எனுங் கூற்று உண்மைக்குப் புறம்பான கூற்று.

ஷா அவர்கள் (Agnostic) கடவுளைப்பற்றி கவலைப்படாதவர் என்ற வகையிலும், பெரியார்அவர்கள் சிலைஉடைப்பாளர்(Iconoclast) என்று வர்ணிப்பதிலும் பெருமளவு உண்மையுண்டு. ஷா சர்ச்சுக்கு சென்றதில்லையாயினும் (Protestant) புராட்டெஸ்டண்டு பூயுரிட்டனிசத்துக்கு மில்டனைப் போன்ற தொரு மதத்தில் நம்பிக்கையிருந்தது என்பது, அவருடைய செயிண்ட்ஜோன்,(St. Joan),(Back to methu-sala) மறுபடியும் மெது சாலாவிற்கு,(Androcles and Lion) அண்ட்ராக்லிசும் சிங்கமும், சாத்தானின் மாணவன் (Deril's Disciple) என்ற நாடகங்களின் மூலம் தன்னை வெளிக் காட்டிக் கொள்ளுகின்றார்.

பெரியாரும் தன் வாழ்வின் தொடக்கத்தில் ஈரோட்டில் பல ஆலயங்கட்கு அறங்காவலராக இருந்தாலும் வாழ்வின் பிற்காலத்தில் இரண்டாவது பெரியாராக — அவர் தன்னை ஒரு சிலை உடைப்பாளர் (an Iconoclast) ஆகவே உலகுக்கு அறிமுகம் ஆக விரும்பினார். "கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்; கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி" என்று இதனை ஒவ்வொரு கூட்டத் துவக்கத்திலும் அறிவித்து வந்தார் என்பது ஈண்டு கருதத் தக்கது.

பெரியாரின் "சுயமரியாதை"ப் பண்பும் ஷாவின் 'தற்பெருமையும்' ஒப்புடைமை ஆவதைக் காண்க. அவருடைய தற்புகழ்ச்சிக்கு சிறு எடுத்துக் காட்டுகள்.

"உலகத்திலேயே இன்று பெரிய
மனிதர்கள் இருவர் இருக்கிறார்கள்
ஒருவர் நான் மற்றொருவர்
அய்ன்ஸ்டைன் என்றார்.

காந்தியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா மலருக்குக் கட்டுரை கேட்கப் பட்டபோது அதற்கு ஷா சுயமரியாதையோடு இறுத்தபதில்.

"மன்னிக்கவும், நான் எதற்காக காந்தியின் எழுபதாவது ஆண்டு நிறைவைக் குறித்து எழுதவேண்டும்? என்னுடைய எழுபதாவது ஆண்டு நிறைவின் போது அவர் என்னைப் பற்றி ஏதும் எழுதவில்லையே!"

ஷா நோபல் பரிசை முதலில் மறுத்தது போன்றே பெரியார் அவர்களும் தேடிவந்தப் பதவியையும் உதறித் தள்ளினார்.

பெர்னார்ட் ஷா பிறர் புகழ்ச்சிக்கு மசிய வில்லை. ஆனால், அவரால் நல்லது நடக்க வேண்டும் எனக் கருதிய ஒரு சீனநாட்டுக்காரர் இவருடைய பல் அழகைப் புகழ்ந்த போது, தன் பொய்ப்பல்லைக் கழட்டி வைத்து. 'இதனை இப்பொழுது புகழ்' என்றார். பெரியாரும் பிறர் புகழ்ச்சிக்குப் பணிந்ததில்லை. 'என்னைப் புகழ்கின்றவனைப்பற்றி நான் சந்தேகப் படுவேன்!' என்று வெளிப்படையாகச் சொன்னவர் பெரியார்.

தாழ்த்தப்பட்டவர்க்கும் பிற்படுத்தப் பட்டவர்க்கும் பெரியார் ஒளிவிளக்காக இருந்தது போன்றே ஷாவும் தன்னுடைய நாடகங்களுக்கு எழுதிய நீண்ட முன்னுரைகள்வாயிலாக வெளியிடுகின்றார். இவை பெரியாரின் பல பகுத்தறிவு சமூக சீர்திருத்த மாநாடுகளின் துவக்க உரைகளை நினைவுறுத்துவன. ஷா, சமூகப் போலி மூடத்தனங்களைக் கிழித்தெறிவதில் அசகாய சூரத்தனங்களைக் காண்பிக்கின்றார்.

எவ்வாறு சமூக விடுதலை பெறாத மக்களை எளிதில் உண்மையான விடுதலை உற்றவர்களாக ஆக்க எத்துணை இடர்ப்பாடுகள் உண்டு என்பதை உணர்ந்திருந்தார். எவ்வாறு சமூகத்தளைகள், குழந்தைமைச் சூழ்நிலைகள்; வளர்ப்பின் பழக்க வழக்க மனோநிலைகள் முன்னேற்றத் தடையாயுள்ளன என்பதை "Pigmalion" என்ற சமூக நாடகத்தில், (பின்னர் இது My Fair Lady) என்ற தலைப்பில் திரைப்படமாக வந்தது) ஒரு மொழியியல் பேராசிரியர் ஒரு தெருவோரத்துப் பூக்காரியை பாரம்பரியம் உள்ள பதவிசான பெண்ணாக நாகரிக நங்கையாக்கப் பாடுபட்டு சமூக ஏளனங்களுக்கு ஆளாகி இறுதியில் வெற்றி காணுகின்றார் என்பதை விளக்குகின்றார். சமூக சீர்திருத்தம் எவ்வளவு பெரிய இமாலய ஏற்றம் என்பதைக் காண்பிக்கின்றார். பெரியார் அவர்களின் வகுப்புரிமை வாதத்துக்கு ஷாவின் ("Pigmalion") 'பிக்மேலியன்' நாடகபாத்திரமான பூக்காரி 'டூலிட்டில்' ஒரு கருத்தாழங் கொண்ட எடுத்துக் காட்டு. இப்பூக்காரி பாத்திரம்வேலைக்காரியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டுகின்றவேலைக்காரிக்கு ஏற்படும் சமூக தளைகளை மற்றொரு கோணத்தில் நினைவுறுத்துவதாகக் கொள்ளலாம். ஷா இதனால் மக்கள் எவ்வள்வு பொருளாதார வசதி பெற்றாலும் சமூகச் சூழ்நிலையினாலும், மனநிலை வளர்ச்சியில்லாமையால் எவ்வாறு மக்கள் பின்னுக்குத் தள்ளப் படுகின்றார்கள் என்ற கருத்தினைத் தெள்ளத் தெளிவாக்கியிருக்கின்றார். இதுவே "ரிசர்வ் வங்கியில்" ரூ. 900 ஊதியம் பெறும் கழிவறை சுத்தித் தொழிலாளியின் குழந்தைகள் ஏன் படித்து முன்னேற முடியவில்லை என்ற கேள்விக்குரிய விடையாகிறது. பெரியாரைப் போல ஷாவும் தன்னுடைய 'பிக்மேலியன்' நாடகத்தில் பூக்காரி 'டூலிட்டில்' எவ்வாறு நாகரிக நாங்கையாக்கப் படுவதற்கு, சமுதாய வளர்ப்புச் சூழ்நிலைகள், குழந்தமையில் பெற்ற மனநிலைக் கோளாறுகள், வளர்ப்பு நிலைகள் எவ்வாறு தடையாக இருக்கின்றன என்று தெள்ளத் தெளிவாக்க் காட்டுகின்றார். இத்திறம் பெரியாரும், ஷாவும் கொண்டிருந்த சமுதாயப் புலனுணுக்கத்தினைத் தெள்ளத் தெளிவாக்குகின்றது.

மற்றும் ஆண்கள் பெண்களை விரும்பி மணஞ்செய்யுமுகத்தான் அவர்களை தந்திரமாகத் துரத்திப்பிடிப்பதே உலக இலக்கியங்களில் காட்டப்படும் மிகச் சாதாரண காதல் கலையாகும். ஆனால், பேரறிஞர் ஷா அவர்கள் தன்னுடைய மனிதனும் மாமனிதனும் (Man and Superman) என்ற நாடகத்தில், ஒரு தொழிலதிபரான தந்தையை இழந்த பணக்கார மாது (Ann Whitefield) எப்படி ஒரு ஒழுக்கமுள்ள வாலிபனை வலையில் ஆழ்த்தி, ஒரு பெண் சிலந்தி எப்படி ஆண்சிலந்தியை வலைக்குள் வீழ்த்துகின்றதோ அவ்வாறே கதாநாயகன் "டான்னரை" இக்கட்டுக்கு ஆளாக்கி—அன்பு வலைக்காளாக்கி, வேறு வழி இல்லை என்ற நிலைக்காளாக்கி மண மேடைக்கு அழைக்கின்றாள் என்பதை வெகு லாவகமாக தனக்கேயுரிய தத்துவக் கருத்துக்களை விரித்துப் பரப்பி நகைச்சுவையோடு சமூக சிந்தனைக்கு வழிவகுக்கின்றார். இதில் பெரியாரின் பெண்ணுரிமைக் கொள்கை எவ்வாறு தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிற என்பது உய்த்துணர்க.

தமிழ் மொழிச் சீர்திருத்தங் கருதி எழுத்துச் சீர்திருத்தஞ்செய்தார் பெரியார். இது போன்றே ஷா அவர்களும் ஆங்கிலமொழியை உச்சரிப்புக் கேற்றவகையில் சீர்திருத்தம் செய்தார்.

பெரியார் கொள்கையளவில் பார்ப்பன எதிரியாகத் தான் விளம்பரம் பெற்றிருப்பது தெரிந்தும் தான் தனி மனிதன் என்ற அளவில் மனிதத் தன்மையோடு 'பார்ப்பனீய' எதிரி என்றும் சொல்லியதோடன்றி பார்ப்பனீய பிதாமகர் இராசாசி அவர்களுடனும் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்கள். பேரறிஞர் ஷா அவர்களும் ஆங்கிலேயர்களை வணிகர்கள்—வஞ்சகர்கள் என்று தாக்கினும் H. G. Wells, Winston Churchill, Bertrand Russell Sydney and Weble போன்ற ஆங்கிலேயர்களுடன் நெருங்கிய தொடர்பினை "Fabian Society" மூலம் கொண்டிருந்தார் என்பது தெரிய வருகின்றது.

பெரியார் திராவிட விடுதலை இயக்கத்தை ஆரம்பித்ததுபோன்றே 'ஷா' அவர்களும், அயர்லாந்து விடுதலையை 'பலாத்காரமாக' பிரிட்டனிடமிருந்து பெறுதல் வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தார்.

ஏழைமை, வறுமையே குற்றம் புரிய ஒரு காரணமாகின்றது என்றும், தொழிலாளிகளை ஏழ்மையில் வைத்திருந்தால் தன்னுடைய முதலுக்கு ஆபத்து என்று முதலாளிகள் கருதுவதாயும், எனவே முதலாளித்துவத்தை அழிவினின்றும் காக்கவே அவர்கள் 'பலிகடாவை' கொழுக்க வைக்க உணவிடுவது போல தொழிலாளிகளுக்கு வசதி செய்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கின்றார்.

இதனையே பெரியார் அவர்கள் தொழிலாளி சமூகம், சமூக விடுதலையடைய சாதி ஒழிப்பு, மதநம்பிக்கை ஒழிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு உழைத்தால் தான் ஒன்றுபட்டு சமதர்ம சமுதாயத்தை அடைய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

'ஷா' அவர்கள், பெண் இயல்பாக விரைவாக திருமண வலை விரிக்கின்றாள் என்றும் ஆண் வலையில் விழக் காலங் கடத்துகின்றான் என்பதையும், பெரியார் அவர்கள், பெண்களின் திருமண குறைந்தபட்ச வயது வரம்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலை. குடும்பக் கட்டுப்பாட்டுக்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் எத்துணை வலுவேற்றும் என்பது வெள்ளிடைமலை. மேலும், ஆணும் பெண்ணும் படிப்பை முடித்து காலங் கழித்து திருமணஞ் செய்தால் நாட்டு வளத்துக்கும், மக்கட் தொகை குறைப்புக்கும் ஏதுவாகும். இதுபோன்ற முற்போக்கு கருத்துக்களில் 'ஷா' மிக்க உடன்பாடாகவே இருந்திருக்கின்றார். சீனத்தைப்போல பெண்களும் ஆண்களும் ஒரே மாதிரி (Unsex dress) உடை உடுத்தவேண்டும் என்று பெரியார் அவர்கள் கொண்டிருந்த கருத்து பேரறிஞர் ஷா அவர்கள் ஆண்-பெண் பால் வேற்றுமை புறத் தோற்றத்திலாவது பெருமளவு குறைக்கப்படவேண்டுமென்பதில் பெரிதும் உடன்பாடு கொண்டவராயிருந்தார்.

குழந்தை வளர்ப்புக் குறித்து, குறிப்பிட்ட வயது வரை குழந்தைகள் அரசின் பாதுகாப்பில் இருக்கவேண்டும் என்னும் பெரியார் கருத்து சாதிமத ஒழிப்புக்குப் பெரிதும் துணை நிற்கும் சமுதாய நீதிக் கருத்தாகும்.

பேரறிஞர் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் அவர்களும் இது குறித்து, சமுதாயக் குழந்தை வளர்ப்புப் பள்ளிகள் மனோசக்தியை வளர்ப்பனவாக இருக்க வேண்டுமன்றி கட்டுப்பாடுகளையும், வீண் பயங்களையும் வளர்ப்பனவாக இருத்தல் கூடாது எனக் கருத்துத் தெரிவித்

திருத்தல் அறிவுலகம் அறிந்ததொன்றாகும். பெர்னார்ட் ஷா அவர்களும், குழந்தைகள் மனோ நிலை வளர்ச்சிக்கேற்ப வளர்க்கப் படுதல் வேண்டுமெனக் கருத்துத் தெரிவித் துள்ளார்கள்.

எனவே, தந்தை பெரியார் அவர்களும், பெர்னார்ட் ஷா அவர்களும்,

சமுதாய, பொருளாதாரக் கருத்துக்களால் ஏறக்குறைய சமகாலத்தவராகி, தாடி வளர்த் தமையால் மட்டுமன்றி, கைத்தடி வைத் திருந்தமையால் மட்டுமன்றி, அய்ரிஷ், திராவிட விடுதலைக்குப் பாடுபட்டதாலன்றி, 90 ஆண்டு கட்கு மேல் வாழ்ந்ததால் மட்டுமன்றி, மற்ற வகை சிந்தனைகளிலும், பெண் விடுதலைக்கு உழைத்ததாலன்றி, கையெழுத்துக்குப் பணம் வாங்கியதால் அன்றி—இருவரும் பல வகையிலும் ஒன்றுபடுகின்றனர்.

மேலும், பேரறிஞர் பெரியார் அவர்கள் கையெழுத்து வேட்டைக்காரர்களிடம் பணம் பெற்றும், எடைக்கு எடை பொருள், பணம் பெற்றும் தம் வாழ்நாள் முழுதும் சிக்கனக் காரர் என்று 'பழிப்புக்கு' ஆளாக நேர்ந்தும் தான் பாடுபட்டுச் சேர்த்த சொத்துக் களை சமுதாய விடுதலை இயக்கத்துக்கே எழுதிவைத்துச் சென்றிருக்கின்ற பாங்கு, பேரறிஞர் ஷா அவர்கள் தனக்கு 19வது வயதில் அளிக்கப்பட்ட நோபல் பரிசினின்றும் கிடைத்த பணத்தை முதலில் பெற மறுத்தும் பின்னர் பொது நோக்கிற்காகப் பெற்று கடைசியில் இலக்கிய வளர்ச்சிக்காக கொடை அளித்து, கலை வள்ளலாக ஆகியிருப்பது ஒப்புமை அமைந்திட்ட ஒன்றாகும்.

எனவே, இவ்விருபதாம் நூற்றாண்டின் காலைக்கதிரவனான பெர்னார்டு ஷாவும், இவ்விருபதாம் நூற்றாண்டின் முற்பகலில் அரசியல் வானில் உதித்து பிற்பகலிலும் நள்ளிரவிலும் சமூக வானில் எப்பொழுதுமே ஒளிர்ந்து இந்திய நாட்டை மட்டுமன்றி சிந்தனை உலகுக்கே ஒளி தந்து மாபெரும் தந்தையாகி விளங்கிவரும் பெரியார் அவர்களும் இருபதாம் நூற்றாண்டின் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் என்றும், சிந்தனைத் தந்தையர் என்றும் அழைப்பதில் தவறேதும் இல்லை.

எதிர்காலத்தைப்பற்றிய இந்த நம்பிக்கை யிலேயே, இந்த நல்லவர்களாலேயே உலகம் ஓடுகின்றது என்று நாமும் சங்கத்துச் சான்றோ ருடன் ''உண்டாலம்ம இவ்வுலகம்'' என்று பாடத் தொடங்குவோம்; ஒப்புரவுக் கொள்கை உலகெங்கும் மலர்க! செயலாக்கம் பெருக! பெரியாரிசம் பேருலகம் எங்கும் பரவுக! *

## பெரியார் நூலகம்-ஆய்வகம்

கடந்த பெரியாராண்டில் ஒரு புள்ளி விவரம்

வாசகர் வருகை: 17,000.

பெரியார் நினைவுச் சொற்பொழிவு: பேராசிரியர் ந. இராமநாதன் அவர் களின் மூன்று ஆய்வு சொற்பொழிவுகள்—''பெரியார் பேருரையாளர்'' விருது வழங்குதல்.

வாசகர் வட்டக் கூட்டங்கள் 35. பொதுச்செயலாளரின் மலேசிய பயண உரை, இராவண காவியத் தொடர் சொற்பொழிவு, பாரதிதாசன் நோக்கில் கலை (எழுத்துரை).

ஆராய்ச்சியாளர்கள்: P. இராசாராமன் — நீதிக்கட்சி, R. ரவிச் சந்திரன்—திராவிடர் கழகம்-அரசியல் நோக்கு, K. L. கருப்புசாமி—பெரியார் ஈ.வெ.ரா.வும் சீர்திருத்த இயக்கமும், A. தங்கராஜ்—தமிழ்நாட்டு அரசியலில் மொழிப் பிரச்னை, பார்க்மிகைண்டி (அமெரிக்கா)—இந்து மதம்பற்றி இந்திய விமர்சகர்கள், அ. முத்துசாமி—பெரியாரின் அரசியல் கொள்கைகள், M. கலாமணி—பெரியாரின் இயக்கங்கள், ஆஞ்சலோ ரிச்சர்ட்—பெரியாரின் மொழிக் கோட்பாடு, எம்.எஸ்.ஏ. ராவ்—பெரியாரின் பகுத்தறிவு இயக்கம், டாக்மர் ஹெல்மன் (மேற்கு ஜெர்மனி)—தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தி.க. - தி.மு.க.வின் பணி, சக்குபாய் நெடுஞ்செழியன்—பெரியாரின் இலக்கிய நோக்கு, சே. இராஜேந்திரன்—தமிழ் இலக்கியத்தில் திராவிட இயக்கத்தின் தாக்கம், R. K. சாமிநாதன்—விவசாய பாட்டாளிகளிடம் திராவிடர் கழகத் தாக்கம். பி. எஸ். சந்திரபாபு—சுயமரியாதை இயக்கம் தழுவிய எதிர்ப்புகளும் அதன் விளைவு களும், ந. க. மங்கள முருகேசன்—தமிழகத்தில் திராவிடர் கழகத்தின் சாதனைகளும் அதன் விளைவுகளும்.






[இக்கட்டுரையாளர் விருத்தாசலம் அருகிலுள்ள தே. புடையூர் கிராமத்தைச் சேர்ந்த மொட்டையன்—செல்லம்மாள் ஆகியோரின் புதல்வர் ஆவார். 'பாவேந்தர்—புரட்சிப் பாடல்கள்'—என்னும் தலைப்பில் விமர்சன கட்டுரையும், ''சென்னை மேல்நிலைப் பள்ளிகளின் நூலக வசதி'' எனும் ஆய்வுரையும் எழுதியுள்ளார்.]

பெரியாரும் அம்பேத்காரும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள். இருள் மடிந்த இந்தியா வில் புத்தருக்குப் பின் பிறந்த இரட்டைக் குழந்தைகள்.

புத்தரை, புத்த மார்க்கத்தை ஒழித்து விட்டோம். இனி சித்தார்த்தனோ புத்தனோ இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறக்க மாட்டான் என்று இறுமாந்திருந்த பார்ப்பன பனியாக் கூட்டம் மிரண்டோட சம காலத்தில் பிறந்து; பார்ப்பனீயத்தை முடிந்த அளவு சம்காரம் செய்தவர்கள் பெரியாரும் அம்பேத் காரும் ஆவர்.

இந்தியாவில் சாதியை ஒழித்தாக வேண் டும். வர்க்க வேற்றுமையையும் ஒழித்தாக வேண்டும். மேலை நாடுகளில், இந்தியா வைத் தவிர்த்த எந்த நாட்டிலும்; உழைப்பை சுரண்டுபவனும் ஆளும் வர்க்கத்தால் சுரண்டப் படுவோரும் இரண்டே வர்க்கம்தான் இருந்தது. அதாவது வர்க்க பேதமற்ற ஆட்சியை அமைக் கும் ஒரே பிரச்சினைதான் இருந்தது அங்கே.

### மனப்பான்மையும் சூழ்நிலையும்

இங்கே இந்தியாவில் உழைப்பு சுரண்ட லோடு சிந்தனை சுரண்டலும் சாதி அமைப்பும் இருக்கின்றன. தாழ்வு மனப்பான்மை ஒரு சாதிக்கு பாரம்பரிய சொத்தா? என்று கிளர்ந் தெழுந்தவர் அம்பேத்கார். சூழ்நிலை எந்த மனிதனையும் உயர்வு நிலைக்குத் தள்ளும்; அந்தச் சூழ்நிலையை அரசு அமைத்துத் தர வேண்டுமென்று சொன்னவர் பெரியார்.

இந்தியாவில் சமதர்மம் கொண்டுவர ஒரு மார்க்ஸ், ஒரு லெனின் போதாது. பெண் அடிமைத் தனமும் பெண்ணுக்கு சொத்துரிமை இல்லாததையும் புத்தருக்குப் பின் பெரியாரும், அம்பேத்காரும்தான் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே இங்கே இரண்டு புத்தர்கள் தேவைப் பட்டார்கள்.

இந்தியாவில் ''எதிர்ப் புரட்சி வாதம், இந்துமதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டது. ஆகவே அய்யாவும், அம்பேத்காரும் புத்தர் வாரிசுகளானார்கள்.''

பெரியார் என்றால், விநாயகர் சிலையை உடைத்தவர், ராமன் படத்தைக் கொளுத்திய வர், காந்தியைத் திட்டியவர், சுதந்திரம் என்பது வெள்ளையனுக்குப் பதில் கொள்ளை யன் அரசு-அதிகார பரிமாற்றம்தான் என்றவர், நாட்டுப்பற்றில்லாதவர் மற்றும் ஓட்டு முறையை சூதாட்டம் என்றவர், ஜனநாயக நம்பிக்கை விரோதி, பார்ப்பன எதிரி என்பது தான் எதிரிகளின் கூக்குரல். இதில் எள்ளளவும் குறையாமல் அம்பேத்காரையும் இப்படித்தான் சொன்னார்கள். அம்பேத்கார் என்றால் இந்து மத விரோதி, புத்த மதத்துக்காரர், அரிசன் என்பது வேண்டாம் 'அய்யோக்கிய அரி பக வானின் பிள்ளைகளா நாங்கள்? என்று கேட்ட வர், காந்தியை ஒரு பிற்போக்குப் பிண்டம் என்றவர், சுயராஜ்யத்தையே ஒரு புது அடிமை

முறை என்றவர்—என்றெல்லாம் குறைபட்டுக் கொண்டார்கள், நம் சமூக ஏகாதிபத்திய இந்தியத் தரகர்கள்.

*ஒரே கருத்துகள்*

கொள்கை ரீதியில் பெரியாரும் அம்பேத்காரும் இரட்டையர்கள்தான் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சூத்திரன் என்றால் அடிமைகள், ஒடுக்கப்பட்ட தொழிலாளிகள்தான். அவர்களை ஒன்று சேர்க்க அம்பேத்கார் மூன்று தாரக மந்திரங்களை வைத்தார். ''கற்பி'' ''ஒன்று சேர்'' ''போராடு'' என்பதுதான் அம்பேத்கார் போதனை. சிந்தி - பகுத்தறிவோடு சிந்தி; செயல்படு—தன்மானத்தோடு சுயமரியாதையோடு செயல்படு'' என்றவர் பெரியார்.

பெரியார் சொன்ன புலன் காட்சி தத்துவம்; பஞ்சேந்திரிய திரிகாணங்களுக்கு புலப்படக் கூடியதே 'உண்மை!' என்ற மெய்மையை, நாத்திகம் பேசலாமா? என்று சீறி விழுந்த அதே உண்டைச் சோற்றுக் கூட்டம்தான், அம்பேத்கார் சொன்ன புத்தமத விளக்கத்தையும் அதாவது புத்த தர்மம் மதமன்று; புத்தநெறி! புத்தர் பாதை!! ''நான் ஒரு இந்துவாக சாக மாட்டேன்'' என்று சூளுரை ஏற்றதை வைத்துக் கொண்டு அம்பேத்காரை அந்நிய மதத்தின் ஏஜெண்ட் என்றனர். பகவத் கீதைப் பாணியில் பதில் பதிலாய் உளறிக் கொட்டினார்கள் இந்து சனாதனிகள். பெரியார் சொன்னார், கடவுள், மதம், ஜனநாயகம் மூன்றையும் மூன்று பேய்கள் என்று! அம்பேத்கார், 'கடவுள் உண்டு என்பவனை முட்டாள்' என்று நேரடியாக சொல்லாவிட்டாலும், ஆபாச இந்து மதக் கடவுள்களை வணங்குபவனைக் காட்டுமிராண்டி என்று பல இடங்களில் வர்ணித்திருக்கிறார்.

பத்திரிகைகளெல்லாம் பணப் படுக்கையையே குறிக்கோளாகக் கொண்டு, தரகு முதலாளித்துவ வேலையை செய்து கொண்டிருந்தபோதுதான் பெரியார் 'குடிஅரசு' ''விடுதலை''யை நடத்தினார். கனல் கக்கும் எழுத்து நடையில் 'மூக் நாயக்' குதிரை வீரன் அல்லது ''ஊமையர் தலைவன்'' என்ற பத்திரிகையை அம்பேத்கார் நடத்தினார். அம்பேத்கார் லட்சக்கணக்கானப் புத்தகங்களை சேர்த்து வைத்து அதை ஒரு நூலகமாக்கி சித்தார்த்தா கல்லூரி நூலகமாக்கி சித்தார்த்தா கல்லூரி நூலக வளர்ச்சியில் உறுதுணையாக இருந்தார். பெரியார் தன் 'விடுதலை' 'உண்மை' போன்ற பத்திரிகைகள் காலா காலமும் வெளிவர பெரியார் தக்க ஏற்பாடுகள் செய்துவைத்துள்ளார். ராஜாஜி போன்ற பார்ப்பனர்கள் என்னதான் உயிர் நண்பர்களாக இருந்தாலும், பார்ப்பனீயம் தேசிய சீர்திருத்த வாதங்களை வெளிக்காட்டிக்கொண்டு; எப்பொழுது வந்தாலும் அவர்களுடைய உள்ளுணர்வு என்ன என்று நாடியைப் பிடித்துப் பார்த்தவர், சற்று அவர்களிடமிருந்து ஒதுங்கிக் கொண்டவர் தந்தை பெரியார் என்பது வெள்ளிடை மலை.

ஆனால், அம்பேத்கார் அவர்கள் ''சூத்திரன் யார்? அவர்கள் நான்காம் சாதியானது எப்படி? என்ற நூலில் பார்ப்பனீய சூழ்ச்சியை பல வழிகளில் படம்பிடித்துக் காட்டி, ஒதுங்கினாலும் எப்படியோ வலை போட்டு தேடி சிக்க வைத்துவிட்டார்கள். சாரதா தேவியை மணம் முடித்ததிலும், நேரு அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்தபோது பார்ப்பனீயத்தால் அலைக் கழிக்கப்பட்டதில் கொஞ்சம் உண்மை இருந்தாலும்; பார்ப்பன மூளைகளெல்லாம் பதறித்துடிக்க தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை சட்டத்தில் சேர்த்து சாதிக்க முடியாத சாதனையை அம்பேத்கார் செய்தார்.

*கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணித்தவர்*

அம்பேத்கார் அவர்களைப் போல் சமுதாய சிற்பி யாராக இருந்தாலும் துன்பத்தைத் தாங்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும். வறுமை வாட்டும்போது; கப்பலில் ஏற்றிவிட்ட புத்தகத்தின் இழப்பிற்காகக் கொடுத்த பணத்தில் கொஞ்சநாள் வாழ்க்கையை நடத்தினார். விடிவதற்குள் நாற்றமடிக்கும் மீன் மார்க்கட் மேடையில் திருமணம் செய்துகொள்ளும் அளவு வறுமையில் சிக்கியவர் அம்பேத்கார். ஆனால் பெரியார் துறவறம் பூண்டதால் பிச்சை எடுத்தாரே தவிர வறுமை அவ்வளவு தூரம் வாட்டவில்லை. இருவரும் தங்களுக்குக் கிடைத்த பணமுடிப்பை கல்வி மேம்பாட்டுக்காகக் கொடுத்தார்கள் என்பதில் சமமானவர்கள்தானே!

பெரியார் ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்தபோது தாக்க வந்தவனை தலை குனிந்து போகச் செய்ததைப் போல், அம்பேத்காரும் தன்னை கத்தியால் குத்த வந்தவனை மன்னித்து உன் பிள்ளைக்காகத்தானப்பா சலுகை கேட்கிறேன் என்று விளக்கி; தலைகுனிந்துப் போகச் செய்தார்.

எந்தப் புரட்சியாளனும் வாயால் வெறுமனே உபதேசம் செய்துவிட்டு சும்மா இருக்க மாட்டான். பெரியாரும் அம்பேத்காரும் தளநாயகர்களாக தங்கள் தங்கள் இயக்கங்களின் முன்னணிப் படைவீரர்களாக இருந்திருக்கிறார்கள். இந்தி எதிர்ப்புப் போரிலும், இந்துக் கடவுள் சிலை உடைப்புப் போராட்டங்களிலும் வைக்கம் போராட்டத்திலும் கவசப் படைப் போர் வீரனாக இருந்தார் பெரியார். அது போல் அம்பேத்காரும் சவுதார் குளத்துத் தண்ணீர் எடுக்கும் போராட்டத்திலும், நாசிக் நகரத்திலுள்ள கலாராம் கோயில் மதில் சுவர்களிலேயே போர் வீரர்களை விட்டுப் பிரியாமல் 27 நாட்கள் தங்கியிருந்தார். தேர் இழுக்கும் விழாவை நேர்கொண்டு தாக்கி விரட்டி அடித்தார்.

பகைவர்களால் தொல்லை அனுபவித்தது, அஞ்சாமை, இடை விடா உழைப்பு, கொள்கை உறுதி போன்றவைகளில் இருவரும் ஒரே நிலையில் தள்ளப்பட்டவர்கள்!

| வருடம் | பெரியார் | அம்பேத்கார் |
|---|---|---|
| 1927 | சைமன் கமிஷனை வரவேற்க வேண்டுமென்றார் | வகுப்பறையிலிருந்து வெளியேறி சைமன் கமிஷனை வரவேற்றார். |
| 1932 | அய்ரோப்பா சுற்றுப் பயணம் | வட்ட மேஜை மாநாடும், வகுப்புத் தீர்ப்பு வாங்கி வந்ததும். |
| 1943 | ஜின்னாவையும் அம்பேத்காரையும் சந்தித்தது | பெரியாரையும் ஜின்னாவையும் சந்தித்தது. |
| 1954 | புத்தர் மாநாட்டுக்கு பர்மா சென்றது. | அம்பேத்காரும் சேர்ந்து அழைக்கப்பட்டார். |

தானாக வந்த பதவியை பெரியார் எட்டி உதைத்தார். அப்படியே அம்பேத்காரும் சட்ட அமைச்சர் பதவியை திடீரென்று வீசி சுழற்றி எறிந்துவிட்டு வெளியே வந்தார்.

*சலுகையா? உரிமையா?*

பெரியாரும் அம்பேத்காரும் பிற்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிச்சைக்காரத்தனமான சலுகையை மட்டும் கேட்டவர்கள் என்ற எண்ணத்தில் ஆட்சியில் இருப்போர் நினைக்கலாம். பெரியார் சொன்னது: 97 பேர் உரிமையைப் பறித்து வைத்துக் கொண்டு 3 பேர் சலுகையை வேண்டும் என்று கெஞ்சினால் தருவோம்



என்பது எவ்வளவு கொடுமை என்பதுதான். யாருக்கு யார் சலுகை அளிக்க வேண்டுமென்று வரைமுறை இல்லையா? என்று கேட்டார்.

இதையேதான் அம்பேத்காரும் கேட்டார், ''உரிமையைப் பறித்தவனிடம் கெஞ்சி பெற முடியாது. இடைவிடா போராட்டத்தின் மூலம் தான் உரிமையைப் பெற முடியுமென்று.''

நூற்றொகை

1. 'வரலாற்று நாயகனுக்கு வரலாற்றில் இடமில்லை'
—பி. தங்கராசு எம்.ஏ.
2. ''அம்பேத்காரும் பூனா ஒப்பந்தமும்''
—எம். கந்தசாமி பி.ஏ.,பி.லிப்.
3. 'சூத்திரன் யார்? நான்காம் சாதியானது எப்படி?' —அண்ணல் அம்பேத்கார்
4. 'அறிஞர் அம்பேத்காரும் அவர் இயக்கமும்' —தனஞ்சே கீர்
5. 'காங்கிரசும் காந்தியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்ததென்ன?'
—அண்ணல் அம்பேத்கார்
6. 'இந்தியாவில் பெண்ணடிமை'
—அம்பேத்கார்
7. 'புத்தரும் காரல் மார்க்சும்'
—அம்பேத்கார்
8. 'தமிழர் தலைவர்'-சாமிசிதம்பரனார் *



# போராட்ட வீரர்!

கவியரசு முடியரசன்.

போராட்டக் களங்கண்ட வீரர்—பாரில்
பொதுவான சமுதாய அறங்கண்ட சூரர் —போராட்டக்

ஈரோட்டுத் தலந்தந்த பிள்ளை—எங்கள்
எழுச்சிக்கும் தன்மான உரைச்சிக்கும் தந்தை
வேரோட்ட முடியாமல் வேதம்—வேரை
வெட்டிப் பறித்துச் சிதைத்துப் புதைத்தார் —போராட்டக்

தீண்டாமை பின்னின் றிமுக்கும்—மாந்தர்
தெருவுக்குள் நடமாட முடியாத வைக்கம்
ஆண்டோடி நேராகச் சென்றார்—சாதி
ஆணவப் போருக்குள் போராடி வென்றார் —போராட்டக்

தேசியம் என்றிங்குக் கூறி—இந்தி
தேவையென் றோதினர் ஆட்சியில் ஏறிப்
பேசிய வாதத்தைச் சாடி—இந்தி
பின்னிட்டுச் சென்றோடக் களங்கண்டார் நாடிப்
—போராட்டக்

கலைகற்க உண்டிங்குச் சாதி—நின்று
கைகட்டிப் பணிசெய்ய உண்டிங்குச்சாதி
நிலைமுற்றும் அடியோடு மாறிக்—கல்வி
நீரெங்கும் பாய்ந்தோடக் களங்கண்டார் மோதிப்
—போராட்டக்

கற்பனைக் கோட்டைக்குள் சாமி—பொய்கள்
கட்டிக் கதைக்கப் படித்தஆ சாமி
விற்பனைப் பாட்டுக்குள் பூமி—கெட்டு
வீழாமற் காத்தவர் ஈ. வெ. ரா. சாமி —போராட்டக்

வேத புராணங்கள் கோடி—மக்கள்
வீரத்தை மானத்தை மூடினர் பாடி
யாதென்று காரணம் நாடி—வீரம்
யாவையும் மீட்டவர் வெண்ணிறத் தாடி
—போராட்டக்

ஏடாண்ட பொய்யைப் படித்து—வாழ்வில்
ஏமாளி யாகினர் நாட்டைக் கொடுத்து
பீடாண்டு வந்தவழி மாந்தர்—பாழும்
போதைத் தனத்தைப் பிடித்துத் தடுக்கப் —போராட்டக்

நாடாண்டு வந்ததமிழ் மகனே—நீயோ
நாணிக்கு னிந்துடலம் கூணிக்கி டந்தாய்?
கூடாண்டு வந்தபுலி மறவா—முரசம்
கொட்டடா கொட்டடா என்றுகளங் கண்டார் —போராட்டக்







# தந்தை பெரியாரின் பயணக் கட்டுரைகள்

தந்தை பெரியார் அவர்கள் 13-12-1931 முதல் 11-11-1932 வரை அய்ரோப்பா கண்டம், ரஷ்யா மற்றும் பல நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார்கள். அவ்வமயம் ஈஜிப்ட், கெய்ரோ ஆகிய இடங்களிலிருந்து தமது சுற்றுப்பயணத்தைப் பற்றி எழுதிய கட்டுரைகள் இவை. அய்ம்பது ஆண்டுகளுக்கு முன் அய்யா எழுதிய சுவையான பயணக் கட்டுரை அவரது எழுத்தாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு மட்டுமல்ல; பயணக் கட்டுரை எழுதுவதற்கு ஒரு சிறந்த முன்னோடியாகவும் திகழ்கிறார்.

—ஆ-ர்.

சூயஸ் துறைமுகத்தில் ஒரு பெரிய கப்பலை 23-12-1931 தேதியில் நாங்கள் பார்த்தோம். அதன் பெயர் 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' (Empress of Britain). நேற்றைக்கு முந்திய தினம் கனடியன் பசிபிக் ரெயில்வே கம்பெனியாரால் அக்கப்பலின் மேல் தளத்தில் ஒரு விருந்து கொடுக்கப்பட்டது. அது சமயம் மேன்மை தங்கிய பிரதம மந்திரி அவர்களும், மேன்மை தங்கிய ஹை கமிஷனர் அவர்களும் பிரதம விருந்தினராய் இருந்தனர். மேற்படி கப்பலைப்பற்றிய சில ருசிகரமான விவரங்கள் கீழ்வருமாறு:

உலகத்திலேயே அதிசயமானதும், பெரியதும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு பெருமை தரக் கூடியதுமான கனடியன்—பசிபிக் போக்குவரவு கப்பலான 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' என்ற இந்தக்கப்பலைத் தவிர, வேறு ஒன்றையும் கூறமுடியாது. பிரிட்டிஷார் கடல் வியாபாரத்தில் மிகவும் கியாதி வாய்ந்தவர்கள் என்ற பரம்பரைப் புகழை இந்த அதி உன்னதக் கப்பல் ஒருபடி அதிகம் உயர்த்தி இருக்கிறதென்றே சொல்லலாம்.

ஈஜிப்ட் கூடாரம்

*42,500 டன் எடையுள்ளது*

இது 800 அடி நீளமும், 100 அடி அகலமும் உள்ளது. மணி 1க்கு 20 மைல் வேகம் போகக் கூடியது; மொத்தம் 42,500 டன் எடையுள்ளது; பிரகாசமான வெள்ளை வர்ணத்தால் பூசப்பட்டும், மேல்தட்டின் பகுதிகளில் நீல நிறப் பட்டைகள் அழகாகத் தீட்டப்பட்டும், இதனை ஊடுருவிச் செல்லும் மூன்று பெரிய புகைபோக்கிகள் பழுப்பு நிறத்தோடும் திகழ்வது என்னைக் கவரத்தக்க காட்சியாகும். அதன் அடிப்பக்கத்தில் தீட்டப்பெற்றுள்ள பச்சை நிறப் பட்டைகள் அட்லாண்டிக் சமுத்திரத்தின் அலைகளின் நிறத்தைத் தோற்கடிப்பனவாய் இருக்கின்றன. மேல் தளத்திலிருந்து சுமார் 208 அடி உயரத்தில் பறக்கும் கொடிகளும், கப்பல் அசையும்போது காற்றினால் அலைக்கப்பட்ட அக்கொடிகள் அசையும் கம்பீரமும், தூரத்திலிருந்து காண்போருக்கு ஓர் மிகப் பெரிய, உன்னத, நவீன இராஜ மாளிகையே தண்ணீரில் மிதப்பதுபோல் தோன்றும். 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' முதல் வகுப்பும் பிரயாணிகள் மூன்றாம் வகுப்பு அறையும் உடையதாயிருக்கிறது. இதை உண்டாக்கும்போதே ஒன்று மட்டும் முக்கியமாய்க் கவனிக்கப்பட்டது. அதாவது, மற்ற எந்தக் கப்பலிலும் இல்லாத மாதிரி ஒவ்வொரு பிரயாணிக்கும் அதிகமான இட வசதி அளிக்கத்தக்கதாய் இருக்கவேண்டுமென்பதே. மற்ற அதிக எடையுள்ள கப்பல்களைக் காட்டிலும் இதில் குறைந்த பிரயாணி

களே இருக்கக்கூடியதாய் இருக்கிறது. சுமார் 1195 பிரயாணிகள் மட்டும் இதிலிருக்கலாம். ஆனால், கப்பல் மாலுமிகள் 714 பேர் இருக்கிறார்கள்.

பிரயாணிகளது உபயோகத்திற்காக 9 தட்டுகள் விடப்பட்டிருக்கின்றன. சலூன் பிரயாணிகள் உபயோகத்திற்காக 11 பொது அறைகளும், ஒரு சிசு போஷண சாலையும், யாத்திரீகர்களுக்கு 3 பொது அறையும், ஒரு சிசு போஷண சாலையும், 3ம் வகுப்புப் பிரயாணிகளுக்கு 2 பொது அறைகளும் ஒரு சிசு போஷண சாலையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### பிரயாணிகளின் சவுகரியத்துக்கேற்ற வசதிகள்

'ஏ' தட்டிலும் 'பி' தட்டிலும் பிரயாணிகள் உலாவவும், காற்று வாங்கவும் தகுந்த திறந்தவெளிகள் இருக்கின்றன. மற்றும் 'ஏ' தட்டில் ஒரு பாகம் நடனத்திற்காக ஒதுக்கி விடப்பட்டிருக்கிறது. 'பி' தட்டு மிகவும் அலங்காரமாகவும், முதல் வகுப்புப் பிரயாணிகள் சவுககரியமாய் இளைப்பாறத் தக்கதாயும் இருக்கிறது. சலூன் பிரயாணிகளின் சவுகரியத்தை முன்னிட்டு டென்னிஸ் முதலிய விளையாடுமிடங்கள் கொண்ட படகுத்தட்டு ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கிறது. 'டி' தட்டில் இரண்டு பெரிய சாப்பிடும் அறைகளும், அதிலிருந்து ஏணி வழியாக மேலே 'எப்' தட்டுக்குச் சென்றால் அங்கு நீந்தும் குளமும், சிற்றுண்டிச்சாலையும் தேகாப்பியாச இடங்களும, மனோரம்மியமான காட்சியளிப்பனவாய் இருக்கின்றன.

ஜனங்கள் சவுகரியமாய் உட்கார்ந்து பார்க்கத்தக்க காலரிகள் நிறைந்த டென்னிஸ் பந்து விளையாடுமிடமும், அதன் சமீபத்திலேயே சிற்றுண்டிச் சாலையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன 'எம்பாஸ் ஆப்பிரிட்டனின்' இன்னொரு முக்கிய காட்சி என்னவெனில், ஒவ்வொரு தட்டிலுள்ளவர்களும் நீந்துவதற்குக் கொண்டுள்ள ஆர்வமே தண்ணீர்மட்டத்தில் அவர்கள் எல்லோரும் நீந்துவது கண்டுகளிக்கவேண்டிய ஆச்சரியக்காட்சியே யாகும். கை, கால் முதலிய அங்கங்களைப் பரீட்சை செய்து, வேண்டிய சிகிச்சை செய்ய ஏற்பட்ட தனி அறைகள் 'பி' தட்டின் மத்தியில் இருக்கிறது. 'ஜி' தட்டில் பற்பல புதிய காட்சியளிக்கும் பல அறைகள் சுமார் 30 அடி அகலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன, மேற்சொன்ன பல நவீனங்களோடு 'எப்' தட்டில் டர்கீஷ்பாத் (Turkish Bath) என்று சொல்லப்படும் ஒருவித ஸ்நானத்திற்குரிய சாதனங்களெல்லாம் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இத்தகைய பெரிய கப்பலின் அலங்காரம் மிகவும் நூதனமானவை. ஒவ்வொரு இடத்திலும் அலங்காரங்கள் ஒழுங்காயும், நவீனமாயும், மேனாட்டுப்புராதன சித்திர வேலைப்பாட்டுடன் நவீன கொள்கைகளைப் புகுத்தி எங்கும் வளைவுகளாகவும், கோணங்களாகவும், சரிகோடுகளாகவும் உள்ள அலங்காரம் பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருக்கிறது.

பல கற்றுத்தேர்ந்த நிபுணர்களின் மேற்பார்வையில் எவ்விதக் குறைபாடுமில்லாது செவ்வனே அலங்கரிக்கப்பட்ட தோற்றம் போற்றக்கூடியதே.

### கண்களைக் கவரும் நடன அறை

முதல் முதல் நமது கண்களைக் கவர்வது 'எம்பரஸ் அறை' என்ற நடன அறையேயாகும். இதை மிகவும் பிரக்யாதி பெற்ற எம்பயர் நடனசாலைக்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். இருண்ட நீலநிற மேற்கூரையும் அதன் வழியாக மின்சார சாதனத்தால் தோன்றிமறையும் நட்சத்திரங்களின் ஒளியும், அவற்றைச் சுற்றிய வெண்ணிறமான சுவாகச் சதுரத் தூண்களும், மெல்லிய சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தம்பத்தின் பீடங்களும், சரிகை வேலைப்பாடமைந்த இளஞ்சிவப்பான வெல்வட்பட்டினால் தொங்கவிடப்பட்ட சன்னல் திரைகளும், மற்றொரு மூலையில் மேடையின் பின்புறம் சன்னல் திரைகளையும் தோற்கடிக்கக்கூடிய சிங்காரத்தோடு தொங்கவிடப்பட்ட சன்னல் திரைகளும், மற்றொரு மூலையில் மேடையின் பின்புறம் சன்னல் திரைகளையும் தோற்கடிக்கக்கூடிய சிங்காரத்தோடு தொங்கவிடப்பட்ட திரையின் பிரகாசமும் ஒருங்கே சேர்ந்து மனோரம்மியமான காட்சியளிப்பதோடு இஃதோர் வாத்தியக்காரர் மேடையோ, அன்றிப் பேசும் படக்காட்சி சாலையோவென்ற அய்யத்தை உண்டாக்காதிராது.

அடுத்தாற்போல், பசும் சலவைக்கல் தூண்களும், கண்ணாடியில் கூரையும் கொண்டு சிவப்பும் நீலமும் கலந்த வெல்வெட் பட்டுத் திரைகள் தொங்கவிடப்பட்டதுமான இளைப்பாறும் கூடம் காணப்படுகிறது.

### கண்ணாடிக் கூரைக்குக் கீழே நீந்தும் குளம்

விலையுயர்ந்த மாத்திரைல், தூண்களே இல்லாது நுண்ணிய வேலைப்பாடுகளமைந்து இரண்டு பாகமாகத் தடுக்கப்பட்ட சாப்பிடும் மண்டபத்தின் சுவரில் காணப்படும் சித்திரங்கள் ஆச்சரியப்படத் தக்கனவாய் இருக்கின்றன. ஒருபுறம் புஷ்பங்கள், பறவைகள் முதலிய சித்திரங்களும் மற்றொருபுறம் வானமும் நட்சத்திரங்களைப் போலும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 40 அடி அகலமும் தூண்கள் தாங்கிய கண்ணாடிக் கூரையும் பளிங்கு போன்ற தண்ணீரும் கொண்ட நீந்தும் குளமும் மிகவும் அழகானது. அக் கண்ணாடிக் கூரையின் வழியாகச் செயற்கைச் சூரிய ஒளி செலுத்தப்படுகிறது. அதன் ஒருபாகத்திலிருந்து படிக்கட்டுகளின் வழியாக மேல் தளத்துக்கும், சிற்றுண்டிச் சாலைக்கும், உடைமாற்றிக் கொள்ளும் அறைக்கும் செல்ல வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

'எம்பரஸ் ஆப் பிரிட்டனில்' பிரயாணிகள் இரண்டு கண்டத்திலிருந்தும் ஆகாய வசனியின் உபயோகத்தால் ஆனந்த மடைகிறார்கள். சேமிக்கப்பட்ட ஓரிடத்திலிருந்து சுமார் 10 அல்லது 12 ஒலிபெருக்கும் கருவியின் மூலம், மேல் தட்டுகளுக்கும் முக்கியமான பொது அறைகளுக்கும் நிகழ்ச்சிகள் கேட்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### சுத்தமான காற்றுக்கு சிறந்த ஏற்பாடு!

'எம்பரஸ் ஆப் பிரிட்டனில்' உள்ள பிரயாணிகள் வெளியேவிடும் சுவாசக்காற்று ஒவ்வொரு 7 நிமிஷத்துக்கும் ஒரு தரம் சுத்தமாக்கப்பட்டு, புதிய ஆரோக்கியக் காற்று நிரப்பப்படுகிறது. ஓர் நூதன சாதனத்தால் கடற்காற்று ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு, பின்னர் கால நிலைக்குத் தக்கவாறு உஷ்ணமோ அல்லது குளிர்ச்சியோ ஆக்கப்பட்டு, பொது அறைகளிலும், மண்டபத்திலும் பொருத்தியிருக்கும் விசைகளை அழுத்துவதின் மூலம் எல்லாவிடங்களிலும் சுத்தக்காற்று நிரப்பப்படுகிறது. மற்றும் தனிப்பட்ட நபர்களின் விருப்பத்திற்கேற்றவாறு இளங்காற்றாகவோ அல்லதுபெருங்காற்றாகவோ, தாங்கள்விரும்பிய அறைகளுக்கும் இடத்திற்கும் வரவழைத்துக் கொள்ளலாம்.

'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' எல்லா வகையிலும் இணையற்றதாகும். 42,500 டன் எடையுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் இக்கப்பல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துறை முகங்களின் மத்தியில் செல்லும் கப்பல்களுக்கெல்லாம் பெரியது; அய்ரோப்பாவுக்கு செயின்ட் லாரென்ஸ் வழியாகப் பிரயாணம் செய்யும் கப்பல்களிலெல்லாம் பெரியது; உலகப் போக்கு வரவுக் கப்பல்களிலே பெரியது. இலண்டன் துறைமுகத்திலேயே பெரியதெனப் பதிவு செய்யப்பட்டது. மகாயுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ இதுபோன்று கட்டப்படாத இணையிலாதது; செயின்ட் லாரென்ஸ் வழியிலேயே அதிக வேகமானது; இக்கப்பலின் முக்கிய அம்சமாகக் கவனிக்கப்பட்ட கரைக்கும் கப்பலுக்கும் டெலிபோன் சம்பந்தம் இணைக்கப்பட்டது; ராயல் கழகத்தினாலேயே அலங்கரிக்கும் பெருமை வாய்ந்த முதல் கப்பல் இது ஒன்றே. இன்னும் சில்லரை விஷயங்களைப்பற்றி எழுத வேண்டுமானால் விரிந்துகொண்டே போகும். மேற்கூறப்பட்ட காரணங்களால் இக்கப்பலின் தனிச்சிறப்பு தெள்ளென விளங்குகிறது.

—"குடி அரசு," 24-1-1932

## கெய்ரோ கடிதம்



போர்ட் சைட்டிலிருந்து எழுதிய வியாசம் கிடைத்திருக்கலாம். அதில் 'எம்பரஸ் ஆப் பிரிட்டன்' என்ற கப்பல் விஷயத்தைப்பற்றி மட்டும் எழுத முடிந்தது. மற்றபடி கொழும்பிலிருந்து புறப்பட்ட கப்பல் விஷயத்தைப்பற்றி மாத்திரம் எழுத முடிந்தது. மற்றபடி கொழும்பிலிருந்து கப்பல் புறப்பட்டதற்குப்பின் கண்ட விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதுகிறேன்.

டிசம்பர் 17-ந் தேதி காலை புறப்பட்ட கப்பல் 24-ந்தேதி காலை 10 மணிக்கு ஜிபுட்டி என்கின்ற பிரஞ்சு துறைமுகம் வந்து சேர்ந்தது. இது ஏடனுக்கு எதிர்ப்பாகத்தில் இருப்பதும் பிரஞ்சுக்காரருடைய துறைமுகமுமாகும். நாங்கள் பிரஞ்சுக் கப்பலில் பிரயாணம் செய்ததால் பிரஞ்சுக் கப்பல் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான தீவாகிய மடகாஸ்கர் என்னும் தீவுக்கு அனுப்பப்

படும் சாமான்களும், அத்தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களும் ஜிபுட்டி என்ற துறைமுகத்தின் வழியாகத்தான் வரவேண்டும். இந்தத் துறைமுகத்தில் நாங்கள் இறங்கினதும் கமாலியர் என்கின்ற ஒரு சாதியார்—நீக்ரோவர்களைப்போல அதிகக் கருப்பும், மிகவும் சுருண்ட தலைமயிரும் உடையவர்கள்தாம் இந்தத் தேசத்தில் அதிகமாய் இருக்கிறவர்கள்; இவர்கள் பாஷை அரபு—மதம் இஸ்லாம்; மிகவும் இளைத்த சரீரமுள்ளவர்கள், பார்வைக்கு விகாரமானவர்கள், ரொம்பவும் ஏழைகள், அழுக்குத் துணியுடையவர்கள்; இவர்கள்தாம் இவ்விடத்திய கூலிகள். பெண்கள் விகாரமாய், மலை லம்பாடி சாதியாரைப் போல் நகை அணிந்துகொண்டு, நீண்ட குப்பாயம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கு சில அரபியரும், நம் பக்கத்திய—அதாவது மரைக்காயர்கள், இராவுத்தர்மார்களைப்போல் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் முதலாளிகளாகவும், சற்று நாகரிக வாழ்க்கைக்காரராகவும் காணப்படுகிறார்கள்.

## 4-வது வகுப்பில் குளிரில் பயணம்

ஜிபுட்டி துறைமுகப்பாகம் மாத்திரம் நல்ல உயர்தரக் கட்டடங்களும், நல்ல உயர்தர ஷாப்புக் கடைகளும், பிரஞ்சுக்கார வெள்ளையர்களால் மிகுதியும் குடியிருக்கப்பட்ட மாளிகைகளும் உடையதாகக் காணப்படும். மற்றபடி ஊருக்கு ஒரு பெண்கூட முகத்தை மூடிக் கொண்டு போனதை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால், முக்காடு மாத்திரம் போட்டிருக்கிறார்கள். இங்கு பம்பாய், குஜராத்தி வியாபாரிகள் சிலரைப் பார்த்தோம். இங்கு தபால் எழுதிவிட்டு, சில சாமான்கள் சாப்பாட்டுக்கு வாங்கினோம். பிறகு 24-ந் தேதி மாலை 5 மணிக்கு ஜிபுட்டியிலிருந்து கப்பல் புறப்பட்டு 29-ந் தேதி சூயஸ் துறைமுகத்துக்கு வந்தது. அத்துறைமுகம் மிக்க அழகானதாகவும், ஊர் மிகவும் புதிய முறையில் ஏற்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. ஜிபுட்டியிலிருந்து செங்கடலில் கப்பல் புறப்பட்டவுடன் தினம் 1-க்கு 3, 4 கப்பல் வீதமும், சூயசுக்குப் பக்கத்தில் வர வர ஒரு மணி ஒன்றுக்கு ஒரு கப்பல் வீதமும், கடலில் போவதையும் வருவதையும் பார்த்துக்கொண்டே இருந்தோம். சூயசுக்குப் பக்கத்தில் வந்தவுடனே சிறிது சிறிதாய் குளிர் அதிகப்பட்டு, சூயசில் நடுங்கும்படியான குளிர் ஏற்பட்டது. ஏனெனில், அங்குதான் முதலில் குளிர் கண்டோம். கப்பலில் எங்களுடைய இடம் 4-வது வகுப்பு (மேல்தட்டு) ஆனதால் அங்கு சென்னையில் கப்பல் ஏறினது முதல் 4, 5, நாள் வெய்யிலாலும் மழையாலும் மிகவும் கஷ்டப்பட்டதுடன், சாமான்களுடன் அடிக்கடி மூட்டைகள் இறக்கும்போதும் ஏற்றும் போதும் இடம் மாற வேண்டியதாயும் இருந்தது.

## பாரதிதாசன் செய்த உதவி!

புதுச்சேரி துறைமுகத்தில் எனக்குச் சிறிது காய்ச்சலும், மயக்கமும், தலைவலியும் அதிகத் தொந்தரவு செய்ததுடன், வெயிலிலே இருக்கவேண்டி இருந்ததாலும் சற்று மனவருத்தமும் உடல்நிலையைப் பற்றிக் கவலையும் ஏற்பட்டதால் 4-வது வகுப்பிலிருந்து 3-வது வகுப்பிற்கு மாற்றலாம் என்று தீர்மானித்து, புதுச்சேரியிலிருந்து எங்களைக்காண வந்திருந்த திரு. பாரதிதாசன், திரு. நோயேல், திரு. செல்வம் அவர்களுடைய காரியதரிசி ஆகியவர்கள் மூலமாய்க் கப்பல் கமிஷனரிடம் சென்று மாற்றும்படி கேட்டதில், அவர் சென்னையில் 3-வது வகுப்புக்காக சொல்லப்பட்ட சார்ஜைவிட 2 பவுன் அதிகமாகக் கூட்டி 1 டிக்கெட்டுக்கு ரூ 120 வீதம் அதிகம் கொடுக்கவேண்டுமென்றுசொன்னார். அதற்கும் சம்மதித்ததில் இங்கிலீஷ் பவுன் நோட்டு எடுக்க மாட்டேன் என்று சொல்லி, இந்திய நாணய நோட்டே வேண்டுமென்று கேட்டார். எங்களிடம் இருந்த தொகைகள் எல்லாம் இங்கிலீஷ் நாணய நோட்டாகவே மாற்றப்பட்டு இருந்ததால் புதுச்சேரி டவுனுக்கு இங்கிலீஷ் பவுன் நோட்டை அனுப்பி, இந்திய நாணயமாக மாற்றிக்கொண்டு வந்து கொடுப்பதாகச் சொல்லி நாணயம் மாற்ற திரு. பாரதிதாசன் அவர்களை புதுச்சேரி ஊருக்குள் அனுப்பினோம். அவர் இந்திய நாணயத்தையும் சில தின்பண்டங்களையும் ஒரு டாக்டர் வசம் அனுப்பிக் கொடுத்தார். அதற்குள் எனக்குச் சற்று குணமாயிருந்ததாலும், டாக்டர் பரீட்சை பார்த்து சில பக்குவம் சொன்னதாலும் 3-வது வகுப்புக்கு மாறாமல் 4-வது வகுப்பிலேயே இருந்து கொண்டோம். பிறகும் 2, 3 நாள் கஷ்டப்பட்டோம் கப்பலில் நாங்கள் மூட்டைகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டோமானாலும் 4-ம் நாள் ஒரு கீழ்த்தட்டில் சாமான்களை வைத்துக்கொள்ள கப்பல் கமிஷனர் அனுமதி கொடுத்தார். அந்தக் கீழ்த்தட்டானது மூட்டைகள் போடவும் ஒரு பக்கம் பிரஞ்சு சோல்ஜர்கள் இருக்கவும் ஏற்பட்டது. அதில் 50 சோல்ஜர்கள் இருக்க இடமுண்டு. 50 சோல்ஜர்கள் ஏற்கனவே இருந்தார்கள். நாங்கள் மூட்டைகளின்மேல் இருந்தோம். இரண்டொருநாள் சோல்ஜர்கள் எங்களுடன் பழகிவிட்டதாலும், 3 தமிழ் பிரஞ்சு இந்திய சோல்ஜர்கள் மிக்க பழக்கமாகிவிட்டதாலும் பிரயாணம் சிறிதுகூட கஷ்டமாகத் தோன்றவில்லை. ஆகாரம் இந்த சோல்ஜர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆகாரமேதான் எங்களுக்கும்



கொடுக்கப்பட்டது. அதாவது, தினம் 2வேளை வேகவைத்த உருளைக் கிழங்கும் கொள்ளு அல்லது அவரை, கடலை முதலிய ஏதாவதொரு தானியமும் வேக வைத்துக் கொடுப்பதுடன், உருண்டை ரொட்டி 3-ம், இதுகளும் மாட்டு மாமிசத் துண்டும் சாராயமும் கொடுக்கப்படுவது பழக்கம். காலையில் பால் இல்லாத காப்பியும் ரொட்டியும் உண்டு. இவற்றுள் சாராயம், மாட்டு மாமிசம் ஆகியவைகளை நாங்கள் உபயோகிக்கவில்லை. மற்றதுகளுடனும் கொழும்பிலும், சென்னையிலும், புதுச்சேரியிலும் வாங்கின பிஸ்கட், ஆரஞ்சுப்பழம் ஆகியவைகளுடனும் காப்பி, டீயுடனும் சரிப்படுத்திக்கொண்டோம்.

## சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்து

சூயசிலிருந்து 29-ந் தேதி பகல் 2 மணிக்கு கப்பல் சூயஸ்கால்வாய் வழியாக போர்ட் சைடுக்குப் புறப்பட்டது. இந்தக் கால்வாயானது செங்கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்குமாக சுமார் 100 மைல் நீளம் மணல்தரையில் வெட்டப்பட்ட கால்வாயாகும். இதன் அகலமெல்லாம் சுமார் 150 அடிதானிருக்கும். நமது வாய்க்கால் போலவே இரு பக்கம் கரையில் நடக்கும் ஜனங்களுடன் பேசிக் கொண்டே கப்பலில் போகலாம். ஆனால், 40 ஆயிரம், 50 ஆயிரம் டன் கனமுள்ள கப்பல்கள் எல்லாம் தாராளமாய்ப் போகத் தகுந்த ஆழம் வெட்டப்பட்டிருக்கின்றது. கால்வாய் வேலைகள் இன்னமும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. எதிரில் கப்பல் வந்தால் ஒதுங்கி நிற்க ஆங்காங்கு வசதி இருக்கின்றது கால்வாய்க்கு நெடுக வாட்சுமேன்களும், காவல்களும், பந்தோபஸ்துகளும் உண்டு. இந்தக் கால்வாய் 'சூயஸ் கால்வாய் கம்பெனியார்' என்கிற ஒரு கம்பெனியாரால் முதல் போட்டு வெட்டப்பட்டு, ஒவ்வொரு கப்பலுக்கும் சுங்கம் வாங்குவதன் மூலம் பங்குக்காரர்களுக்கு இலாபம் கிடைத்து வருகின்றது. ஒரு கப்பலுக்கு சுமார் 10000 (பத்தாயிரம்), 15000 ரூபாய்போல் சுங்கம் வசூலிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டோம். சூயசிலிருந்து போர்ட் சைட்டுக்குப் போவதற்குள் குளிர் அதிகப்பட்டுக் கொண்டே வந்துவிட்டது.

## வழிகாட்டியின் தொல்லை!

29-ந் தேதி இரவு 10 மணிக்கு கப்பல் போர்ட் சைட்டுக்கு வந்தது. இரவு 11 மணிக்கே பிரயாணிகளைக் கப்பலை விட்டு இறக்கிவிட்டார்கள். துறைமுகம் சென்னையைப் போலவே கப்பலிலிருந்து தரையில் கால் வைக்கலாம். ஸ்தல யாத்திரைகளில் எப்படிப் பண்டாரங்களும், அர்ச்சகர்களும், யாத்திரை வழி காட்டிகளும் இரயிலிலேயே வந்து தொந்தரவு செய்வார்களோ அதுபோல், Guide என்று சொல்லப்படும் வழிகாட்டிகள் கப்பலுக்குள்ளாகவே வந்து சூழ்ந்து கொண்டு இம்சைப் படுத்தி விட்டார்கள். பிறகு ஒருவன் எங்களுடன் விடாப்பிடியாய்த் தொடர்ந்து வந்து எங்கள் சாமான்களைக் கப்பலிலிருந்து 'போட்'டில் ஏற்றிக் கொண்டு எங்களை கஸ்டம் ஆபீஸ், டாக்டர் சோதனை, சாமான் சோதனை முதலியவைகளை நடத்திக் கொடுத்து 'அக்ராப்போல்' என்கின்ற ஒரு ஓட்டலில் கூட்டிக் கொண்டுவந்து இரவு 12 மணிக்கு விட்டான். இங்கு ஓட்டல் என்பது தங்குமிடம் மட்டுந்தான். அதாவது, ஓர் அறையில் சாமான் வைத்துப் படுத்துக் கொள்ளலாம். கட்டில், நாற்காலி, மேசை உண்டு. சாப்பாட்டுக்கு வேறு ஏற்பாடு தான் செய்து கொள்ளவேண்டும். இந்த ஓட்டலில் நாள் ஒன்றுக்கு 3 பேருக்கு தங்குவதற்கு தினம் 3 ரூ. வீதம் பேசி ஒரு வாரம் இருந்தோம். சாப்பாடு சொந்தத்தில் செய்து கொண்டோம். வழிகாட்டி 7 ரூ வாங்கி விட்டான். வழிகாட்டிகளின் கஷ்டத்தைத் தவிர வேறு கஷ்டமில்லை. பாஷை தெரியாதவர்கள் இந்தக் கஷ்டம் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.

## எல்லோருக்கும் அய்ரோப்பிய உடையே!

போர்ட் சைட் ஊரானது சூயசைப் போலவே புதிதாக உண்டாக்கப்பட்ட சிறிய பட்டணம்; மூன்று புறமும் தண்ணீர் சூழ்ந்தது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் எகிப்தியர்கள். அனேகமாக 100-க்கு 90 இஸ்லாம் மதக்காரர்கள். மற்ற பல தேசத்தாரும் இங்கு இருக்கிறார்கள்; துறைமுகம் என்பதைத் தவிர இதற்கு வேறு பெருமை கிடையாதானாலும் பெரிய பெரிய ஷாப்புகளும் அலங்கார சாமான் கடைகளும் தாராளமாய் உண்டு பகுதி காப்பிக் கடைகள் இருக்கும். சாமான்கள் நிலவரம் எல்லாம் நமது ஊர்களில் உள்ளது போலவேயொழிய அதிகமில்லை. ஆனால், கடைகளில் சாப்பிட்டால் செலவு அதிகம். ஜனங்கள் பார்வைக்கு வெள்ளைக்காரர்களைப் போலவே இருக்கிறார்கள். எகிப்திய இஸ்லாம் பெண்களுக்கும் அய்ரோப்பிய பெண்களுக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது கடினம். கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்குங்கூட அடையாள வித்தியாசம் கிடையாது. 3-ல் 2 பாகம் பெண்கள் அய்ரோப்பிய உடையுடனும் தொப்பியுடனுமே திரிகிறார்கள். ஆண்கள் எல்லாம் அய்ரோப்பிய உடைதான்.

சில ஏழைக்குடும்பப் பெண்களும் சில கிராமக் குடும்பப்பெண்களும் மாத்திரம் உள்ளே

அய்ரோப்பிய உடை அணிந்து, மேலே கருப்புத்துணியினால் போர்த்துக் கொண்டு, வாய்மாத்திரம் மறையும்படி ஒருவித வலைத் துணி கட்டிக்கொள்ளுகிறார்கள். (நெற்றி, கண், மூக்கு எல்லாம் தெரியும்). ஆண்கள் அய்ரோப்பியத் தொப்பியும் துருக்கித் தொப்பியும் அணிகிறார்கள். தாடி என்பது கிடையவே கிடையாது. கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் இங்கு அடையாளம் கண்டு பிடிக்கவே முடியாது. இந்த ஊர் ஜனங்கள் எல்லோருக்கும் இந்தத் துறை முகத்திற்கு வந்து போகும் பிரயாணக்காரர்களால்தான் வியாபாரமும் பிழைப்பும் நடக்க வேண்டியதே தவிர வேறில்லை. எகிப்திய இஸ்லாம் பெண்களின் டான்சு தினமும் நடக்குர்; பலர் உடம்பெல்லாம் பலவித பச்சை குத்திக்கொள்ளுகிறார்கள்.

போர்ட்சைட்டில் ஒருவாரம் இருந்துவிட்டு ஜனவரி மாதம் 5-ந்தேதி காலை 8 மணிக்கு கெய்ரோவுக்குப் புறப்பட்டு இரயிலேறி 5-ந் தேதி பகல்1 மணிக்கு கெய்ரோவுக்கு வந்தோம். 150 மைல் தூரம் 3-வது வகுப்புக்கு மைலுக்கு அரையணா இரயில் சார்ஜ் விகிதம். இரயில் வண்டிகள் எல்லாம்—S.I.R. சின்ன வண்டிகளில் இரண்டு இரண்டு பேருக்கு பெஞ்சுகள் இருப்பது போலவே, எல்லா வண்டிகளிலும் இருக்கின்றது; வண்டிகள் எல்லாம் பெரிய வண்டிகள்.

## எகிப்தும் நைல் நதியும்

முதல் வண்டியிலிருந்து கடைசி வண்டி வரை வண்டி நடுவில் நடந்து போகலாம். கெய்ரோ பட்டணமானது ஆப்பிரிக்கா தேசத்திலேயே பெரிய பட்டணமாகும், இதில் 10 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இது ஈஜிப்ட் தேசத்தின் தலைநகரமாகும். எகிப்தியதேசம் என்பது உலகத்தில் உள்ள பழமையான தேசங்களில்எல்லாம் மிகப்பழமையானது; நாகரிகங்களிலும் எகிப்திய நாகரிகமே மிகப் பழமையானது. இது உலகுக்கு மத்திய தேசமுமாகும். இவ்விடத்திய சீதோஷ்ண நிலை குளிர்காலத்தில் பெங்களூரைப் போலவும், வெயில் காலத்தில் நமது ஊர்களைப் போலவும் இருக்கும். இங்குள்ள மலைகள் அநேகமாய் மணல் மலைகளேயாகும். நிலங்கள் பெரும்பாகம் வெறும் மணல் பூமிகளாகவே இருக்கும்.

கெய்ரோவில் ஒரு பெரிய நதி ஓடுகின்றது. அதற்குப் பெயர் நைல் (NILE) நதி என்பது இது உலகத்திலேயே பெரிய நதியாகும். இதன் நீளம் 3500 மைல். இதில் கப்பல்கள் தாராளமாகப் போகின்றன. இதற்குப் பல வாய்க்கால்களும், தாராளமாகப் பாசனங்களும் உண்டு. இங்கு மழை என்பதே கிடையாது. ஒட்டகம், குதிரை, கோவேறுகழுதை, கழுதை ஆகியவைகளால்தாம் எல்லா வேலையும் செய்யப்படுகின்றது. பசு மாடுகள் பால் கறக்கவும், காளைமாடுகள் சாப்பிடவும் தான் பயன் படுகின்றன. உருளைக் கிழங்கு, முட்டைக்கோஸ் முதலிய குளிர் தேசக் காய்கறிகளேதான் அதிகம். எல்லோரும் கோதுமை ரொட்டியும், சப்பாத்தியும் தான் அதிகம் சாப்பிடுகிறார்கள். உடை விஷயங்கள் நம்மூர் உடைகளைவிட அதிகம் தேவை இருக்கிறதுடன் அதிகமாகவே உபயோகிக்கிறார்கள். அவற்றின் விலைகள் எல்லாம் நமது பக்கத்தைவிட நயமாகவே இருக்கின்றன.

பொதுவாகக் கிராமங்கள் எல்லாம் மண்சுவர் வீடுகளாகவும், மேற்கூரைகள் எல்லாம் மரம் போட்டு, பலகை போட்டு, மண் பரப்பியதாகவுமே இருக்கின்றன. மழை இல்லாததால் கூரையைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. பட்டணங்களில் வீடுகள் 3, 4, 5, 6, 7 மாடிவரையில் இருக்கின்றன; 3, 4 மாடிகளே அதிகம். பொதுவாக, பம்பாய் கட்டடங்கள் போலவே காணப்படும்.

## 'தாடி'க்கு மரியாதை

நிற்க, நான் இதுவரை உடைகளை மாற்றிக் கொள்ள வில்லை தலைக்கு மாத்திரம் ஒரு கம்பளி குளிர் (மங்கி கேப்) குல்லாய் போட்டுக்கொண்டேன். ஆகாரம் ரொட்டி, முட்டை, காப்பி இவைகள்தாம் முக்கியமாய் உபயோகிக்கிறேன். முட்டை இவ்விடம் மிக மலிவு; 2 அணாவுக்கு 5 முட்டைகிடைக்கின்றது. இந்தப் பக்கத்துக்காரர்களுக்கு நான் ஒருவனே தாடி வைத்தவனாகவும், ஒரு புதுமாதிரி மனிதனாயும் காணப்படுவதால் யாரும் குறிப்பாய்ப் பார்ப்பதும், மற்றும் மரியாதை செய்வதுமாய் இருக்கிறார்கள். கூடுமான வரையில் ஜனங்கள் நமது ஜனங்களைவிட நல்ல குணமுள்ளவர்களாகவும் விவேகிகளாகவும் இருக்கிறார்கள்; 'இந்தியன்' என்றால் மிகப் பிரியமாய் பேசுகிறார்கள், அய்ரோப்பியரிடம் வெறுப்பாய் இருக்கிறார்கள். இவ்விடத்திய பெண்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும், சுதந்திர உணர்ச்சியும், தைரியமும், துணிவும் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். குழந்தைகள் சிறுவர்கள் ஆகியவர்களுக்கு நமது பக்கத்திய குழந்தைகளைவிட அதிக புத்தியும் சுதந்திர உணர்ச்சியும் துணிவும் இருக்கின்றன. மற்ற அரசியல், மதவியல் சம்பந்தமான விஷயங்கள் பின்னால் எழுதுகிறேன். இன்னும் இரண்டு மூன்று தினத்தில் 'ஏதன்சு'க்குப் (கிரீஸ் தேசம்) போவோம்.

—''குடி அரசு'' 7-2-1932



# பெரியாரின் மனிதன்



பேராசிரியர் மா. நன்னன் எம்.ஏ.

''மனிதனை நினை; கடவுளை மற'' என்பது, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்கள் எல்லாவற்றிற்கும் மூல வித்தாகும். மனித முன்னேற்றத்தை விரும்பிய பெரியார், அது இயல்பான வளர்ச்சியைப் பெறாமல் தடைப்பட்டிருப்பதையும் சில நேரங்களில் சில இடங்களில் அது கீழ் நோக்கிச் செல்வதையும் கண்டார். அதற்கான காரணத்தை ஆராய விரும்பிய பெரியார், மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையைப்பற்றி நினைக்காமல் கடவுளைப் பற்றி நினைப்பதே இதற்கான அடிப்படைக் காரணம் என உணர்ந்தார். மனித மனம், ஒன்றில் ஈடுபட்டால் மற்றொன்றை மறக்கும். அந்த மற்றொன்றில் இது ஈடுபட வேண்டுமானால் அந்த ஒன்றை மறக்கவேண்டும் அதை மறக்காமல் இதில் ஈடுபட முடியாது. ஆகவே, கடவுள் சிந்தனையால் சீர்கெடும் மனித சமுதாயத்தை முன்னேற்றுவதற்குக் கடவுள் சிந்தனையை ஒழித்து மனித சிந்தனையை ஏற்படுத்துவதே வழி என்று முடிவு செய்தார் பெரியார்.

அவர் மனிதனைப் பற்றிக் கூறியவைகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் சிறப்பான சிலவற்றைத் தொகுத்தும் பகுத்தும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இதில், விளக்கம், இலட்சியம், சமூக வாழ்க்கை, ஒழுக்கம், உரிமை, புகழ், தடைகள், கடவுள் என்னும் எட்டுத் தலைப்புக்களில் மனிதனைப் பற்றிய பெரியாரின் கருத்து ஆராயப்படுகின்றது.

## விளக்கம்

உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் கடவுள் படைத்தார் என்பது அறிவாளிகள் சிறிதும் ஏற்காத கருத்தாகும். மக்கள் உட்பட உலகத்திலுள்ள இயங்குகின்ற பொருள், இயங்காத பொருள் ஆகிய எல்லாம் படிப்படியாக ஒன்றிலிருந்து ஒன்று உருமாறி வளர்ந்து வந்து அந்த வளர்ச்சியின் இறுதியாக மனித இனம் தோன்றியது என்பதே பெரியார் அவர்களின் கருத்தாகும். ('குடி அரசு' 26-5-35; பக்கம் 5; பத்தி 4) அது நமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்த கருத்தாகும். இவ்வாறு அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராத ஒன்றை அச்சத்தாலும் பிறவற்றாலும் நம்புகிறவர்கள் பக்குவம் அடைந்த மனிதர்கள் ஆக மாட்டார்கள். ('விடுதலை' 3-7-50; (பெட்டிச் செய்தி) அவ்வாறு படிப்படியாக வளர்ந்து வந்த மக்கள் என்பதற்குப் பொருளே, கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து நன்மை தீமைகளை உணர்ந்து எல்லாத் துறைகளிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடையும் தன்மை உடையவர்கள் என்பது அய்யா அவர்களின் கருத்தாகும். ('விடுதலை' 26-3-51; பக். 1 பத். 1)

மனிதனுக்கு இயல்பாக இருக்கவேண்டிய மற்றொரு குணம் என்று பெரியார் சுட்டுவது நன்றியறிதலாகும். நன்றி உணர்வு இல்லாதவனைப் பெரியார் மனிதன் என்றே கொள்வதில்லை. அவர்களையெல்லாம், நரி, பூனை, பாம்பு, தேள், கொசு, மூட்டைப் பூச்சி ஆகிய மற்றவர்களை ஏய்த்தும், துன்புறுத்தியும், உறிஞ்சி வாழும் பிராணிகளாக அவர் கருதுகிறார். ('குடி அரசு' 23-10-43 ப. 7, பத். 1.)

## இலட்சியம்

நமது செயல், சொல், எண்ணம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குறிக்கோள் இருக்கவேண்டுமென்பது நாம் அறிந்ததேயாகும். அந்த அடிப்படையில் தந்தை பெரியார் அவர்கள் மனிதப் பிறப்புக்கு ஏதாவது இலட்சியம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கிறார். அவ்வாராய்ச்சியின் பயனாக மனிதப் பிறவி ஒரு இலட்சியமும் அற்ற பிறவி என்னும் முடிவுக்கு அவர் வருகிறார்.

மன்பதையை முன்னேற்ற அதனை ஒரு குறிக்கோள் உள்ளதாக ஆக்கவேண்டும் என்பது பெரியார் கருத்து இயற்கையில் அது குறிக்கோள் அற்றதாக இருந்தாலும் செயற்கையிலேனும் அதற்கு ஒரு குறிக்கோள் ஏற்பட்டுவிடு

மானால் மக்கள் வாழ்வு முன்னேற்றமும் சிறப்பு மடைய முடியும் என்று பெரியார் கருதினார். அதற்குப் பின் கண்ட சில இலட்சியங்களை அவர் பரிந்துரைக்கிறார். மக்கள் தமது வாழ்க்கையில் பிறர் துன்பம் அடையாவண்ணம் நடந்து கொள்ளவேண்டும் என்பதே மனித வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொருவரும் வாழ்க்கை நடத்த முயலவேண்டும் என்கிறார். ['விடுதலை' 20-3-50 ; பக். 3 ; பத்-5]

சிறப்பாக நம் நாட்டில் பிறப்பின் அடிப் படையில் சாதிகளைத் தோற்றுவித்து இந் நாட்டுப் பெரும்பான்மையான மக்களை இழி மக்களாக வைத்திருக்கும் கொடுமையை ஒழிக்க முயல்வதே இங்குள்ள மக்களின் சிறந்த இலட் சியமாக அமையவேண்டும் என்று கூறுகிறார்.

ஆனால் மக்கள் இத்தகைய இலட்சியத்தை மேற்கொள்ளாமல் பணம் சம்பாதிப்பதையே தங்களின் ஒரே இலட்சியமாகக் கருதிப் பாடு பட்டு அலைவதைப் பெரியார் காண்கிறார். அவ்வாறு அலைகிறவர்கள் தம் பெரிய செல்வத் தைக் கொண்டு தங்கள் இனத்திற்கு இருக்கும் இழிவைப் போக்கப் பாடுபடக் கூடாதா என்று ஏங்குகிறது பெரியாரின் உள்ளம். தாமும் தங்களுடைய பிள்ளைக்குட்டிகளும் வாழ்ந்தால் போதும் எனும் மடமை ஒழியவேண்டும் என்றும் அவர் கருதுகிறார். ['விடுதலை' 20-4-63; 3; 2.]

அவ்வாறு உயர்ந்த இலட்சியத்திற்காக உழைக்கின்ற மனிதன் அதில் வெற்றி பெற வேண்டும் என்று கருதினால் அந்த லட்சியம் நிறைவேறுதற்குத் தன் உயிரையே கொடுக்க நேர்ந்தால் அதுவே அவனது சிறப்பு வெற்றி யாகும். ['குடி அரசு' 30-8-31; 10; 2]

## சமூக வாழ்க்கை

மனித இனம் மற்ற உயிரினங்களை விடச் சிறந்து வாழ்வதற்கும், காலம் தோறும் அது படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருவதற் கும் உரிய காரணங்களில் அது கூடி வாழ்வதும், ஒருவருடைய அனுபவத்தை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டு அதற்குமேல் தொடர்ந்து முன்னேறிச் செல்வதும் ஒன்றாகும். தொடர் ஓட்டத்தில் ஒருவன் விட்ட இடத்திலிருந்து இன்னொருவன் தொடர்ந்து ஓடுவதுபோல் சமுதாயத்தில் தந்தை விட்ட இடத்தில் மகனும், ஆசிரியர் விட்ட இடத்தில் மாணவனும், ஒரு தலைமுறை விட்ட இடத்தில் அடுத்த தலைமுறையும் தொடர்ந்து முன்னேறத் தொடங்குவது சிறப்பான காரணமாகும். அதனால்தான் கூட்டுவாழ்க்கை பல வேறுபாடு களுக்கிடையிலும் மனித சமூகத்தில் நிலைத் திருக்கிறது. இந்தக் கூட்டு வாழ்க்கைக்கு மனித சமுதாயம் சில விதிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த விதி முறைகளுக்கு அடங்கித்தான் எல்லோரும் நடக்கவேண்டும் என்னும் பெரியார் கருத்து எவ்வளவு அடிப்படை உண்மை என்பதைக் காணலாம். ('குடி அரசு' 29-9-40; 2, 15; 4, 1.)

மனிதன், காட்டுமிராண்டிக் காலத்தில் சமுதாய வாழ்க்கையை மேற்கொள்ளத் தொடங்கியபோது, ஒவ்வொரு மனிதனும் சமுதாய வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் உதவி செய்து அதன்மூலம் வாழ்க்கை நிலையை மேம்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்துடன் வந்திருப்பானே ஒழிய மற்ற மனிதனைக் கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தி, துன்பப் படுத்தி அதன் பயனாய்த் தான் வாழலாம் என்று கருதி வந்திருக்கமாட்டான். அப்படிக் கருதியிருந்தால் சமூக வாழ்க்கை ஏற்பட்டே யிருக்காது. ('கு' 26-5-35; 6; 3.) என்னும் பெரியாரின் கருத்து சமூக வாழ்க்கையின் தொடக்கத்தை எவ்வளவு நுட்பமாகவும் தெளி வாகவும் வரையறுத்துக் காட்டுகிறது என்பதை உணரலாம்.

## ஒழுக்கம்

தந்தை பெரியார் அவர்கள் ஒழுக்கத்தை மிகவும் வற்புறுத்துவதை நாம் அறிவோம். உரி மையைவிட பெரியார் ஒழுக்கத்திற்கே முதலிடம் கொடுக்கிறார். ஆகவே, மனித ஒழுக்கத்தைப் பற்றி அவர் கூறும் கருத்துக்கள் சிலவற்றை இங்குக் காணலாம். ஒழுக்கங்களில் சிறப்புடைய ஒன்றாகிய நன்றியைப் பெரியார் பெரிதும் பாராட்டுவார். நன்றி, ''உதவி செய்தவன் எதிர்பார்க்கக் கூடிய ஒன்று அன்று உதவி பெற்றுக் கொண்டவன் அதனைச் செய்தவ னிடம் காட்ட வேண்டிய ஒன்று'' என்று அதன் இலக்கணத்தைக் கூறியிருக்கிறார். ஆனால் மக்களிடம் சிறப்பாகத் தமிழர்களிடம் அந்தக் குணம் இல்லாமையையும் அதனால் தமிழ் இனம் சீர்குலைந்ததையும் அவர் எண்ணற்ற இடங்களில் எடுத்துக் கூறியிருக்கிறார். அந் நன்றி என்கின்ற குணம் மக்களிடம் இல்லாதத னால் அவர் மக்களைப் புலி முதலிய விலங்கு களோடு சேர்த்துக் கணக்கிடுகிறார். ஆனால், மனிதனுக்கு அக்குணம் ஏற்பட வேண்டு மென்றும் ஏற்பட்டால்தான் அவன் உண் மையான மனிதனாக ஆக முடியும் என்றும் அவர் கூறுகிறார். ('விடுதலை' 29-3-67)

## உரிமை

20 ஆம் நூற்றாண்டில் உலகம் எங்கும் உரிமை முழக்கம் மிகுந்திருப்பதைக் காண் கிறோம். பெரியாரும் உரிமை முழக்கம் செய்திருக்கிறார். ஆனால் மற்றவர்கள் எழுப்பிய உரிமை முழக்கத்திற்கும் பெரியார் எழுப்பிய உரிமை முழக்கத்திற்கும் மிகுந்த வேறு பாடிருப்பதைக் காணலாம். பெரியார் பிற உரிமைகளை விட எண்ணும் உரிமையையும், எண்ணியதைத் தங்கு தடையின்றி வெளியிடும் உரிமையையும் மக்களுக்கு முதன்மையாக வேண்டியவை என்று கருதினார். ஆகவே அவர் பிற உரிமைகளைவிட இந்த உரிமையை வற்புறுத்திப் பேசியும், எழுதியும், போராடியும் வந்திருக்கிறார். எந்த மனிதனுக்கும் அவனுடைய கருத்து என்ற பெயரால் எதையும் எடுத்துச் சொல்ல உரிமை உண்டு, அதைத் தடுப்பது அயோக்கியத்தனம் ('விடுதலை' 2—4—50) (பெ. செ.) என்பது அய்யாவின் கூற்றாகும்.

மக்கள் அனைவரும் ஒரேவிதமாக எண்ண முடியாது. சரியாகவோ தவறாகவோ மக்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படுவது இயற்கையே ஆகும். ஆகவே ஒருவருக் கொருவர் கருத்துக்களை மதிக்க முடியா விட்டாலும், ஏற்க முடியாவிட்டாலும் அவற்றை வெளியில் எடுத்துச் சொல்ல இடம் கொடுக்க வேண்டியது மனிதத் தன்மையில் கவலை உடையவர்களின் கடமையாகும். ('விடுதலை' 16—12—37, 3 ; 1-2) என்று பெரியார் வரையறுத்துச் சுட்டுகிறார்.

## புகழ்

புகழ் என்றால் ஒருவன் தன்னைத்தானே விளம்பரப்படுத்திக் கொள்வது அன்று. அவன் செய்த நன்மையால் பயன் அடைந்த மற்றவர் கள் நன்றி உணர்வோடு அவனைப் பாராட்டு வதே புகழ் ஆகும். அப்புகழை மனிதன் விரும்பி அதனை அடைய முயலவேண்டும். ஏனெனில் மனிதன், மற்றவர்களுக்குத் தொண்டு செய்ய ஏற்பட்டவன் தானே தவிர, தனக்குத் தானே வாழ்பவன் அல்லன் ('விடுதலை' 5-1-57 ; 3 ; 2-3) மேலும் ஒருவனுடைய புகழை வரையறுத்துச் சுட்ட வந்த பெரியார், சாதாரணமாக ஒருவனின் புகழைச் சொல்லவேண்டுமானால் அவன் மறைந்த பிறகு அவனது மறைவு குறித்து மக்கள் என்ன பேசுகிறார்களோ அதைக் கொண்டு அவனது புகழை நாம் நல்லபடியாக உணர்ந்து கொள்ளலாம் என்கிறார் ('விடுதலை' 24-3-69 ; 3 ; 1.)

இவை தவிர, ஒருவனது வெற்றிக்கு அறிகுறியே அவன் வாழ்வில் அவன் அடையும் புகழ்தான் என்பது அய்யாவின் கருத்து ('விடுதலை' 3-2-69 ; 2 ; 3.) ஒருவனுடைய சொந்த சொத்தாக ஒன்று இருக்குமானால் அது அவனது புகழைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்கிறார் பெரியார் ('விடுதலை' 31-3-50 ; 3 ; 5.)

சிலர் தாம் புகழை விரும்புவதில்லை என்றும் தமக்குப் புகழே வேண்டாம் என்றும் கூறுகிறார்களே அவர்களைப் பற்றிப் பெரியார் என்ன சொல்கிறார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா ? ''இது பகட்டுப் பேச்சே அன்றி நடைமுறையில் சாத்தியமானது அல்ல. புகழை விரும்பாதவன் மனித உணர்ச் சியோடு இருப்பவன் என்று கூற முடியாது'' ('விடுதலை' 28-4-47 ; 3 ; 2-3) ஆகவே அய்யாவின் கருத்துப்படி புகழை விரும்பாதவன் எவனும் இருக்க முடியாது என்பதோடு அப்படி அரியராக யாரேனும் இருந்தால் அவர்களை மனித இனத்திலேயே சேர்க்க முடியாது என்றும் நாம் அறிகிறோம்.

## முன்னேற்றத் தடைகள்

பிறவியிலேயே ஒருவன் திருடனாகப் பிறப்பதில்லை. சுற்றுச் சார்பும், சூழ்நிலையுமே அவனைத் திருடனாக்குகின்றன. சுய எண்ணம் எதுவும் இல்லாமல் கொழுக்கட்டை மாதிரி குழந்தை பிறக்கிறது. பின்னர் அக்குழந்தை படிப்படியாகப் பெற்றோர் செய்வதைச் செய்து வளர்கிறது. பெற்றவர்கள் சொன்னதைச் சொல்லிப் பழகுகிறது. குழந்தை வளர்ந்து பெரிய மனிதன் ஆனதும் சுற்றுச் சார்பாலும் சூழ்நிலையாலும் திருடுகிறான், விபசாரம் செய்யத் துணிகிறான், அயோக்கியன் ஆகிறான் ('விடுதலை' 21-8-56 ; 3 ; 1.) என்னும் பெரியார் கூற்றுக்கள், மனிதஇன வளர்ச்சிக்குச் சுற்றுச் சார்பும் சூழ்நிலையும் எவ்வாறு தடையாக இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

மனித வளர்ச்சிக்குத் தடையாக உள்ள மற்றொரு மன உணர்வைப் பெரியார் குறிப் பிடுகிறார். அது பேராசை என்பது ஆகும். மனித வாழ்வு பேராசையில் மூழ்கிவிட்டது. எதைச் செய்தாயினும் பணம் சேர்த்தல், பெருமை தேடுதல் முதலிய காரியங்களில் மனிதன் ஈடுபடுகிறான். பணக் கவலை வந் தால் சூதாடி போன்ற உணர்ச்சி வயப்பட்டு, நாணயத்தை இழந்து ஒழுக்கம் அற்ற காரியங் களைச் செய்யத் துணிந்து விடுகிறான். ('விடுதலை' 16-2-63; (பெ.செ.) இது உலகில் நாம் அன்றாடம் காணும் உண்மை அல்லவா. இதைத் தடுக்கக் கடுந்தண்டனையும் சர்வாதி கார உத்தரவையும் போடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் பெரியார் குறிப்பிடுகிறார்.

மனிதன் சுயாட்சிக்கு உரிமை உள்ளவன் என்பதற்குக் காரணம் அவனுக்கு அதற்கேற்ற வசதி இருக்கிறது என்பது மட்டுமல்லாமல் அதற்கு வேண்டிய அறிவு, ஆற்றல் ஆகியனவும் இருக்கின்றன என்பதும் ஆகும். ஆனால் மனிதன் அவற்றைத் தன் அடிமைத் தன்மைக்கும் இழிவுக்குமே பயன்படுத்திக் கொள்கிறான். அதாவது தன் முன்னேற்றத்திற்குரிய அரிய கருவிகளைத் தன் தற்கொலைக்கும் வீழ்ச்சிக்குமே அவன் பயன்படுத்திக் கொள்கிறான். அதனாலேயே மனித வாழ்வில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கப் பெரியார் ஆசைப்பட்டார். ('குடி அரசு' 19-1-36; 9.)

மனிதனுடைய வறுமை, துன்பம், குறை ஆகியன எல்லாம், மற்றவனைவிட நாம் அதிகமாய்த் துன்பப்படுகின்றோமே, மற்றவனைவிட நாம் தாழ்மையாய் வாழ்கின்றோமே, மற்றவன் நம்மை அடக்கி ஆளுகின்றானே என்கின்ற மனப்பான்மையால் விளைவனவே ஆகும். இந்த உணர்ச்சியை எல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டுமானால் மற்றவனுக்கும் நமக்கும் வித்தியாசம் காணாத ஒரு நிலையை உண்டாக்க வேண்டும். ('குடி அரசு' 1-10-33; 13; 4.) என்கிறார் பெரியார். இதன் விளைவாக மூட நம்பிக்கை அற்ற, பகுத்தறிவு வாய்ந்த, ஏற்றத் தாழ்வற்ற, பொதுவுடமைச் சமுதாயத்தை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறுவதன் மூலம் தந்தை பெரியார் அவர்கள் அத்தகைய வாழ்வில்தான் உண்மையான மனிதனை—முழு மனிதனைக் காணமுடியும் என்று தெளிவு படுத்துகிறார்.

### மனிதனும் கடவுளும்

உலகிலுள்ள பிற உயிர்களைவிட மனிதனுக்குச் சிறப்பாகவும் அரியதாகவும் கிடைத்துள்ள ஒரு ஒப்பற்ற கருவி பகுத்தறிவு ஆகும். அதைப் பெற்றிருக்கிற மனிதன், அதைச் சரியாகவும், தங்கு தடையின்றியும், முழுமையாகவும் தொடர்ந்து பயன்படுத்தி வந்திருப்பானானால் இன்று மனித இனம் பெற்றிருக்கின்ற வளர்ச்சியைவிடப் பல நூறு மடங்கு வளர்ச்சியைக் கூடுதலாகப் பெற்றிருக்கமுடியும். இந்த வளர்ச்சியை இழப்பதற்குக் காரணமாக மனிதன் பகுத்தறிவைப் பயன்படுத்தாதற்குப் பெரியார் இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகிறார். ஒன்று—அவன் தானே அமைத்துக் கொண்ட கடவுளும் மதமும்; மற்றொன்று — அரசாட்சி. இவை இரண்டும் மனிதனை இயற்கைக்கு மாறாக ஆட்சி செய்கின்றன. ('விடுதலை' 4-7-51; 2; 4.) இவற்றுள் கடவுள் அல்லது மதம் எப்படி மனிதனுடைய இயற்கையான வளர்ச்சியைத் தடைப்படுத்தியதுஎன்பதை இங்குக் காணலாம். மனித முன்னேற்றத் தடைகளுள் தனித் தன்மை வாய்ந்த இதனைத் தனியே காண்பதே பொருத்தமானது.

மனித சக்திக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது என்னும் எண்ணம், மக்களுள் தோன்றிய கீழ் மக்களாலும்,கொடியவர்களாலும் தோற்றுவிக்கப்பட்டது. அதை நம்பிய மக்கள்அறிவை இழந்து ஏமாற்றம் அடைந்தார்கள். அதனால் அறிவை இழந்ததோடு மனித இனப் பற்றை விடுத்துக் கடவுள் பக்தி கொண்டு சீரழியத் தொடங்கினார்கள். ('விடுதலை'22-8-68; 3;5.) கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்லிச் சும்மாயிருந்துகொண்டு, தொட்டதற்கெல்லாம் கடவுளைக் காரணமாகச் சொல்லிக் கொண்டு மூடர்களாய்த் திரிந்து மக்கள் வளர்ச்சிப் பாதையை விட்டே விலகிச் சென்று விட்டார்கள். ('விடுதலை' 1-2-69; பெ. செ.)

கடவுள் நம்பிக்கையினால் இவ்வாறு சீர் கெட்ட மனிதன் தன்னை மேலும் கெடுப்பதற்கு இது ஒன்றே போதுமானதாக இருந்தும் இதனோடு தலைவிதி, கர்மபலன், முற்பிறவி போன்றவைகளையும் கற்பித்துக்கொண்டு தனது கயமைத் தனத்துக்கும் அயோக்கியத் தனத்துக்கும் இவைகளைப் பரிகாரமாகக் கொண்டான். ('குடி அரசு' 26-5-35, 15; 3.)

வளர்ச்சி கெட்டது மட்டுமின்றி அமைதியோடும், அன்போடும், மன நிறைவுடனும்வாழ வேண்டிய மனிதன் அமைதி இழந்து, அன்பு இழந்து, திருப்தி இல்லாமல், கவலையோடு சாவதற்குக் காரணம் அவன் தன் அறிவுத் தலையைச் சொறிந்து கொள்ளப் பயன்படுத்திய கடவுள் என்கின்ற கொள்ளிக் கட்டையே ஆகும் என்றும் பெரியார் கூறுகிறார். ('விடுதலை' 28-12-67; பெ. செ.)

இவை தவிர மனிதன் தன்னம்பிக்கை இழந்து, தன்னைத்தான்நடத்துவதாக நினைக்காமல், தனது காரியத்திற்குத் தானே பொறுப்பாளி என்ற எண்ணமே இல்லாமல், நடமாடும் பிணமாய், உருளும் தசைப் பிண்டமாய் ஆவதற்குக் காரணமும் இந்தக் கடவுள் உணர்ச்சிதான், என்று கூறிய பெரியார், ''மனிதன் தான் கற்பித்துக் கொண்ட கடவுளையும்,கடவுள் கட்டளையையும், கடவுள் சித்தாந்தத்தையும் குளறுபடியாக்கிக் கொண்டான்'' என்று கூறுவதை அறிவுலகம் ஆழ்ந்து நோக்கவேண்டும். ('குடி அரசு' 26-5-35; 15; 3.)

*



# ஒரு தோழரின் கடிதத்திற்கு தந்தை பெரியாரின் பதில்!



அன்புடைய ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கட்கு, க்ஷேமம். க்ஷேமத்துக்கு எழுதுங்கள். வெகுநாளாகக் கடிதப் போக்குவரத்தில்லை. நானும் உங்களுக்குச் சில விஷயங்கள் பற்றிக் கடிதம் எழுத வேண்டும் என எண்ணியெண்ணி முடியாது போயிற்று.

நான் சொல்ல விரும்பும் விஷயம் சிலவுண்டு. உங்கள் இயக்கம் உயர்வானது. அவ்வியக்கம் பலப்பட்டு எல்லா வகுப்பாருடைய உதவியும் பெற வேண்டுமானால் நீங்கள் தற்காலம் அனுஷ்டித்துவரும்முறை சரியல்லவென்பது எனது உண்மையான எண்ணம். உங்கள் இயக்கத்தில் எனக்கு ஆர்வமுண்டு. 10, 15 வருட காலமாக இவ்வியக்கத்தின் கொள்கை காரணமாய் நான் இந்தியாவில் நடைபெறும் ஒரு இயக்கத்திலும் நேர்முகமாய்க் கலந்து கொள்ளாது இருந்து வந்திருக்கிறேன். ஏனெனில், ஒவ்வொரு இயக்கத்திலும், சிற்சில அம்சங்களிருக்கின்றன. பல கெட்ட அம்சங்களும் உண்டு.

சமதர்மக் கொள்கையை ருஷ்யாவில் கொண்டாடும் முறையில் இந்தியாவில் புகுத்துவது முடியாது. அவர்களது பழைய கொள்கைகளையே மாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

நீங்கள் செய்துவரும் பிரசாரத்தில், தற்காலம் இந்தியாவில் இருக்கும் ஒரு இயக்கத்துடனும் சேர்ந்திருப்பது சரியல்ல. அப்பொழுது உங்கள் இயக்கம் நாளுக்கு நாள் பலவீனப்படும். விரோதிகளும், போலி சிநேகிதர்களும் ஏற்படுவார்கள்.

### இது ஏழைகள் இயக்கம்!

சமதர்மக் கொள்கைக்கு வேலை செய்ய முன் வருபவர்கள் யாதொரு விதமான வருமானத்தையும் எதிர்பார்த்தவர்களாயிருக்க முடியாது. ஏனெனில், இது ஏழைகளது இயக்கம்.

நமது நாட்டில் தோன்றியுள்ள காங்கிரஸ், ஜஸ்டிஸ் மற்றைய இயக்கங்கள் எல்லாம் முதலாளிகளுடையவும் நிலச்சுவான்தார்களுடையவும் இயக்கமாகும். இவ்வியக்கத்தில் ஜஸ்டிஸ் இயக்கம் சாதி வித்தியாசம் பாராதது என்று எண்ண முடியவில்லை. அதிலும் முதலியார், நாயக்கர் சண்டையிருக்கிறது. காங்கிரசும் அப்படித்தான். நீங்கள் ஜஸ்டிஸ் கட்சி இயக்கத்தில் சென்னையில் சேர்ந்து பிராமணர், பிராமணர் அல்லாதார் பிரச்னையைக் கிளப்பிப் பேசினீர்கள். உங்கள் கொள்கைக்கு அப்பிரச்னையே ஏது? அப் பிரச்னையொன்றிருப்பதாக எண்ணியுமிருக்கக்கூடாது; அதைப்பற்றிப் பேசியுமிருக்கக்கூடாது. அவ்வாறு பேசியதிலிருந்து உங்கள் சமதர்மக் கொள்கையில் உங்களுக்கு பூரண நம்பிக்கை இன்னம் ஏற்படவில்லையென்றோ, அல்லது அதனை நீங்கள் அறியவில்லையென்றோ என்போலுள்ளவர்கள் நினைக்க வேண்டியேற்படுகிறது.

நான் இவ்விதம் எழுதுவதால் என் பேரில் வருத்தமடைய மாட்டீர்கள் என்பது எனது நம்பிக்கை. இப்பொழுது காங்கிரஸ் அசம்பளித் தேர்தலில் வெற்றி பெற்று விட்டது. இவர்கள் சாதிக்கப்போவதொன்றுமில்லை. யாருக்குச் சவுகரியம் ஏற்பட வேண்டுமோ அவர்கட்கு ஏற்படப் போவதில்லையென்பது எனது முடிவு. ஏன்? அது முதலாளிகளால், கருப்பு முதலாளிகளால் வெள்ளை முதலாளிகளுக்கு விரோதமாய் ஏற்பட்ட இயக்கமாய் விட்டது. அதனைத் திருத்தியமைக்க மாட்டாமல் மகாத்மாவும் அவ்வியக்கத்தை விட்டு கிராமப்புனருத்தாரணத்திட்டத்திற்கு ஆயத்தம் செய்கிறார். இவ்வியக்கத்தைக் கவனிக்கையில் உள் நாட்டு முதலாளிகளின் சவுகரியத்திற்காக ஏழைகள் உழைக்க வேண்டிய காலமும் வரும் எனத் தெரிகிறது. இவர்களினின்றும் தப்பிக்க வேண்டி மறுபடியும் ஏழைகள் போராட வேண்டிவரும்.

### சமதர்மக் கொள்கைக்கு ஒரு திட்டம்

ஆகவே, சமதர்மக் கொள்கையென்று அறியக்கூடாத முறையில் எல்லா இயக்கத்தவர்

களும் நமக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் ஓர்திட்டம் செய்து வேலையாரம்பிக்கவேண்டும். அதற்கான வேலையைத் தமிழ் ஜில்லாக்களில் ஆரம்பிப்பது அவசியம். நீங்கள் செய்து கொண்டுவரும் முறையில் மாறுதல் செய்ய வேண்டியது அவசியம் என்பதையாவது உணர்கிறீர்களா? நான் சொல்வது தவறுதல் எனக் கண்டால் அதையாவது தெரிவியுங்கள். பிற பின், என்று எழுதியிருக்கிறார்.

இதை அனுசரித்து இன்னும் சிலரிடமிருந்தும் பல கடிதங்களும் வந்திருக்கின்றன. ஆனால், அவர்கள் எல்லோருமேபார்ப்பன நண்பர்கள் ஆதலால் அவற்றிற்கெல்லாம் இந்த பதில் பயன்படும் என்று எண்ணுகிறேன்.

ஈ. வெ. ரா. பதில் :

அன்புள்ள தோழர் அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் 24-11-34-ந் தேதி கடிதம் கிடைத்தது. அதை கவனித்துப் பார்த்தேன். அதில் ''எனது'' இயக்கத்தைப் பற்றி புகழ்ந்திருப்பது குறித்து மகிழ்கிறேன். ஆனால், அதில் நான் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தும் பிராமணர் அல்லாதார் என்கின்ற பிரச்சினையைக் கிளப்பினதும் தங்களுடைய சம்மதத்தைப் பெறவில்லை என்பது தெரிகின்றது. ஆனால், தாங்கள் சமதர்மத்தை மனப் பூர்வமாய் ஆதரிப்பவர்கள் என்றும் அதிலிருந்து தெரிகிறது.

நான் பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினையை இன்று நேற்று அல்லாமல் இந்த 10 வருட காலமாகவே ''கிளப்பிவிட்டு'' அதற்காக வேலை செய்து வருவது தாங்கள் அறிந்ததாகும்.

உண்மை தொண்டு எது?

இந்த நாட்டில் பாமர மக்களுக்காகவோ ஏழை மக்களுக்காகவோ ஒருவன் வேலை செய்யவேண்டுமானால் அவன் உண்மை தொண்டனாய் இருப்பானானால் அவனுக்கு முதலில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்சினைதான்முன்நிற்கும். ஏனெனில், அப்பிரச்சினையைக் கிளப்பிவிட்டு அதன்மீது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகச் செய்து விட்டால்தான் அத்தொண்டினது வேலை சிறிதாவது பயன்படக் கூடியதாகும்.

மற்றும் நமது பாமர மக்களின் குறைவு என்ன? அவர்களது தேவை என்ன? என்பதை ஒருவன் சாதிமத செல்வ அபிமானம் இல்லாமல் பார்ப்பானேயானால் அவனுடைய நேர்மையான நாட்டம் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற பிரச்னையில்தான் கொண்டு போய்விடும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ஒரு சமயம் நான் பார்ப்பனரல்லாதாராய் இருக்கிறேன் என்பதினால் எனக்கு இந்த அபிப்பிராயம் தோன்றிற்றோ என்பது சம்சயத்துக்கு இடமுண்டாக்கக் கூடியதாய் இருந்தாலும் இருக்கலாம்.

பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் வேறுபாடு

பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினை இன்றைய தினம் பார்ப்பனர் என்று சொல்லிக் கொள்ளும் சிலஆட்களைப் பொறுத்ததோ, அல்லது பார்ப்பனர் அல்லாதார் என்று சொல்லிக் கொள்ளும் சில ஆட்களையும் பொறுத்ததோ அல்ல என்பதையும், ஆனால் அது இன்று ஒரு பார்ப்பனன் என்று தன்னை சொல்லிக் கொள்கின்றவன் அவன் உணர்ச்சியில், ஒழுக்கத்தில் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் அதற்காக கவலைப்படாமல் தனக்கு என்ன என்ன உரிமை அனுபவிக்கிறான் என்பதையும், அதே மாதிரியாகவே தன்னை ஒரு பார்ப்பனரல்லாதவன் என்று கருதிக் கொண்டிருப்பவனோ சொல்லப்படுகின்றவனோ ஆன ஒருவன் தனக்கு என்ன உரிமை உண்டு என்று எண்ணிக்கொண்டிருக்கிறான் என்பதோடு வாழ்க்கையில் என்ன உரிமை அனுபவிக்கிறான் என்பதையும், மற்றும் பார்ப்பனன் என்று தன்னை சொல்லிக் கொள்ளுபவனால், அல்லாதவனுக்கு என்ன என்ன உரிமை—நிலைமை உண்டு என்று எழுதி வைத்த ஆதாரத்தையும், அமுலில் இருக்கும் அனுபவத்தையும் பொறுத்ததே ஒழிய வேறில்லை என்பதை தங்கள் ஞாபகத்துக்குக் கொண்டு வர நான் பணிவாய் ஆசைப்படுகின்றேன்.

ஆதலால், நான் பார்ப்பனர்—அல்லாதார் பிரச்னையில் எனது காலத்தைச் செலவழிப்பது குற்றம் என்று என்னால் கருத முடியவில்லை.

ஒரு மனிதன் சமதர்மக் கொள்கைக் காரனாய் இருப்பானானால், அவன் தனது உள்ளத்தில் மற்றொரு மனிதனை தனக்கு சமமாகவும் மற்றொரு மனிதனுக்கு தான் சமமானவனென்றும் கருதும்படியான ஒரு உணர்ச்சியைக் கொள்ளவில்லையானால் அல்லது கொள்ளும்படி செய்யவில்லையானால் சமதர்மத்தைப்பற்றி பேசும் பேச்சு எதற்கு என்பதும், அதற்காக பாடுபடுவது எதற்கு என்பதும் என் சிறிய புத்திக்கு விளங்கவில்லை.



# 1938லேயே அய்யாவின் சிந்தனை!

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக, சமத்துவம் அந்த (மேல்நாட்டு) சமூகத்திலே உண்டாக மார்க்கம் ஏற்பட்டு விட்டது. நாம் என்ன கூறினாலும் இனிமேல் நமது பின் சந்ததியார்கள் பழைய தொழில்முறை சாதிமுறை திட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி. உலகம் இன்று புதிய பாட திட்டத்தைக் கற்பித்துக் கொண்டு வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி



மூலமாகவே விமோசனம் ஏற்படும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. பழைமையான சகல முறைகளிலும் மாறி சகல துறைகளிலும் புதுமை தோன்றியிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் புதிய உலகம் காணப் போகிறோம்.

மக்கள் பிறப்பதுகூட இனி அருமையாகத்தான் போய்விடும். அதுபோலவே சாவும் இனி குறைந்துவிடும். மனிதன் வெகு சுலபமாக நூறு ஆண்டு வாழ முடியும். யாரும் சராசரி ஒன்று இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறமாட்டார்கள். ஆண்—பெண் புணர்ச்சிக்கும் பிள்ளைப் பேறுக்கும் சம்பந்தமில்லாமலே போய்விடும். வேலை செய்கிற குதிரைகள் வேறு, குட்டிபோடுகிற—போடச் செய்கிற குதிரை வேறு, என்கிற மாதிரி மனித சமூகத்தில் இருக்கும் பிள்ளை பெறும் தொல்லை—வளர்க்கும் தொல்லை, அதற்கு சொத்து, சுகம் தேடும் தொல்லை ஒழிந்து போகும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு. மனிதன் அறிவு பெற்றதற்குக் காரணம் சாமி விளையாட்டும் பிள்ளைகள் உண்டாக்கும் விவசாயப் பண்ணையும்தானா?

மனித அறிவின் எல்லையைக் காண வேண்டாமா? செல்வம்—தரித்திரம், சுகம்—கஷ்டம், கவலை—தொல்லை இதுதானா மனிதனின் கதி மோட்சம்?

பெண்கள்

பெண்களை ஆண்கள் நடத்துகிற மாதிரியும், படுத்துகிற பாடும்போல் உலகத்தில் வேறு எந்த ஜீவனாவது செய்கிறதா? பெண்களிடம் சக்தி சொருபத்தையும், தெய்வத்தன்மையையும், காதல் களஞ்சியத்தையும், தாய்மையையும், அன்பையும் கண்ட ''பெரியார்கள்'' என்னும் மிருக சிகாமணிகள் பெண்களைப்பற்றி எப்படி எழுதி வைத்திருக்கிறார்கள்; எப்படி நடத்தும்படி எழுதி வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் உலகில் சுயமரியாதை உள்ள பெண்கள் குழந்தைகள் பெறவே மாட்டார்கள். அப்படி பெற நேர்ந்தாலும் பிறந்தது ஆண் குழந்தை என்று கண்டால் கழுத்தைத் திருகி விடுவார்கள். இது விஷயத்தில் மனிதன் திருத்தப்பட முடியாவிட்டால் எந்த மனிதனும் மனிதத் தன்மைக்கு அருகதையற்றவன் என்றே சொல்லுவேன்''

(''குடி அரசு'' 30-1-1938)

ஜஸ்டிஸ் கட்சியிலிருப்பவர்கள் அயோக்கியர்களாக இருக்கலாம். காங்கிரசில் இருப்பவர்கள் யோக்கியர்களாக இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளுங்கள்.

ஆனால், ஜஸ்டிஸ் கட்சி கொள்கைகள் மனித சமூகத்தின் சமுதாய வாழ்க்கையைப் பொறுத்தவரையிலும் சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பனரல்லாதார் உரிமை என்பதை ஆதரிக்கின்றது என்பதும், அந்தப்படி ஆதரிக்கவில்லை என்றாலும் எதிர்க்கவில்லை என்பதும் எனது அபிப்பிராயம்.

காங்கிரஸ்—முதலாளிகள் கட்சி

அதுபோலவே, காங்கிரசைப் பற்றியும், அதன் கொள்கைகள் மனித சமூகத்தைப்

பொறுத்தவரையிலும் தாங்கள் குறிப்பிட்டிருப்பதுபோலவே முதலாளிகளுடையவும், நிலச்சுவான்களுடையவும் நன்மைக்கு ஏற்பட்டது என்பதோடு பார்ப்பனீயத்துக்கும் (அதாவது நான் எந்த பார்ப்பனீயம் என்று மேலே சொன்னேனோ அதற்கும்) முழு ஆதரவும் பலத்தையும் கொடுத்து வருகின்றது—அதற்கு ஆகவே பெரிதும் பாடுபடுகின்றது என்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

மேலும், தாங்கள் குறிப்பிட்டது போல் நான் சமதர்மக்கொள்கையை அறியாதவனாக இருந்தாலும் இருக்கலாம் அல்லது அறிந்திருந்தும் அதில் நம்பிக்கை இல்லாதவனாக இருந்தாலும் இருக்கலாம்.

ஆனால், பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயங்களில் உள்ள குறைகளும் ஏற்படவேண்டிய மாறுதலும் என்ன என்று



நான் கருதிக் கொண்டிருக்கின்றேனோ அவற்றில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை என்பதோடு அவ்வெண்ணம் நாளுக்கு நாள் பலப்பட்டும் வருகின்றது.

*ஏழை—பணக்காரன் தன்மை சாதியால் வந்ததே!*

நிற்க, மற்றொரு விஷயம், ஏழை—பணக்காரன் என்பதில் தாங்கள் கொண்டுள்ள கருத்துக்கும் நான் கொண்டுள்ள கருத்துக்கும் வித்தியாசமிருக்கும் போல் தோன்றுகின்றது. இந்தியாவில் ஏழை—பணக்காரத் தன்மை சாதியைப் பொறுத்தே அனேகமாய் 100க்கு 95 பங்காய் இருந்து வருகின்றது.

பணக்காரன்—ஏழை என்பது இந்தியாவில் பெரிதும் பிறவியினால் ஏற்பட்ட சாதியினாலேயே ஏற்பட்டிருக்கிறது.

பணக்காரன்—ஏழை என்பதற்கு நான் கொண்டிருக்கும் அர்த்தம் பாடுபடாமல் சரீரத்தால் உழைக்காமல் வாழ்கின்றவன் பணக்காரன் என்றும் அதாவது சரீரத்தினால் உழைப்பது பாவம், அல்லது தோஷம் என்று எந்த எந்த சாதியானுக்கு உரிமை இருக்கின்றதோ அவனெல்லாம் செல்வவான் கூட்டத்தில் சேர்ந்தவன் என்றும், எவனெவன் உழைக்கக் கட்டுப்பட்டவன் என்றும் மற்றவனுக்கு உழைத்துப்போட வேண்டியவன் என்றும் உரிமையோடு இருக்கிறானோ அவனையும், எவனெவன் உழைத்துக் கஷ்டப்பட்டும் போதிய சுகமில்லாமல் இருக்கிறானோ அவனையும் ஏழை என்றும் நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

இந்த விஷயத்தை வாக்கு சாமர்த்தியத்தாலும் அல்லது "இதைவிட முக்கியமானது வேறு ஒரு காரியம்" என்று காட்டுவதாலும் எதிர்க்கலாம் என்றாலும் இதை மாற்ற வேண்டியதே பிரதானம் என்றும், சமதர்மத்தில் இதுவும் ஒரு கடுகளவாவது சேர்ந்ததாய் இருக்கலாம் என்றும் நான் கருதுகின்றேன்.

"அதோடு ருஷியாவில் இருக்கிற மாதிரியான சமதர்மக்கொள்கையை இங்கும் புகுத்த வேண்டும்" என்பது எனது கருத்தல்ல என்பதோடு அது சரியா தப்பா என்பதைப் பற்றியும் நான் இப்போது வாதம் செய்யவும் விருப்பவில்லை.

ஆதலால், நமது பிரச்னைகளில் ருஷியாவை மறந்துவிட்டு நம் கண்ணெதிரில் நமது அனுபவத்தில் உள்ள விஷயங்களையும் நமது புத்திக்கு சரி என்று தோன்றும் விஷயங்களையும் பற்றியே பேசுவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*நாயக்கர், முதலியார் சண்டை—உத்தியோக சண்டையே!*

ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள முதலியார், நாயக்கர் சண்டை சாதியைப் பொறுத்ததல்ல. ஆனால், உத்தியோகங்களுக்குப் பெரிய சம்பளமும், கவுரவமும் இருப்பதால் அதை பெறுவதற்கான முயற்சிகள் நாயக்கர், முதலியார், செட்டியாராக இருந்து வருகின்றதே ஒழிய வேறில்லை.

பார்ப்பனர்களைப் பார்த்து அவர்களைப் பின்பற்றுகின்றது என்கின்ற முறையில் ஏதாவது சிறிது உயர்வு—தாழ்வு கொண்டாடும் உணர்ச்சி இருந்தாலும் இருக்கலாம் என்றாலும் அதை வெளிப்படையாய் கவனிக்க வேண்டிய அளவு நான் காண முடியவில்லை. ஆதலால், அதைப்பற்றி நான் கஷ்டப்படவில்லை. ஏனெனில், உத்தியோக சம்பளம் குறைந்து அதற்கு சரியான பொறுப்பும் நிர்ணயமும் ஏற்படும்போது இந்த சண்டைகள் மறைந்துவிடும் என்பது உறுதி. மற்ற பெயர்களுடன் இருக்கும் அரசியல் கட்சிகளும் மறைந்துவிடும். ஆனால், பிறவிப் பெருமைக்காகவும் உரிமைக்காகவும் இருந்து வரும் சண்டைகள் அப்பெருமையும் உரிமையும் ஒழிந்தாலல்லாது ஒரு நாளும் மறைந்துவிடாது என்றே கருதுகின்றேன்.

அசம்பளி தேர்தல் விஷயத்தைப்பற்றி தாங்கள் குறிப்பிட்டிருப்பது சரிதான்என்றாலும் இந்த வெற்றி காந்தியாருக்கு மிக மிக ஆனந்தமாய்விட்டது.

*காந்தியின் முதலாளித்துவ காவல்!*

நிற்க, காங்கிரசின் போக்கையோ, கொள்கையையோ திருத்தி அமைக்க மாட்டாமல் "மகாத்மா"வும் அதைவிட்டு விலகிவிட்டார் என்றும் அவர் கிராமப்புனருத்தாரண வேலைக்குப் போயிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர் காங்கிரசிலிருந்தாலும் சரி கிராமப்புனருத்தாரணத்தில் இருந்தாலும் சரி அவர் ஜீவன் உள்ளவரையில் பார்ப்பனர்களுக்கோ மற்றும் வெள்ளை அல்லது கருப்பு முதலாளிகளுக்கோ இரும்புக் கூடு போன்ற காவலாளியாய் இருப்பாரே ஒழிய மற்றபடி அவரால் ஒரு கடுகளவு மாறுதலும் ஏற்படப் போவதில்லை. அவரது கிராமப் புனருத்தாரணம் என்பது வருணாச்சிரமப் புனருத்தாரணம்தான் என்பதை தயவு செய்து ஞாபகத்தில் வைத்து பலனை கவனித்து வரும்படி கோருகிறேன்.

கிராமப் புனருத்தாரணத்தின் பேரால் அவர் செய்யப் போவதாய் வெளிப்படுத்தி இருக்கும் திட்டங்கள் ஏழை மக்களுக்கும் இழிவுபடுத்தப்பட்ட மக்களுக்கும் என்னபலனை கொடுக்கக்கூடும் என்பது எனக்கு விளங்குவது போலவே தங்களுக்கும் விளங்கக்கூடும் என்று நினைக்கிறேன்.

*மாறுதல் அவசியமே!*

முடிவாக தாங்கள் குறிப்பிட்டபடி நான் செய்துகொண்டு வரும் வேலை முறையில் மாறுதல் செய்ய வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். லட்சியத்தில் மாறுதலில்லாமல் வேலை முறையில் அடிக்கடி மாறுதல் செய்ய வேண்டியதும் செய்து வருவதும் குற்றமாகாது. லக்ஷியம்கூட சில சமயங்களில் திருத்த வேண்டிய அவசியத்துக்கு உட்பட்டு விடுகின்றதும் உண்டு. ஆனாலும், இப்போதைக்கு லட்சியத்தை மாற்ற வேண்டிய அவசியமிருப்பதாக தோன்றவில்லை. முறைகளில் தாங்கள் எழுதியபடியே கூடிய சீக்கிரம் மற்ற தோழர்கள் பலரையும் கலந்து ஏதாவது மாறுதல் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

எப்படி இருந்தாலும் காயம் அசைவில் இருக்கும்வரை ஏதோ ஒரு வேலை செய்தாக வேண்டும் அல்லவா? அந்த வேலையானது மற்றொருவருக்கு அடிமைப்பட்டதாகவோ அல்லது மற்றொருவருடைய அபிப்பிராயத்துக்கு அடிமைப்பட்டதாகவோ இல்லாமல்



கூடியவரை தன் தன் புத்திக்கு சரியென்று தோன்றிய லட்சியத்துடன் நடந்து செல்ல வேண்டியதைத்தான் நான் சுயமரியாதையோடு கூடியவாழ்வு என்று கருதிஇருக்கிறேன். ஆதலால், நான் எனது உண்மை அபிப்பிராயங்களை தங்களுக்கு தெரிவித்திருக்கிறேன் என்ற அளவிலாவது தாங்கள் நம்பிக்கை வைப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

*தங்கள் பட்சம் மறவாத தோழர்*

*ஈ. வெ. ராமசாமி*

('பகுத்தறிவு' 9-12-1934)

# கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கி லிமிடெட்

**நெ. அய். அய். 106**

அலுவலக தொலைபேசி எண் 34. தலைவர் இல்லம் 44.

## எங்களது வங்கியில் கீழ்கண்ட வட்டி விகிதத்தில் டெபாசிட்டுகள் பெற்றுக் கொள்கின்றோம்

(1) நிரந்தர சேமிப்பு வட்டி விகிதம்

1. 3 மாதங்கள் வரை 3½%
2. 6 மாதங்கள் வரை 5%
3. 12 மாதங்கள் வரை 6½%
4. 37 மாதங்களுக்கு மேல் 60 மாதங்கள் வரை 8%
5. 61 மாதங்களும் அதற்கு மேலும் 9½%

(2) சேமிப்பு கணக்கு 5%

உறுப்பினர்களுக்கு பயிர் சிலவிற்கு, விவசாய பயிர்களுக்கு ஏற்றார் போல் குறுகிய கால கடன் வழங்குகின்றோம். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நகை அடமானத்தின் பேரில் கடன் வழங்குகின்றோம்.

தமிழகம் முழுவதும் குறைந்த கட்டணத்தில் பில்ஸ் டிராப்டு வழங்குவதுடன், வசூல் செய்து தருகின்றோம்.

உறுப்பினர்களுக்கும் ஏனையோர்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கழகத்தாரால் வழங்கப்படும் தரமான உரங்களை விற்பனை செய்து வருகின்றோம்.

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தக பாரங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றோம்.

நகரப் பொது மக்களுக்குத் தேவையான தரமான சுத்தமான பால் விற்பனை செய்கின்றோம்.

இன்றே உங்களது தேவைக்கு வங்கியாரை அணுகுங்கள்!

கி. வே. செல்வராசு
செயலாளர்

கோ. சாமிதுரை M.A B.L.
தலைவர்

கு. செயச்சந்திரன் B.A. B L.
பொருளாளர்

தே. கேசவலு
உபதலைவர்

து. முத்து
இயக்குநர்

இரா. மாயகிருட்டினன்
இயக்குநர்


























14




15





16



# கடந்த பெரியாராண்டில் கழகடைரி

லண்டனில்...

17-9-78 : அய்யா, அண்ணா பிறந்த நாள் விழாக்களை லண்டன்வாழ் தமிழர்கள் சிறப்புற எடுத்தனர்.

ஈழ நாட்டின் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினரான நவரத்தினா இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

ஆந்திரத்தில்...

17-9-78 : ஆந்திர மாநிலத்து விஜய வாடா நகரின் 'நாத்திக மையத்'தில் அய்யா நூற்றாண்டு விழா சிறப்புற கொண்டாடப் பட்டது.

மறைந்த மாமனிதர் 'கோரா' அவர்களால் உருவாக்கப்பட்டது இந்த 'நாத்திக மையம்!'

கூட்டத்திற்கு திருமதி சரசுவதி கோரா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

'நாத்திக மையத்'து டாக்டர் விஜயம், டாக்டர் வெங்கடேசுவரன், கம்யூனிஸ்ட் தலைவர் பால், ராமமூர்த்தி, 'நாத்திக மித்ர மண்டல்' என்ற அமைப்பின் தலைவர் டாக்டர் ஜி. சமரன், 'நாத்திக மார்க்கம்' ஏட்டின் ஆசிரியர் திருமதி மைத்ரா ஆகியோர் அய்யாவின் அருந்தொண்டுகளை விளக்கிப் பேசினர்.

குவைத்தில்...

17-9-78 : பல நாட்டுத் தமிழர் பங்கேற்ற அய்யா நூற்றாண்டு விழா—

குவைத்தில் உள்ள தந்தை பெரியார் நூலகத்தில் சிறப்புறத் துவங்கியது.

தோழர். எம். ராதாகிருஷ்ணன், அய்யா படத்தைத் திறந்து வைத்தார்.

பிற்பகலில் மாபெரும் நூற்றாண்டு விழா ஊர்வலம் நடந்தது.

மரியா கார்டனில் மாபெரும் பொதுக் கூட்டம். பங்கேற்றோர் பல்லாயிரவர்.

அய்யா விழாவையொட்டி குவைத் கழகத் தோழர் எஸ். செல்லபெருமாள் அவர்கள், ஆயிரம் பேருக்கு விருந்து படைத்தார்.

சாதிப் பெயர் நீக்க மறியல்

18-9-78 : அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் ஓட்டல்களின் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர்களை நீக்காவிடில் அந்த ஓட்டல்கள் முன் மறியல் கிளர்ச்சி நடத்தப்படும் என்ற போராட்ட அறிவிப்பை, கழகப் பொதுச் செயலாளர் அவர்கள்—நூற்றாண்டு விழா இறுதியுரையில் விடுத்தார்கள்.

'பிராமணாள்' பெயர் எடுக்க ஒப்புதல்

20-9-78 : ஓட்டல்களில் 'பிராமணாள்' பெயரை நீக்கக்கோரி கழகப் பொதுச் செயலாளர் விடுத்த வேண்டுகோளை ஏற்று—தமிழ்நாடு ஓட்டல் அதிபர்கள் சங்கத் தலைவர் எம். பி. புருஷோத்தமன்—

கழகப் பொதுச் செயலாளருக்கு கடிதம் எழுதினார்.

''எங்கள் சங்கம் ஓர் சுற்றறிக்கையில்—

எந்த உணவு விடுதியிலாவது 'பிராமணாள்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் தற்கால நிலைமைக்கு ஏற்ப அந்தச் சொல்லை நீக்குமாறு கேட்டுக்கொண்டு இருக்கிறோம்'' என தனது கடிதத்தில் புருஷோத்தமன் குறிப்பிட்டிருந்தார்.

### பொதுச்செயலாளரின் ஈழநாட்டுப் பயணம்

23-9-78: சென்னையில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு அய்யாவின் கொள்கைச் சுடரேந்தி கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் இன்று பிற்பகல் ஒன்றே முக்கால் மணிக்கு விமானம் மூலம் இலங்கைக்கு பயணமானார்கள்.

இலங்கையில் 'தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழு'வினரின் அன்பு அழைப்பையேற்று ஒருவாரப் பயணமாய் புறப்பட்ட பொதுச் செயலாளரவர்களை கழகத் தோழர்கள் விமான நிலையத்தில் உற்சாகமாக வழியனுப்பி வைத்தனர்.

### ஈழத்தில் மகத்தான வரவேற்பு

23-9-78: பிற்பகல் நான்கு மணியளவில் கொழும்பு விமான நிலையம் வந்தடைந்த கழகப் பொதுச் செயலாளர் அவர்களை—

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை இலங்கையில் ஏற்பாடு செய்திருந்த 'கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்ற'த்தின் பொறுப்பாளர்களான தோழர்கள் நவசோதி எம்.ஏ., சந்திரசேகரன் பி.எஸ்.சி., எஸ்.பி.பாண்டியன், காசிநாதன், கவிஞர் சிவராசன், கம்பளதாசன் மற்றும் பல தோழர்களும் வரவேற்றனர்.

மாலை அய்ந்து மணி அளவில் இலங்கையின் பிரபல நாளேடான 'வீரகேசரி' நிருபர் பேட்டி கண்டார்.

### திராவிடக் கழல்

இரவு ஏழு மணியளவில்—இலங்கை திராவிடர் கழகத் தலைவராக அரும்பணியாற்றி மறைந்த தோழர் கு. மா. திராவிடக் கழல் அவர்களது இல்லம் சென்ற பொதுச் செயலாளர், தனது இரங்கலை தெரிவித்தார். உடன் 'சங்கம்' ஏட்டின் ஆசிரியர் தோழர் மா. செ. அருளும் மற்றும்] பல தோழர்களும் சென்றிருந்தனர்.



ஈழத் தந்தை செல்வா நினைவிடத்தில் கழகப் பொதுச்செயலாளர் மலர் வளையம்—யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகீசுவரன்.





திருச்சியில் தந்தை பெரியார் கல்வி நிறுவனங்களின் சார்பில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா. அய்யா தங்கி இருந்த அறையை கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் பார்வையிடுகிறார். விழாவில் அன்னை மணியம்மையார் படத்தை பேராசிரியர் மா. நன்னன் திறந்துவைத்தார். (4-11-78)

### டில்லியில் அய்யா படம்

24-9-78: டில்லியில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு இல்லத்தில்—

தந்தை பெரியாரவர்களின் படத்தை தமிழ்நாடு முதல்வர் எம்.ஜி.ஆர். திறந்து வைத்தார்.

### கொழும்பில்...

24-9-78: அய்யா நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் கொழும்பு சரசுவதி மன்றத்தில், இரண்டாம் நாளாய் எழுச்சியுடன் துவங்கின.

கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத் தலைவர் க. நவசோதி அவர்கள் இந்நிகழ்ச்சிகட்குத் தலைமை வகித்தார்.

இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் தோழர் மு. சிவசிதம்பரம் எம். பி., வரவேற்புரையாற்றினார்.

கருத்தரங்கு, கவியரங்க நிகழ்ச்சிகளும் நடந்தன.

இறுதியில் கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் இரவு 8 மணியிலிருந்து ஒன்பதரை மணிவரை சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

### 'சுதந்திரன்' ஏடு வரவேற்பு

24-9-78: இலங்கைப் பயணம் மேற்கொண்டுள்ள கழகப் பொதுச் செயலாளர் அவர்களை வரவேற்று ஈழநாட்டின் நாளேடான 'சுதந்திரன்' ஏடு இன்று எழுதியது வருமாறு:

''திராவிடர் கழகத்தின் இப்போதைய பொதுச் செயலாளரும், பெரியாரின் பிரதம தொண்டரும், 'விடுதலை' இதழின் ஆசிரியருமான திரு. கி. வீரமணி, 24-9-78 ஞாயிற்றுக் கிழமை சிங்கள ஸ்ரீலங்காவின் தலைநகராகிய கொழும்புவுக்கு வருகிறார்.

...சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கும் இளைஞரான திரு. கி. வீரமணி அவர்கள் அண்மையில் சென்னையில் நடைபெற்ற அய்ந்தாவது இந்தி எதிர்ப்பு மாநாட்டை

நடத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தவரென்பது குறிப்பிடத் தக்கது.

கி. வீரமணி அவர்களை 35 லட்சம் தமிழ் மக்களின் சார்பில் 'சுதந்திரன்' வரவேற்கிறது.''

## இடைவிடா சந்திப்புகள்

24-9-78 : கழகத் தோழர்களும் மற்றும் பல்வேறு தரப்புத் தோழர்களும் கழகப்பொதுச் செயலாளரைச் சந்தித்து உரையாடினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் சிவசிதம்பரம் எம். பி., மற்றும் இந்த இயக்கத்தின் இளைஞர் பிரிவு செயலாளர் வண்ணை ஆனந்தன் ஆகியோரும் பொதுச்செயலாளர் அவர்களைச் சந்தித்தனர்.

12-30மணி அளவில் 'நவசோதி' 'ஈழநாடு' ஆகிய ஏடுகளின் செய்தியாளர்கள், பொதுச் செயலாளர் அவர்களைப் பேட்டி கண்டனர்.

பகல் விருந்து—தோழர் நவசோதி இல்லத்தில்!

மாலை அய்ந்து மணி அளவில் கொழும்பு பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த டாக்டர் கோவூர் அரங்கில் தந்தை பெரியார் நூற்றாண்டுவிழா நிகழ்ச்சிகள் துவங்கின.

மண்டபம் பிதுங்க மக்கள் நிறைந்தனர்.

பல தோழர்களின் கருத்துரைகட்குப்பின்-கவியரங்கம் நடந்தது.

கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றத்தினர் தயாரித்துப் பதிப்பித்த 'பெரியார் நூற்றாண்டு விழாமலரை' கழகப் பொதுச் செயலாளரவர்கள் வெளியிட்டார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் தோழர் எம். எல். செல்லசாமியும், ஏராளமான பத்திரிகையாளர்களும் இவ் விழாவில் பங்கேற்றனர்.

## இலங்கை வானொலியில்

25-9-78 : நேற்று நடந்த அய்யா நூற்றாண்டு விழா நிகழ்ச்சி வர்ணனையோடு, கழகப்பொதுச் செயலாளரின் உரைச் சிதறலையும் இலங்கை வானொலி இன்று ஒலிபரப்பியது.

காலை 9-40 மணிக்கு, இலங்கை சிறு தொழில்துறை அமைச்சரும் பிரபல தொழிற் சங்கவாதியுமான எஸ். தொண்டைமான் அவர்களை—அன்னாரது இயக்க அலுவலகத்தில் பொதுச்செயலாளரவர்கள் சந்தித்தார்.

## வித்தகன் (அ. தி. மு க.)

இலங்கையின் அண்ணா தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் வித்தகன் காலை 11 மணி அளவில் பொதுச்செயலாளர் அவர்களைச் சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்; பல புத்தகங்களையும் அவர் அன்பளிப்பாக வழங்கினார்.

மாலை நான்கு மணி அளவில், தமிழர் விடுதலை கூட்டணி இயக்க இளைஞர்கள் பொதுச்செயலாளரைச் சந்தித்து—பெரியார் நூலக ஆய்வகத்துக்கு அன்பளிப்பாக பல நூல்களை வழங்கினர்.



கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில்... ...கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி முழக்கம்

மாலை ஆறு மணி அளவில் கொழும்பின் உச்சாணி ஓட்டலான 'ஹாலிடே இன்'னின் முதல் மாடியில்—வேலனை வீரசிங்கம் ஏற்பாட்டில் பத்திரிகையாளர் சந்திப்பு நடந்தது.

வீரகேசரி, தினகரன், தினபதி, மித்திரன், ஈழநாடு, சுதந்திரன், சிந்தாமணி, கலாவல்லி மற்றும் பல ஏடுகளின் செய்தியாளர்கள் மட்டுமன்றி, இந்த ஏடுகளின் செய்தியாசிரியர்களும், உதவி ஆசிரியர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றது குறிப்பிற்குரியது.

கேள்வி—பதில்கள் நிகழ்ச்சி ஒன்றரை மணி நேரம் நடந்தது.

பேட்டிகள்

26-9-78 : பொதுச்செயலாளரவர்களை பல்வேறு தரப்பு தோழர்களும் சந்தித்து கலந்துரையாடிச் சென்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து தென்சென்னை மாவட்ட தி. க. மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பார்வதிகணேசனும், கழகத்தோழர் கணேசனும் இலங்கை வந்து பொதுச்செயலாளர் அவர்களோடு பயணத்தில் பங்கேற்றனர்!

பகல் ஒரு மணி அளவில் திரு. சிவசிதம்பரம் அவர்கள் 'ஹோட்டல் பல்மேரா'வில் பொதுச்செயலாளருக்கு விருந்தளித்தார்.

இவ்விருந்தில் ஏராளமான பிரமுகர்களும், கழகத்தோழர்களும் பங்கேற்றனர்.

மாலையில் மேலும் பல தமிழ் ஏடுகளின் செய்தியாளர்கள் பொதுச்செயலாளரவர்களைப் பேட்டி கண்டனர்.

முன்னிரவு ஏழுமணி அளவில் கொழும்பு மருதானை 'ஹோட்டல் டி பாரிசில்' இலங்கை திராவிடர் கழக சார்பிலும், 'திராவிடக்கழல் பகுத்தறிவுமன்ற' சார்பிலும் கழகப் பொதுச் செயலாளருக்கு தேனீர் விருந்தும் நடந்தது.

பகுத்தறிவுக் கலந்துரையாடலும் இத்தோடு இணைந்தது.

'சிந்தாமணி' ஏட்டின் செய்தியாளர் பொதுச்செயலாளரை பேட்டிகண்டார்.



திருச்சி வழக்கறிஞர்கள் சங்கத்தில் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் திரு. டி. ராமபிரசாத், தந்தை பெரியார் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். (18-11-78)







9-12-78 அன்று திருச்சி பெரியார் மாளிகையில் நடைபெற்ற திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்.

## யாழ் நோக்கி...

27-9-78 : யாழ்ப்பாணம் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக—காலை அய்ந்து மணி அளவில் பொதுச்செயலாளரவர்களும் தோழர்களும் 'உத்தரதேவி' எக்ஸ்பிரசில் பயணமாயினர்.

ஏராளமான தோழர்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வழி அனுப்பி வைத்தனர்.

பகல் 1-40மணிக்கு, யாழ்ப்பாணம் 'புகை ரத நிலையத்தை' வந்தடைந்த பொதுச்செயலாளர் அவர்கட்கும், தோழர்கட்கும் எழுச்சிமயமான வரவேற்பு தரப்பட்டது.

## செல்வா நினைவிடத்தில்...

புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்ட பொதுச்செயலாளர், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலகம் சென்று, அங்கிருந்த ஈழத் தந்தை செல்வா, அண்ணா ஆகியோரின் படங்கட்கு மாலைகளை அணிவித்தார்கள்.

பின்னர், திரு. செல்வா அவர்கள் நினைவிடம்போய் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

தமிழாய்வு மாநாட்டில் உயிர் தந்த ஒன்பது வீரர்கள் நினைவிடத்திலும் பொதுச்செயலாளர் அவர்கள் மலர்வளையம் வைத்தார்கள்.

அருப்புக்கோட்டை கைலாசம் அறக்கட்டளை சார்பில், பேராசிரியர் ந. இராமநாதன் எம்.ஏ., பி.ஓ.எல். அவர்கட்கு கழகப் பொதுச்செயலாளர், ''பெரியார் பேருரையாளர்'' என்று பொறிக்கப்பட்டுள்ள தங்க மெடல் அணிவிக்கிறார்.
சென்னை 26-12-78.







கோலாலம்பூர் போய்ச் சேர்ந்த கழகப் பொதுச்செயலாளருக்கு விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு. மலேசியா திராவிடர் கழகத் தலைவர் கே. ஆர். இராமசாமி மாலை சூட்டி வரவேற்றார். (13-1-79)

மாலையில் பல தோழர்களுடன் கலந்துரையாடல்; இடைவிடா சந்திப்புகள்.

மாலை அய்ந்து மணியளவில் பொன். சிவகுமாரன் சிலை உடைக்கப்பட்ட இடத்தை பொதுச்செயலாளர் பார்வையிட்டார்.

'யாழ் திறந்தவெளி அரங்கில்' யாழ் திருக்குறள் முன்னணிக் கழகம் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் பொதுக்கூட்டம் மாலை அய்ந்தரை மணிக்குத் துவங்கியது.

கழகப்பொதுச்செயலாளரவர்கள் பேருரைக்காக முண்டியடித்து மக்கள் அலைபாய்ந்தது கண்கொள்ளாக் காட்சி.

## யாழிலிருந்து...

28-9-78 : வல்வட்டித்துறையில்தமிழர்கள் திரண்டு பொதுச்செயலாளரை வரவேற்றனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிகழ்ச்சியிலும், இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாணம் பிரிவாக இயங்கும் பல்கலைக்கழகப் பேரவை (யாழ் வளாகம்) நிகழ்ச்சியிலும் பொதுச்செயலாளர் பங்கேற்றார்.

13

மாலை நாலரை மணியளவில்—யாழ்நகர் விட்டு கொழும்புக்கு பொதுச்செயலாளர் திரும்பினார்.

## பிரியாவிடை......

29-9-78 : பல இடங்களில் பொதுச் செயலாளருக்கு வரவேற்பு நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள்.

மாலை அய்ந்தரை மணியளவில் கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் பொதுச் செயலாளருக்கு,

சுயமரியாதைச் சங்கங்களின் சார்பாக பொதுவரவேற்பு தரப்பட்டது.

இது ஒரு பிரியாவிடை நிகழ்ச்சி.

## 'வைக்கமதி' பெற்ற முதற் பரிசு

27-9-78 : திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையில் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புடன் நடந்தது.

இவ்விழாவையொட்டி, நல்ல முறையில் வளர்க்கப்படும் குழந்தைகட்கான தேர்வுப் போட்டி நடந்தது.

இப்போட்டியில்—

பெரியார்-மணியம்மை அறக்கட்டளை சார்பில் திருச்சி பெரியார் மாளிகையில் நடத்தப் படும் பெரியார்-மணியம்மை குழந்தைகள் காப்பகக் குழந்தையான 'வைக்கமதி'க்கு முதற் பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் சவுந்தரராசன் அவர்கள்—

"அய்யா அவர்களிடம் சேர்ந்த செல்வம் எல்லாம் மக்கள் நல்வாழ்வுக்கே பயன்படு கிறது" என பெருமிதப்பட்டார்.

### நூற்றாண்டு முழுதும் 'இராவண காவியம்'

29-9-78 : பெரியார் பகுத்தறிவு நூலக வாசகர்வட்டத்தின் சார்பில் 'இராவண காவியத் தொடர் சொற்பொழிவு' மாலை ஆறரை மணி யளவில் பெரியார் திடலில் துவங்கியது.

வாசகர் வட்ட பொறுப்பாளர் தோழர் சண்முகம் வரவேற்புரையாற்றினார். தலைமை —பேராசிரியர் நன்னன்.

இராவண காவியத் தொடர் சொற்பொழி வாளர் 'சிலம்பொலி' செல்லப்பன் அவர்கள்— அய்யா நூற்றாண்டான இந்த ஆண்டு முழுதும் சொற்பொழிவைத் தொடர்வதாய் அறிவித்தார்.

### பெரியார் பகுத்தறிவுக் கழகம் அமைவு

30-9-78 : பொதுச் செயலாளரவர்கள் தங்கியிருந்த 35, ஆல்ஸ்டோப்ஸ் வீதி, கொழும்பு—12 ல், இன்று காலை 11 மணி அளவில் 'இலங்கை பெரியார் பகுத்தறிவுக் கழக' அமைப்புக்கூட்டம் சிறப்புற நடந்தது.

கூட்டத்தலைமை பொதுச்செயலாளர்.

சமுதாய சீர்திருத்தப் பிரசாரம், சுயமரியாதைப் பிரசாரம் ஆகிய கைமாறற்ற பணிகளை இலங்கையில் செய்வோம் என தோழர்கள் சூளுரை மேற்கொண்டனர்.

பிற்பகல் மூன்று மணியளவில்—

இலங்கைத் தோழர்களின் பிரியாவிடை யுடன், பகுத்தறிவு மணம்பரப்பி தமிழகத்திற்கு பொதுச்செயலாளர் புறப்பட்டார்.

### பகுத்தறிவு மணம் பரப்பி பொதுச்செயலாளர் திரும்பினார்

30-9-78 : தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இலங்கை சென்ற கழகப் பொதுச்செயலாளர் அவர்கள்—

மாலை நான்கேமுக்கால் மணியளவில் விமானம் மூலம் சென்னை வந்தடைந்த போது ஏராளமான கழகத் தோழர்களால் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்கள். மலர் மற்றும் புத்தாடை அணிவிப்புகள் நெடுநேரம் நீடித்தன.

### நடைபாதைக் கோயில்கள்

7-10-78 : தென் சென்னை மாவட்ட தி. க. சார்பில்—

நடைபாதைக் கோயில்களை அகற்றக் கோரி மாபெரும் பொதுக்கூட்டம் தியாகராயர் நகர் பெரியார் நினைவுத் திடலில் நடந்தது.

### சென்னை மாவட்ட தி. க.

8-10-78 : இன்று நடந்த தென் சென்னை—வட சென்னை தி. க. நிர்வாக அமைப்புக் கூட்டத்தில்—

இரு பிரிவும் இணைந்து 'சென்னை மாவட்ட தி. க.' ஆனது.

### கண்கொடை

8-10-78 : சென்னை பகுத்தறிவாளர் கழகம் சார்பில் பெரியார் திடலில் இன்று நடந்த டாக்டர் கோவூர் மறைவு இரங்கற் கூட்டத்தில் —கண்கொடை வழங்குவதற்கான 57 தோழர் களின் ஒப்புதல் விண்ணப்பங்களை—பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் அகர்வாலா வின் பிரதிநிதி ஜானியிடம், கழகப் பொதுச் செயலாளரவர்கள் வழங்கினார்கள்.

### தீபாவளி கண்டன நாள்

9-10-78 : நாடெங்கும் 'தீபாவளி கண்டனநாள்' பொதுக்கூட்டங்களை நடத்த இன்று கழகப் பொதுச்செயலாளரவர்கள் அறிக்கை விடுத்தார்கள்.

தோழர்கள் பல ஊர்களில் தீபாவளி கண்டன நாள் பொதுக்கூட்டங்களை எழுச்சி யோடு நடத்தத் துவங்கினர்.

### திருச்சியில் கூடிய மாநில மாணவர் தி.க.

15-10-78 : ஞாயிறு காலை 10 மணி யளவில் மாநில திராவிடர் மாணவர் கழக நிர்வாகக் கூட்டம், திருச்சி பெரியார் மாளிகை யில் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி எம்.ஏ., பி.எல்., தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்ட முக்கிய தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.





இந்திராகாந்திக்கு கருப்புக் கொடி காட்டிய வழக்கில் விடுதலை செய்யப்பட்ட திராவிடர் கழகத் தோழர்கள். சென்னை 28-2-79.

கழகப் பொதுச்செயலாளர் ஆணைப்படி வரும் 23ம் தேதியிலிருந்து மாணவர் கழகச் சார்பாக, தாழ்த்தப்பட்டோர்—பிற்படுத்தப் பட்டோர் கல்வி—வேலை வாய்ப்பு குறித்து அரசுக்கு உரிமைகளை வலியுறுத்தி கோரிக்கை அளிப்பதெனவும், கோரிக்கைகளை விளக்கி கல்லூரி மாணவர்களிடையே பிரசாரம் செய்வ தெனவும் தீர்மானிக்கிறது.

## பம்பாயில் அய்யா விழா

19-10-78 : பம்பாயில் நடைபெறும் அய்யா விழாவில் பங்கேற்பதற்காக,

கழகப் பொதுச்செயலாளர், கழகப் பொருளாளர் திரு. கா. மா. குப்புசாமி, பிரசார அணி செயலாளர் என். செல்வேந்திரன், கலி. பூங்குன்றன் மற்றும் தோழர்கள் பம்பாய் பயணப்பட்டனர்.

## அய்யா வடித்தளித்த எழுத்துச் சீர்திருத்தம் : அரசு பிரகடனம்

தந்தை பெரியார் உருவாக்கிய தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையை தமிழ்நாடு அரசு ஏற்று இன்று ஆணையிட்டது.

அந்தக்குறிப்பு :

தமிழ்நாடு அரசு

பொது (செய்தி, மக்கள்-தொடர்பு)த்துறை

செய்தி வெளியீடு எண்-449 நாள் 19-10-78

பெரியார் மேற்கொண்ட
தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
தமிழ்நாடு அரசு அமுலாக்குகிறது.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்று, அதனை நடைமுறைப் படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ் மொழி எழுத்துத்தொகுதி எளிதில் கையாள முடியாதபடி அதிகமாக உள்ளதால், அச்சிடுதல், தட்டச்சு செய்தல் போன்றவற்றில் அதிக நேரம் விரயம் செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ் எழுத்துத் தொகுதி களில் சீர்திருத்தம் தேவை என பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள், தமது வாழ் நாளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையாண்டு வந்ததுடன் அதனை அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்று மிகவும் வலியுறுத்தி வந்தார். அதனை நடைமுறைப் படுத்தத்தக்க ஆணை வெளியிடவேண்டி பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவினர் அரசைக் கேட்டுக் கொண்டனர்.



பெரியார் நூற்றாண்டு விழாவினை 18—9—78 அன்று ஈரோட்டில் தொடங்கி வைத்து, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழக அரசு செயற்படுத்து மென தமிழக முதல்வர் அவர்கள் அறிவித் திருந்தார்கள். தமிழ் வளர்ச்சித்துறை இயக்கு நரும் பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களை உடனடியாக நடை முறைக்குக் கொண்டுவரத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி பரிந்துரை செய்துள்ளார்.

## அரசு அலுவலகங்களில்

தமிழக முதல்வர் அறிவிப்பிற்கிணங்கவும், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரின் பரிந்துரை ஏற்றும், சீர்திருத்திய எழுத்துக்களை உடனடி யாக மேற்கொள்ள வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சீர்திருத்திய தமிழ் எழுத்து வடிவங்கள் அனைத்து அரசு அலுவல கங்களிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், உள்ளாட்சித்துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும், தமிழக அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்களிலும் பின்பற்ற வேண்டும்.

## ஏடுகளுக்கு பரிந்துரை

தமிழ் மொழியில் வெளிவரும் நாளிதழ் களும், பருவ ஏடுகளும், தமிழ்ப்புத்தகம் வெளியிடுவோரும், அச்சிடுவோரும் சீர் திருத்திய தமிழ் எழுத்து வடிவங்களைக் கையாளவேண்டுமென அரசு பரிந்துரை செய்துள்ளது. தமிழக அரசு வெளியீடுகளிலும், அரசிதழ்களிலும் மற்றும் தமிழில் அச்சிடப்படும் எல்லா இனங்களிலும் சீர்திருத்திய எழுத்து வடிவங்கள் கையாளப்படும்.

| நடைமுறையிலுள்ள எழுத்துக்கள் | சீர்திருத்திய எழுத்துக்கள் |
|---|---|
| ஐ | அய் |
| ஔ | அவ் |
| ணா | ணா |
| றா | றா |
| னா | னா |
| ணை | ணை |
| லை | லை |
| ளை | ளை |
| னை | னை |
| ணொ | ணொ |
| றொ | றொ |
| னொ | னொ |
| ணோ | ணோ |
| றோ | றோ |
| னோ | னோ. |

## அமைப்புச் செயலாளர் சாமிதுரை கைது

23-10-78 : தொழிலாளர் பிரச்சனையில் தமிழ்நாடு அரசின் அணுகுமுறையை எதிர்த்து எதிர்க்கட்சிகள் பொது வேலை நிறுத்தம் மற்றும் முழு அடைப்பைக் கோரியிருந்தன.

இதையடுத்து முன் எச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் அரசின் காவல் துறை—

கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை அவர்களை இன்று கைது செய்தது.

இதேபோல் நாடெங்கும் தோழர்கள் கைதாயினர். (ஓரிரு நாளில் விடுவிக்கப்பட் டனர்).

## ஸ்டேட் வங்கி தலைவருக்கு பொதுச் செயலாளர் கடிதம்

3-11-78 : ஸ்டேட் வங்கியில் பார்ப்பனர் ஆதிக்கம் பெருகி வருவதை உணர்த்தி—

ஆதாரங்களோடு பொதுச் செயலாளர் அவர்கள் தமிழ் மாநிலப் பிரிவு-ஸ்டேட் வங்கித் தலைவருக்கு கடிதம் விடுத்தார்.

## பெரியார் சுயமரியாதைப் பிரசார கல்வி நிறுவனங்கள்

4-11-78 : இன்றிரவு ஏழுமணி அளவில், பெரியார் சுயமரியாதைப் பிரசார கல்வி நிறுவனங்கள் சார்பில் திருச்சி புத்தூர் பெரியார் மாளிகையில் அன்னை மணியம்மையார் திருமண மண்டபத்தில் அய்யா நூற்றாண்டு விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

## ரங்கூனில்...

5-11-78 : பர்மிய சுயமரியாதை இயக்க சார்பில்—

ரங்கூனைச் சேர்ந்த கம்பை திருநகர் கல்யாண வெங்கடேசப் பெருமாள் கோயில் அரங்கில் அய்யா நூற்றாண்டு விழா ஈடு எடுப் பற்ற முறையில் பிற்பகலில் கொண்டாடப் பட்டது.

அய்யா படத் திறப்பு, கருத்தரங்கம் இடம் பெற்றன.

பர்மிய சுயமரியாதை இயக்கத் தலைவர் வீரா. முனுசாமி விழா ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்தார்.

## டில்லியில் அய்யா விழா

8-11-78 : டில்லி நேரு பல்கலைக் கழகத்தில்—தந்தை பெரியார் நூற்றாண்டு விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

மாணவர் தோழர் டி. மனோகரன் விழா பொலிவுற காரணமாயிருந்தார்.

அய்யாவின் படத் திறப்பும் நடந்தது.

நிகழ்ச்சிக்கு பெருமளவில் மாணவர் களோடு பேராசிரியர்களும் திரண்டிருந்தனர்.

## திருச்சி வழக்கறிஞர்கள் சங்கத்தில் அய்யா படம்

18-11-78 : திருச்சி வழக்கறிஞர்கள் சங்க சார்பில், வழக்கறிஞர்கள் சங்கக் கட்டிடத்தில் அய்யா படத் திறப்பு நடந்தது.

திருச்சி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு. வாசுதேவன் தலைமையில் நடந்த இவ்விழாவில் வழக்கறிஞர்கள் திரண்டிருந் தனர்.

சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி டி. ராமபிரசாத்ராவ், அய்யா படத்தைத் திறந்து வைத்தார்.

குன்றக்குடி அடிகளார் விழாவில் சிறப்புரை யாற்றினார்.

## பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் : பொதுச்செயலாளர் தந்தி

22-11-78 : மத்திய அரசு நியமித்துள்ள பிற்படுத்தப்பட்டோர் குழுவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தி—உள்துறை ஸ்டேட் அமைச்சர் மண்டலுக்கு,

கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் இன்று தந்தி தந்தார்கள்.

'மத்திய அரசும், பிற்படுத்தப்பட்டோர் நலனும்' என்ற தலைப்பில்—

கழகப் பொதுச் செயலாளரவர்கள் வெளியிட்ட அறிக்கை இன்றைய 'விடுதலை' யில் வெளிவந்தது.

கர்நாடக மாநில அரசின் இட ஒதுக்கீடு முதலான ஒப்பீடுகள் இவ்வறிக்கையில் இடம் பெற்றன.

### பிரசாரத்தில் மேலும் ஒருபடி : நடமாடும் நூல் விற்பனையகம்

26-11-78 : நடமாடும் நூல் விற்பனை அகத்தின் துவக்க விழா சென்னை பெரியார் திடலில் நேற்று சிறப்புடன் நடந்தது.

சென்னை ப. க. துணைத்தலைவர் எஸ். சத்தியேந்திரன், இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

நடமாடும் நூல் விற்பனையகத்தை, முதுபெரும் பொதுவுடமைக் கட்சித் தோழர் நாகை முருகேசன் துவக்கிவைத்தார்.

கழகப் பொதுச்செயலாளர் சிறப்புரை ஆற்றினார்.

### கழகத் தோழர்கள் மீதான வழக்கு தள்ளுபடி

28-11-78 : 12-4-78-ல் கடவுளர்களுக்கு செருப்பு மாலை போட்டு தீச்சட்டி எடுத்ததாய்-

கோவை மாவட்டத்து பேரூர் தி. க. தோழர் சுப்பையன், தி. மு. க. தோழர் கோவிந்தராசு மற்றும் கிருஷ்ணசாமி, கணபதி ஆகியோர் மீது கண்டிப்புதூர் முத்துசாமி என்ற பக்தர் மேட்டுப்பாளையம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கு இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

### புயல் நிவாரணத்திற்கு

29-11-78 : தமிழகத்தில் புயல்-வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்கு நிவாரணமளிக்க, பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன சார்பில் மூவாயிரம் ரூபாய்க்கான காசோலையை—

நிதி அமைச்சர் மனோகரனிடம் கழகப் பொதுச்செயலாளர் வழங்கினார்.

### புனே நகரில் அய்யா விழா

7-12-78 : கர்க்கி கர்னல் பகத் பள்ளி அரங்கில் அய்யா நூற்றாண்டுவிழா 'வடுவூர்த் தம்பி' கிருட்டினசாமி தலைமையில் நடந்தது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்க தனி அலுவலர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கம், நாடகம், பட்டிமன்றம் என விழா மிளிர்ந்தது.

### மத்தியக்கமிட்டி எழுச்சியுடன் கூடியது

9-12-78 : திராவிடர் கழகத்தின் மத்தியக் கமிட்டிக் கூட்டம் இன்றுகாலை திருச்சி பெரியார் மாளிகையில் எழுச்சியுடன் கூடியது.

கமிட்டி துவங்குமுன் கழகப் பொதுச் செயலாளர், ஏராளமான கழகத் தோழர்களுடன் சென்று அய்யா சிலைக்கு மாலை அணிவித்தார்.

கமிட்டிக்கூட்டத்திற்கு பெரும்பாலான மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள், பொறுப்பாளர்கள், ஏராளமான கழகத் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில.

### தமிழக அரசுக்குப் பாராட்டு

நமது அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியார் அவர்களது நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு அரசு சார்பில் ஓராண்டு முழுவதும் கொண்டாடுவது என்று முடிவு எடுத்து, அப்படிப்பட்ட கொண்டாட்டத்தின் போது பத்து அம்ச திட்டங்களை அறிவித்துள்ள தமிழக அரசுக்கு, குறிப்பாக தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கு இக்கமிட்டி தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தந்தை பெரியார் அவர்களால் கடந்த நாற்பதாண்டு காலமாகப் பிரசாரம் செய்யப் பட்டும், நடைமுறைப் படுத்தப்பட்டும் வந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை செயல்முறைப் படுத்த ஆணை பிறப்பித்த தமிழக அரசினை இக்கமிட்டி பாராட்டி வரவேற்கிறது. சிலருடைய எதிர்ப்புப் பூச்சாண்டிகளைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல் துணிவுடன் மேற்கொண்டு செயலாற்ற வேண்டும் என்று தமிழக அரசினை, குறிப்பாக தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களை இக்கமிட்டிக் கேட்டுக் கொள்கின்றது.

இதுகுறித்து எவ்வித எதிர்ப்பு எந்த வட்டாரத்திலிருந்து கிளம்பினாலும் அதனை முறியடித்து, திராவிடர் கழகம் தனது முழுச்சான ஆதரவினை அரசுக்குத் தரும் என்று இக்கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் ஏற்படுத்திய தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை எல்லா ஏடுகளிலும் இனியும் தயக்கமின்றிப் பின்பற்றப் படவேண்டும் அதற்கான மேல்நடவடிக்கைகளை தயங்காது எடுக்கவேண்டுமென்று தமிழக அரசினை இக்கமிட்டி கேட்டுக்கொள்கின்றது.

### பாடத்திட்டத்தில் தந்தை பெரியார் நூல்கள்

ஆரம்ப கல்வியிலிருந்து கல்லூரி வரை தந்தை பெரியார் அவர்களது நூல்களை பாடத் திட்டத்தில் இணைத்து தக்க முறையில் மாணவ மாணவியர்களுக்குப் போதிக்க, உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு தமிழ் நாடு அரசினை இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது. தந்தை பெரியார் அவர்களது நூற்றாண்டுவிழா காலக்கட்டத்தில் இவ்வேற்பாட்டைத் துவங்குவது தந்தை பெரியார் அவர்களுக்கு அரசு சார்பில் எடுக்கும் நூற்றாண்டு விழாவின் அம்சங்களுள் தலை சிறந்ததாக இருக்கும் என்பதையும் தமிழக அரசுக்கு இக்கமிட்டி சுட்டிக்காட்ட விரும்புகிறது.

### பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு

தந்தை பெரியார் அவர்களது அறுபதாண்டு கால தொண்டின் பயனாக, ஏராளமான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் படித்துப்பட்டதாரிகளாக ஆகியுள்ள நிலையில் பல ஆண்டு கணக்கில் அவர்கள் வேலை வாய்ப்பு இன்றி அவதியுறும் அவல நிலை இங்கு உள்ளது.

இதற்குச் சரியானதோர் பரிகாரத்தை உடனடியாக மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ளவேண்டியது அவசியமான தொன்றாகும்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்ற ஏற்பாடுகளை மத்திய, மாநில அரசுத் துறை நிறுவனங்களிலும், ஸ்டேட் பாங்க் போன்ற தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், தனியார் கம்பெனிகள், தொழிற்சாலைகள் உட்பட்ட எல்லா நிறுவனங்களிலும் அமுலாக்கப்படச் செய்ய வேண்டும்.

இதனை வலியுறுத்தி, வரும் ஏப்ரல் மாதம் சென்னையில் ஒரு மாபெரும் "படித்த—பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டோர் இளைஞர் பேரணி" ஒன்றினை நடத்தி, முதற்கட்டமாக அரசுக்கு மனுவினைத் தந்தும், அதில் பயன் ஏற்படவில்லையெனின் அதற்கு அடுத்தக் கட்டமாக, குறிப்பிட்ட இடைவெளிக்குப் பிறகு அறப்போராட்டத்திலும் ஈடுபடுவது என்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

### ஸ்டேட் பாங்கு கொள்ளைகளை விசாரிக்க விசாரணைக் கமிஷன் தேவை

'ஸ்டேட் பாங்கில்' பார்ப்பனர்கள் அடிக்கும் கொள்ளைகள் பற்றியும் 'ஸ்டேட் பாங்கு' நிர்வாகமானது கீழ் மட்டம் முதல் மேல் மட்டம் வரை முழுக்க முழுக்க பார்ப்பனர்களின் ஆதிக்கக் கூடாரமாகக் கொழுத்து இருப்பது குறித்தும் தக்க புள்ளி விவரங்களுடன் 'விடுதலை' ஏராளமான கட்டுரைகளை எழுதி வந்துள்ளது. எழுதியும் வருகிறது. ஆனால் எந்தவித நடவடிக்கைகளும் சம்பந்தப் பட்டவர்கள் மீது எடுக்கப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. கண்டிக்கத்தக்கதாகும்.

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் உடனடியாக 'ஸ்டேட்பாங்க்' பிரச்னைக்கு ஒரு விசாரணைக்கமிஷன் நியமித்து குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தக்க தண்டனைகள் அளிப்பதுடன், ஸ்டேட் பாங்கு நிர்வாகம் பார்ப்பனர்களின் ஆதிக்கமாக இருந்து வருவதைத் தடுத்து நிறுத்தி நிர்வாகத்தில் அடித்தட்டு முதல் மேல் தட்டு வரை தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கட்கும் விகிதாச்சார அடிப்படையில் வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமாய் மத்திய அரசை இக்கமிட்டிக் கேட்டுக்கொள்கிறது.

### இந்தித் திணிப்பு பிரச்னை

மத்திய அரசு, இந்தித்திணிப்பு இல்லை என்று ஒருபுறம் கூறிக்கொண்டே இந்தியை ஒவ்வொருநாளும் ஒவ்வொரு துறையிலும் திணித்துவரும் நிலையில் இதற்கு தகுந்த தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்வது மிகவும் அவசியம் என்று இக்கமிட்டி கருதுவதோடு, இந்தி எதிர்ப்பு மாநாட்டினை சென்னையில் கூட்டி சிறப்பான முடிவுகள் எடுத்தது போல், அனைத்துக்கட்சி மற்றும் தமிழக பொது வாழ்வில் உள்ள பெருமக்கள் அனைவரையும் கூட்டி ஓர் விரைந்த முடிவு எடுத்து செயல்பட வேண்டுமென நமது இயக்கப்பொதுச் செயலாளர் அவர்களை இக்கமிட்டிக் கேட்டுக் கொள்கிறது.

### அனைத்துக் கட்சி நடவடிக்கையில்

சர்வ கட்சி நடவடிக்கைகள் என்பவைகள் எதிலும் நமது இயக்கத்தவர்கள் கலந்து

கொள்வதற்கு முன்பு இயக்கத்தின் பொதுச் செயலாளர் அவர்களது அறிக்கை, குறிப்பிட்ட பிரச்னைகளில் எத்தகையது என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் அனுமதி அல்லது ''விடுதலை''யில் வெளியிடப் படும் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தான் சர்வ கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ அல்லது தவிர்ப்பதோ இருக்க வேண்டும்.

இந்நிலையில் இல்லாமல் சர்வகட்சி நடவடிக்கைகளில் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றாற்போல் கழகத்தோழர்கள் பங்கு கொள்வது, கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு விரோதமான செயல் என்பதை இயக்கத் தோழர்களுக்கு இக்கமிட்டி நினைப்பூட்டிச் சுட்டிக்காட்டுகிறது.

## திராவிடர் கழக புதிய நிர்வாகக் கமிட்டி

மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பத்து ஆண்டு களுக்கு மேலாகி விட்ட நிலையில், திராவிடர் கழகத்துக்கு புதிய மத்திய நிர்வாகக் கமிட்டியை அமைத்துத் தரவேண்டுமாய் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் அவர்களை இக்கமிட்டி ஒருமனதாகக் கேட்டுக் கொள்கிறது.

## நடைபாதைக்கோயில் அகற்றக்கோரி தீர்மானம்

தமிழக அரசு ஆணை தெளிவாக விடு விக்கப்பட்டிருந்தும் கூட அதுபற்றி சிறிதும் கவலைப்படாது நடைபாதைக் கோயில்கள் நாட்டில் நாளொரு மேனியும் வளர்ந்து வருவது கண்டு இக்கமிட்டி தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தயங்கும் அரசின் போக்கு குறித்து இக்கமிட்டி மிகவும் வருந்து வதுடன் நடைபாதைக் கோயில்கள் அகற்றப்பட வேண்டும் என்ற அரசின் ஆணையை நடை முறைப்படுத்த வேண்டி நாடு தழுவிய போராட்டத்தை தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நிறைவுக்குள் துவக்கவேண்டுமாய் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் அவர் களை இக்கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

## "பிராமணாள்" பெயர் நீக்கக் - கிளர்ச்சி தவிர்க்க வழி

''பிராமணாள்'' பெயர் நீக்கக் கோரி நாம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, உண்டிச் சாலைகளில் 'பிராமணாள்' பெயர்களை நீக்கி விடுகிறோம் என்று அறிவித்துள்ள தமிழ் நாடு ஓட்டல் அதிபர்கள் சங்கத்தினருக்கு இக்கமிட்டி தனது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு எஞ்சியுள்ள ஒருசில உணவு விடுதிகளிலும் அவர்களே அறிவுறுத்தி 'பிராமணாள்' பெயரை எடுக்கச் செய்து முழுமைப்படுத்தி, நாங்கள் மேற்கொள்ள வேண்டி நேரிடும் கிளர்ச்சியைத் தவிர்ப்பதற்கு தக்க வகைசெய்யுமாறு ஓட்டல் அதிபர் சங்கத்தினரை இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

## 'விடுதலை' வாங்கவேண்டும்

நமது இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடும், பகுத்தறிவுப் பிரசாரப் போர்வாளுமான 'விடுதலை' தினசரி ஏட்டினை கழகப்பொறுப் பாளர்கள் அனைவரும் கட்டாயமாக வாங்கிட வேண்டும். சந்தா மூலமாகவோ, அல்லது விற்பனையாளர்கள் மூலமாகவோ பத் திரிக்கையை வாங்கிப்படிக்க வேண்டும்; இதனை ''ஒரு கட்டளைத் தீர்மானம் போல் தோழர்கள் கருதிட வேண்டும்'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஓட்டல் சங்கத்தலைவர் — பொதுச்செயலாளர் சந்திப்பு

**13-12-78 :** தமிழ்நாடு ஓட்டல் அதிபர்கள் சங்கத்தலைவர் புருசோத்தமனை, கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, தலைமைக் கழக செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமி, சென்னை மாவட்ட தி. க. தலைவர் எஸ். பி. தட்சிணாமூர்த்தி, சென்னை மாவட்ட தி. க. செயலாளர் மு.போ. வீரன் ஆகியோர் சந்தித்து 'பிராமணாள்' பெயர் நீக்கத்திற்கு ஒத்துழைப்பு தந்தமைக்கு நன்றி கூறியதோடு, எடுபடா திருக்கும் 'பிராமணாள்'களை நீக்கி ஆவன செய்ய வலியுறுத்தினர்.

ஆவன செய்வதாய் புருசோத்தமன் உறுதி அளித்தார்.

## ஆந்திரத்தில் அய்யாவிழா

**17-12-78 :** ஏழுமலையான் கோட்டை யாகத் திகழும் ஆந்திரத்தில் அய்யா நூற்றாண்டு விழாக்கள் சிறப்புற நடந்தன.

கழகப் பொதுச்செயலாளர் அவர்களுடன், கழகப் பொருளாளர் கா. மா. குப்புசாமி, பிரசார அணி செயலாளர் செல்வேந்திரன், வடாற்காடு மாவட்ட தி. க. செயலாளர் ஏ. டி. கோபல் ஆகியோரும் இவ்விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

மாலை ஆறு மணி அளவில் மதனப்பல்லி கல்லூரி அரங்கில் விழா துவங்கியது.



அரங்கம்—மக்கள் திரளால் அடைத்துக் கிடந்தது.

ஆந்திர மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆவுல சாம்பசிவராவ் தலைமையில், ஆந்திர மாநில 'குல நிர்மூல சங்க'த்தலைவர் டி. ஜி. ராமாராவ் முதலியோர் பேசியபின் கழகப் பொதுச்செயலாளரவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

தந்தை பெரியார் படத்திறப்பு—தலைமை நீதிபதி ஆவுல சாம்பசிவராவ்.

விழா ஏற்பாடுகளை—பத்ராங்க கல்லூரி பேராசிரியர் தோழர் சீனிவாசன் சிறப்புறச் செய்திருந்தார்.

## திராவிட இளைஞர் மன்றம்

**18-12-78 :** இன்று மாலை, செகந்திரா பாத்தை அடுத்த ஆசாத் நகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா துவங்கியது.

1929 லேயே இப்பகுதியில் துவக்கப்பட்ட 'திராவிட இளைஞர் மன்றம்'—இந்த விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

பொதுச்செயலாளரும் தோழர்களும் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் ஆண்களைவிட பெண்களே அதிகமாய் பங்கேற்றது குறிப்பிற் குரியது.

## அய்யா நினைவுநாள்

**24-12-78 :** தமிழர்கட்கு தன்மான உணர்வூட்டிய தலைவர் தந்தை பெரியார் நினைவு நாள் இன்று.

கழகப் பொதுச்செயலாளர், கழகப் பொருளாளர் மற்றும் கழகத் தோழர்கள், தியாகராயர்நகர், அண்ணாசாலையில் உள்ள அய்யா சிலைகட்கு மாலைகள் அணிவித்தனர்.

தந்தை பெரியார் நினைவிடத்திலும், அம்மா நினைவிடத்திலும் கழகப் பொதுச் செயலாளரும் தோழர்களும் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

அய்யா நினைவுநாளை யொட்டி தமிழ் எழுத்து சீர்திருத்தம் பற்றிய அறிஞர் பெரு மக்களின் கருத்துக் கோவை—காலை பத்தரை மணியளவில் பெரியார் திடலில் சிறப்புறத் துவங்கியது.

பிற்பகல் நிகழ்ச்சிகள் 'ஆராய்ச்சித்தொடர்' சொற்பொழிவாகத் திகழ்ந்தன.



## அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் அய்யா தங்கமெடல்

**25-12-78 :** அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆண்டு தோறும் முதன்மையாக வரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச்சார்ந்த மாணவர்கட்கு தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவாக ஆண்டு தோறும் 'தங்கமெடல்' வழங்கிட பெரியார்—மணியம்மை கல்வி அறக்கட்டளை சார்பில் ரூபாய் மூவாயிரத்துக்கான காசோலையை—

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தரிடம் கழகப் பொதுச்செயலாளர் வழங்கினார்.

## 'பெரியார் பேருரையாளர்'

**26-12-78 :** 24, 25, 26-12-78—ல் பெரியார் திடலில் பேராசிரியர் ராமநாதன் எம். ஏ, பி. ஓ. எல். அவர்கள் ஆற்றிய அய்யா பற்றிய ஆய்வுரை மெச்சத்தகுந்ததாய் இருந்தது.

கழகப் பொதுச்செயலாளர்—

தந்தை பெரியார் உருவத்துடன் 'பெரியார் பேருரையாளர்' என்று பதிக்கப்பட்ட தங்க மெடலை - அருப்புக்கோட்டை கைலாசம் அறக் கட்டளை சார்பில் பேராசிரியருக்கு அணிவித் தார்; 300 ரூபாய் பணமுடிப்பும் தரப்பட்டது.

அறக்கட்டளை கொடையாளர் அருப்புக் கோட்டை டி. கே. சுப்ரமணியம், பேராசிரியருக்கு சால்வை போர்த்தினார்.

## கடவுள் மறுப்பு பஜனை

**28-12-78 :** தென்னாற்காடு மாவட்டத்து கல்லக்குறிச்சி நகரில் தி. க. மற்றும் ப. க. தோழர்களால் 'கடவுள் மறுப்பு பஜனை' இரவு 7 முதல் 9 மணிவரை இன்று துவக்கப்பட்டது.

நாள்தோறும் நடந்த இந்த பஜனை 12-1-79 ல் முடிந்தது.

## வானொலி—வானொளிக்கு

**30-12-78 :** பக்திப் பிரசாரக் கருவிகளாக மாறிவிட்ட வானொலி—வானொளிக்கு கண்டனக் கடிதங்கள் விடுக்குமாறு கழகக் குடும்பங்களை—மக்களை வலியுறுத்தி 'விடுதலை' அறிக்கை விடுத்ததையடுத்து—

கண்டனக் கடிதங்கள் ரேடியோ, டெலி விஷன் நிலையங்களில் குவிந்தன.

### இளைஞர் இயக்க கோரிக்கை நாள்

2-1-79 : நாடெங்கும் கல்லூரிகளில் கழக மாணவரணியினரால் இளைஞர் இயக்கக் கோரிக்கை நாள் 2-1-79 முதல் 9-1-79 வரை எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டன.

''கல்விப்பாலில் மதநஞ்சைக் கலக்காதீர் !

தந்தை பெரியார் கருத்துக்களை பாடத் திட்டத்தில் இணைப்பீர் !

'மார்க்'கின் பெயரால் தகுதி, திறமை பேசி தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட மக்களை ஒடுக்காதீர் !

விரும்பிய கல்வியை எவரும் பெற்றிட வழிவகை செய்க.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை அதிகப் படுத்துக. விடுதி எண்ணிக்கையை அதிகப் படுத்துக.

அவர்களுக்கு உடனே வேலை வாய்ப்பு தருக.

மத்திய, மாநில, தனியார் நிறுவனங்களில் அவர்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் வேலை வாய்ப்பு தருக.

மண்ணின் மைந்தர்களுக்கே முன்னுரிமை வழங்குக.

கலப்பு மண குழந்தைகளுக்கு கல்வி—உத்தியோக சலுகை தருக.

இந்தி—என்றும் ஆட்சிமொழி இல்லை என்று ஆக்குக.

மதச்சார்பற்ற தன்மையை நடைமுறையில் காட்டுக.

'சிகப்புநாடா' முறையை ஒழித்துக் கட்டுக.

தேசியமய வங்கிகள்—ஏழை எளியோர் பக்கம் கண்திறக்க வழிசெய்க.

வானொலி, வானொளிகளை பஜனை மடமாய் ஆக்காதீர் !'' ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, மாவட்ட தலைநகரங்களில் ஊர்வலமாகச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் மனுக்கள் அளிக்கப்பட்டன.

சென்னையில் இம்மனு—

கல்வியமைச்சர் அரங்கநாயகத்திடம் தரப்பட்டது.

ஆவன செய்வதாய் அவரும் சொன்னார்.

### வி. வி. ஆர்க்கு இரங்கல் கூட்டம்

மறைந்த சுயமரியாதை வீரர் விருதுநகர் வி. வி. ராமசாமி அவர்கட்கு திராவிடர் கழக சார்பில் சென்னை பெரியார் திடலில் இரங்கல் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

### மலேசியா பயணம்

மலேசியா, சிங்கப்பூர், கோலாலம்பூர் போன்ற இடங்களில் நடக்கவிருக்கும் அய்யா நூற்றாண்டு விழாவில் பங்குற கழகப் பொருளாளர் கா. மா. குப்புசாமியும், வட ஆற்காடு மாவட்ட தி. க செயலாளர் தோழர் ஏ. டி. கோபால் அவர்களும் —

இன்று முற்பகல் மலேசியா பயணமாயினர்.

### சுற்றுலா பொருட்காட்சியில் அய்யா நூல்கள் விற்பனையகம்

சென்னை தீவுத்திடலில் நடைபெறும் சுற்றுலாவர்த்தகப் பொருட்காட்சியில் பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடுகள் விற்பனையகத் துவக்கவிழா மாலை ஆறே முக்கால் மணியளவில் நடைபெற்றது.

சுற்றுலா வாரியத்தலைவர் எஸ். ஆர். ராதா தலைமையில் வருவாய்த்துறை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் விற்பனையைத் துவக்கிவைத்தார்.

கழகப் பொதுச்செயலாளரவர்கள் வரவேற்புரையாற்றினார்.

### வங்கி ஊழியர் ஸ்ட்ரைக் : பொதுச்செயலாளர் தந்தி

10-1-79 : வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தால் விளைந்துள்ள நிலவரங்களை விளக்கியும், 'ஸ்ட்ரைக்'கை முடிவுக்குக்கொணர வலியுறுத்தியும் பிரதமர் தேசாய் மற்றும் நிதியமைச்சர் படேல் ஆகியோருக்கு கழகப் பொதுச்செயலாளர் அவசரத் தந்திகளை அனுப்பினார்.

### சுயமரியாதை பிரசார நிறுவன 'ரிட்'

'தமிழ்நாடு சொசைட்டிகள் பதிவு சட்டம்' என்ற புதிய திருத்தச் சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வந்ததை எதிர்த்தும், இடைக்கால தடை விதிக்கக் கோரியும்—

பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவன ஆயுட்கால செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்று—சட்டத்தை அமுல்நடத்த அரசு இடைக்காலதடை விதித்தது.



### 'போய் வருகிறேன்'

12-1-79 : அய்யா நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக மலேசியா, சிங்கப்பூருக்கு நாளை தான் புறப்படவிருப்பதையொட்டி—

கழகச் செயல்பாடுகளை தொய்வின்றி நடைமுறைப்படுத்த பொறுப்பாளர்களை நியமிக்கும் கழகப் பொதுச் செயலாளரின் அறிக்கை 'போய் வருகிறேன்' என்ற தலைப்பில் இன்றைய 'விடுதலை'யில் இடம் பெற்றது.

### மலேசியாவிற்கு பொதுச்செயலாளர் பயணம்

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்களில் பங்கேற்பதற்காக மலேசியத் தலைநகரான கோலாலம்பூருக்கு, கழகப் பொதுச் செயலாளரவர்கள் இன்று பிற்பகல் விமானம் மூலம் புறப்பட்டார்கள்.

கழகத் தோழர், தோழியர் மட்டுமன்றி அனைத்துத்தரப்பினரும் உற்சாகப் பெருக்குடன் வழியனுப்பும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

விமான நிலையம் கருஞ்சட்டை மயமாய் காணப்பட்டது.

### பொதுச்செயலாளருக்கு மலேசியா அளித்த மாபெரும் வரவேற்பு

13-1-79 : இரவு ஏழரை மணியளவில் கோலாலம்பூர் விமான நிலையத்தில்—அன்புப் பெருக்குடன் கழகப் பொதுச்செயலாளருக்கு மலேசியத் தோழர்களால் மகத்தான வரவேற்பு தரப்பட்டது.

மலேசிய தி. க. தலைவர் கே. ஆர். ராமசாமி, செயலாளர் ரெ. சு. முத்தையா உட்பட எண்ணற்ற தோழர்கள் விமான நிலையத்தில் குழுமியிருந்தனர்.

மாலையணிவிப்புகள், ஆடை சூட்டல்களென மலையக வாழ் தமிழர்கள் அன்பால் திளைக்க வைத்தனர்.

விமான நிலையத்திலேயே பத்திரிகையாளர்களுக்கு கழகப் பொதுச்செயலாளர் பேட்டி தந்தார்.

### பூச்சோங்

இரவு 9 மணியளவில் பூச்சோங்காளை சார்பில் அய்யா நூற்றாண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வரவேற்புரை—கிளைச்செயலாளர் பாலகிருட்டினன், தலைமை — கிளைத்தலைவர் ராமன்.

கழகப் பொருளாளர் கா. மா. குப்புசாமியும், வட ஆற்காடு மாவட்ட தி. க. செயலாளர் ஏ. டி. கோபாலும் மலேசியத் தோழர்களும் உரையாற்றினர்.

இறுதியில் கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

### பத்தாங் பெர்சுந்தை

14-1-79 : காலை 11 மணி அளவில் பத்தாங் பெர்சுந்தை தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் அய்யா விழா.

தோழர்கள் உரையாற்றியபின் சிறப்புரை —பொதுச்செயலாளர்.

காகாங் கிளை சார்பில்—விழா மாலை நான்கு மணிக்குத் துவங்கியது.

எண்ணற்ற தமிழர்கள் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தனர்.

மாலை ஆறு மணியளவில் கோலாலம்பூர் டவுன் ஆலில் மலேசிய தி. க. சார்பில் பொங்கல் விழா.

விழாத் தலைமை-திருச்சுடர் கே. ஆர். ராமசாமி.

தோழர்கள் கருத்துரையின்பின் பொதுச் செயலாளர் பேருரையாற்றினார்.

### மலேசிய டெலிவிஷனில்...

20-1-79 : மலேசிய டெலிவிஷனிற்கு, கழகப் பொதுச்செயலாளர் பேட்டியளித்தார்.

இந்தப் பேட்டியை, 'கருத்தாழம் மிக்க பேட்டி' என டெலிவிஷன் பேட்டியாளர் வர்ணித்தார்.

### 'இந்தி எதிர்ப்பு' ஆலோசனை

23-1-79 : இந்தித் திணிப்புப்பற்றி ஆலோசிக்க முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில்—தி. க. சார்பாக, பிரசார அணிச்செயலாளர் செல்வேந்திரனும், தலைமை நிலையச் செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமியும் பங்கேற்றனர்.

### குடி. அரசு நாள் — துக்க நாள்

26-1-79 : இந்திக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 'குடிஅரசு' நாளான இன்று

தி. க. வும்—தி. மு. கவும் இணைந்து இந்நாளை 'துக்க'நாளாகக் கொண்டாடின. நாடு முழுதும் கறுப்புச்சட்டை ஊர்வலங்களை நடத்தின.

கழகத் தோழர்களின் இல்லமெல்லாம் கறுப்புக்கொடி !

எங்கும் கறுப்பு ! கறுப்பு !

சென்னையில் ஊர்வலம் பெரியார் திடலி லிருந்து புறப்பட்டது. கறுஞ்சட்டை ஊர்வலத் தில் கலந்து கொள்வதற்காக கறுப்புச்சட்டை ஒன்றை கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி அவர்கள் கலைஞருக்கு அளித்திருந்தார்.

பெரியார் திடலுக்கு வந்த கலைஞருக்கு, கழகத்தின் சார்பில் தலைமை நிலைய செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமி—கறுப்புக் கொடியை வழங்கினார்.

அந்தக் கொடியேற்றி திறந்த ஜீப்பில் கம்பீரமாகக் கலைஞர் ஊர்வலம் புறப்பட்டார்.

சென்னையில் தெருப்பிரசாரம்

சிங்காரவேலு, சுந்தரேசன், லீலாராம், கோபாலகிருட்டினன், துரைலிங்கம்—

இந்த கழக வீரர்களின் பெருமுயற்சியால் சென்னை தெருக்களில் பகுத்தறிவுப் பிரசாரம் வேரூன்றியது.

'தமிழ்முரசு' ஆசிரியர் இல்லத்தில்...

6-2-79 : சிங்கப்பூர் நாட்டிற்குச் சென்றவுடன் இன்று பிற்பகல் முதல் பணியாக, சிங்கப்பூர் 'தமிழ்முரசு' ஏட்டின் நிறுவனரும் ஆசிரியருமான மறைந்த கோ. சாரங்கபாணி இல்லம் சென்று அன்னாரின் குடும்பத்தார்க்கு பொதுச் செயலாளரவர்கள் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறினார்கள்.



திராவிடர் கழக இளைஞரணி சார்பில்...



திரு.சாரங்கபாணி படத்திற்கு மாலையணி வித்தார்.

கழகம் நிறுவிய கலைஞர் சிலை

10-2-79 : தந்தை பெரியார் அவர்களின் பெருவிருப்பத்திற்கிணங்க 21—9—75—ல் சென்னை அண்ணாசாலையில் கலைஞர்சிலை நிறுவப்பட்டதல்லவா !

இந்த சிலை வைப்பு அனுமதியை ரத்து செய்யக்கோரி அ. தி. மு. க. வழக்குரைஞர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கை—

சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மலேசியாவிலிருந்து பொதுச்செயலாளர் திரும்பினார்

13-2-79 : நள்ளிரவு இரண்டரை மணி அளவில் மலேசியாவிலிருந்து திரும்பிய பொதுச்செயலாளருக்கு—

ஈடிணையற்ற அன்புப் பெருக்குடன் விடிய விடிய தோழர்கள் விழித்திருந்து வரவேற்பு தந்தனர்.

மாலையும், மாலைக்குப்பதில் பணமும், புத்தாடைகளும் குவிந்தன.

தமிழ்நாடெங்கிலுமிருந்து கழகக் கண்மணிகள் இந்த வரவேற்பில் பங்கெடுத்தனர்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் தனிப் பேருந்தை விடுத்திருந்தது.

14-2-79 : பொதுச்செயலாளருக்கு சென்னை மாவட்ட தி. க. சார்பில் சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ண (செட்டி)த் தெருவில்



...ஆயிரம் ''உண்மை'' சந்தாக்கள் அளிப்பு விழா—தஞ்சாவூர் (19-5-79)

மாபெரும் வரவேற்பு மற்றும் பாராட்டுக் கூட்டம் நடந்தது.

### இரவு 2 மணி

மலேசியா மற்றும் சிங்கப்பூர் பயணத்தின் போது பொதுச்செயலாளரின் நிகழ்ச்சிகள்—

நாள்தோறும் இரவு இரண்டு மணியளவில் தான் முடிந்தன,

மலேசிய வானொலி, டெலிவிஷன், ஏடுகள் நாள்தோறும் பேட்டி கண்டன.

### திருச்சியில் வரவேற்பு

மாவட்ட தி. க. சார்பில் நடைபெறும் அய்யா நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வந்த கழகப் பொதுச்செயலாளருக்கு திருச்சி ரயில் நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு தரப்பட்டது.

மாலை—பெரியார் மாளிகையில்-விழாவின் ஒருபகுதியாய் பட்டிமன்ற நிகழ்ச்சி சிறப்புற நடந்தது.

தோழர்கள் கருத்துரையாற்றினர்.

### மாபெரும் ஊர்வலம்

18-2-79 : திருச்சி மாநகரில் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, பல்லாயிரவர் பங்கேற்ற மாபெரும் மூட நம்பிக்கை ஒழிப்பு—கருஞ்சட்டை ஊர்வலம் பெரியார் மாளிகையிலிருந்து 4 மணியளவில் எழுச்சியுடன் நடந்தது. அய்யா வாழ்வைச் சித்தரிக்கும் அலங்கார வண்டிகள் இடம் பெற்றன.

இரவு ஏழேகால் மணியளவில் டவுன் ஆல் வந்து ஊர்வலம் முடிந்தபின், மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது.

கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, பேராசிரியர் க. அன்பழகன், நா பாண்டியன் மற்றும் கழகத் தோழர்கள் உரையாற்றினர்.

### இந்திராவுக்குக் கருப்புக்கொடி : அனைவரும் விடுதலை

28-2-79 : இந்திராவுக்குக் கருப்புக் கொடி 30-10-77ல் காட்டப் போன போது கைதான—கழகப் பொதுச்செயலாளர் உட்பட கழகத்தோழர்கள் 20 பேரும்—

குற்றம் நிருபிக்கப்படவில்லை என சைதை 18-வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் பாலசுப்ரமணியம் அவர்களால் தீர்ப்பளிக்கப் பட்டு விடுதலையாயினர்.

விடுதலையான தோழர்கள் விவரம் :

வாலாஜா வட்ட தி. க. தலைவர் செட்டித் தாங்கல் கிருஷ்ணன், திருவாரூர் நகர தி. க. தலைவர் எஸ். சிவசங்கரன், மன்னார்குடி வட்ட தி. க. செயலாளர் எடமேலையூர் இராசையன், குடியாத்தம் திராவிடர் கழகத் தலைவர் கோவிந்தராஜன், சென்னை மாவட்ட தி. க. தலைவர் எஸ். பி. தெட்சிணாமூர்த்தி, திராவிடர்கழகப்பொதுச்செயலாளர் கி.வீரமணி, வழக்குக்காக ஆஜரான வழக்கறிஞர்-தலைமை நிலைய கழக செயலாளர் எஸ். துரைசாமி, வ. ஆ. மாவட்ட தி. க. செயலாளர் ஏ. டி. கோபால், திருவண்ணாமலை வட்ட தி. க. தலைவர் எஸ். கண்ணன், வ. ஆ. மாவட்ட தி. க. தலைவர் ஆம்பூர் ஏ. பெருமாள்,

தஞ்சை மாவட்ட திராவிடர் கழக அமைப் பாளர் மாயூரம் என். வடிவேல், முத்துப்பிள்ளை-மண்டபம்(குடந்தை) திராவிடர் கழகத் தலைவர் இராசாங்கம், திருவாரூர் நகர தி. க. துணைத்தலைவர் லட்சுமணன், குடந்தை வட்ட தி. க. செயலாளர் பட்டீஸ்வரம் அய்யாசாமி, மதுரை மண்டல திராவிடர் கழக செயலாளர் வழக்கறிஞர் இன்பலாதன், இளைஞர் பிரிவு செயலாளர் கோவை. இராம கிருட்டினன், மாயூரம் நகர தி. க. தலைவர் கி. இராசமாணிக்கம், மாயூரம் நகர தி. க. செயலாளர் ரகுபதி, புலவர் கோ. இமயவரம் பன், தெ. ஆ. மாவட்ட தி. க. துணைச் செயலாளர் காட்டுச்சாகை குப்புசாமி, குடவாசல் வட்டாரம் மஞ்சக்குடி கல்யாணி.

### சரண்சிங்கிற்குப் பொதுச்செயலாளர் கடிதம்

28-2-79 : மீண்டும் டில்லி அமைச்சரவை யில் இணைந்து நிதியமைச்சராகப் பொறுப் பேற்ற சரண்சிங்கிற்கு, கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் எழுதிய கடிதம் இன்றைய 'விடுதலை'யில் இடம் பெற்றது.

ஸ்டேட் பேங்க் பார்ப்பனர் கொட்டத்தை விவரித்த இக்கடிதம், பிற்படுத்தப்பட்டோரின் உரிமைகளை வலியுறுத்தியது.

### வாஜ்பாய்க்கு...

1-3-79 : இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் வாழும் இந்தியர்களில் தமிழர்களே அதிகம் இருப்பதால், அந்நாட்டின் இந்தியத் தூதர்களாக தமிழர்களையே நியமிக்கவேண்டும் என்று வலியுறுத்தி—கழகப் பொதுச்செயலாளர்



அவர்கள், டில்லி அமைச்சர் வாஜ்பாய்க்கு எழுதிய கடிதம் இன்றைய 'விடுதலை'யில் இடம் பெற்றது.

### 'ஆஸ்தானத்'தின் அவதூறுக்கு...

8-3-79 : கடந்த 5-3-79 அன்று வெளி வந்த 'தென்னகம்' (அ. இ. அ. தி. மு. க.) நாளேட்டில், தமிழ்நாட்டின் ஆஸ்தான கவி ராயர் என்பவரால் எழுதப்பட்ட ஓர் கட்டுரை யில், தந்தை பெரியார் அவர்களைக் கேவலப் படுத்துகின்ற முறையிலும், இயக்கத்தின் பெரு மதிப்பிற்குரிய தாயாகிய அன்னை நாகம்மை யாரை இழிவுறுத்தியும், சுயமரியாதை இயக்கத் தூண்களாக விளங்கிய மாயூரம் நடராசன், நாகை மணி ஆகியோர்மீது அவதூறு பொழிந் தும் எழுதப்பட்டதற்கு கண்டனந் தெரிவித்தும், 'ஆஸ்தான கவியை பதவியிலிருந்து நீக்குக' என்று கோரியும் முதல்வருக்குக் கடிதங்களை எழுதிக் குவிக்குமாறு கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கை விடுத்தார்கள்.

இதையடுத்து, பல்லாயிரக்கணக்கில் முதல் வருக்கு கண்டனக் கடிதங்களை தமிழர்கள் அனுப்பினர்.

### ஆஸ்தான கவியை நீக்கு : மக்கள் உணர்ச்சி ஆவேசம்

14-3-79 : தந்தை பெரியார் குடும்பத் தைப்பற்றி இழிவாக எழுதிய ஆஸ்தான கவிஞரை பதவி நீக்கம் செய்யக் கோரி, சென்னை தியாகராயர் நகர் சிவப்பிரகாச (முதலியார்) தெருவில் மாபெரும் பொதுக் கூட்டம் உணர்ச்சிக்கொந்தளிப்புடன் நடந்தது.

சென்னை மாவட்ட தி.க. தலைவர் தட்சிணாமூர்த்தி தலைமையேற்ற இக்கூட்டத் திற்கு மக்கள் உரிமைக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

பல்வேறு துறையினர் பங்கேற்ற இக் கூட்டத்தில்—இறுதிப்பேருரையாற்றிய பொதுச் செயலாளர் அவர்கள், "இப்படி ஒரு கூட்டம் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டதற்காக வெட்கப்படுகிறோம் ; தனிப்பட்ட கண்ண தாசனைத் தாக்குவது, இக்கூட்டத்தின் நோக்க மல்ல ; இந்தத் தத்துவம் தமிழ் மண்ணிலிருந்து ஒழிக்கப்படவேண்டும் என்பதே இக்கூட்டத்தின் நோக்கமாகும்" எனக் குறிப்பிட்டார்கள்.

நிகழ்ச்சி முடியும்போது, கழகப் பொதுச் செயலாளர் அவர்கள்—

'ஆஸ்தான கவிஞரை' என்று சொன்னதும், கூடியிருந்த மக்கள் வெள்ளம், 'பதவியை விட்டு நீக்கு' என்று முழக்கமிட்டது.

'அலை ஓசை' வேலூர் நாராயணன், வழக் கறிஞர் பாளை. சண்முகம், கவிஞர் குடியரசு மற்றும் கழகத் தோழர்கள் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

### இலங்கை தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு உற்சாக வரவேற்பு

15-3-79 : ஈழத்தமிழர்களின் தலைவரும் விடுதலை இயக்கக் கூட்டணியின் செயலாளரும் இலங்கை நாடாளுமன்ற எதிர்கட்சித் தலை வருமான நாவலர் அமிர்தலிங்கம் அவர்களும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர் களும் இரவு 7-40 மணியளவில் விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் திராவிடர் கழகத் தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பிலும் உற்சாகமான வரவேற்பு அளிக்கப் பட்டது. ஏராளமான தோழர்கள் விமான நிலையத்தில் குழுமியிருந்தனர். கழகப் பொதுச்செயலாளர், கழகத்தின் சார்பில் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு மாலை அணிவித்தார்.

### அம்மா நினைவு நாள்— சுயமரியாதைச் சுடரொளிகள் நாள்

16-3-79 : தந்தை பெரியாருக்குப் பிறகு இயக்கத்தை கட்டிக்காத்து, வளர்த்திட்ட கழகத்தலைவர் அன்னை மணியம்மையார் அவர்களுக்கு இன்று முதலாண்டு நினைவு நாள் !

அன்னையாருக்கு மரியாதை செலுத்திட ஏராளமான கழகத் தாய்மார்களும், கழகத் தோழர்களும் கருஞ்சட்டையுடன் பெரியார் திடலில் வந்து கூடினர்.

காலை 10 மணி அளவில் இலங்கை நாடாளுமன்ற எதிர் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்த லிங்கம் ஆகியோர் பெரியார் திடலுக்கு வந்தனர்.

அய்யா, அம்மா நினைவிடங்களில் நாவலர் அமிர்தலிங்கம் தம்பதிகள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

10-15 மணி அளவில் கலைஞர் வருகை புரிந்தார். அம்மா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு அரசின் டில்லி சிறப்பு பிரதிநிதி க. ராசாராம், டாக்டர் ஜனார்த்தனம் எம்.எல்.சி., ஆகியோர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து கழகத் தோழர்கள், கழகத் தாய்மார்கள் புடைசூழ, கழகப் பொதுச் செயலாளர் அம்மா நினைவிடத்தில் கழகத்தின் சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

கழகப் பொதுச்செயலாளர் கடவுள் மறுப்பு முழக்கங்களை எடுத்துச்சொல்ல, கூடியிருந்த கருஞ்சட்டைக் குடும்பம் தொடுத்துச்சொன்னது. பொதுச்செயலாளர் குருரை முழங்கிட கூடியிருந்த தோழர்களும் குருரை முழக்கினர்.

நாடெங்கும் சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட்ட தோழர்—தோழியர் நினைவு நாளாய் இந்நாள் கடைப்பிடிக்கப்பட்டு—பல ஊர்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மாலை சைதை தேரடித் திடலில் நடைபெற்ற 'சுயமரியாதைச் சுடரொளிகள் நாள்' கூட்டத்தில் பொதுச்செயலாளர், 'தந்தை பெரியார் குடும்பத்தை இழிவுப்படுத்தி எழுதிய ஆஸ்தான கவிஞரை பதவி நீக்கம் செய்யக் கோரி, தனது தலைமையில் 22-3-79 அன்று கோட்டை முன் அடையாள மறியல் கிளர்ச்சி நடைபெறும்' என அறிவித்தார்.

## அய்யா பிறந்த ஈரோடில் நூற்றாண்டு விழா

17-3-79 : அய்யா பிறந்த ஊரில் கோவை மாவட்ட தி.க. சார்பில் அய்யா விழா எழுச்சியுடன் நடைபெற்றது. முதல் நிகழ்ச்சி புரபசர் குமாரின் 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சி. பகல் 12 மணிக்கு கவியரங்கம் துவங்கியது. மதியம் பட்டிமன்றமும், இரவில் 'தந்தை பெரியார் கருத்தரங்கமும்' நடந்தன.

விழா முடிய—இரவு மணி இரண்டு.

## மகத்தான ஊர்வலம்

18-3-79 : இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக, ''பெரியார் பிஞ்சுகள்'' நிகழ்ச்சியும், மகளிர் கருத்தரங்கும் நடைபெற்றன. மாலை மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் கலைஞர் (கருப்புச்சட்டை அணிந்து வந்தார்), கழகப் பொதுச்செயலாளர், இலங்கை அமிர்தலிங்கம், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் அலங்கரிக்கப்பட்ட டிரக்கில் அழைத்து வரப்பட்டனர்.



இரவு நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் இவர்கள் உரையாற்றினர்.

## 'ஆஸ்தான கவியை பதவி நீக்குக' பெரியார் படையின் அணிவகுப்பு

22.3-79 : 'தென்னகம்' என்ற அ. இ. அ. தி. மு. க. அதிகாரபூர்வ ஏட்டில், தமிழக அரசின் ஆஸ்தான கவிஞர் கண்ணதாசன், தந்தை பெரியார் அவர்களின் துணைவியாரும், சுயமரியாதை இயக்கத்தின் தாயுமாகிய அன்னை நாகம்மையார் பற்றி அவதூறாக எழுதியதைத் தொடர்ந்து திராவிடர் கழகம் அதற்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தோடல்லாமல் அய்யா குடும்பத்தைப் பழித்த ஆஸ்தான கவிஞரை ஆஸ்தான பொறுப்பிலிருந்து அகற்றுமாறு கோரிக்கை விட்டிருந்தது.

அய்யாவழி, அண்ணாவழி என்று சொல்லிக் கொண்டு இருக்கும் தமிழக அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. வேறு வழியின்றி, ஆஸ்தான கவிஞரை வெளியேற்றக் கோரி, சட்டசபை முன்பு நேரடி மறியல் என்கிற அறப்போராட்டத்தைத் திராவிடர் கழகம் அறிவித்தது.

அதன்படி இன்று காலை 9-25 மணிக்கு திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி அவர்களது தலைமையில் போராட்ட ஊர்வலம் துவங்கியது. அண்ணா சாலையில் உள்ள தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் சிலைகளுக்கு கழகப் பொதுச்செயலாளர் மாலை அணிவித்தார்.

அறப்போரில் ஈடுபட ஆயிரக்கணக்கான தோழர்கள் நான் முந்தி நீ முந்தி என முனைப்போடு முன்வந்தனர்.

ஆனால், அறிவிக்கப்பட்டுள்ள மறியல்—ஒரு அடையாள மறியல் என்கிற காரணத்தால் அதிகமானவர்கள் ஈடுபட வேண்டாம் என்றும் அய்ம்பது அல்லது அறுபது பேர் மட்டும் ஈடுபட்டால் போதுமானது என்றும் கழகப் பொதுச்செயலாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, போராட்டத்தில் ஈடுபடும் வாய்ப்புக் கிட்ட வில்லையே என்ற ஏக்கத்தோடு, கட்டுப்பாட்டுடன் ஏற்றுக் கொண்டனர்.

முதல் வரிசையில் 'தமிழக அரசே, தந்தை பெரியார் குடும்பத்தைப் பழித்த ஆஸ்தான கவிஞரை வெளியேற்று!' என்று பொறிக்கப்பட்டிருந்த அட்டையினைத் தோளில் தாங்கிப் பிடித்துக்கொண்டு கொள்கை முழக்கமிட்டு ஊர்வலத்தைக் கட்டுப்பாட்டுடன் தலைமை வகித்து நடத்திச் சென்றார்.

ஊர்வலத்தில் பெரும்பாலான தோழர்களும், தாய் மார்களும் இத்தகைய அட்டைகளையும் கழகக் கொடியினையும் பிடித்துக் கொண்டு வீரநடை போட்டு வந்தனர்.

தந்தை பெரியார் வாழ்க! அன்னை நாகம்மையார் வாழ்க! அன்னை மணியம்மையார் வாழ்க!

தமிழக அரசே! தந்தை பெரியார் குடும்பத்தைப் பழித்த ஆஸ்தான கவியை வெளியேற்று!

மக்கள் வரிப்பணத்தை—தமிழக அரசே பாழாக்காதே!

என்ற ஒலி முழக்கங்கள் மண்ணையும் விண்ணையும் துகளாக்க, சுயமரியாதை உணர்வு கொண்ட தோழர்கள், பொது மக்கள் முழங்கிக் கொண்டு ஊர்வலமாக வந்தனர்.

ஊர்வலம் காமராசர்சாலை வழியாக இரும்பு வாராவதி பாலத்தை அடைவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு கழகப் பொதுச் செயலாளர் 'வேன்' மீது ஏறி நின்று, கழகத்தோழர்கள் கட்டுப்பாடுடன் கடமையாற்றுமாறு கேட்டுக் கொண்டார். உணர்ச்சிகரமான அந்த உரையைக் கேட்டுத் தோழர்கள் புல்லரித்துப் போயினர்.

தடையை மீறும் தோழர்கள், தடை விதிக்கப்பட்டுள்ள பகுதிக்குள் கொள்கை முழக்கமிட்டு நுழைந்தனர். கழகப்பொதுச் செயலாளர் குரல்கொடுக்க, போராட்ட வீரர்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு வீரநடைபோட்டுச் சென்ற காட்சி மயிர்க் கூச்செறியச் செய்தது.

இரும்பு வாராவதி பாலத்தருகில் கழகப் பொதுச்செயலாளர் உட்பட 59 தோழர்களையும் போலீசார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

கூடியிருந்த மக்கள் வெள்ளம் 'தமிழர் தளபதி வீரமணி வாழ்க!'' ''தமிழக அரசே! தந்தை பெரியார் குடும்பத்தைப் பழித்த ஆஸ்தான கவிஞரை வெளியேற்று!'' என்ற முழக்கங்களைப் போர் முழக்கமாக உணர்ச்சி எரிமலையாகி வெடித்தனர்.

கைதானதும், கூட்டம் போடாமல் அவரவர்கள் இல்லத்திற்குத் திரும்ப வேண்டும் என்று கழகப் பொதுச்செயலாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க தோழர்களும், தாய்மார்களும் கலைந்து சென்றனர்.

கைதானதற்குப் பிறகு பிரசார அணி செயலாளர் செல்வேந்திரன், கூடியிருந்த



மக்களிடையே அமைதியாகக் கலைந்து செல்லுமாறும், ஆஸ்தான கவிஞரை நீக்கக்கோரி, தமிழகம் முழுதும் பிரசாரம் செய்வோம் என்றும் அறிவித்தார்.

மறியலில் கைது செய்யப்பட்ட 5 பெண்கள் தவிர, மற்ற 55 தோழர்களும் பிற்பகல் 2-30 மணிக்கு இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, 5ந் தேதி வரை (15 நாள்) ரிமாண்டில் வைக்கப்பட்டனர். வீராங்கனைகள் 5 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## சிறை சென்ற தோழர்கள் : சென்னை மாவட்டம்

பழம்பெரும் சுயமரியாதை வீரர் நாகை. முருகேசன், 'முரசொலி' சங்கரய்யா, வில்லிவாக்கம் திராவிடர் கழகத் தலைவர் அ. தியாகராசன், புதுவண்ணை தி. க. தலைவர் க. பலராமன், புதுவண்ணை தி. க. துணைச் செயலாளர் தாமோதரன், பெரம்பூர் தி. க. தலைவர் ஏழுமலை, பெரம்பூர் க. முனிரத்தினம், அடையாறு கோவிந்தராசன், ஆலந்தூர் இராமச்சந்திரன், கேசவன், சென்னை மாவட்ட தி.க. துணைத்தலைவர் வி. எம். நாராயணன், திருவல்லிக்கேணி ஏ. வி. துரைசாமி, கோடம்பாக்கம் கவிதாசன், இராயப்பேட்டை வீரா. இராசகோபால் எம்.ஏ., பி.ஓ.எல்., மாணவர் கழகத் தோழர் அசோக்குமார், திருவொற்றியூர் சக்திமோகன்.

## வ. ஆ. மாவட்டம்

வ.ஆ. மாவட்ட தி.க. தலைவர் ஆம்பூர் ஏ. பெருமாள், வ.ஆ. மாவட்ட தி.க. துணைத் தலைவர் செய்யாறு வேல் சோமசுந்தரம், வ.ஆ. மாவட்ட தி.க. துணைச்செயலாளர் சோலையார்பேட்டை கே. கே. சின்னராசு, சோலையார்பேட்டை தோழர்கள் குமணன், ராமானுசம்.

## தெ. ஆ மாவட்டம்

கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை எம்.ஏ., பி.எல்., திராவிடர் மாணவர் கழக மண்டல செயலாளர் துரை. சந்திரசேகரன் பி.ஏ., நெய்வேலி இராமசாமி, மந்தாரக்குப்பம் சு. நாராயணசாமி.

## கோவை மாவட்டம்

மண்டல மாணவர் கழகச் செயலாளர் என். சேதுபதி எம்.ஏ., குருவாரெட்டியூர் கழகத் தோழர்கள் பி. பிரகலாதன், ஜி. எஸ். சண்முகம்.

### தஞ்சாவூர் மாவட்டம்

திராவிடர் மாணவர் கழக மண்டல செயலாளர் ஏ. பி. வள்ளிநாயகம் பி.எஸ்ஸி., திருவாரூர் வட்டம் திருவாதிரை மங்கலம் வட்டார கீழ்க்கண்ட தோழர்கள் :

உ. மாரியப்பா-மேலச்சூரனூர், சி. சுப்பிரமணியன்-திருவாதிரை மங்கலம், பி. கோவிந்தசாமி-திருவாதிரை மங்கலம், க. நாகராசன்-கீழ்ச்சூரனூர், பி. பக்கிரிசாமி-கீழ்ச்சூரனூர், ஆர். செல்வராசு-கீழ்ச்சூரனூர், ஆர். பொன்னுசாமி-மேலச்சூரனூர், ஈ. நடேசன்-மேலச்சூரனூர், டி. மாரியப்பா - மேலச்சூரனூர், ஆர். அந்தோணிசாமி — சோழங்கநல்லூர், எஸ். பொய்யாமொழி – சோழங்கநல்லூர், என். செல்வமணி-குறும்பேரி, கோ. சேகர்-குறும்பேரி, கு. கணபதி-வடகுடி, வை. வடிவேலு-வடகுடி, கே. வீராசாமி-வடவோடை, சு. முருகேசன்-வடவோடை, எஸ். அருள்தாஸ்-ஆமூர், கே. கோபால்—எழுமுக்கால்.

### இராமநாதபுரம் மாவட்டம்

காரைக்குடி சாமி திராவிடமணி, தேவகோட்டை சிவ. இளங்கோவன்.

### புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்ட தி.க. செயலாளர் பெ. இராவணன், மாவட்ட தி.க. துணைச் செயலாளர் பி. டி. வடிவேல்.

### செங்கற்பட்டு

திருக்கழுக்குன்றம் சம்பந்தம்.

### கலந்துகொண்ட வீராங்கனைகள்

திருமதி பட்டு பாலசுந்தரம் (மறைந்த பாவலர் பாலசுந்தரம் அவர்களது துணைவியார்), திருமதி காந்திமதி முத்துசாமி-மதுரை மாவட்ட திராவிடர் மகளிர் கழக அமைப்பாளர், திருமதி. மீரா ஜெகதீசன்-வ. ஆ. மாவட்ட அமைப்பாளர், திருமதி பார்வதி கணேசன்-வட சென்னை மாவட்ட அமைப்பாளர், திருமதி அறிவுக்கொடி-சென்னை (மறைந்த பாவலர் பாலசுந்தரம் அவர்களது மகள்).

### அரசைக் கண்டித்து கண்டனக் கூட்டங்கள்

23-3-79 : தந்தை பெரியாருக்குத் துரோகம் செய்யும் தமிழ்நாடு அரசைக் கண்டித்து நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்துவதென கழக சார்பில் முடிவெடுக்கப்பட்டது.

இதையொட்டி தலைமைக் கழக செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமி—

கூட்டம் நடத்த வேண்டிய ஊர்கள்—தேதிகளை குறிப்பிட்டு 'விடுதலை'யில் ஒரு அறிக்கை விடுத்தார்.

நாடெங்கும் அதன்படி கூட்டங்கள் நடந்தன. கழகப் பொருளாளரும், தலைமைக் கழக செயலாளரும் இக்கூட்டங்களில் பங்கேற்றனர்.

பல ஊர்களில் கண்டன ஊர்வலங்களும் நடத்தப்பட்டன.

### கொதித்தெழுந்த அண்ணாமலை மாணவர்கள் :

24-3-79: தந்தை பெரியார் குடும்பத்தை பழிதூற்றிய ஆஸ்தான கவிஞரை பதவி நீக்கம் செய்யக் கோரி, அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்கள் கொதித்தெழுந்துள்ளனர். சிறைக்குள் இருக்கும் கழகப் பொதுச்செயலாளர் மற்றும் தோழர்களை விடுதலை செய்யக் கோரியும், ஆஸ்தான கவியை பதவி நீக்கம் செய்யக் கோரியும், அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

பி.யு.சி. வகுப்பு, பட்ட வகுப்பில் பயிலும் 4 ஆயிரம் மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர். கறுப்பு பாட்ஜுகளையும் கறுப்புச் சட்டையும் அணிந்திருந்தனர்.

### தந்தை பெரியார் அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு :

2-4-79 : தந்தை பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தின் சார்பில் 1973ல் சென்னை பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்ட 'தந்தை பெரியார் அறக்கட்டளை' சொற்பொழிவு இன்று துவங்கியது.

'ஒரு புரட்சியாளரின் மறுமலர்ச்சி' (திஎவல்யூஷன் ஆஃப் ரிவல்யூஷனரி) என்ற தலைப்பிலான இந்தச் சொற்பொழிவுத் தொடரை—

சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் ஆற்றினார்கள்.

2ந் தேதி, 3ந் தேதி, 4ந் தேதி, நடந்த இச்சொற்பொழிவு, நாள்தோறும் மாலை அய்ந்தரைமணியளவில், சென்னை பல்கலைக்



கழக நூற்றாண்டு விழா கட்டிடத்தில் துவங்கியது.

### புலமைப்பித்தன்

3-4-79 : பெரியார் குடும்பத்தைப்பற்றி இழிவாக எழுதிய கவிஞர் கண்ணதாசனை 'செருப்பால் அடிப்பேன்' என்று—

அ.தி.மு.க. எம். எல். சி.,யான புலமைப்பித்தன் சென்னையில் நடந்த கூட்டமொன்றில் ஆவேசமாகப் பேசினார்.

இதே விழாவில் பங்கேற்ற அ.தி.மு.க. அமைச்சர் ராசாமுகமது—

'புலமைப்பித்தனின் உணர்ச்சிகளை மதிப்பதாக'க் கூறினார்.

### பி.ஏ. வகுப்பில் அய்யா பாடம் !

4-4-79 : சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் பி.ஏ., தத்துவ இயல் பாடத் திட்டத்தில், தந்தை பெரியாரின் தத்துவங்கள் இடம் பெற—

பல்கலைக்கழக செனட் ஒப்புதல் வழங்கியது.

### 'ஆஸ்தான கவி' நீக்க மறியல்: கழகத் தோழர்கள் விடுதலை

5-4-79: தந்தை பெரியார் குடும்பத்தைப் பற்றி இழிவாக எழுதிய ஆஸ்தான கவிஞரை பதவி நீக்கம் செய்யக்கோரி மறியலில் ஈடுபட்ட கழகப் பொதுச்செயலாளர் உட்பட 55 கழகத் தோழர்கள் இன்று மதியம் 2-30 மணியளவில் எழும்பூர் 14வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர்படுத்தப்பட்டனர். கழகப் பொதுச் செயலாளரையும் தோழர்களையும் மேலும் 15நாள் ரிமாண்டில் வைக்கவேண்டும் என்று அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்த வழக்கில், ரிமாண்டை மேலும் நீடிப்பதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது என்று கூறி அனைவரையும் விடுதலை செய்து 14வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் குருசாமி தீர்ப்பளித்தார்.

கழகப் பொதுச் செயலாளர், தோழர்கள் வெளியே வந்ததும், காலை முதலே நீதிமன்றத்தில் ஏராளமான அளவில் கூடியிருந்த கழகத் தோழர்கள், தாய்மார்கள்—தந்தை பெரியார் வாழ்க, தளபதி வீரமணி வாழ்க என்று முழக்கமிட்டனர்.

அங்கிருந்து விடுதலையான கருஞ்சட்டை தோழர்களும், மற்றும் ஏராளமான தோழர்களும், தாய்மார்களும் ஒலி முழக்கங்களை எழுப்பிக்கொண்டு பெரியார் திடலை நோக்கி ஊர்வலமாக வந்த காட்சி மெய்சிலிர்ப்பதாக இருந்தது.

நேராக பெரியார் திடலில் தந்தை பெரியார் நினைவிடம் வந்து, அங்கு கழகப் பொதுச் செயலாளர், தோழர்கள் மாலை வைத்து மரியாதை செலுத்தினர். தந்தை பெரியார் வாழ்க என்று கழகப் பொதுச் செயலாளர் எடுத்துக்கூற, கூடியிருந்த தோழர்கள் பதிலளித்து முழக்கமிட்டனர்.

பின்னர், பெரியார் திடலில் கழகப் பொதுச் செயலாளர் உணர்ச்சியுடன்-கூடியிருந்த தோழர்களிடையே உரையாற்றினார்.

### ஆசைத்தம்பி :

10-4-79 : 7-4-79-ல் அந்தமானில் காலமான ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் உடல் சென்னைக்கு இன்று வந்து சேர்ந்தது.

ஆசைத் தம்பியின் உடலுக்கு கழகப் பொதுச் செயலாளர்—கழகத்தின் சார்பில் கறுப்பாடை போர்த்தி இறுதி மரியாதை செலுத்தினார்.

### வானொலியில்

20-4-79 : 'பெரியாரும் பெண் விடுதலையும்' என்ற தலைப்பில் சென்னை வானொலியில் பொதுச் செயலாளர் இன்றிரவு 8-30 மணிக்குப் பேசினார்.

### கீழத்தஞ்சை மாவட்டம் எடுத்த மகத்தான விழா

28-4-79: கீழத் தஞ்சை மாவட்ட தி.க. சார்பில் நாகை நகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் இன்று துவங்கின.

நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த பொதுச் செயலாளருக்கு—

மாயவரம், இலந்தங்குடி, மங்கநல்லூர், கொல்லு மாங்குடி, பேரளம், நன்னிலம், விற்குடி, கொடிக்கால் பாளையம், திருவாரூர் ஆகிய புகை வண்டி நிலையங்கள் அனைத்திலும் மாபெரும் வரவேற்பு தரப்பட்டது.

நாகப்பட்டினம் அவுரித் திடலில் விழா நடைபெற்றது ; முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் சமத் விழா துவக்கவுரை ஆற்றினார்.

பட்டிமன்றம், கலை நிகழ்ச்சி, கருத்தரங்கம் என முதல் நாள் நிகழ்ச்சிகள் மிளிர்ந்தன.

29-4-79 : இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் எழுச்சியுடன் துவங்கின.

காலையில்—பல்துறை வல்லுநர்களும், கழகத்தவரும் பங்கேற்ற கருத்தரங்கம் சிறப் புடன் நடந்தேறியது.

மாலையில் மாபெரும் ஊர்வலம் நடை பெற்றது.

இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, எம். கல்யாணசுந்தரம் எம். பி. மற்றும் தோழர்கள் உரையாற்றினர்.

*102 மூட்டை நெல்*

கிழக்குத் தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் கழகப் பொதுச் செயலாள ரிடம் 102 மூட்டை நெல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

*பசுவதைத் தடைச் சட்டத்தை எதிர்த்து*

4-5-79 : பசுவதைத் தடை என்ற பெய ரால் மாநில அரசுகளின் உரிமையைப் பறிப் பதற்கு கண்டனம் தெரிவித்து, திராவிடர் கழகத்தின் சார்பில் சென்னை பெரியார் திடலில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

சென்னை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் எஸ். பி. தட்சிணாமூர்த்தி, செயலா ளர் மு. போ. வீரன், அமைப்பாளர் அ. குண சீலன், இளைஞர் அணி செயலாளர் கு. இராம கிருட்டினன், வி. எம். எஸ். மணி, (குடியரசுக் கட்சி), எஸ். துரைசாமி (தலைமைக் கழகச் செயலாளர்), சக்திதாசன் (குடியரசுகட்சி), வி. பி. சிந்தன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி) எம். கல்யாணசுந்தரம் எம். பி. (இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி), டாக்டர் கலைஞர் ஆகியோர் உரையாற்றினர்.

*எழுச்சியுடன் கூடிய மத்திய கமிட்டி*

6-5-79 : திராவிடர் கழக மத்திய கமிட்டி கூட்டம் இன்று காலை 10-30 மணியளவில் சென்னை பெரியார் திடலில் எழுச்சியுடன் துவங்கியது.

தமிழ்நாடு முழுவதுமிருந்தும் கழகப் பொறுப்பாளர்கள், அணிச் செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள், வட்ட, நகர கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள், பெண்கள் உட்பட 500க்கும் மேற் பட்ட கழகத் தோழர்கள் திரளாக வந்திருந் தனர்.

கமிட்டியில் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

*திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள்*

திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட் டிக்கு கீழ்க் கண்ட உறுப்பினர்களை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தேர்ந்தெடுத்து அறிவித்ததை மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

கீழ்க்கண்ட நான்கு வகையில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர் கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. கழகப் பொதுச் செயலாளர், பொரு ளாளர், தலைமை நிலையச் செயலாளர்கள்.

2. எல்லா மாவட்ட திராவிடர் கழகத் தலைவர்களும், எல்லா மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர்களும்,

3. பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறு வனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள்.

4. இந்த மூன்று பொறுப்புகளிலும் இல் லாத இங்கு அறிவிக்கப்படுகிற திராவிடர் கழகத் தோழர்கள் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்களாக மொத்தம் நான்கு நிலைகளில் தெரிந்தெடுக்கப் படுகிறார்கள்.

*சென்னை மாவட்டம்*

1. கி. வீரமணி திராவிடர் கழகப்பொதுச் செயலாளர்.

2. எஸ். துரைசாமி-திராவிடர் கழகத் தலைமை நிலைய செயலாளர்.

3. சென்னை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் எஸ். பி. தட்சிணாமூர்த்தி.

4. ஏ. தியாகராசன்-வில்லிவாக்கம் திரா விடர் கழகத் தலைவர்.

5. சென்னை மாவட்ட திராவிடர் கழக செயலாளர் மு. போ. வீரன்.

6. க. பலராமன் — புதுவண்ணை திராவிடர் கழகத் தலைவர்.

*செங்கற்பட்டு மாவட்டம்*

1. செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சி. பி. இராசமாணிக்கம்.



2. செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் கழக செயலாளர் வி. கங்காதரன்.

3. ஜானகிராமன்-காஞ்சிபுரம்.

*வடாற்காடு மாவட்டம்*

1. வ. ஆ. மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் ஏ. பெருமாள்.

2. வ. ஆ. மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர் ஏ. டி. கோபால்.

3. கே. கே. சின்னராசு-வ. ஆ. மாவட்ட திராவிடர் கழக துணைச் செயலாளர்.

4. வேல் சோமசுந்தரம்-வ. ஆ. மாவட்ட திராவிடர் கழக துணைத் தலைவர்.

5. பா. அருணாசலம்—வ. ஆ. மாவட்ட திராவிடர் கழக அமைப்பாளர்.

*தென்னாற்காடு மாவட்டம்*

1. தெ. ஆ. மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் நா. நடேசன்.

2. கோ. சாமிதுரை — திராவிடர் கழக அமைப்புச் செயலாளர்.

3. தெ. ஆ. மாவட்ட திராவிடர் கழக செயலாளர் இரா. கனகசபாபதி.

4. வை. குப்புசாமி-தெ. ஆ. மாவட்ட திராவிடர் கழக துணைச் செயலாளர்.

*தஞ்சாவூர் மாவட்டம்*

1. தஞ்சாவூர் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் அ. ஆறுமுகம்.

2. கா. மா. குப்புசாமி-திராவிடர் கழகப் பொருளாளர், திராவிடர் கழக தஞ்சை மாவட்ட செயலாளர்.

3. டி. மாரிமுத்து—திராவிடர் கழக தஞ்சாவூர் மாவட்ட துணைத் தலைவர்.

4. வே. வாசுதேவன் திராவிடர் கழக தஞ்சாவூர் மாவட்ட துணைத் தலைவர்.

5. க. சுந்தரம்—திராவிடர்கழக திருத் துறைப் பூண்டி வட்ட தலைவர்.

6. ஆர். பி. சாரங்கன்—தஞ்சாவூர் மாவட்ட திராவிடர் கழக துணைத் தலைவர்.

*திருச்சி மாவட்டம்*

1. திருச்சி மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் டி. டி. வீரப்பா.

2. என். செல்வேந்திரன் — திராவிடர் கழகப் பிரசார செயலாளர்.

3. ஏ. எம். ஜோசப்—திராவிடர் கழக விவசாய-தொழிலாளர் பிரிவு செயலாளர்.

4. எஸ். சோமு—திருச்சி.

5. முத்துசெழியன்—திருச்சி மாவட்ட திராவிடர் கழக துணைத் தலைவர்.

6 திருச்சி மாவட்ட திராவிடர் கழக செயலாளர் கே.கே. பொன்னப்பா.

7. கே. எஸ். இராமசாமி—கரூர்.

*கோயம்புத்தூர் மாவட்டம்*

1. கோவை மாவட்ட திராவிடர் கழக தலைவர் கே. இராமச்சந்திரன்.

2. கு. இராமகிருட்டினன் — கோவை மாவட்ட திராவிடர் கழக செயலாளர், மாநில இளைஞர் பிரிவு செயலாளர்.

3. திருமதி அம்மணி அம்மாள்—கோவை மாவட்ட திராவிடர் கழக மகளிர் பிரிவு அமைப்பாளர்.

4. கே. இராமசாமி—கோவை வட்ட திராவிடர் கழகத் தலைவர்.

*பெரியார் மாவட்டம்*

1. பெரியார் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சி. நடராசன்.

2. பெரியார் மாவட்ட திராவிடர் கழக செயலாளர் நா. சேதுபதி.

3. ரா. ரெங்கநாயகிஅம்மாள்—மாவட்ட திராவிடர் கழக மகளிர் பிரிவு அமைப்பாளர்.

*மதுரை மாவட்டம்*

1. மதுரை மாவட்ட திராவிடர் கழக தலைவர் வாடிப்பட்டி எஸ். சுப்பையா.

2. ஓ.வி. கே. நீர்காத்தலிங்கம்—மதுரை மாநகர திராவிடர் கழக தலைவர்.

3. ம. பெ. முத்துக்கருப்பையா—மதுரை மாவட்ட திராவிடர் கழக துணைத் தலைவர்.

4. மதுரை மாவட்ட திராவிடர் கழக செயலாளர் டி. சுப்பிரமணியம்.

*கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம்*

1. கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் ஆர். சண்முக நாதன்.

2. கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக செயலாளர் என். ஆர். சாமி.

3. ஆர். சுப்பிரமணியம்—கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக பொருளாளர்.

### மேற்கு இராமநாதபுரம் மாவட்டம்

1. மேற்கு இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் கே. சி. பி. சிதம்பரம்.

2. ஏ. வெங்கடாசலபதி—மேற்கு இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழகத் துணைத் தலைவர்.

3. மேற்கு இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக செயலாளர் ஓ. எம். பாலன்.

### திருநெல்வேலி மாவட்டம்

1. திருநெல்வேலி மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் எஸ். நட்சேத்திரம்.

2. பி. எஸ். சண்முகம்—திருநெல்வேலி மாவட்ட திராவிடர் கழக துணைத் தலைவர்.

3. திருநெல்வேலி மாவட்ட திராவிடர் கழக செயலாளர் டி. ஏ. தியாகராசன்.

4. சிவனணைந்த பெருமாள் தூத்துக்குடி திராவிடர் கழக செயலாளர்.

### கன்னியாகுமரி மாவட்டம்

1. கன்னியாகுமரி மாவட்ட திராவிடர் கழக செயலாளர் சண்முகய்யா.

2. எஸ். கணேசன்—நாகர்கோயில்.

3. கன்னியாகுமரி மாவட்ட திராவிடர் கழக செயலாளர் எம். முகமதப்பா.

### புதுக் கோட்டை மாவட்டம்

1. புதுக்கோட்டை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் அடைக்கலம்.

2. புதுக்கோட்டை மாவட்ட திராவிடர் கழக செயலாளர் பெ. இராவணன்.

### தருமபுரி மாவட்டம்

1. தருமபுரி மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் க. தங்கவேலு.

2. என். எஸ். உசேனிபீரான்—தருமபுரி மாவட்ட திராவிடர் கழகத் துணைத் தலைவர்.

3. தேசாய் வேணுகோபால்—தருமபுரி மாவட்ட திராவிடர் கழக துணைத் தலைவர்.

4. தருமபுரி மாவட்ட திராவிடர் கழக செயலாளர் காவேரிப்பட்டினம் ஸ்ரீராமலு.

### சேலம் மாவட்டம்

1. சேலம் மாவட்ட திராவிடர் கழக தலைவர் க. சண்முகம்.

2. சேலம் மாவட்ட திராவிடர் கழக செயலாளர் து. செல்லமுத்து.

3. ச. திரு. அழகரசன்—சேலம் நகர திராவிடர் கழக தலைவர்.

4. புள்ளையண்ணன்—ஓமலூர்.

### பாண்டிச்சேரி மாநிலம்

1. சி. மு. சிவம்—காரைக்கால்.

2. கு. கலைமணி—திராவிடர் கழக புதுவை வட்டத் தலைவர்.

### பெங்களூர்

1. எஸ். டி. அரசு—பெங்களூர்.

2. பெங்களூர் திராவிடர் கழகத்தலைவர் அர்ச்சுனன்.

### பம்பாய் மாநிலம்

1. பம்பாய் திராவிடர் கழக தலைவர் ஆர். ஏ. சுப்பையா.

2. மந்திரமூர்த்தி—பம்பாய் திராவிடர் கழக பொருளாளர்.

### பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

1. திருமதி ரெங்கம்மாள் சிதம்பரம்.
2. என். எஸ். சம்பந்தம்.
3. என். வி. விசாலாட்சி அம்மாள்
4. திருமதி ஏ. சி. இராமகிருட்டினம்மாள்.
5. புலவர் கோ. இமயவரம்பன்
6. எஸ். சிவசங்கரன்
7. து. ஜெகதீசன்
8. டி. கே. இராமச்சந்திரன்.





காஞ்சிபுரத்தில் ஆசிரியர் பகுத்தறிவுப் பிரசார பயிற்சி துவக்க விழா. முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு உரையாற்றுகிறார். (13-5-79)

---

### மாணவர் பயிற்சி முகாம்

**7-5-79 :** திராவிடர் கழக மாணவர் பிரசார ஒருவார கால பயிற்சி முகாம் இன்று காலை சென்னை பெரியார் திடலில் துவங்கியது.

தமிழ்நாடு முழுதுமிருந்து 70 பேர் இதில் பங்கேற்றனர்.

துவக்கவிழா தலைமை—சென்னை ப. க. தலைவர் பகீரதன்.

இளைஞரணி செயலாளர் கு. ராமகிருட்டினன் வரவேற்புரையாற்றினார்.

வகுப்புகளை கவிஞர் கருணானந்தம் துவக்கிவைத்தார்.

சிறப்புரை—கழகப் பொதுச்செயலாளர்.

### நாடெங்கும் மாணவர்கள் பயணம்

திராவிடர் கழகம் நடத்திய முகாம்களில் பயிற்சி பெற்ற மாணவர்கள், நாடெங்கும் நடந்த பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்றனர்.

### நாடெங்கும் மாட்டுக்கறி உண்ணும் விரதம்

**13-5-79 :** நாடெங்கும் மாட்டுக்கறி விருந்துகளை கழகத் தோழர்களும், பகுத்தறிவாளர் கழக அமைப்புகளும் சிறப்புற நடத்தினர்.

திராவிடர் கழக மத்திய கமிட்டியின் 6—5—79-ந் தேதிய ஆறாம் தீர்மானப்படி—

ஒருவரின் உணவுப் பழக்கத்திற்கு மத உணர்வுகளோ, அல்லது மற்ற நிர்பந்தங்களோ குறுக்கீடாக அமையக் கூடாது

என்பதைக் காட்டவும், உணவுப்பழக்கம் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை யாகும் என்பதை நிலைநாட்டும் வகையிலும், பசுவதைத் தடைச்சட்டத்திற்கு எதிர்ப்பு காட்டும் முறையிலும் இவ்விருந்துகள் நடத்தப்பட்டன.

### தமிழகத்திலேயே முதன் முதல் காஞ்சியில் ஆசிரியர் பகுத்தறிவுப் பிரசாரப் பயிற்சி முகாம்

13-5-79 : ஆசிரியர் பகுத்தறிவுப் பிரசார பயிற்சி வகுப்பு காஞ்சிபுரம் விசயலட்சுமி திருமண நிலையத்தில் 13—5—79 அன்று காலை 10-30 மணியளவில் துவங்கியது. சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து 70க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். துவக்கத்தில் மண்டலச் செயலாளர் துரை. சந்திரசேகரன் கடவுள், ஆத்மா மறுப்பு கூற மாவட்ட தி. க. தலைவர் சி. பி. இராசமாணிக்கம் வரவேற் புரையாற்றினார். தொடர்ந்து நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் உரையாற்றிய பின்னர்—நிகழ்ச்சி யினை தொடங்கி வைத்து முன்னாள் பல் கலைக்கழக துணைவேந்தர் நெ. து. சுந்தர வடிவேல் அவர்கள் மிகவும் சீரிய அறிவு விருந்தினை அளித்தார்கள்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம் செய்துகொண்ட காட்சி சிறப்பான ஒன்றாகும்.

பேராசிரியர் மா. நன்னன் அவர்கள் ''பகுத்தறிவும் ஆசிரியரும்'' என்பது பற்றியும், பேராசிரியர் இராமநாதன் அவர்கள் 'புராண ஆபாசங்கள்' என்பது பற்றியும்' கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் 'கடவுள் மறுப்பு' என்பது பற்றியும் வகுப்புகள் எடுத்தனர்.

### ஈரோடில் ஆசிரியர் பயிற்சி முகாம்

16-5-79 : காஞ்சிபுரத்தைத் தொடர்ந்து தந்தை பெரியார் பிறந்த மண்ணான ஈரோட் டில் ஆசிரியர் பகுத்தறிவு பிரசாரப் பயிற்சி முகாம் பிற்பகல் 2-45 மணியளவில் துவங்கியது. ஈரோடு பெரியார் மன்றத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்பில் கோவை, சேலம், தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் பயிற்சி பெற்றனர். தாராபுரம் கழகத் தோழர் சுப்பு, கடவுள் மறுப்பு வாசகங்களை எடுத்துக்கூற தொடக்க விழா நிகழ்ச்சி துவங்கியது.

பகுத்தறிவுப் பேராசிரியர் இறையனார் வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் தி. வை. சொக்கப்பா தொடக்க உரை நிகழ்த் தினார். அடுத்து சேலம் மாவட்ட திராவிடர் கழகதலைவர் பொத்தனூர் க. சண்முகம் உரை யாற்றிய பிறகு கழகப் பொதுச்செயலாளர் உரையாற்றினார்.

### இளைஞர் அணி சாதனை : ஆயிரம் 'உண்மை' சந்தா நிதியளிப்பு

இளைஞர் அணியின் பெருமுயற்சியால், 1000 'உண்மை' இதழுக்கான சந்தாக்கள் சேர்க்கப்பட்டு, அதற்கான 10 ஆயிரம் ரூபாய் சந்தாத்தொகை வழங்கும் விழா தஞ்சையில் மிகப் பிரமாண்டமான அளவில் நடைபெற்றது.

### வெள்ளிக்கேடயம்

கழகப் பொதுச்செயலாளருக்கு தந்தை பெரியார் உருவம் பொறித்த வெள்ளிக்கேடய மொன்று, மாணவரணியின் சார்பில் பலத்த கைதட்டல்களுக்கிடையே வழங்கப் பட்டது.

### கு. இராமகிருட்டினன்

1000 'உண்மை' சந்தாக்களுக்கான தொகையை இளைஞர் அணி செயலாளர் கு. இராமகிருட்டினன் கழகப் பொதுச் செயலாளரிடம் பலத்த கரவொலிக்கிடையே வழங்கினார். கூட்டத்திற்கு பல்லாயிரக் கணக்கில் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.

### திருச்சியில் ஆசிரியர் முகாம்

19-5-79 : திருச்சி பெரியார் மாளிகை யின் பெரியார்—மணியம்மை அரங்கில் ஆசிரியர் பயிற்சி முகாம் இன்று காலை 10-30 மணிக்கு துவங்கியது. திருச்சி மாவட்ட தி. க. தலைவர் டி. டி. வீரப்பா வரவேற்புரை நிகழ்த்தினார், பேராசிரியர் திருமதி சக்குபாய் நெடுஞ் செழியன் எம். ஏ., துவக்க உரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் ராமநாதன், பேராசிரியர் நன்னன், பேராசிரியர் இறையன், புவனன் ஆகியோர் பயிற்சி முகாமின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினர். இறுதியில் கழகப் பொதுச்செயலாளர் உரையாற்றினார்.

திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு, புதுக் கோட்டை மாவட்டங்களிலிருந்து 100க்கும் அதிகமான ஆசிரியர்கள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

### ஆஸ்தான கவிக்கு அரசின் குழுவும் கண்டனம்

27-5-79 : தமிழ்நாடு அரசால் நியமிக்கப் பட்ட 'தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்





சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தைத் தொடர்ந்து மாட்டுக் கறி விருந்து. (6-5-79)

குழு'—நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் திருச்சியில் இன்று கூடி—

தந்தை பெரியார் குடும்பத்தைப் பழித்தெழுதிய ஆஸ்தான கவிக்குக் கண்டனம் தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

## பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனை

30-5-79 : பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தின் சார்பில் பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனை திறப்பு விழா—இன்று மாலை 6-25 மணியளவில் சென்னை பெரியார் திடலில் சிறப்புற நடந்தது. கழகப் பொதுச் செயலாளரின் வரவேற்புரையின் பின், சென்னை உயர்நீதிமன்ற தலைமைப் பொறுப்பு நீதிபதி ஜஸ்டிஸ் எம். எம். இஸ்மாயில்—செட்டிநாட்டரசர் ராஜா சர். முத்தையா அவர்கள் தலைமையில் மருத்துவமனையைத் திறந்து வைத்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதி பி. வேணுகோபால் அவர்கள், தந்தை பெரியார்—அன்னை மணியம்மையார் ஒருசேரவுள்ள புகைப்படத்தை மருத்துவமனையில் திறந்து வைத்தார்.

பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனை கவுரவ டைரக்டர் டாக்டர் கே. ராமச்சந்திரா, அய்யாவின் டாக்டர்களில் ஒருவரான எச். எஸ். பட் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன தலைவர் வழக்கறிஞர் இரா. சண்முகநாதன் அவர்கள் நன்றி கூறினார்.

இம்மருத்துவமனை பொறுப்புக் குழு உறுப்பினர்கள் :

1. டாக்டர் கே. ராமச்சந்திரா, 2. ஆர். பண்டரிநாதன், 3. என். எஸ். சம்பந்தம், 4. ஆம்பூர் ஜெகதீசன், 5. ஆத்தூர் முருகேசன்.

## போலீஸ் இலாகாவில் தமிழர் நிலை

1-6-79 : தமிழ்நாட்டின் காவல்துறை தலைமை அதிகாரிகள் 12 பேர் (அய். ஜி.) நியமனத்தில்—

தமிழர் இல்லா நிலையைச் சுட்டியும், சாடியும் கழகப் பொதுச் செயலாளர் இன்று அறிக்கை விடுத்தார்.

## எழுத்துச் சீர்திருத்தம் : அரசின் பின்வாங்கல்

3-6-79 : தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அரசு விடுத்த அறிக்கைப்படி 'ஐ', 'ஔ' என்ற எழுத்துக்கள் 'அய்', 'அவ்' என எழுதலாம்.

திடீரென—தமிழ் நெடுங் கணக்குப்படி 'ஐ', 'ஔ' எழுதலாமென அரசு ஆணையிட்ட செய்தி இன்றைய 'விடுதலை'யின் நான்காம் பக்கத்தில் இடம் பெற்றது.

எழுத்துச் சீர்திருத்தம்பற்றி மேலும் ஆராய்வதற்காக மகா வித்வான் மே. வீ. வேணுகோபாலனார் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுவிட்டதாயும் தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அரங்கநாயகம் அறிவித்தார்.

## ஒக்கூரில் அய்யா சிலை

8-6-79 : தந்தை பெரியாரின் உருவச் சிலையை கழகப் பொதுச் செயலாளரவர்கள் இன்று கீழத் தஞ்சை மாவட்டத்து ஒக்கூரில் திறந்து வைத்தார்கள்.

## கழக வீரர் பதி மீது தாக்குதல்

14-6-79 : நன்னிலம் வட்ட தி. க. துணைச் செயலாளர் பதி—

நாகை இடைத் தேர்தலில் முற்போக்கு கூட்டணியில் இணைந்து பணியாற்றியது சகியாமல் ஆளும் அ. இ. அ. தி. மு. க. கும்பலால் கடுமையாக இன்று காலை தாக்கப்பட்டார்.

## 'அய்யாவின் பொன் மொழிகள்' தடை நீக்கி அரசு ஆணை !

15-6-79 : 'தந்தை பெரியாரின் பொன் மொழிகள்' என்னும் நூலுக்கு கடந்த 1950 ஆம் ஆண்டில் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடையினை நீக்கி இன்று தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்திருந்தது.

## அய்யா பிறந்த மண் : அர்ஸ் பெருமிதம்

20-6-79 : பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்காக நாற்பது ஆண்டுகள் போராடிய தந்தை பெரியார் பிறந்த மண்ணில் பிறந்தவர்கள் நாம் என—

கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ்—





ஈரோட்டில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழா மேடையில் இலங்கைத் தமிழர் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம், டாக்டர் கலைஞர், கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி. (18-3-79)

கர்நாடக மாநில சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் பெருமிதத்துடன் கூறினார்.

## கோவையில் அய்யா விழா

23-6-79 : 23, 24-6-79 இரு நாட்களிலும் மாவட்ட தி. க. சார்பில் அய்யாவுக்கு நூற்றாண்டு விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

காலை பத்தரை மணி அளவில் பிரசிடெண்ட் ஆல் பெரியார் மண்டபத்தில் எழுச்சியுடன் விழா துவங்கியது.

முதல்நாள் 'சமுதாய விஞ்ஞானி பெரியார்' என்ற தலைப்பில் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றங்கள் இடம் பெற்றன.

24-6-79 : இரண்டாம்நாள் விழா நிகழ்ச்சியில் முதலாவதாய் 'பெரியார் பிஞ்சுகள்' நிகழ்ச்சிகள் ; பின் கருத்தரங்கம் நடைபெற்றது.

திட்டமிட்டபடி—கொள்கை எழுச்சிமிகு ஊர்வலம் கொட்டும் மழையிலும் சிறப்புற பிற்பகலில் நடந்தது.

இரவு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தந்தை பெரியார் அவர்களின் கருத்து மணிகளை உள்ளடக்கிய 'பெரியார் மலர்கள்' எனும் கையடக்கமான நூல்—

'ஜனசக்தி' ஆசிரியர் தோழர் தா. பாண்டியன் அவர்களால் வெளியிடப்பட்டது.

ஜி. இலட்சுமணன் எம். பி., அப்துல் லத்தீப் எம். எல். ஏ., திருமதி இரமணிபாய், தா. பாண்டியன், கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி மற்றும் பலர் உரையாற்றினர்.

## பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் வருகை

30-6-79 : பெரியார் திடலில் (சென்னை) இன்று நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர்

கமிஷன் வரவேற்புக் கூட்டத்திற்கு, 'தென்னக பிற்படுத்தப் பட்டோர் ரயில்வே ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது

தங்கள் கமிஷன் அறிக்கையை செயல் படுத்த வைப்போம் என இக்கூட்டத்தில் பங்கேற்ற பொதுச்செயலாளர் குளுரைத்தார்.

மண்டல் தலைமையிலான இக்கமிஷன் உறுப்பினர்களில் ஒருவரான திரு. சுப்பிரமணியம் (தமிழர்; ஆந்திராவாசி)—அய்யா, அம்மா நினைவிடங்களில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பிற்படுத்தப்பட்டோர் கமிஷனிடம் இன்று 20 பக்கங்களடங்கிய அறிக்கை ஒன்று கழகப் பொதுச் செயலாளரால் தரப்பட்டது.

தெ. ஆ. மாவட்ட தி. க. வின்
கல்லக்குறிச்சி விழா

30-6-79 : தென்னாற்காடு மாவட்ட தி க. சார்பில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா இன்று கல்லக்குறிச்சி ராஜா நகரில் காலை 11 மணியளவில் எழுச்சியுடன் துவங்கியது. பிரசார செயலாளர் செல்வேந்திரன் விழாவைத் துவக்கி வைத்தார்.

அடுத்து, பெரியார் பிஞ்சுகள் நிகழ்ச்சி. அதனைத் தொடர்ந்து கருத்தரங்கம் நடைபெற்றது.

பிற்பகலில் இசை நிகழ்ச்சியும், 'அய்யா சுட்டிய அய்ந்து நோய்கள்' என்ற தலைப்பில் சிறப்பான கவியரங்கமும் நடந்தன.

பொதுச்செயலாளருக்கு எடைக்கு எடை
நாணயம்

தென்னாற்காடு மாவட்டத்தின் சார்பில் கல்லக்குறிச்சியில் நடைபெறும் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்றுகாலை சிறப்புடன் துவங்கின. இசை நிகழ்ச்சியினைத் தொடர்ந்து பட்டிமன்றம் சுவையுடன் நடைபெற்றது.

மாலை மிகப் பிரமாண்டமான மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற மாபெரும் விழாவில் பெரியார் சுயமரியாதைப் பிரசார ஸ்தாபனத்துக்காக கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர் கட்கு தெ. ஆ. மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் எடைக்கு எடை ஒரு ரூபாய் நாணயம் அளிக்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்களின் அன்பு ஆரவாரத்திற்கிடையே இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுச்செயலாளர் அவர்கள், தந்தை அமர்ந்த நாற்காலியிலே தான் அமர்வது சரியல்ல; அதற்குப்பதிலாக அய்யாவின் உருவப்படத்தை (Cut-out) நாற்காலியிலே ஒரு பக்கம் வைத்து, தனது எடைக்கான நிறுவைக் கல்லையும் அந்தத் தட்டில் வைத்து எடைக்கு எடை ரூபாய் நாணயம் தாருங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவ்வாறே செய்யப்பட்டது.

திராவிடர் கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் சாமிதுரை அவர்களின் துணைவியார் முதல் முதலில் ரூபாய் நாணயங்களை எதிர்த்தட்டில் போட்டுத் துவக்கி வைத்தார்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிப் பொறுப்பாளர்களும் கழகப் பொறுப்பாளர்களும் தலைமைக் கழகச் செயலாளர்களும் மற்றும் முன்னாள் அமைச்சர் இராசாங்கம், கா. கோவிந்தராயன் முதலியோர் விரைவாக ரூபாய் நாணயங்களை அள்ளி அள்ளிப் போட்டனர். மொத்தம் ரூ. 6,500 மதிப்பான தொகை எடைக்குக் கூடுதலாகவே அளிக்கப்பட்டது.

கழகப் பொதுச் செயலாளர், இந்நிதி தனக்காக அளிக்கப்பட்ட நிதி அல்ல என்றும், ஸ்தாபனத்திற்காக அளிக்கப்பட்ட நிதி என்றும், கூறி, இந்நிதி சென்னை பெரியார் திடலில் நடைபெறும் பெரியார் — மணியம்மை இலவச மருத்துவ மனை வளர்ச்சிக்காக செலவிடப்படும் என்று மக்களின் அன்பு ஆரவாரங்களுக்கிடையே அறிவித்தார்.

கண்டன நாள் அறிவிப்பு

வைத்தியக் கல்லூரிக்கு மனுபோட தகுதி மார்க்கை 70 சதவிகிதமாக உயர்த்தியதன் மூலம் தமிழக அரசு சமூகநீதி கண்ணோட்டத்தை இழந்து விட்டது. இதை எதிர்த்து தமிழகம் எங்கும் காமராசர் பிறந்த நாளான ஜூலை 15-ம் தேதியன்று கண்டன பொதுக் கூட்டம் நடத்துமாறு, தெ. ஆ. மாவட்ட திராவிடர் கழகம் சார்பாக இன்றிரவு கல்லக்குறிச்சியில் நடைபெற்ற மாபெரும் நூற்றாண்டு விழாவில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி அவர்கள் உரையாற்றுகையில் ஆணையிட்டார்.

ரூ. 9 ஆயிரம் ஆணை :
பொதுச்செயலாளர் அறிக்கை

3-7-79 : 'பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு மற்றொரு பேரிடி.' என்ற தலைப்பில்





ஆளுங்கட்சியினரால் கொடூரமாகத் தாக்கப்பட்ட நன்னிலம் வட்ட தி.க. துணைச்செயலாளர் திருவாரூர் வி. எம். ஆர். பதி மருத்துவமனையில்.

கழகப் பொதுச் செயலாளர் இன்று அறிக்கை வெளியிட்டார்.

பெரியார் திடலில் கூடிய
'பிற்படுத்தப்பட்ட' சமுதாயத்
தலைவர்கள்

4-7-79 : பிற்படுத்தப்பட்டோரை பொருளாதார அடிப்படையில் நிர்ணயித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள விபரீதமான உத்தரவை எதிர்த்து, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இன்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இன்று காலை பெரியார் திடலில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அனைத்துக்கட்சித் தலைவர்களும், அரசின் இந்த விபரீத உத்தரவால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள பேராபத்து பற்றி ஆலோசனை நடத்தினர்.

1. திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி. வீரமணி

2. துரைமுருகன் எம். எல். ஏ., (தி மு க)

3. உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். ராமசாமி

4. திண்டிவனம் ராமமூர்த்தி எம். எல். சி., (இ. காங்கிரஸ்)

5. இரா. திருமறவன் (துணைத் தலைவர் தமிழ்நாடு பார்வர்டு பிளாக், பொதுச் செயலாளர் இந்திய பிற்படுத்தப்பட்டமக்கள் முன்னணி)

6. கே. சி. குமாரசாமிசெட்டி. (தலைவர்-சேனைத் தலைவர் சங்கம்)

7. பெரம்பை. பாலசுந்தரம் (உழைப்பாளர் முன்னேற்ற கட்சி, வடசென்னை செயலாளர்)

8. ஆர். பண்டரிநாதன் அய். ஏ. எஸ்., (முன்னாள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர்)

9. இரெ. பழனியப்பன் — வழக்கறிஞர் சென்னை.

10. என். எம். மணிவர்மா. (தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர்)

11. கமாண்டர் வி. எஸ். பி. முதலியார், செயலாளர் துளுவ வேளாளர் சங்கம்) ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை விடுத்தனர்.

## திருச்சியில் மேல்நிலைப் பள்ளி

8-7-79 : திருச்சியில் பெரியார்—மணியம்மை பெண்கள் உயர்நிலைப் பள்ளி. பெரியார்—மணியம்மை பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது. இவ்விழாவில் தமிழக கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் கலந்து கொண்டார்.

## வ. ஆ. மாவட்ட தி. க. சார்பில் திருப்பத்தூரில் அய்யா விழா

10-7-79 : வடாற்காடு மாவட்டத்தின் சார்பில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் இன்று சிறப்புடன் துவங்கின.

உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு வரதராசன் அவர்கள் இன்று நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றினார்.

டாக்டர் குமார் கண்களைக் கட்டிக்கொண்டு ஊர்வலம் செல்ல இருக்கும் பாதையில் மோட்டார் சைக்கிளில் சென்றார். இந்த நிகழ்ச்சி மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

இன்னிசை, கருத்தரங்கம், பெரியார் பிஞ்சுகள் கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் என முதல்நாள் விழா பொலிவுற்றது

அமெரிக்க 'ஸ்கைலாப்' நாளை கீழே விழுந்து சிதறும் ஆபத்து உருவாகியுள்ளதைத் தொடர்ந்து நாளை (11-7-79) நடைபெற இருந்த இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 18-7-79ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

## சேலத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாநாடு

14-7-79 : சேலம் நேரு கலையரங்கின் முன்னாள் அமைச்சர் முத்தையா அரங்கில் பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாடு—

சேலம் மாவட்ட தி. க. சார்பில் எழுச்சியுடன் இன்று காலை 11 மணியளவில் பல்லாயிரக்கணக்கான கருஞ் சட்டைத் தோழர்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் பங்கேற்க துவங்கியது.

கோவை புலவர் நெறிமுடியாரின் இன்னிசையின் பின் மாநாடு துவங்கியது.

ஜே. கே. கே. அங்கப்பனார் வரவேற்புரையாற்றினார்.

திண்டிவனம் ராமமூர்த்தி துவக்கவுரையாற்றினார்.

மாநாட்டிற்கு திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களை தலைமையேற்றுத் தருமாறு தி. க. அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை அவர்கள் முன் மொழிய—

தோழர்கள் எஸ். வி. வெங்கடேசன், தி. ராசுமணியம், குழந்தை, கழகப் பொதுச் செயலாளர் ஆகியோர் வழிமொழிந்தபின்—திருமதி அனந்தநாயகி அவர்கள் தலைமையுரையாற்றினார். காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்தன.

பிற்பகல் நிகழ்ச்சிகள் மாலை நான்கு மணியளவில் துவங்கியது.

முன்னாள் எம்.எல்.ஏ., மதுரை கோவிந்தராசன், சேலம் மாவட்ட உழைப்பாளர் கட்சித் தலைவர் ஆசைத்தம்பி, யாதவர் சங்கத் தலைவர் மதுரை இரெ. ரெங்கசாமி, மாயூரம் ப. க, தலைவர் பேராசிரியர் ராமதாஸ், பார்வர்ட் ப்ளாக் கட்சித் தலைவர் திருமறவன், மீனவர் சமுதாயத் தலைவர் சா. பழனியப்பன், பொதுவுடைமைக் கட்சித் தோழர் தா. பாண்டியன், தோழர் மணிவர்மா ஆகியோர் கருத்துரையாற்றியபின்—

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி எம். ஏ., பி. எல்., அவர்கள் பேருரையாற்றினார்கள்.

இதன்பின்—

''மானிடத் தலைவர் பெரியார் தொண்டால் மிகுதியும் பலன் பெற்றவர் ஆண் இனமா-பெண் இனமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்தப் பட்டிமன்றத்திற்கு வலங்கை விசு தொடக்க உரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளரை நடுவராய் இருந்து நடத்தித் தருமாறு ஆத்தூர் வி. ஆறுமுகம் முன்மொழிய, தோழர் கி. கோவிந்தராசன் வழிமொழிந்தார்.

கழகப் பொதுச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இப்பட்டிமன்றத்தில்—

தோழர்கள் என். செல்வேந்திரன், அ. இறையன், துரை. சந்திரசேகரன் ஆகியோர் ஆண் இனமே என்றும்—

தோழியர்கள் சக்குபாய் நெடுஞ்செழியன், புலவர் ஜெயலட்சுமி கண்ணாயிரம், செல்வி அருள்மொழி ஆகியோர் பெண் இனமே என்ற தலைப்பிலும் வாதாடினர்.

இறுதியில் கழகப் பொதுச் செயலாளர் அவர்கள்—

பெண் இனமே, என தீர்ப்பளித்தார்கள்.

பின்னிரவில்—

சேலம் ப. க. தோழர்கள் பங்கேற்று நடத்திய 'கறுப்பு அலைகள்' நாடகம் நடைபெற்றது.

தோழர் ரோசு ராசமாணிக்கம் தலைமையில் நடந்த இந்நாடகத்தோடு மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தன.

தோழர் டி.ஆர்.எஸ். மணியம் நன்றியுரையாற்றினார்.

## 'இனம் பேணும்' தீர்மானங்கள்

வகுப்புவாரி உரிமையின் அடிப்படையைத் தகர்க்கும் முதற்கட்டமான அரசின் 'ஒன்பதாயிரம் ரூபாய் ஆணை' ரத்து செய்யப்பட வேண்டும் ; இல்லையேல் அறப்போர் நடத்த வேண்டும் என சேலத்தில் நடந்த பிற்படுத்தப்பட்டோர் உரிமை பாதுகாப்பு மாநாடு' முடிவெடுத்தது.

இதற்கான போர்த்திட்டங்களை வகுக்க கழகப் பொதுச் செயலாளருக்கு இம்மாநாடு ஒருமனதாய் அதிகாரமளித்தது.

## சாதி அடிப்படையில்

தீர்மானம் 1: இந்திய மத்திய அரசு திரு. பி. பி. மண்டல் அவர்களது தலைமையில் நியமித்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கமிஷன், பிற்படுத்தப்பட்டோரை நியமிப்பதில், சாதி அடிப்படையையே பிரதானமாகக் கொள்ள வேண்டும் எனவும், பொருளாதார அடிப்படையே கொள்ளக் கூடாது என்றும் மண்டல் கமிஷனை இம்மாநாடு ஒருமனதாகக் கேட்டுக்கொள்கிறது.

## அடிப்படை தகர்ப்பு

தீர்மானம் 2: ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 9000க்கு உட்பட்ட பிற்படுத்தப்பட்ட



மாயூரம் காவேரி நகரில் கடவுள் மறுப்புக் கல்வெட்டுத் திறப்பு. (4-12-78)

சமுதாய மக்களுக்கு மட்டுமே கல்வி, உத்தியோக ஒதுக்கீடுகள் பொருந்தும் என்றும், தமிழக அரசு ஆணை பிறப்பித்து 2—7—79 முதல் அவ்வாணை அமுலுக்கு வரும் என்று அறிவித்துள்ளது.

தமிழக அரசின் இந்த ஆணை, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின்மீது விழுந்த மிகப்பெரும் பேரிடியாகும்; கடந்த 50 ஆண்டு காலமாக தந்தை பெரியாரும் நீதிக்கட்சித் தலைவர்களும், கல்வி வள்ளல் காமராசரும், அறிஞர் அண்ணாவும் பாடுபட்டுப் பெற்றுத்தந்த வகுப்புவாரி உரிமையின் அடிப்படையைத் தகர்க்கும் முதற்கட்டம் ஆகும்.

### மோதவிடும் சூழ்ச்சி

மேலும், பிற்படுத்தப்பட்ட சமூகத்தையே இரு கூறுகளாகப் பிரித்து, அவர்களை மோதவிடும் சூழ்ச்சியாகும். எதிர்காலத்தில் வெறும் பொருளாதார அடிப்படைக் கண்ணோட்டத்தோடு மட்டும் இட ஒதுக்கீடு செய்ய மேற்கொள்ளும் ஒத்திகையுமாகும்.

முதல்தலைமுறை படித்துவிட்டகாரணத்தாலேயே அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களல்ல; அவர்கள் பல தலைமுறைகளாக ஆண்டாண்டு காலமாகப் படித்து முன்னேறிய சமூகத்துடன் போட்டியிட்டுவெற்றிபெறட்டும் என்று கூறுவது, சமூக நீதித் தத்துவத்திற்கே விரோதம் என்பதாலும், கடந்த 50 ஆண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட சமுதாயம் போராடிப் பெற்ற வாய்ப்புகள் பறிபோகும் என்பதாலும் தமிழக அரசு இதனை அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காது, மிகப் பெரிய சமூகப் பிரச்னையாக, கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்டவர்களின மனிதாபிமான உரிமைப் பிரச்னையாகக் கருதி தமிழக அரசின் புதிய உத்தரவை அமுல்படுத்தாமல் நிறுத்தி வைத்து ரத்து செய்ய வேண்டுமென்று, இம்மாநாடு தமிழக அரசினை கேட்டுக் கொள்கிறது.

### போராட்டத் திட்டம் வகுக்க பொதுச்செயலாளர்

(ஆ) பிற்படுத்தப்பட்ட மக்களைப் பெரிதும் பாதிக்கச்செய்யும் புதிய உத்திரவினை தமிழக அரசு ரத்து செய்யாமல், அதனை நியாயப்படுத்தும் பிடிவாதமான போக்கினை மேற்கொள்ளுமானால், தமிழ்நாட்டில் சமூக நீதியில் பெரிதும் அக்கறை உள்ள அனைத்து மக்களும் குறிப்பாக அனைத்து பிற்படுத்தப்பட்டமக்களும் கட்சி வேறுபாடும் கருத்து வேறுபாடும் இன்றி, ஒரே அணியில் திரண்டு நின்று, தமிழக அரசின் புதிய உத்திரவினை எதிர்த்திடவும் அறப்போர் தொடுத்திடவும் சிறிதும் தயங்காது எனவும் இம்மாநாடு தெரிவித்துக் கொள்ளுவதுடன், இதற்கான ஒரு போராட்டத் திட்டத்தை வகுக்க மற்றவர்களுடன் கலந்து அறிவிக்கும் பொறுப்பினை ஏற்றிட வேண்டும் என திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்களை இம்மாநாடு ஒருமனதாகக் கேட்டுக்கொள்கிறது.

### இட ஒதுக்கீடை அதிகப்படுத்துக

தீர்மானம் 3: பிற்படுத்தப்பட்டவர்கள் மக்கள் தொகையில் சுமார் 75 சதவிகிதத்திற்கு மேல் இருந்தாலும், அவர்களுக்கு 31 சதவிகித அளவுக்குத்தான் இட ஒதுக்கீடு தற்போது தரப்பட்டுள்ளது. சமூக நீதிக் கண்ணோட்டத்தில் பெருத்த அநீதியாகும். சமவாய்ப்புச்சமுதாயம் அமைய வேண்டுமானால், மேடு பள்ளங்கள் சமன் செய்யப்படவேண்டுமானால்—அதற்கு ஒரே வழி அவர்களின் மக்கள் தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப இடஒதுக்கீட்டை அதிகப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசரம், அவசியம் என்பதை இம்மாநாடு ஒருமனதாகத் தெரிவித்துக்கொள்கிறது.

### மார்க் வரம்பை குறைப்பீர்

தீர்மானம் 4: பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் பல்லாயிரம் ஆண்டுகளாக சமுதாயத்தில் கல்வி அறிவு வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்கள் என்கிற அடிப்படையை இன்றைய தமிழக அரசு அறவே மறந்துவிட்டு, தொழிற்படிப்புகளான மருத்துவம், பொறியியல், பாலிடெக்னிக் மற்றும் அனைத்துப் படிப்புகளிலும் சேருவதற்கு அதிகபட்சம் மார்க் என்பதை வற்புறுத்துவது, அவர்களுக்கு வயிற்றில் அடிக்கும் அக்கிரமமாகும்.

மேற்கண்ட கல்வி வாய்ப்புகளைப் பெறுவதற்கு மார்க் வரம்பைக் குறைக்கவேண்டுமாய் இம்மாநாடு தமிழக அரசை ஒருமனதாகக் கேட்டுக் கொள்கிறது.

பிற்படுத்தப்பட்டவர்களிலும், தாழ்த்தப்பட்டவர்களிலும் ஒரு சிலர் அதிக மார்க் வாங்குவது என்பது விதிவிலக்கான ஒன்றாகும். இந்த விதிவிலக்கையே அடிப்படையாக வைத்துக்கொண்டு விதிகளை தமிழக அரசு உருவாக்குவது தலைகீழ் முறையாகும் என்பதை எடுத்துக் காட்டுவதோடு, இந்தத் தலைகீழ் முறையானது பெரும்பாலான பிற்படுத்தப்பட்டோர் நலனை மிகக் கடுமையாக பாதிக்கச் செய்யும் என்பதை இம்மாநாடு உறுதியாக தமிழக அரசுக்குச் சுட்டிக் காட்டுகிறது.



### டில்லி அரசிலும் ஒதுக்கீடு தேவை

தீர்மானம் 5: மாநில அரசாங்கத்தின் கீழ் இலாகாக்களில் எப்படி பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறதோ, அதுபோலவே மத்திய அரசு தனது இலாகாக்களிலும், ரிசர்வ் வங்கி, ஸ்டேட் பாங்கு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட 14 வங்கிகளிலும், ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிலும் மற்றும் பொதுத்துறை, தனியார் துறை நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கென இடஒதுக்கீடு நிர்ணயம் செய்ய வேண்டுமாய் இம்மாநாடு ஒருமனதாய்க்கேட்டுக் கொள்கிறது.

15-7-79: சேலம் மாவட்ட தி. க. சார்பில் அய்யா நூற்றாண்டு விழா எழுச்சியுடன் இன்று கொண்டாடப்பட்டது. காலை கருத்தரங்கம், பிற்பகல் மாபெரும் ஊர்வலம்.

சேலம் நகரின் திருச்சி மெயின் ரோடில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நினைவு வளைவை, கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் கலைஞர் துவக்கி வைத்தார்.

சேலம் போஸ் திடலின் 'அன்னை நாகம்மையார்—மணியம்மையார் அரங்கில் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது.

கலைஞர், பொதுச்செயலாளர் கி.வீரமணி, அப்துல் லத்தீப் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றனர்.

### திருப்பத்தூரில் தொடர்ந்த அய்யா நூற்றாண்டு விழா

18-7-79: திருப்பத்தூர் திரு. வி. க. சந்தைத்திடலின் மணிவாசகம் நினைவுப் பந்தலில் தந்தை பெரியார் அரங்கில் இன்று காலை அய்யா நூற்றாண்டு விழா எழுச்சியுடன் துவங்கியது.

வடஆற்காடு மாவட்ட தி. க. சார்பில் நடைபெற்ற இவ்விழாவில் பட்டிமன்றம் துவங்கி முடிந்தது.

மாலை நான்குமணியளவில், மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடந்தது.

இரவு எட்டுமணியளவில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பழம்பெரும் சுயமரியாதை வீரர்கள் பாராட்டப்பட்ட இவ்விழாவில்—கழகத் தோழர்களும் அனைத்துக்கட்சித் தோழர்களும் சிறப்புரையாற்றினர்.

மாவட்ட தி. க. சார்பில்—



மாவட்ட தி. க. செயலாளர் ஏ. டி. கோபால், பொதுச்செயலாளரிடம் பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனைக்கு ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நன்கொடையாக வழங்கினார்.

### வேலூர் தொழிற்பயிற்சி கல்லூரிக்கு அய்யா பெயர்

19-7-79: தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை யொட்டி—

வடஆற்காடு மாவட்டத்து வேலூரில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரிக்கு-

'தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அரசினர் தொழிற் பயிற்சிக் கல்லூரி' என பெயரிடுமாறு—"

தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்டோர் மாநாடு

22-7-79: திராவிடர் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாடு இன்று காலை 10-45 மணியளவில் சென்னை பெரியார் திடலில் எழுச்சியுடன் துவங்கியது.

மாநாடு துவங்கும் முன்பே, அரங்கம் முழுதும் நிரம்பி வழிந்தது.

தலைமை நிலைய செயலாளர் வழக்கறிஞர் துரைசாமி அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் வரவேற்று மருத்துவக் கல்லூரி தேர்வுக்குழு தலைவராகப் பணியாற்றி ஏராளமான பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் டாக்டர்களாக வருவதற்குக் காரணமாக இருந்த டாக்டர் சுந்தரவதனம் அவர்களை தொடக்க உரை ஆற்ற வருமாறு பலத்த கரவொலிக்கிடையே கேட்டுக் கொண்டார். சுந்தரவதனம் அவர்கள் உரையாற்றிய பிறகு தலைவரை முன்மொழிந்து கழக அமைப்புச் செயலாளர் சாமிதுரை, கழகப் பொருளாளர் கா. மா. குப்புசாமி, விவசாய அணி செயலாளர் ஏ. எம். ஜோசப், இளைஞர் அணிசெயலாளர் கோவை கு. இராமகிருட்டினன், சென்னை மாவட்ட செயலாளர் மு.போ. வீரன் ஆகியோர் முன்மொழிந்து உரையாற்றினர்.

தொடர்ந்து என். எம். மணிவர்மா தலைமை உரையாற்றினார். அதைத் தொடர்ந்து ஜனதா கட்சி செயலாளர் ரமணி

பாய், என். ஜி. ஒ. சங்கத் தலைவர் சிவ. இளங்கோ, டி. செங்கல்வராயன் பி.ஏ.,பி.எல்., திருமறவன் (பார்வர்டு பிளாக்) ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

முன்னாள் சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, தி. மு. க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

### தீர்மானங்கள்

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி, உத்தியோகம் ஆகிய துறைகளில் பேரிடி போன்று வந்துள்ள பொருளாதார அடிப்படையிலான உத்தரவை வாபஸ் பெறும்படி கட்சி வேறுபாடின்றி எல்லா பிற்படுத்தப்பட்ட சமூகத் தலைவர்களும் கேட்டுக் கொண்ட பிறகும், அரசு வாளாவிருப்பதை கவலையோடு இம்மாநாடு சுட்டிக்காட்டுவதோடு இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்த உத்தரவை அரசு திரும்பப் பெறவில்லையானால் போராட்டத்தின் முதல் கட்டமாக, நாம் பிறகு குறிப்பிடும் ஒரு நாளில், பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் வெறுப்பைக் காட்டுவதற்கு அறிகுறியாக இந்த உத்தரவின் நகலை எரிப்பதென்றும் அதன் சாம்பலை மாண்புமிகு முதல் அமைச்சர், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற முகவரிக்கு அனுப்புவதென்றும் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### வயது வரம்பு

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில், முதல் பகுதி (குரூப் 1) பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 1976 க்கு முன் வயது வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், நெருக்கடி காலத்தில் வயது வரம்பு 31 ஆக நிர்ணயிக்கப் பட்டதால் அரசுப் பணிகளில் இருந்து கொண்டு மாலை நேரக்கல்லூரிகளில் எம். ஏ., மற்றும் பி. எல்., போன்ற பட்டங்கள் பெற்று 31 வயதுக்கு மேல் குரூப் 1 சர்வீஸ் தேர்வு எழுதும் உரிமையை இழந்துவிடுகிறார்கள், இந்த வயது வரம்பு பிற்படுத்தப்பட்டோர்—தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக உள்ளதால் 1976 க்கு முன்பிருந்த நிலையே மீண்டும் ஏற்படும்படி ஆணையிட தமிழக அரசை இம்மாநாடு ஒருமனதாகக் கேட்டுக்கொள்கிறது.

(சேலம் பிற்படுத்தப் பட்டோர் உரிமை காப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களோடு மேற்கண்ட இரண்டு தீர்மானங்களும் சேர்த்து ஏகமனதாக நேற்றைய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது).

### வருமானவரம்பாணை ; ஹைகோர்ட் தடை

23-7-79 : ஆண்டுக்கு 9 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ளவர்களே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்குரிய சலுகைகள் பெற முடியும் என்ற தமிழ்நாடு அரசின் உத்தரவுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் இன்று இடைக்கால தடை பிறப்பித்தது!

இது பற்றிய செய்தி விவரம் வருமாறு :

நெய்வேலியைச் சார்ந்த மாணவர் விக்—கிரமம், உயர்நீதி மன்றத்தில் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார். இவர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமான மீனவ சமுதாயத்தைச் சார்ந்தவர். பி. யு. சி. யில் முதல் வகுப்பில் தேறி 80 சதவீத மார்க்குகளைப் பெற்றுள்ளார்.

இவர் என்ஜினீயரிங் கல்லூரியில் சேர இப்போது விண்ணப்பித்துள்ளார். ஆனால், அவரது தந்தையின் வருமானம் ஆண்டுக்கு 9 ஆயிரத்து 6 ரூபாய் இருப்பதால் (தமிழக அரசு நிர்ணயித்த தொகையை விட 6 ரூபாய் அதிகம்) பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் போட்டியிட முடியவில்லை. இதனால், இடம்கிடைக்கும் வாய்ப்பு குறைந்து விட்டது. தமிழ்நாடு அரசின் புதிய உத்தரவு அரசியல் சட்டத்துக்கு முரணானது. எனவே, வருவாயை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தன்னை சேர்க்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

நீதிபதி மாண்புமிகு வி. ராமசாமி மனுவை ஏற்றுக் கொண்டு, இடைக்கால தடை உத்தரவு (மனுதாரருக்காக) பிறப்பித்தார்.

### வழக்கறிஞர்கள்

மனுதாரரின் சார்பில் முன்னாள் அரசு பிளீடர் வழக்கறிஞர் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆஜரானார்.

### சரண் சிங்கிற்கு கழகப் பொதுச் செயலாளர் பாராட்டு தந்தி

26-7-79 : கழகப் பொதுச் செயலாளர் கி. விரமணி அவர்கள் 26—7—79 மாலை 6 மணி அளவில் சவுத்ரி சரண்சிங்குக்கு கொடுத்த தந்தி வாசகம் :

Hearty Congratulations – under your able stewardship Backward Classes hope to get their due share in all spheres



in Govt. Our hearty support to you and to your Government.

K. VEERAMANI,
General Secretary,
Dravidar kazhagam, Madras.

மத்தியில் அமைச்சரவை அமைக்க இருக்கும் தங்களுக்கு எங்களுடைய இதயங் கனிந்த வாழ்த்துக்கள். தங்களுடைய சிறந்த தலைமையின் கீழ் பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களுக்குரிய உரிமைகளை சகலத் துறைகளிலும் பெறுவார்கள் என்று உறுதியாக எதிர்பார்க்கிறோம். தங்களுக்கும் தங்களுடைய அரசுக்கும் எங்களுடைய முழு ஆதரவையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### புதுகை நகரில் அய்யா விழா

28-7-79 : தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, புதுகைப் பெருநகரில் சீரோடும் சிறப்போடும் துவங்கியது. திலகர் திடலில் அமைக்கப் பட்டிருந்த, சுயமரியாதை வீரர் புதுக்கோட்டை இராம கல்யாணசுந்தரம் அரங்கில்—

காலை 9-30 மணியளவில் புரட்சிப் பாடகர் புலவர் நெறிமுடியார் அவர்களின் இன்னிசையோடு மாவட்ட தி.க. அமைப்பாளர் அ. தங்கராசு அவர்கள் வரவேற்புரையுடன் விழா துவங்கியது.

விழா துவக்கவுரையில் வழக்கறிஞர் கரூர் வீர கே. சின்னப்பன் பி. ஏ.,பி. எல்., அவர்கள் மிகச் சிறப்பாக தந்தை பெரியார் அவர்களின் தன்னலமில்லா பெருந்தொண்டினையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் பற்றி எடுத்துரைத்தார்கள்.

பெரியார் பிஞ்சுகள் நிகழ்ச்சி, அடுத்து பட்டிமன்றம் நடந்து.

புரொபசர் கே. ஆர். குமார் அவர்களின் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சி ஏராளமான கழகத் தோழர்களும் தாய்மார்களும் கண்டு களிக்க, அவரே கண்ணில் மைதாமாவைக் கட்டிக்கொண்டு, இருந்த கூட்டம் பின்தொடர நகர வீதியெல்லாம் மக்கள் அதிசயித்துப்பின் தொடர ஊர்வலம் தொடங்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

இரவு 7-30 மணிக்கு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இரவு பகுத்தறிவாளர் கழக சார்பில் 'வெளிச்சத்திற்கு வாருங்கள்' என்ற நாடகம் நடைபெற்றது.

### கிழக்கு முகவை மாவட்டம் எடுத்த அய்யா விழா

29-7-79 : கிழக்கு முகவை மாவட்ட தி. க. சார்பில் இன் ற காரைக்குடி ராமவிலாசம் திரையரங்கின் பள்ளிகொண்டான் அரங்கில் அய்யா நூற்றாண்டு விழா சீரும் சிறப்புமாய் கொண்டாடப்பட்டது.

குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டிமன்றம் நடந்தது.

கண்ணைக்கட்டி நகர்வலம் வந்த கே. ஆர். குமாரின் நிகழ்ச்சி — மாலையில் பெரியார் திடல், 'காளாப்பூர் பழனியாண்டி அரங்கில்' துவங்கி முடிந்தது. இரவு மாபெரும் பொதுக் கூட்டமும், பெரியார் பிஞ்சுகள் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

### அய்யா பெயரில் 'முந்திரி தொழிலாளர் சங்கம்'

29-7-79 : குன்றக்குடி மடத்துக்குச் சொந்தமான 'முந்திரித் தொழிலாளர்கூட்டுறவு சங்கம்' துவக்கம்.

இதன் ஆக்கப் பணி — குன்றக்குடி அடிகளார்.

சங்கக் கட்டிடத்துக்கு கழகப் பொதுச் செயலாளர் அடிக்கல் நாட்டினார்.

### ரத்தக் கையெழுத்து:

2-8-79: தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப் பட்டோர் உத்தரவை எதிர்த்து மாணவர்களும் இளைஞர் சமுதாயமும் கொதிப்படைந்திருக்கிறது! போராட்டத்தில் குதிக்கத் தயார் என்று போராட்ட வீரர்களின் பட்டியலை இளைஞர் பட்டாளம் அனுப்பத் துவங்கி விட்டது!

புதுக்கோட்டையில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் கழகப் பொதுச் செயலாளரிடம் 50 பேர் கொண்ட போராட்ட பட்டியல் பலத்த கைதட்டலுக்கிடையே வழங்கப்பட்டது.

பட்டுக்கோட்டையில் நடந்த பொதுக் கூட்டத்தில் 150 பேர் கொண்ட போராட்ட பட்டியல் கழகப் பொதுச் செயலாளரிடம் வழங்கப்பட்டது.

குடந்தை வட்டத்தைச் சார்ந்த கழக மாணவர்கள் 100 பேர் போராட்டத்தில் குதிக்கத் தயார் என்று ரத்தக் கையெழுத்திட்டு பட்டியலை அனுப்பி வைத்திருக்கின்றனர். உத்தரவை வாபஸ் வாங்குவதற்காக குருதியை

சிந்தவும் தயாராக இருப்பதாக அவர்கள் அறிவித்திருக்கின்றனர். இந்தப் பட்டியலின் நகல்கள் கழகப் பொதுச் செயலாளருக்கும், தமிழக முதலமைச்சருக்கும், தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் கழக தலைவர் ஆர்.பி எஸ். ஸ்டாலின் பி.ஏ., பி. எல்., அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

### *9 ஆயிரம் ஆணைக்கு நீதிபதிகள் பெஞ்ச்*

2-8-79 : தமிழ்நாடு அரசின் 9 ஆயிரம் ரூபாய் உத்தரவை எதிர்த்து, மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர், விக்கிரமன் தொடர்ந்த வழக்கில், மனுமீது இடைக்கால தடையை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்தது.

இந்த வழக்கு சமுதாய பிரச்னையாக இருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' இதை விசாரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் அட்வகேட் ஜெனரல் உயர் நீதிமன்றத்தில் அரசின் சார்பில் வலியுறுத்தினார்.

உயர்நீதிமன்ற நீதிபதி வி.ராமசாமி முன் இது விசாரணைக்கு வந்தது. ஒன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' இந்த வழக்கை விசாரிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

### *ரிட் நீடிக்கும்*

மாணவர் விக்கிரமன் தொடர்ந்த வழக்கில் இடைக்கால தடை நீடிக்கும்,

### *ரூ. 9 ஆயிரம் ஆணை மேலும் வழக்கு*

3-8-79: தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர் உத்தரவை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேலும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு என்ஜினீயரிங் வகுப்பில் சேருவதற்கு மனுச் செய்திருக்கும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ரகுபதி என்ற மாணவர் இந்த வழக்கை தொடர்ந்திருக்கிறார். இவரின் தந்தை ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருக்கிறார். ஆண்டு வருமானம் 9 ஆயிரத்தைத்தாண்டுவதால், தனக்கு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் கிடைக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுவிட்டது என்று மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி வி. ராமசாமி அவர்கள் முன் இன்று விசாரணைக்கு வந்தது மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி, இந்த வழக்கு முடியும் வரை ஒரு இடத்தைக் காலியாக வைத்திருக்குமாறு பல்கலைக் கழகத்துக்கு உத்தரவிட்டார்!

### *'பெஞ்சு' விசாரணை*

ஏற்கனவே இது தொடர்பான வழக்குகள் வந்திருப்பதால், அந்த வழக்குடன் சேர்த்து இந்த வழக்கையும் நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' விசாரணை நடத்தும் என்று நீதிபதி தெரிவித்தார்.

### *தஞ்சை மாவட்ட கமிட்டிக் கூட்டம்*

3-8-79 : பாபநாசத்தில் இன்று கூடிய தஞ்சை மாவட்ட தி. க. நிர்வாகக் குழு—

தஞ்சையில் செப்டம்பர் 15, 16, 17 தேதிகளில் நடைபெறவுள்ள அய்யா நூற்றாண்டு நிறைவு விழா முடிவில் கழகப் பொதுச் செயலாளருக்கு 'நூறுபவுன்' அன்பளிப்பு தருவதென முடிவெடுத்தது.

பலத்த வலியுறுத்தலின் பேரில் — ஒரு நிபந்தனையோடு இந்த அன்புத் தொல்லையை பொதுச் செயலாளர் ஏற்றார்.

அந்த நிபந்தனை,

''அன்பளிப்பு பவுனோடு பெரியார் சுயமரியாதைப் பிரசார டிரஸ்ட் ஒத்துழைப்போடு தஞ்சைப் பகுதியில் பெண்கள் பாலிடெக்னிக் நிறுவுவது என்பதாகும்.

### *மாநில மாணவர் தி. க. முடிவு*

3-8-79: இன்று மாலை, தஞ்சாவூர் பெரியார் இல்லத்தில் கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் மாநில திராவிடர் மாணவர் கழக அவசரக் கூட்டம் நடந்தது.

சென்னையில் பேரணி நடத்தி அமைச்சர் ஒருவரிடமும், மாவட்ட தலைநகர்களில் பேரணி நடத்தி மாவட்ட கலெக்டர்களிடமும் கோரிக்கை மனு தர திட்டமிடப்பட்டது

வருமான வரம்பு ஆணையை திரும்பப் பெறுமாறு முதல்வரை வற்புறுத்தி தீர்மானம் இயற்றப்பட்ட இக்கூட்டத்தில்—

முதற்கட்டமாக ஆகஸ்ட் பதினான்காம் நாள் விளக்கக் கூட்டங்கள்—உரிமைக் காப்புப் பேரணி நடத்துவதெனவும்—

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக பொதுச் செயலாளர் ஆணையை ஏற்று அதன் படி நடக்க உறுதி ஏற்கும் முடிவுகள் எடுக்கப் பட்டன.



### *மதுரை மாவட்டம் எடுத்த அய்யா நூற்றாண்டுவிழா*

மதுரை காமராசர் சாலையிலுள்ள வர்த்தகர் சங்கப் பேரவையின் 'பெரியார்—மணியம்மையார்' அரங்கில் அய்யா நூற்றாண்டு விழா எழுச்சியுடன் இன்று முற்பகல் 11 மணியளவில் துவங்கியது.

கலைநிகழ்ச்சியின் பின் கழகப் பொதுச் செயலாளர் விழா துவக்கவுரையாற்றினார்.

பேராசிரியர் அறிவரசின் 'அறிவுக் கணைகளும் பதில்களும், நிகழ்ச்சியின்பின் 'மந்திரமா தந்திரமா' (கே. ஆர். குமார்) வோடு காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

பிற்பகலில் பெரியார் பிஞ்சுகள், கவியரங்கம், பட்டிமன்றத்தோடு முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிந்தன.

5-8-79: விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திருமதி பி எஸ் செல்வாவின் இசை நிகழ்ச்சியோடு துவங்கியது.

கருத்தரங்கம், பிரம்மாண்ட ஊர்வலம்—

முடிவில் மாபெரும் விழா பொதுக் கூட்டம்.

தல்லாகுளம் பெருமாள் கோவில் திடலின், 'முத்துசாமி அரங்கில்' நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில்—

டாக்டர் கலைஞர், கழகப் பொதுச்செயலாளர் உட்பட அனைத்துக் கட்சி தலைவர்களும் சிறப்புரையாற்றினர்.

### *தஞ்சை நிகழ்ச்சியும் பார்ப்பனர் விஷமமும்*

8-8-79 : தஞ்சையில் நடந்த கழகக் கூட்டத்தில் கல்லெறி நடத்தியதோடு கழகத் தோழர்கள்மீது புரளி கிளப்பி வெளியிடப்பட்ட பார்ப்பன ஏடுகள் பலவற்றின் விஷமத்தனங்கட்கு பதிலளித்து கழகப் பொதுச்செயலாளர் அறிக்கை வெளியிட்டார்.

### *நெய்வேலியில் அய்யா சிலை திறப்பு*

10-8-79: நெய்வேலி திராவிடர் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் சிலை அமைக்கப்பட்டு அதனை கலைஞர் திறந்துவைத்தார்.

சிலையமைப்புக் குழு சார்பில் பெரியார்—மணியம்மை இலவச மருத்துவமனைக்கு ரூ. 1000 வழங்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான கருஞ்சட்டைக் குடும்பங்கள் பங்கேற்ற மாபெரும் ஊர்வலமும்- இவ்விழாவை மேலும் சிறப்புறுத்தின.

### *மேற்கு முகவை மாவட்டம் எடுத்த மகத்தான அய்யா விழா*

12-8-79 : மேற்கு இராமநாதபுரம் மாவட்டம் திராவிடர் கழகத்தின் சார்பில் இராசபாளையம் நகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா 12-8-79 அன்று வெகு சிறப்புடன் நடைபெற்றது.

மரக்கண்ணு (செட்டியார்) கலையரங்கில், மறைந்த சுயமரியாதை வீரர் விருதை வி.வி. ஆர். அரங்கில் முற்பகல் நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் மேற்கு முகவை மாவட்ட தி.க. தலைவர் அருப்புக்கோட்டை சு.ஆ.மு. முத்துமுருகன் வரவேற்புரை ஆற்ற அருப்புக் கோட்டை எஸ் எஸ். கருப்பையா நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

ஆடவர் ஓரணியிலும் பெண்டிர் ஓரணியிலும் அணிவகுத்து வாதிட்ட பட்டிமன்றம் சூடாகவும்—சுவையாகவும் அமைந்திருந்தது.

மாலை 5 மணிக்கு இராசபாளைய சரித்திரம் இதுவரை காணாத எழுச்சிமிகு மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் பஞ்சு மார்க்கெட்டிலிருந்து புறப்பட்டது.

மக்கட் கடலின் மத்தியில் கழகப் பொதுச் செயலாளர் அலங்கரிக்கப்பட்ட டிரக்கில் சிறப்பாக அழைத்து வரப்பட்டார்.

ஊர்வல முடிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தீ குண்டத்தைக் காண மக்கள் சமுத்திரம் பொங்கி வழிந்தது!

இரவுப் பொதுக்கூட்டம் பெரியார் பொன்மொழித் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமாக நடைபெற்றது.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவராகிய கே.டி.கே. தங்கமணி பார்-அட்-லா மற்றும் பலர் உரையாற்றினர்.

### *நாடெங்கும் வகுப்புரிமைப் பேரணி*

14-8-79: மாநில மாணவர்கள் தி.க. தஞ்சையில் கூடி எடுத்த முடிவுப்படி—

நாடெங்கும் பேரணிகள் நடத்தி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கோரிக்கை மனுக்கள் தரப்பட்டன.

அரசின் 9 ஆயிர ரூபாய் உத்தரவை எதிர்க்கும் வகையில் நாடெங்கும் நடத்தப்பட்ட இப்பேரணி எழுச்சியுடன் எங்கெங்கும் நடந்தது.

### பெரியார் நூற்றாண்டு விழா வழிநடைப் பிரசார படை

15-8-79 : தஞ்சையில் நடைபெறவுள்ள நூற்றாண்டு நிறைவு விழாவை யொட்டி, பெரியார் நூற்றாண்டு விழா வழிநடைப் பிரசார படை ஏற்பாடானது.

வழிநெடுக கழகக் கொள்கைகளை முழக்கி, அறிவு வெளியீடுகளை விநியோகித்து முழு நேரத் தொண்டாற்றும் படை இது.

நாட்டின் நான்கு முனைகளில் படை புறப்பட திட்டமிட்டுச் செயலாற்றியதன்படி— முதற் படையின் துவக்கவிழா இன்று நடந்தது.

### பொதட்டூர்பேட்டை-தஞ்சைப்படை

பொதட்டூர் பேட்டையில் இன்று பிற்பகல் 1 மணிக்கு தந்தை பெரியார் நூற்றாண்டு விழா முதல் பிரசாரப்படை புறப்பட்டது.

வழி அனுப்பு விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர் தலைமை தாங்கினார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் நாட்டு கிளை துணைச் செயலாளர் தா பாண்டியன் அவர்கள் படை வீரர்களுக்கு காக்கித் துணிப் பைகளையும் தண்ணீர் பைகளையும் வழங்கி படையை துவக்கி வைத்து உரையாற்றினார்.

பிற்பகல் 2 மணி அளவில் படைவீரர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. பி. கே. சங்கரன், கார்த்திகேயன் ஆகியோர் உணவு ஏற்பாடு செய்திருந்தனர். உணவுக்குப் பின் படைத் தலைவர் ஆம்பூர் பெருமாள் அவர்கள் தலைமையில் படைத்தளபதி வேல்சோமசுந்தரம் அவர்கள் படையை வழி நடத்திச் சென்றார்.

### படை வீரர் பட்டியல்

ஏ. பெருமாள்-படைத்தலைவர் (மாவட்ட தி. க. தலைவர்) சான்றோர்குப்பம், ஆம்பூர், வ. ஆ. மா.

வேல் சோமசுந்தரம்-படைத் தளபதி (துணைத் தலைவர் வ.ஆ மா.தி.க.) திருவத்திபுரம்.

எம்.ஆர். மணி, அரசமரத்தெரு, மேல்பட்டி, குடியாத்தம் வட்டம், வ. ஆ. மா.

ஏ. தாமோதரன், ஆஸ்பிட்டல்தெரு, மேல்பட்டி, குடியாத்தம் வட்டம், வ. ஆ. மா.

எம். எஸ். கோபு, சி. மெய்யூர் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம் தெ. ஆ. மா.

ஜி. சுப்ரமணி, 9-மடம் வீதி, சத்துவாச்சாரி, வேலூர், 9, வ. ஆ. மா.

ஜி. பாபு, சான்றோர் குப்பம் அஞ்சல், ஆம்பூர், வ. ஆ. மா.

டி. கணேசன், கார்ணம்பட்டு அஞ்சல், வேலூர் சர்க்கரை ஆலைவழி, வ. ஆ. மா.

ச. இராவணன் (வி. எம். சண்முகம் அவர்கள் மகன்), வஞ்சூர் கிராமம், சேனூர் அஞ்சல், வேலூர் வட்டம், வ. ஆ. மா.

பி.ஜே. நரசிம்மன், அத்திமாஞ்சேரிபேட்டை அஞ்சல், திருத்தணி வட்டம், செங்கை மாவட்டம்.

வி. கே. தமிழ்ச்செல்வன், மேலமணக்குடி அஞ்சல், சிதம்பரம் வட்டம், தெ. ஆ மா.

ஜே. குப்புசாமி, டாக்டர் அம்பேத்கார் நகர், குறிஞ்சிப்பாடி அஞ்சல், கடலூர் வட்டம், வ. ஆ. மா.

எஸ். கே. மூர்த்தி, பார்வதிபுரம், வடக்கு வீதி, வடலூர் (அஞ்சல்), கடலூர் வட்டம், தெ. ஆ. மா.

வி. விஜயாநந்தன், மே—பா, நாத்திக குமார், நஞ்சய்யபிள்ளை லைன், பள்ளிப்பாளையம் அஞ்சல், ஈரோடு—6

அரங்கநாதன், திராவிடர் கழகம், பெரும்பள்ளம், அருகாவூர் அஞ்சல், செய்யார் வட்டம், வ. ஆ. மா.

ஆர். எம். கணேசன், 86 குடியானவர் தெரு, பொதட்டூர் பேட்டை, திருத்தணி வட்டம்.

கே. சி. இராவணன் (கே. கே. சின்னராசு அவர்கள் மகன்) சோலையார்பேட்டை, வ. ஆ. மா.

மு. அறிவழகன், மே—பா. கே. கே. சின்னராசு, சோலையார் பேட்டை.

சாமிக்கண்ணு, மே—பா. கே. கே. சின்னராசு, சோலையார் பேட்டை.

மாசிலாமணி — குறிஞ்சிப்பாடி

பெலா. முனிசாமி — திண்டிவனம்

டி. பி. நேசன் — திருத்தணி

### டாக்டர்கள் மாற்றம் : பொதுச்செயலாளர் கண்டனம்

16-8-79 : டாக்டர்கள் மாற்றம்; இரட்டை அளவுகோல் ஏன்? என்ற தலைப்பில்-



தமிழர்களாயுள்ள டாக்டர்களை வெளியூர்களுக்கு மாற்றி திடீர் உத்தரவிட்ட அரசாணையைக் கண்டித்து பொதுச் செயலாளர் கண்டன அறிக்கை விடுத்தார்கள்.

இதற்கு கைமேல் பலன் கிட்டியது.

அந்த ஆணையை அரசு திரும்பப்பெற்றது.

### குமரி—தஞ்சை வழிநடைப்படை

17-8-79 : குமரி—தஞ்சை, 'பெரியார் நூற்றாண்டு விழா' வழிநடைப் பிரசார படை துவக்கவிழா—

இன்று காலை கன்னியாகுமரி பஸ் நிலையத்தில் பிரசார அணி செயலாளர் என். செல்வேந்திரன் தலைமையில் நடந்தது.

பொதுச் செயலாளரவர்கள்—படையைத் துவக்கிவைத்தார்கள்.

### படைத் தோழர்கள்

1. இ.ச. தேவசகாயம்—படைத்தலைவர் (தலைவர். தி. வி. தொ. சங்கம்), இடையாற்றுமங்கலம், (வழி) வாளாடி, திருச்சி மாவட்டம்.

2. டி. எஸ். மணி — படைத்தளபதி (தலைவர், திராவிடர் கழகம், கொளத்தூர், சேலம் மாவட்டம்).

3. பி. கிட்டு, (அமைப்பாளர், தி. வி. தொ. ச.,) இடையாற்று மங்கலம், திருச்சி மாவட்டம்.

4. சம்பந்தம், த. பெ. பெரியதம்பி, பாப்பாகுடி, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

5. சிங்காரவேலு, த. பெ. நடேசன், ரோட்டு தெரு, பாப்பாகுடி, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

6. கலியமூர்த்தி, த. பெ. ஆறுமுகம், தீத்தாம்பேட்டை, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

7. பக்கிரிசாமி, த. பெ. குப்பு, மாதா கோவில்தெரு, பாப்பாகுடி, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

8. பழனிவேலு, த. பெ. கோபால், புதுத்தெரு, பாப்பாகுடி, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

9. முருகையன், த. பெ. கைலாசம், புதுத்தெரு பாப்பாகுடி, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

10. அஞ்சான், த. பெ. வீரப்பன், தீத்தாம்பேட்டை, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

11. ஜி.கே. மூர்த்தி, த.பெ. கழனியான், தெற்குத்தெரு. பாப்பாகுடி, கோகூர், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

12. அந்தோணிசாமி, த.பெ. அப்பாசாமி, மாதாகோவில்தெரு, கோகூர், திருவாரூர் வட்டம்.

13. கோபால், த.பெ. பேச்சி, காலனி தெரு, ஆனைமங்கலம், கீழ்வேளூர், திருவாரூர் வட்டம்.

14. வி. சாம்பன்னீர்செல்வம், செயலாளர், நகர தி. க. பழனி, மதுரை மாவட்டம்.

15. கா. நாகராசன், 103, டாக்டர் கோபாலன் தெரு, பழனி, மதுரை மாவட்டம்.

16. கு. இளங்கோ, 4, தர்மபுரம் சாலை, மாயவரம், தஞ்சை மாவட்டம்.

17. சி. காமராஜ், செங்குந்தபுரம், ஜெயங்கொண்டம், திருச்சி மாவட்டம்.

18. அறிவரசன், 29, பாரதியார்புரம், மேலூர்—625 106, மதுரை மாவட்டம்,

19. க. தளவாய், 53, திருவேங்கடம் சாலை தெரு, சங்கரநயினார் கோவில், நெல்லை மாவட்டம்.

20. எஸ். வி. சம்பத், மேலக் கரும்பிரான் கோட்டை, ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

21. க. ஆறுமுகம், தட்டாம்பட்டி, புத்தாம்பூர், காவேரிநகர் (வழி), புதுக்கோட்டை மாவட்டம்.

22. பொன்னுசாமி, திராவிடர் கழகம், சீரங்கம், திருச்சி மாவட்டம்.

23. கே. பாலு, திருச்சி மாவட்ட தி. க. அமைப்பாளர், சீரங்கம் திருச்சி மாவட்டம்.

24. வி. சா. பன்னீர் செல்வம், பழனி.

25. க. நாகராசன், பழனி.

### ப.க. நடத்திய 'பாங்கு தேர்வுப் பயிற்சி'

18-8-79 : வங்கிகளில் வேலைபெறும் வாய்ப்பை உண்டாக்கும் வகையில்—

பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்டோர்க்கு சென்னை பகுத்தறிவாளர் கழகம்

சார்பில் சென்னை பெரியார் திடலில் 'வங்கித் தேர்வு பயிற்சி வகுப்பு' நடத்தப் பட்டது.

சரண்சிங் அரசு பதவி விலகல்

பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக டில்லி அரசின் ஆட்சியில் சரண்சிங் அரசு நீடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்திராவின் 'வழக்கப்படியான' இரட்டை வேடத்தால் —

சரண்சிங் அரசு பதவி விலகியது.

ஜனாதிபதி வேண்டுகோளையடுத்து —

பராமரிப்பரசின் பிரதமராக நீடித்தார் — சரண்சிங்.

சென்னை — தஞ்சை
வழிநடைப் படை

21-8-79 : தந்தை பெரியார் நூற்றாண்டு விழா வழிநடைப் படையின் மூன்றாம் அணி, சென்னை வண்ணை சோலையப்பன் தெருவில் இன்றிரவு துவக்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை மாவட்ட தி. க. தலைவர் தட்சிணாமூர்த்தி தலைமையேற்றார்.

படையைத் துவக்கி வைத்து கலைஞர் சிறப்புரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் வேகுரையாற்றினார்.

இப்படையில் பங்கேற்கும் தோழர்கள் வருமாறு:

1. ஏ. எஸ். ராசசேகரன் பி. ஏ , குடந்தை (படைத்தலைவர்)
2. விடுதலைபுரம் தங்கவேலு—லால்குடி வட்டம் (படைத்தளபதி)
3. திருவண்ணாமலை எஸ். கண்ணன்
4. பெரம்பூர் முனிரத்தினம்
5. ஆலந்தூர் இராமச்சந்திரன்
6. திருவல்லிக்கேணி துரைசாமி
7. வியாசர்பாடி சண்முகம்
8. சென்னை குமார்
9. ஆவடி மனோகரன்
10. திருச்சி ஜெயகணேசன்
11. மஞ்சை வசந்தன்
12. குறிஞ்சிப்பாடி மணி
13. குறிஞ்சிப்பாடி கனகராசன்
14. லால்குடி வட்டம் விடுதலை மன்னன்
15. லால்குடி வட்டம் மதிவாணன்
16. சென்னை தம்பு அரசு
17. திருவொற்றியூர் பாரதிமோகன்
18. ஓட்டேரி மூர்த்தி

பெண்கள் (தாம்பரம்வரை சென்றவர்கள்)

(1) பார்வதி கணேசன்
(2) பட்டுபாவலர்
(3) அறிவுக்கொடி
(4) குப்பம்மாள்
(5) செயா
(6) வள்ளியம்மாள்

பார்லிமெண்ட் கலைப்பு

22-8-79 : பராமரிப்பரசின் பிரதமர் சரண்சிங் கோரியவண்ணம் —

நாடாளுமன்றத்தைக் கலைத்து இடைத் தேர்தலுக்கு ஆணையிட்டார் ஜனாதிபதி.

பகுத்தறிவு மகளிரின்
பெண்கள் விடுதலை மாநாடு

26-8-79 : பகுத்தறிவு மகளிர் அணியினர் சார்பில் தந்தை பெரியார் நூற் றாண்டு விழா— பெண்கள் விடுதலை மாநாடு இன்று காலை 11 மணி அளவில் பெரியார் திடலில் சிறப்புடன் துவங்கியது.

சரசுவதி கோரா

மாநாட்டுக்குத் தலைமை வகித்த-மறைந்த ஆந்திர நாத்திகத் தலைவர் கோரா அவர்களின் துணைவியார் சரசுவதி கோரா தெலுங்கில் உரை நிகழ்த்தினார். அவரது உரையை வரவேற்புக் குழுத் தலைவர் சரசுவதி தமிழில் மொழிபெயர்த்தார்.

சிவகாமி சிதம்பரனார்

அடுத்து, அன்னை நாகம்மையார் படத்தைத் திறந்து வைத்து, சிவகாமி சிதம்பரனார் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

தந்தை பெரியார், அன்னை நாகம்மையார், அன்னை மணியம்மையார் ஆகியோர் படங்களை முறையே பேராசிரியர் சக்குபாய், சிவகாமி சிதம்பரனார், மஞ்சுளாபாய் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இடைவேளையில் கலா நிகழ்ச்சி, மாலையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன :





15-8-79 அன்று பொதப்ர்பேட்டையிலிருந்து புறப்பட்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழா பிரசாரப் படை.

## புரட்சிகரத் தீர்மானங்கள்

### தீர்மானம் 1

பெண்கள் விடுதலைக்காக, தந்தை பெரியார் அவர்கள் அரும்பாடுபட்ட காரணத்தால், அதன் நன்றியின் அறிகுறியாக தமிழ்நாட்டுப் பெண்கள் அவருக்கு ''பெரியார்'' என்ற பட்டத்தை, சரித்திரச் சிறப்புடன் சூட்டியதை, இப்பெண்கள் மாநாடு பெருமையுடன் நினைவு கூர்ந்து, தந்தை பெரியார் அவர்களது தொண்டுக்கு தலைவணங்கித் தன் மரியாதையைத் தெரிவித்துக் கொள்வதுடன், தந்தை பெரியார் அவர்கள் தந்து சென்று இருக்கிற புரட்சிகரமான அடிச்சுவட்டில் சென்று, பெண் சமுதாயத்தின் முழு விடுதலையைப் பெற்றே தீர்வது என இம்மாநாடு சூளுரை மேற்கொள்கிறது.

### தீர்மானம் 2

மதச்சார்பற்ற நாடென்னும் இந்தியாவில், எல்லா மதத்தினருக்கும் ஒரே கிரிமினல் சட்டம் இருப்பதுபோல, சாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு என்ற இரு பெரும் நோக்கங்களும் நிறைவேறும் வகையில், ஒரே சிவில் சட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்திய பேரரசை இம்மாநாடு வலியுறுத்தி வேண்டிக்கொள்கிறது.

### தீர்மானம் 3

பெண்களை கவர்ச்சிப் பொருள்களாக்கி வியாபாரம் நடத்தும் இழி செயலை, பத்திரிகைகள், திரைப்படங்கள், வானொலி, வானொளி (டெலிவிஷன்) மற்றும் வியாபார விளம்பர நிறுவனங்கள் மேற்கொண்டு வருவதை, இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், அவைகள் தங்கள் போக்குகளை திருத்தித் கொள்ளாவிட்டால், பெண்கள் சமுதாயம் தாங்கள் கவர்ச்சிப் பொருளாக ஆக்கப்படும் நிலையை எதிர்த்துப் போராடவும் தயங்காது என்பதை இம்மாநாடு தெரிவித்துக்கொள்கிறது.

(அ) பெண்களை இழிவுபடுத்தும் பத்திரிகைகளை வாங்காமல் புறக்கணிக்குமாறு பெண்கள் சமுதாயத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது,

### தீர்மானம் 4

பெண்களை அலங்காரப் பொருள்களாக்கி, அவர்கள் சுரண்டப்படும் நிலையைத் தடுக்க பெண்கள் சமுதாயமே முன்வரவேண்டியது அவசியமாகும். தற்போது சீனா போன்ற சோஷலிச நாடுகளில் உள்ளதுபோல் உடைகளில் ஆண், பெண் என்ற வித்தியாசமில்லாமல் ஒரேமாதிரியான உடைகளை (Unisex Dresses) அணிய முன்வரவேண்டுமென்றும், குறைந்தது இப்போக்கில் வளர்ந்து வருகிற இளம் தலைமுறையினரையாவது ஊக்குவிக்குமாறு பெண்கள் சமுதாயத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### தீர்மானம் 5

ஒருவர் காலில் மற்றொருவர் விழுந்து வணங்குவது என்பது, மனித சுயமரியாதைக்கும், சமத்துவத்துக்கும் எதிரானது என்பதை சுட்டிக் காட்டுவதுடன், இந்நிலை எல்லா வழிகளிலும் தடுக்கப்படவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 6

குழந்தைகள் பெறுவது என்ற சுமையை ஏற்க நேரிட்டிருப்பது பெண்கள் சமுதாயத்திற்குத்தான். எனவே, பிறக்கும் குழந்தைகளுக்கு முதல் எழுத்து (Initial) போடும்போது தகப்பன் பெயரைவிட, தாயின் பெயரை போடுவது தான் பொருத்தமானதாகவும், நியாயமானதாகவும் இருக்க முடியும் என்று இம்மாநாடு கருதுகிறது. எனவே, தாய் பெயரின் முதல் எழுத்தையே 'இனிஷியலாக'ப் போட சட்டம் இயற்ற வேண்டுமென அரசாங்கத்தினை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### தீர்மானம் 7

திருமணமான, ஆகாத ஆண்கள் அனைவருக்கும் 'திரு' என்ற ஒரு சொல்லே பொதுவாக பயன்படுத்தப்படும்போது பெண்களுக்கு மட்டும் 'குமாரி', 'செல்வி', 'திருமதி' என்ற வேறுபாடுகள் இருக்கத்தேவையில்லை என்றும், எல்லோருக்கும் பொதுவாக 'திரு' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

## அய்யா எழுத்தில்

'புலவர்', 'சிகரம்', 'கண்டுபிடி', 'பொது ஊழியன்' (என். ஜி. ஓ. சங்க மாத ஏடு), 'அறிவு வழி', 'க்ராஸ் ரோட்', 'ஜனசக்தி' ஆகிய ஏடுகள்—

தந்தை பெரியாரின் சீர்திருந்திய எழுத்தில் அய்யா நூற்றாண்டு முதல் பதிப்பிக்கப் பெற்றன.

அரசு வெளியீடுகளும் அய்யா எழுத்தில்தான்.





17-8-79 அன்று குமரியிலிருந்து தஞ்சை நோக்கிப் புறப்பட்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழா வழிநடைப் பிரசாரப் படை.

### தீர்மானம் (7 அ)

வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்பது ஆணும், பெண்ணும் சமநிலையை உடைய நண்பர்கள், துணைவர்கள் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் நம் நாட்டில் நடைமுறையில் உள்ள கல்யாணம் என்ற முறை பெண்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்தும் சுமையாக இருந்து வரும் நிலை மாற்றப்படவேண்டும் என்றும், திருமணம் ஆனவர் என்று காட்டுவதற்காக, பெண்களுக்கு மட்டும் அணிவிக்கப்படும் தாலி, மெட்டி, மிஞ்சி போன்ற அணிகளைத் தவிர்க்குமாறும், பெண்கள் சமுதாயத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### தீர்மானம் 8

வளர்ச்சியடைந்த நாடுகளில் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு சமமான அளவில் பெண்கள் இருந்துவரும் நிலையில், தந்தை பெரியார் அறிவுரைப்படி, இந்தியாவில் கல்வி—உத்தியோகங்களில், சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்கள், மற்றும் எல்லாத் துறைகளிலும் சரி பகுதியாக 50 சதவிகித இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தாக வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. தந்தை பெரியார் அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடும் இக்கால கட்டத்தில், அவர்களின் இந்தக் கருத்துக்கு சட்ட வடிவம் கொடுப்பது தந்தை பெரியார் அவர்களுக்கு செய்யும் சரியான சிறப்பும், மரியாதையும் ஆகும் என்று அரசுக்கு இம்மாநாடு சுட்டிக் காட்ட விரும்புகிறது.

### தீர்மானம் 9

உயர்நீதி மன்ற நீதிபதிகள், பல்கலைக் கழக துணைவேந்தர்கள், அரசு பணியாளர் தேர்வுக்குழுத் தலைவர் போன்ற பல பொறுப்பு வாய்ந்த முக்கியப் பணிகளில் பெண்களே

இல்லாத நிலை வெட்கமும், வேதனையும் அடையக் கூடியதாகும். இந்தத் துறைகளில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

### *தீர்மானம் 10*

பெண்களுக்கு சொத்துரிமை வழங்குதல் சம்பந்தமாக 1929ல் செங்கற்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாடு முதல் பல வேறு மாநாடுகளில் தீர்மானம் செய்து, அரசை வற்புறுத்தியதின் பலனாய் பெண்களுக்கு சொத்துரிமை இல்லை என்ற நிலை மாற்றப்பட்டு பெண்களுக்கு ஓரளவு சொத்துரிமை வழங்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டும்—(Hindu women's right to property act 1937 and Hindu succession act 1956) இன்றைக்கும் ஆண்களைப்போல சமத்துவ அடிப்படையில் மூதாதையர் சொத்திலும் (Ancestral property) கூட்டுக் குடும்ப சொத்திலும், (Joint family property) சம உரிமையும், ஆண்களைப் போன்றே, சொத்தில் பிறப்புரிமையும் (Right of property by birth) இல்லாதது வருந்தத் தக்கதாகும்.

ஆண்களைப்போன்றே பிறப்புரிமை அடிப்படையில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்யுமாறு மத்திய அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

### *16-ஆண்டு தொல்லைக்கு விடிவு : பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவனத்துக்கு வருமான வரி விலக்கு*

28-8-79 கழகப் பொதுச் செயலாளர் இன்று சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது தெரிவித்த விவரம் வருமாறு:

“பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம் அரசியல் சார்பற்ற சமுதாய அமைப்பு என்ற போதிலும், வருமான வரித்துறை அதை ஏற்றுக் கொள்ளாமல், வருமானவரி கட்ட வேண்டும் என்று வற்புறுத்தி வந்தது.

### *60 லட்சம் ரூபாய்*

வரி விதிப்பு, இரட்டை வரி விதிப்பு, தண்டவரிவிதிப்பு, வரிக்கான வட்டிஇவைகளை எல்லாம் சேர்த்து 60 லட்சம் ரூபாய் வரை வரி கட்டவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அவசர நிலை காலத்தில், பல நெருக்கடிகள் உருவாக்கப்பட்டன. பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டிடங்களிலிருந்து வரும் வாடகைகளைக் கூட முடக்கும் அளவுக்குச் சென்றனர்.



## இறப்புகள்

18-9-78—டாக்டர் கோவூர்
19-9-78—மதுரை முத்துசாமி
7-10-78—பூட்டுத்தாக்கு சாமிநாதன்
7-10-78—வேங்கட சமுத்திரம் வேங்கன்
16-10-78—நீடாமங்கலம் விசுவநாதன்
25-10-78—புதுவை கனகலிங்கம்
1-12-78—நாகர்கோயில்வி.எஸ் கிருஷ்ணன்
6-12-78—‘நேஷனல் பிக்சர்ஸ்’ பி. ஏ. பெருமாள்
15-12-78—நாகரசம்பட்டி பரமசிவம்
16-12-78—மதுரை(செல்வா) கலைத்தூதன்
26-12-78—ஈரோடு திருமதி ரங்கநாயகி (தந்தை பெரியாரின் தமையனார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் துணைவி)
29-12-78—திருவில்லிபுத்தூர் சித்திரைக் கனி
1-1-79—காஞ்சி டி. பி.எஸ் பொன்னப்பா
24-1-79—குடந்தை ஆர்.பி சுந்தரம்
10-2-79—திருச்சூர் ராமுகாரியத் (தந்தை பெரியார் அவர்களின்ஒருநாள் வாழ்க்கை பற்றிய படம் எடுத்தவர்)
16-2-79—வேளாங்கண்ணி திருமதி பொன்னாச்சி
2-3-79—கழகப் பாடகர் வி. கே. ராமு
7-3-79—திருக்கோவிலூர் பத்மநாபன்
18-3-79—திருப்பத்தூர் பள்ளிகொண்டான்
4-4-79—குத்தாலம் சோமசுந்தரம்
7-4-79—ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.பி.,
7-4-79—மலேசியா மணிமாறன்
12-4-79—கொல்லுமாங்குடி த. சண்முகம்
17-4-79—கீவளூர் ‘பாவா’ நவநீத கிருஷ்ணன்
2-5-79—பென்னாகரம் எம்.என் நஞ்சையா
22-5-79—குளித்தலை முத்துசாமி
25-5-79—வளவனூர் மு. திராவிடமுரசு
11-6-79—சேலம் கிருஷ்ணராஜ்
21-6-79—ஈரோடு நாத்திகக் குப்புசாமி
23-6-79—தர்மபுரி சு. தங்கவேலு
23-6-79—வில்லிவாக்கம் அமிர்தவாசகம்
18-7-79—பட்டுக்கோட்டை டேவிஸ்
24-7-79—ஆற்காடு இளங்குப்பன்
31-7-79—குருக்கத்தி இ.ஏ. அன்புமஜீது
13-8-79—சிங்கப்பூர் சே. நடராசன்
24-8-79—கரூர் வீர. கே. சின்னப்பன்
1-9-79—சின்னாளப்பட்டி என். பி. ஆர். போளி



21-8-79 அன்று சென்னையிலிருந்து தந்தை நோக்கிப் புறப்பட் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா பிரசாரப் படைக்கு பல்லாவரத்தில் வரவேற்பு.

இந்த நிறுவனம் பொதுமக்களுக்கான தர்ம லட்சியங்களைக் கொண்டது என்பதையும் அதற்கான நன்கொடைகள் அனைத்தும் ஏழை மக்களால் சிறுசிறு தொகைகளாக வழங்கப் பட்டவை என்பதையும், எனவே தந்தை பெரியார் அவர்களோ, பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவனமோ வருமான வரிக்கு உட்பட முடியாது என்றும், வருமான வரி மேல் முறையீட்டுத்துறை ஆணையருக்கு முறையீடுகள் கொடுத்தும் எந்தப் பலனும் அளிக்கவில்லை; சுமார் 16 ஆண்டுகளாக இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

### மேல் முறையீடு

பின்னர், இந்தப் பிரச்சனை வருமானவரி மேல் முறையீ டுக் குழு உச்ச நீதிமன்றத்திற்கு (Income-tax Appellate Tribunal) கொண்டு செல்லப்பட்டது. இந்த மேல் முறையீட்டுக்குழு, வருமானவரி இலாகாவின் வாதங்களையும் பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தின் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்ட வாதங்களையும் மிகவும் கவனமாக பரிசீலித்து, இந்த நிறுவனம் அரசியல் நோக்கம் கொண்டதல்ல, கல்வி வளர்ச்சிக்கும், சமுதாய மறுமலர்ச்சிக்கும் ஏற்படுத்தப்பட்ட தரும நிறுவனமாகும் என்று தீர்ப்பு வழங்கியது. பி. பாலசுப்ரமணியம், வி. ராஜகோபாலன் ஆகியோர் நீதிபதியாக இருந்து இந்த வழக்கை விசாரித்தனர்.

இதனால் வருமான வரியிலிருந்து தந்தை பெரியாரும், பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனமும் விலக்கு பெறுகிறது.

---

அய்யா பற்றிய ஆய்வுக்காக

## அனிதாடீலுக்கு ஸ்வீடன் பட்டம்

தந்தை பெரியார் அவர்களைப்பற்றி ஆய்வு செய்து ஸ்வீடன் நாட்டு பெண்மணி அனிதா டீல் 'டாக்டர்' பட்டம் பெற்றார்.

ஸ்வீடன் நாட்டு 'லூண்டு' பல்கலைக் கழகம் இந்தப்பட்டத்தை வழங்கியது.

அனிதாடீல் ஆய்வுரை நூலின் தலைப்பு—

''பெரியார் ஈ. வெ. ராமசாமி''.

—'விடுதலை' 25-10-78

---

### வழக்காடியோர்

மேல் முறையீட்டுக்குழு உச்ச நீதிமன்றத்தில் தந்தை பெரியார் சார்பாகவும், சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தின் சார்பாகவும், எம். உத்தம்ரெட்டி அவர்களும், சுரேந்திரன் அவர்களும் வழக்காடினர்.

### வருமான வரம்பு ஆணைபற்றி சென்னை அய்கோர்ட் 'தீர்ப்பு'

29-8-79 ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்குமேல் வரக் கூடியவர், பிற்படுத்தப் பட்டோருக்கான சலுகைகளைப் பெற முடியாது என்று தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள உத்தரவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறது. 2 நீதிபதிகள் அரசு உத்தரவு செல்லும் என்றும், ஒரு நீதிபதி உத்தரவு செல்லாது என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

### தர்மபுரி எடுத்த தந்தை விழா

30-8-79: தர்மபுரி மாவட்ட தந்தை பெரியார் நூற்றாண்டுவிழா இன்று எழுச்சியுடனும் சிறப்புடனும் நடைபெற்றது. விவேகானந்தா நகர மாளிகையில் நாகரசம்பட்டி என். எஸ் சம்பந்தம் அவர்களின் வரவேற்புரையுடன் துவங்கியது. ஆர் பண்டரிநாதன் அய். ஏ. எஸ். தொடக்க உரையாற்றினார். தொடர்ந்து பட்டி மன்றம்.

பல்வேறு அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

### மாபெரும் ஊர்வலம்

மாலை 5 மணியளவில் மாபெரும் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் புறப்பட்டது! தருமபுரி வரலாற்றில் புதிய அத்தியாயம் உருவானது.

இரவு 8 மணியளவில் கே. ஆர். எம். எஸ். பஸ்ஷெட் எதிரில் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் துவங்கியது. மாவட்டத்தலைவர் என். எம், ஸ்ரீராமுலு கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

டாக்டர் கலைஞர், கழகப் பொதுச்செயலாளர் கி வீரமணி, ஜனசக்தி ஆசிரியர் தா. பாண்டியன், ஆற்காடு வீராசாமி மற்றும் தோழர்கள் உரையாற்றினர். மாவட்ட தி.க. உதவித் தலைவர் ஜி. எச். கோதண்டராமன் நன்றி உரையாற்றினார்,

### அய்யாவுக்கு நினைவு மண்டபம்

30-8-79 பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவை செப். 15, 16, 17. தேதிகளில்





1-9-79 அன்று நாகை வட்டம் சிக்கல் என்ற ஊரிலிருந்து தஞ்சை நோக்கிப் புறப்பட்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழா வழிநடைப் பிரசாரப் படை.

---

சென்னையில் தமிழ்நாடு அரசு நடத்த இருப்பதாக இன்று தமிழ்நாடு செய்தி விளம்பரத் துறை இயக்குனர் செயலாளர்களிடையே தெரிவித்தார்.

### நினைவு மண்டபம்

94 லட்சம் ரூபாய் செலவில் தந்தை பெரியாருக்கு சென்னையில் நினைவு மண்டபம் ஒன்று அமைக்கப் பட இருக்கிறது என்றும், அதில் 94 அடி உயர ஸ்தூபி ஒன்று நிறுவப் பட்டு, அதைச் சுற்றிலும் தந்தை பெரியாரின் கருத்துக்கள் பொறிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். விழாவுக்கு வெளி நாட்டு தூதர்களும், மேற்குவங்க, கருநாடக முதல்வர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். என்றும் சொன்னார்.

### சிக்கல் நகரில் புறப்பட்ட நான்காம் வழிநடைப் படை

1-9-79 நாகப்பட்டினம் வட்டம் சிக்கல் என்ற ஊரிலிருந்து 29 பேர்களைக் கொண்ட திராவிடர் கழக வழிநடைப் பிரசாரப்படை இன்று காலை 10-30 மணி அளவில் மிக உற்சாகத்துடன் புறப்பட்டது.

சிக்கல் திராவிடர்கழகத் தலைவர் நாகப்பா அவர்களது தலைமையில் படை துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. முதுபெரும் சுயமரியாதை வீரர் மன்னார்குடி கே. ஆர். ஜி. பால் படையைத் துவக்கி வைத்தார்.

துவக்கவிழாவில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, கழகப் பொருளாளர் தஞ்சை கா. மா. குப்புசாமி, தஞ்சை மாவட்ட திமுக அவைத் தலைவர் முத்துப்பேட்டை தருமலிங்கம், நாகை ஒன்றிய திமுக செயலாளர்

கணபதி, தி மு க பொதுக்குழு உறுப்பினர் அம்பலவாணன், திருத்துறைப்பூண்டி வட்ட திராவிடர் கழக செயலாளர் சு, சாந்தன், திருவாரூர் நகர திராவிடர் கழகத் தலைவர் எஸ். சிவசங்கரன், நாகைவட்டதிராவிடர் கழக தலைவர் எஸ். கணேசன், நாகை நகர தி. க. தலைவர் எம். மணி, வட்ட செயலாளர் வி. சுப்ரமணியம் ஆகியோர் உரையாற்றினர். படை வழியனுப்பு விழாவில் ஏராளமான பொது மக்களும் கழகத் தோழர்களும் திரண்டிருந்தனர்.

### தலைவர், தளபதி

படைத் தலைவராக வடபாதிமங்கலம் கழகத் தோழர் இராசமாணிக்கமும், படைத் தளபதியாக இளம்வீரர் அண்ணாதுரையும் பொறுப்பேற்றுள்ளனர்.

### நெல்லையில் அய்யா நூற்றாண்டு விழா

2-9-79: திருநெல்வேலி சந்திப்பிலுள்ள ம.தி.தா. இந்துக் கல்லூரியில் இசை நிகழ்ச்சியோடு நெல்லை மாவட்ட தி.க. சார்பில் அய்யா நூற்றாண்டுவிழா துவங்கியது.

விழா நிகழ்ச்சிகளை கழகப் பொதுச் செயலாளரவர்கள் துவக்கி வைத்தார்கள். கருத்தரங்கம் காலை நிகழ்ச்சியாக இடம்பெற்றது.

தலைமை—பொதுச்செயலாளர்.

பிற்பகலில் பகுத்தறிவு வினாடி வினா, பெரியார் பிஞ்சுகள் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மாலையில் பாட்டரங்கமும், இரவில் பட்டிமன்றமும் சிறப்புற நடந்து இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

### மாபெரும் ஊர்வலம்

3-9-79 : நூற்றாண்டு விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்—

மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தோடு மாலை துவங்கியது. ஊர்வலத் துவக்கம்—புகை வண்டி நிலையம்; அடக்கம்—லாலா சத்திரத் திடல்.

இரவு ஏழுமணியளவில் மாபெரும் விழாப் பொதுக் கூட்டம், நெல்லைநகர் லாலா சத்திரம் திடலின் பெரியார்—மணியம்மை அரங்கில் மாவட்ட தி. க. செயலாளர் தி. ஆ. தியாகராசன் தலைமையில் நடந்தது.

டாக்டர் கலைஞர், கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, தோழர் தா. பாண்டியன், பிரசார செயலாளர் செல்வேந்திரன், பொருளாளர் குப்புசாமி, மாவட்ட தி.க. தலைவர் எஸ். நட்சேத்திரம் மற்றும் பல்துறை விற்பன்னர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்று கருத்துரையாற்றினார்.





பட்டுக்கோட்டையில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா.



நெய்வேலியில் தந்தை பெரியார் சிலை திறப்பு (10-8-79)

### சிக்கல் – தஞ்சை வழிநடைப் பிரசாரப் படையினர்

1. துரைசாமி-கீழவைப்பூர்
2. நீலமேகம்-இராயத்தமங்களம்
3. அன்பழகன்-குருக்கத்தி
4. அண்ணாதுரை-கீழகூரனூர்
5. வீரமணி-குரும்பேரி
6. கவுதமன்-நீலப்பாடி
7. அந்தோணிசாமி-சோழங்கநல்லூர்
8. பன்னீர்செல்வம்-ஆமூர்
9. பிரான்சிஸ்-நெடுங்காட்டான்குடி
10. பன்னீர்செல்வம்-திருவாதிரைமங்களம்
11. அழகரசன்-மேலகூரனூர்
12. S. மூர்த்தி-பழவனக்குடி
13. பா, நூர்தீன்-ஆழியூர்
14. பிச்சையப்பன்-மஞ்சக்குடி
15. சின்னையன்-கீழப்பாலையூர்
16. கோவிந்தராசு—வடுகக்குடி
17. செல்லதுரை-184, நெய்க்குப்பை
18. வீரமணி-அன்னவாசல்
19. சுவாமிநாதன்—அன்னவாசல்
20. சீனிவாசன்-அன்னவாசல்

19

21. M. சேரன்-புத்தகரம்
22. இளங்கோவன்-மருங்கூர்
23. மோகன்-புத்தகரம்
24. ராஜமாணிக்கம்-புத்தகரம்
25. மருதவாணன்-வடுகக்குடி
26. இலக்குமணன்-காப்பணாமங்களம்
27. திருமதி குப்பம்மாள்-சென்னை
28. நவநீதகிருட்டினன்-சென்னை

**ஆக மொத்தம் படையில் சென்றவர்கள் 28 பேர்**

## காஞ்சியில் அய்யாசிலைக்கு அனுமதி மறுத்ததை எதிர்த்து அய்கோர்ட்டில் வழக்கு

7-9-79 : காஞ்சிபுரத்தில் தந்தை பெரியார் சிலை வைக்க ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த இடத்தை தமிழ்நாடு அ.தி.மு க. அரசு ரத்து செய்ததை எதிர்த்தும் ரத்துக்கு இடைக்கால தடைகோரியும் செங்கற்பட்டு மாவட்ட தி.க. தலைவர் சி. பி. ராஜமாணிக்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

மனுவை விசாரிப்பிற்கு ஏற்ற நீதிபதி வி. ராமசாமி அவர்கள்—மூன்று வாரத்தில் விளக்கம் தருமாறு அரசுக்கு ஆணையிட்டார்.

## திருவையாறு ப. க. திறந்த அய்யா சிலை

8-9-78 : திருவையாறு பேருராட்சி காமராஜ் பேருந்து நிலைய நுழைவுவாயிலின் கடவுள் மறுப்பு பீடத்தில் திருவையாறு ப. க. அமைத்த அய்யா அவர்களின் சிலையை—

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு வேணுகோபால் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கழகப் பொதுச்செயலாளர் உட்பட பல்வேறு பிரிவு தோழர்களும் பங்கேற்ற மகத்தான விழா இது.

## செங்கை மாவட்ட தி. க. எடுத்த அய்யா விழா

9-9-79 : காஞ்சி அண்ணா கலையரங்கில் செங்கை மாவட்ட தி. க. சார்பில் எடுக்கப்பட்ட அய்யா நூற்றாண்டு விழாவிற்கு பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர்.

பெரியார் பிஞ்சுகள், பட்டிமன்றம், கருத்தரங்கென காலை நிகழ்ச்சிகள் முடிந்தபின்—



சிறுவாங்கூரில் (கல்லக்குறிச்சி) கடவுள் மறுப்புக் கல்வெட்டுத்திறப்பு விழா (1-7-79)





காஞ்சியில் அய்யா
நூற்றாண்டு விழா
காட்சிகள்
(9-9-79)




சென்னையில் பெரியார்-மணியம்மை இலவச மருத்துவமனை திறப்பு விழா. (30-5-79)

பிற்பகல் நிகழ்ச்சிகட்கு முத்தாரம் வைத்தது கொட்டும் மழையில் நடந்த மகத்தான ஊர்வலம்.

அலகு குத்தி காரையே இழுத்த மாட்சி— பக்தி மடமைக்கு தலையாய சவால்!

கடும் மழையிலும் அரங்கம் வழிய ஆர்வமிகு கொள்கைக் கூட்டம்.

செங்கை மாவட்ட தி. க. தலைவர் சி. பி. ராசமாணிக்கம் அவர்கள் தலைமையில்-

கழகப் பொதுச்செயலாளர், 'ஜனசக்தி' தா. பாண்டியன், முன்னாள் அமைச்சர் சி. வி. எம். அண்ணாமலை உட்பட ஏராள அறிஞர்கள் பங்கேற்று கருத்துரை நல்கினர்.

கர்நாடக மாநில தி. க.

10-9-79: பெங்களூர் தமிழ்ச்சங்கத்தில் கர்நாடக மாநில தி. க. சார்பில் அய்யா நூற்றாண்டுவிழா இன்று காலை துவங்கியது.

கர்நாடக மாநில சட்ட அமைச்சர் எல். ஜி. ஆவனூர், கர்நாடக மாநில மேலவை



கொறடா எம். சி. பெருமாள் உட்பட பல அறிஞர்கள் பங்கேற்றனர்.

*நிறைவு விழாவில் பங்கேற்க மலேசியா—சிங்கை, தோழர்கள்*

12-9-79: தஞ்சையில் செப்டம்பர். 15, 16, 17 தேதிகளில் நடைபெறவுள்ள தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் பங்கேற் பதற்காக—

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளி லிருந்து இன்று முற்பகல் 11-45 மணிக்கு வந்த தோழர்கட்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில உற்சாக வரவேற்பளிக்கப் பட்டது.

மலேசியாவிலிருந்து— கே. ஆர். ராமசாமி (மலேசிய தி. க. தலைவர்), க. பாலசுப்ர மணியம் (துணைப் பொதுச் செயலாளர்) சி. தர்மலிங்கம் (மலேசிய தி. க. இளைஞர் பிரிவு தலைவர்), கா. கோபால் (மலேசிய இளைஞர் பிரிவு செயலாளர்) இரா. ப. தங்க மணி (கெடா மாநில மலேசிய இளைஞர் தி. க. செயலாளர்) தோவூர்பார் (மலேசிய தி. க. துணைத்தலைவர்) தோழர் ப. தீனதயாளன் ஆகியோரும்—

மற்றும் சிங்கப்பூரிலிருந்து—

தி. நாகரத்தினம் (சிங்கப்பூர் தி. க. தலைவர்) நாதன் (சிங்கப்பூர் தி. க.) முருகு சீனிவாசன் ஆகியோரும் வந்தனர்.

மாலை சென்னை மாவட்ட தி. க. சார்பாக தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. *

# ABOUT PERIYAR !

I am very grateful to Mr. K. Veeramani for giving me this opportunity to make an appreciation of the work of Periyar E. V. Ramasami! There is little question but E. V. Ramasami's contribution to present political and social developments has been substantial. Aside from his particular interest in raising the position of those we now call the Backward Classes, he had two particular characteristics which were unusual. First of all, he was always a restless man who could not stay in one town or place for very long. He somehow had to be on the move all the time. Secondly, if he discovered any way by which the rights of socially Backward Communities had been impigned upon, he would start an agitation of great substance. Finally, his particular way of speaking in what is called கொச்சை தமிழ்...a conversational form...to an audience of many thousands meant that the relationship with the crowd was found to be close and intimate.

—**Eugene F. IRSCHICK**

[Mr. Eugene F. Irschick, born and brought up in America, is the author of the Book 'Politics and Social Conflict in South India.' He had made a deep study of the origin of our movement (Non-Brahmin) and written this valuable book in 1968 which every student of the present generation should read ]



# வகுப்புரிமை பெற்றே தீருவோம்!

வகுப்புவாரி நியமன உத்தரவை சட்டமாக இயற்றியமைக்காக திரு. முத்தையா முதலியார் அவர்களை வகுப்புவாரி உரிமை தந்தை என்று அழைக்கிறோம். இப்பெயர் பெற வேண்டி அவர் கொடுத்த விலை சொல்லால் மதிக்க முடியாத ஒன்றாகும். தன் எதிர்கால அரசியல் வாழ்வை நம் இனத்திற்காக அவ்வுத்தரவின் மூலம் அர்ப்பணித்தார் என்று சொல்வேன்.

அய்யா அவர்கள் இதற்குத் தந்தை என்றால் நமது ரத்தினசாமி அவர்கள் இதற்குத் தாயாக இருந்து சிறிது காலம் போற்றி வளர்த்தவர் ஆவார். பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தலைவராக இருந்து, இந்த உத்தரவை தம்மால் இயன்ற அளவுக்கு நல்ல வண்ணம் அமுல்படுத்தி இவர் பேருதவி செய்திருக்கிறார்.

## எனது பங்கு

எனக்கும் இந்த வகுப்புவாரி நியமன உத்தரவில் சம்பந்தம் பாராட்டிக் கொள்ள அருகதை உண்டு. எனது அரசியல் வாழ்வில் ஏற்பட்ட ஒரு முக்கிய திருப்பத்துக்கு இவ்வகுப்புவாரி உரிமையே காரணமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம் கொண்டு வந்த காரணத்தாலேயே தான் நான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை பொறுப்பிலிருந்து வெளியேறவேண்டி ஏற்பட்டது. காங்கிரஸ் ஸ்தாபனத்தைவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்ட இந்த சந்தர்ப்பத்தைத் தான் நான் எனது அரசியல் வாழ்வில் ஏற்பட்ட முக்கிய திருப்பம் என்று குறிப்பிட்டேன்.

இந்த வகுப்புவாரி உரிமை உணர்ச்சி எனக்கு இல்லாதிருந்தால் எனது அரசியல் வாழ்க்கையே வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

## ஆத்திரப்படுவதேன் ?

செல்வாக்கான பதவியை உதறித்தள்ளி விட்டு மாபெரும் கிளர்ச்சியைத் துவக்கி இவ் வகுப்புவாரி நியமன உத்தரவைக் கொண்டு வந்த காரணத்தால்தான் அவ்வுத்தரவிற்கு ஆபத்து வரும்போது அதிக ஆத்திரப்பட வேண்டியிருக்கிறது.

பெருத்த தியாகத்தின் மூலம் பெறப்பட்ட சலுகை இது. எனவேதான் அச்சலுகையின் கழுத்து நெறிக்கப்படும்போது நமக்கு ஆத்திரம் மூளுகிறது. சும்மா இருக்க முடியவில்லை.

தோழர்களே! எதற்காக, கேவலம் பதவிகளுக்காக இவ்வளவு போராட வேண்டும் என்று சில புத்திசாலிகள் கேட்கலாம்.

பதவிகளால் பெறக்கூடியது வெறும் சம்பளமும் கிம்பளமுமாக மட்டும் இருந்தால் நாம் இவ்வளவு பாடுபடமாட்டோம். உழைக்க உடலுண்டு என்று ஒதுங்கித்தான் போய்விடுவோம். ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லையே!

ஒரு பார்ப்பான் சப்-இன்ஸ்பெக்டராக வந்து வாய்த்து விட்டால், ஒரு பார்ப்பான் மந்திரியாக வந்து விட்டால் அவன் அப்பதவியில் பெறக்கூடிய செல்வாக்கை எல்லாம் நம்மை அழிக்கத்தானே, நமது இனத்தைக் கெடுக்கத்தானே, அதற்குப் பிரதியாய் தம் இனத்தை உயர்த்தத்தானே பயன்படுத்துகிறான். ஆதாவது அந்தந்த இடங்களில் தமது இனத்தை புகுத்திக்கொள்ளத்தானே முயற்சிக்கிறான். நம் இனத்துக்குக் கேடு சூழ்வதுதானே அவனுடைய குறிக்கோளாய் அமைந்திருக்கிறது அப்படி இருக்கும்போது எப்படி நமது உரிமையை விட்டுக் கொடுப்பது ?

இவர்களின் இழிசெயலை நன்றாக விளம்பரப்படுத்தி கண்டிக்கத்தான் போகிறோம்.

## ஆத்திரம் வெடிக்கும்

நீண்ட நாளாக நாம் அடக்கிக் கொண்டு வரும் ஆத்திரம் இன்றில்லா விட்டாலும் என்றாவது ஒருநாள் வெடிக்கத்தான் போகிறது.

சமணர்களை கழுவேற்றிய படலம் எங்களுக்கு ஞாபகத்தில் இருந்து கொண்டுதான் வருகிறது.

காங்கிரஸ்காரர்களின் கொடுமைகளும் பார்ப்பனர்களின் பித்தலாட்டங்களும் வளர வளர நமது ஆத்திரம் பொங்கிப் பொங்கி இறுதியாக 'பர்ஸ்ட்' (Burst) ஆகத்தான் போகிறது.

இறுதியாக வெடித்துச் சுட்டுப் பொசுக்கும் சூறாவளியாக நாடெங்கும் வீசத்தான் போகிறது!

நீங்கள் மட்டும் நான் சொல்கிறபடி பொறுமையாக இருந்து பாருங்கள்!

இன்னும் அதிகபட்சம் இரண்டு வருடத்தில் இந்த வகுப்புவாரிக் கோரிக்கையை அப்படியே நிறைவேற்றி வைக்கிறேனா, இல்லையா பாருங்கள்; இதில் முழு வெற்றியும் பெறுகிறேனா இல்லையா பாருங்கள்!

—ஈ. வெ. ரா.

(13-12-50 ''விடுதலை''யிலிருந்து தொகுக்கப்பட்டது.)





# வகுப்புக்கு ஏற்ற நீதி

அரசாங்க அலுவல்களில் ஆட்களை அமர்த்தும்போதும், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் போதும் வகுப்புவாரிப் பிரதிநித்வ முறையைக் கையாளுவதென்று சென்னை அரசாங்கம் உறுதிபூண்டு வருகிறது. அரசாங்கம் கையாண்டிருக்கும் இந்த உறுதியைக் கண்டிக்க, வகுப்புவாத சக்திகளை, ஒப்வு ஒழிவிலாமல்மறைமுகமாகப்பொழிந்து கொண்டிருக்கும் சில பத்திரிகைகளும், பிறரும் சீறிப்பாய்ந்த வண்ணம் இருக்கின்றனர். வகுப்பு நலன்கள் எவ்வகையிலும் குறைந்துவிடாமல் பாதுகாத்துத், தம்முடைய இனத்திற்குச் சேவை செய்வதிலே அல்லும் பகலும் அயராதுமுனைந்து நின்று பாடுபட்டுவரும் பத்திரிகைகளிலே, தலைசிறந்து விளங்கும் 'இந்து'வும், 'சுதேசமித்திர'னும் இப்பொழுது சினம் மேலிட்டுத் தலைதுள்ளிக்குதிக்கின்றன.

நம்நாட்டின் அமைப்பில் சாதிப்பிரிவுகள் தோன்றி, உயர்ந்த சாதிக்காரரெனப் பெயர் பெற்ற ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் வாழ்க்கைவசதிகளனைத்தும் பெறும்படியான நிலைமையும், இடைத்தர சாதிக்காரர்கள் பிற்போக்கு வகுப்பினர்கள் எனக் கருதப்பட்டு வாழ்க்கை வசதிகளிலே பல மறுக்கப்படும்படியான நிலைமையும், தீண்டப்படாத சாதியினர் என்று சிலர், தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு, வாழ்க்கை வசதிகள் அனைத்தும் மறுக்கப்படும்படியான நிலைமையும் பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நின்று நிலவி வரும்படியானமுறை ஏற்பட்டுவிட்டது.

சாதியின்காரணமாக ஒருகூட்டம் உல்லாச வாழ்வு வாழவும், சாதியின் காரணமாகவே மற்றொரு கூட்டம் அடிமைவேலை செய்து உழலவும் ஆன நிலைமையை அறிந்த நீதிக்கட்சி, சாதியின்காரணமாக வீழ்த்தப்பட்டவர்களை உயர்நிலைக்குத் சாதியின் காரணத்தைக் காட்டித் தான் உயர்நிலைக்கு ஏற்ற முடியும் என்ற பேருண்மையைத் தெரிந்து கொண்டு, தான் ஆட்சிப்பீடம் அமரும்போது, வகுப்புகளுக்கு நீதி வழங்கும் வகுப்புவாரிப் பிரதிநித்வ முறையை அமுலுக்குக்கொண்டுவந்தது.

எல்லா வகுப்பினரையும், ஏற்றத்தாழ்வின்றி, ஒரேநிலைக்குக்கொண்டு வர, வீழ்ந்துகிடக்கும் சமுதாயத்திற்கு, அவையவை வீழ்ந்துகிடக்கும் அளவுக்கு ஏற்ப நீதி வழங்க வேண்டும்—சலுகை காட்ட வேண்டும்—கைகொடுக்கவேண்டும்— இடமளிக்கவேண்டும் என்று கருதியே வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் துறைகளிலெல்லாம், வகுப்புவாரி முறையைக் கொண்டுவரத் திட்டம் தீட்டியது நீதிக்கட்சி. தன்னாற்றலுக்கு ஏற்ற அளவுக்கு அந்தத்திட்டத்தை நடைமுறையில் கொண்டு வரவும் பாடுபட்டது.

வகுப்புவாரி முறையைக் கல்லூரிகளிலும், அரசாங்க அலுவல்களிலும், நீதிக்கட்சி புகுத்திய பிறகு தான், பிற்போக்கு வகுப்பினர் ஓரளவுக்குக் கல்விபெறவும், சமுதாயத்தில் ஓரளவுக்குச் சமநிலை பெற்று மதிப்படையவும் வழி ஏற்பட்டது. இந்த முறையை அமுலுக்குக் கொண்டுவந்தபோது, அதன் உட்கிடக்கையை அறியமாட்டாத காங்கிரஸ்காரர்கள் நீதிக்கட்சியை வகுப்புவாதக்கட்சி என்று தூற்றினர்; கேலிசெய்தனர்; வசைமாரி பொழிந்தனர். உயர்சாதிவகுப்பினர் காங்கிரஸ்காரர்களின் இந்தப்போக்குக்கண்டு அகங்குளிர்ந்தனர்; புளகாங்கிதம் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர்.

பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்கள், இன்று, ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு, வகுப்புவாரி முறையின் உண்மையையும், அவசியத்தையும், முக்கியத்வத்தையும் உணருகிறார்கள். சூழ்நிலை அந்த நிலைக்கு அவர்களைக் கொண்டுவந்து வைத்

[வகுப்புவாரி உரிமையில் கொண்டு போய் பொருளாதாரத்தைப் புகுத்தும் அ. இ. அ. தி. மு. க. ஆட்சி, இந்தப் பிரச்னையில் அண்ணாவின் கொள்கை என்ன என்பதை அண்ணாவின் இக்கட்டுரை மூலம் தெரிந்துகொள்ளட்டும். 'திராவிட நாடு' கட்டுரையை அப்படியே 'பிளாக்' எடுத்துப் போடப்பட்டது.]

இருந்து தீரவேண்டியதன் அவசியத்தை மந்திரி கோபால் ரெட்டியும், பக்தவத்சலமும் அண்மையில் வற்புறுத்தியதை நன்கு அறியலாம். நீதிக்கட்சியின் இந்தக் கொள்கையைக் காரசாரமாக, மட்டரகச் சொற்களால்கூட, திட்டித் தூற்றி வந்த 'தினசரி'யார் இன்றுள்ள நிலைமையைத் தெரிந்து வகுப்புவாரிமுறைக்கு வாதாடியிருக்கிறார். காங்கிரஸ்காரர்களின் உள்ளம் இந்த அளவுக்குப் பண்பட்டது கண்டு நாம் மகிழ்கிறோம்.

வகுப்புவாரி முறையை அரசாங்கம் கையாள வேண்டியதன் இன்றியமையாமையையும், சிலகாலம் வரையில் அரசாங்க ஏடுகளில் சாதிப் பெயர் குறிக்க வேண்டியதன் அவசியத்தையும் குறித்துச் சென்னை அரசாங்கத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் குறிப்பிடுவதைக் காணுங்கள்.

“வகுப்பு வேற்றுமைகளை ஒழிப்பது என்பது, சமுதாயம் மேற்கொள்ளவேண்டியதொரு சீர்திருத்தமாகும். சமுதாயத்தில் வளரும் எண்ணங்களின் முற்போக்குக்கு ஏற்றபடி, அரசாங்கம் இவ்விஷயங்களில் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை படிப்படியாகக் கொள்ளக்கூடியதாகத்தானிருக்கும். அரசாங்கம் மட்டும் தன் ரிகார்டுகளில் சாதிப்பெயரைக் குறிக்காமல் விட்டுவிடுமேயானால், ஆனால், அதே சமயத்தில் வெளியுலகில் சாதிப்பெயரைக் குறிப்பிடும் பழக்கம் இருந்துவருமேயானால், அது ஒழுங்கற்ற முறைகளிலும், ஆட்சி முறைச் சங்கடங்களிலும் கொண்டுபோய்விடும்.”
என்று கூறியுள்ளார்.

சமுதாயத்தில் மக்கள் சமநிலை அடையவேண்டுமானால், வகுப்புகளுக்குச் சமசந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். சமசந்தர்ப்பங்கள் ஏற்பட வகுப்புகளுக்கு ஏற்ற நீதி கொடுக்கப்பட வேண்டும். ஏற்ற நீதி கொடுக்க ஒவ்வொரு சாதியின் நிலைமையை அரசாங்கம் உய்த்துணர வேண்டியிருக்கிறது. ஆகவேதான், வகுப்புகளைப் பிரித்துக் காண வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று அரசாங்க அதிகாரி கூறும் காரணத்தை நாம் போற்றுகிறோம்.

'எந்தச் சாதிப் பெயர்களின் காரணமாகச் சமுதாயத்தில் பலர் வீழ்ச்சியுற்றார்களோ அதே சாதிப் பெயரின் காரணமாக அவர்களுக்கு மீட்சி தரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.' இந்நாட்டில், சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்கள் சமதரை ஆகும் வரை, வகுப்புவாரி முறை அரசாங்கத்தால் கையாளப்பட்டே தீரவேண்டும்.

சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வு மனப்பான்மைகளைப்போக்கி, சமுதாயத்தைச் சீர்திருத்தும் பெரும்பணியைத் திராவிடர் கழகம் செய்துவருகிறது, அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு. திராவிடர் கழகம் சமுதாயம் முழுவதையும் சீர்திருத்தி வெற்றிக் கொடியை நாட்டும்போது, அரசாங்கம் வகுப்புவாரி முறையைக் கையாளவேண்டிய அவசியம் ஏற்படாது. வகுப்புகளுக்கு ஏற்ற நீதி கிடைத்து, சமுதாயம் உயர்நிலையடையத் திராவிடர் கழகத்தின் தொண்டும், அரசாங்கத்தின் அணைப்பும் நாட்டிற்குத் தேவைப்படுகின்றன. எனவேதான், நாட்டிலுள்ள சாதிப்பாகுபாடுகள் அழிந்தும் ஒழிந்து, மக்கள் அனைவரும் சமுதாயத்துறையில் (பொருளாதாரத் துறையில் அல்ல) 'ஒன்றே குலம்' என்ற நிலை ஏற்படும் வரையில், இந்த வகுப்புவாரி முறை—அதாவது வகுப்புக்கு ஏற்ற நீதி வழங்கப்படவேண்டுமென்ற ஏற்பாடு இருந்தே தீரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.



























20



21





















தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ... 600 008





# தந்தை பெரியார் பற்றி...
## திரு.வி.க.

ஈ. வெ. ராமசாமி சென்னை மாகாணச் சங்கத்தின் உதவித் தலைவருள் ஒருவர், யான் அமைச்சருள் ஒருவன். இருவருக்கும் சில காலம் சந்திப்பு ஏற்படாமலிருந்தது. ஈரோட்டில் சென்னை மாகாணச் சங்கத்தின் இரண்டாவது மாநாடு (1919) கூடியபோது இருவருக்கும் சந்திப்பு ஏற்பட்டது.

ஈ. வெ. ரா. பேச்சில் கருத்துச் செலுத்தாத காலமுண்டு. அவர் பேச்சில் கருத்துச் செலுத்திய பின்னர், தமிழ்நாட்டுக் காளமேகமானார். ஈ.வெ.ரா. பேச்சு, மழையாகும்; கன மழையாகும்; கல் மழையாகும். மழை மூன்று மணி நேரம் நான்கு மணி நேரம் பொழியும்.

முன்னாளில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் தொண்டு செய்தவர் என்ற முறையில் எவர்க்கேனும் பரிசில் வழங்கப் புகுந்தால் முதற்பரிசு ஈ.வெ.ரா. விற்கே செல்வதாகும். தமிழ்நாட்டு காங்கிரஸ் ஈ. வெ. ரா. உழைப்பை நன்றாக உண்டு கொழுத்தது. அவர் காங்கிரஸ் வெறி கொண்டு நானா பக்கமும் பறந்து பறந்து உழைத்ததை யான் நன்கு அறிவேன். சத்தியாக்கிரக இயக்கத்தில் மும்முறை ஈ. வெ. ரா. சிறை சென்றுள்ளார்.

ஈ. வெ. ராவும் நானும் சேர்ந்து சேர்ந்து எங்கெங்கோ தொண்டு செய்தோம். காடு மலையேறியும் பணிபுரிந்தோம்.

ஈ வெ.ரா. ருஷ்யா சென்று திரும்பினார். அவர் சமதர்மக் கண் பெற்று வந்தார் என்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்தேன். யான் ஈரோட்டிற்கு அழைக்கப்பட்டேன். அழைப்புக்கிணங்கி ஈ. வெ. ரா. மனைவியார் நாகம்மாள் உருவப்படம் திறந்து திரும்பினேன். ஜோலார் பேட்டையில் ஈ. வெ. ரா. சுயமரியாதை சமதர்மக் கட்சியினர் ப. ஜீவானந்தம், ஜோலார் பேட்டை பார்த்தசாரதி ''சமதர்மம்''பத்திரிகை நடத்த முன்வந்த காலை, அப்பத்திரிகையை (5-8-1934) திறந்தேன்.

* * *

வைக்கத்தில் (1924) தீண்டாமைப் போராட்டம் எழுந்தது. ஈ. வெ. ரா. அங்கே சென்று சத்தியாக்கிரகஞ்செய்தார். திருவாங்கூர் அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தியது. அப்பொழுது யான் 'வைக்கம் வீரம்' என்ற தலைப்பீந்து ஈ. வெ. ரா. தியாகத்தை வியந்து வியந்து 'நவசக்தி'யில், எழுதுவேன். 'வைக்கம் வீரர்' என்பது ஈ. வெ. ரா.விற்கொரு பட்டமாகவே வழங்கலாயிற்று.

* * *

வைக்கம் வீருக்குப் பலதிற அணிகளுண்டு. அவைகளில் ஒன்று வைராக்கியம். 1920ஆம் ஆண்டு சென்னையிலே கூடிய மாநாடொன்றுக்கு டாக்டர் வரதராஜுலு, ஈ. வெ. ரா. போந்தனர். இருவரும் இராயப்





தமிழ்நாடு ஆவ...

பேட்டை பவானி பாலிகா பாடசாலையில் தங்கினர். இரவில் டாக்டர் வரதராஜுலு சுருட்டு பிடித்தார்; ஈ. வெ. ரா. சிகரெட் பிடித்தனர். இரண்டு புகையும் என்னை எரித்தன. சிகரெட்டை விடவேண்டுமென்ற உறுதி ஈ. வெ. ரா.விற்கு எப்படியோ உண்டாயிற்று. சிகரெட் பயிற்சி ஈ. வெ. ரா.வை விட்டு ஓடியது. வைராக்கியம் என்ன செய்யாது?

* * *

மயிலை மந்தவெளியில் ஈ. வெ. ரா.வால் (8-3-1924) நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவிலே இராஜநிந்தனை இயங்கியதென்று அவர் கைது செய்யப்பட்டார். வழக்கு நடந்தது, ஈ. வெ. ரா. இராயப்பேட்டையில் தங்கினார். ஓர் இரவு 'குகானந்த நிலைய'த்திலே ஈ. வெ. ரா. ஒரு திண்ணையில் உறங்கினார். யான் மற்றொரு திண்ணையில் உறங்கினேன். பதினொரு மணிக்கு மழை தொடங்கியது. நண்பரை எழுப்பினேன். அவர் கண் விழிக்கவில்லை. மழை பெருகியது. மீண்டும் நேயரை எழுப்பினேன். கண்கள் மூடியபடியே இருந்தன, ஈ. வெ. ரா.வை பலமுறைஎழுப்பி எழுப்பிப் பார்த்தேன். பயன் விளையவில்லை. நாலுமணிக்கு மழை நின்றது. ஆறு மணிக்கு வைக்கம் வீரர் எழுந்தார். எனக்குச் சொல்லொனாச் சிரிப்பு. 'மழை பெய்தது தெரியுமா?' என்று நண்பரைக் கேட்டேன். 'மழையா?' என்றார். ஈ. வெ. ரா.வைத் தீண்டியுள்ள 124—ஏ வழக்கு. நடப்புக் காலம்! அந்நிலையில் நண்பருக்குக் கவலையற்ற உறக்கம்! என் எண்ணம் ஈ. வெ. ரா. மனத்தின் மீது சென்றது, 'அவர் மனம் பொன்னா? சஞ்சலமுடையதா?' என்ற ஆராய்ச்சியில் இறங்கினேன்.

* * *

1942-ம் ஆண்டு இராமசாமி பெரியார் ஜெனரல் ஆஸ்பிடலில் படுக்கையில் கிடந்த போது அவரைக் காண வி. சக்கரையும், சண்முகானந்தசாமியும், ஜானகிராமும் யானும் சென்றோம். யான் அவர்கட்டிலிலே நெருங்கி அமர்ந்தேன். பெரியார் என் கையைப் பற்றிக் கதறினார். என் குட்டை நனைந்தது. இருவரும் கருத்து வேற்றுமையுடையவர்; போரிட்டவர். பெரியார் கண்கள் ஏன் முத்துக்களை உகுத்தன? அக்காட்சி கண்டவர், 'இங்கே பலர் வருகிறார்; போகிறார். எவரைக் கண்டும் பெரியார் அழுதாரில்லை. இவரைக் கண்டதும் அவருக்கு அழுகை ஏன் பெருகியது?' என்று ஒருவருக்கொருவர் பேசியது என் காதுக் கெட்டியது.

தகவல்: நாகை முருகேசன்

## உலக நாத்திகர் மாநாடு புகழாரம்!

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு இயக்கத்தின் சிறப்பையும், வெற்றியையும் உலக நாத்திகத் தலைவர்கள் வியந்து பாராட்டுகிறார்கள்.

சேலம் கழகத் தோழர் ஆர். வி. ராஜாராம்லிங்கம் அவர்களின் மகன் ஆர். வெங்கடப்பா அவர்கள் அமெரிக்காவில் டாக்டராக பணியாற்றி வருகிறார். ஆஸ்டின் நகரில் உள்ள அமெரிக்க நாத்திக சங்கத்துக்கு அவர் சென்றிருந்தார்.

சங்கத் தலைவியும், நாத்திகத் தத்துவத்தில் தீவிரமாக ஈடுபட்டு பணியாற்றி வருபவருமான திருமதி மாடலின் ஓஹேர் அவர்களை சந்தித்தார். அமெரிக்க நாணயத்தில், 'கடவுளை நம்புவோம்' என்று அரசாங்கம் குறித்துள்ளதை எதிர்த்து இவர் வழக்கு தொடர்ந்தவராவார். திருமதி மாடலின், தந்தை பெரியார் அவர்களின் மகத்தான சேவையை, சந்திக்கச் சென்ற டாக்டரிடம் பெருமையோடு நினைவு கூர்ந்தார்.



அமெரிக்காவில் தல்லாஸ் என்ற இடத்தில் உலக நாத்திகர்கள் மாநாடு ஏப்ரல் 13, 14, 15 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் புதுடில்லியில் உள்ள நாத்திக நிலையத்தின் சார்பாக ஜோசப் எட்மார்க் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்த மாநாட்டில் அவர் பேசுகையில் இந்தியாவின் நாத்திக இயக்கத்தின் தந்தை பெரியார்தான் என்று குறிப்பிட்டார். இவரையும் அமெரிக்க நாத்திக சங்கத்தில் டாக்டர் வெங்கடப்பா சந்தித்துப் பேசினார். டாக்டர் தன்னை பெரியாரின் தொண்டர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டபோது, திருமதி மாட்லின் மிகவும் வியப்படைந்து, பூரித்துப் போனார். திருமதி மாடலின் அவர்களுக்கு தந்தை பெரியார் அவர்களைப்பற்றி நன்கு தெரியும், தந்தை பெரியாரின் கொள்கைகளை அவர் தெளிவாகப் புரிந்தவராவார்.



# ஞாயிறு ஒன்றே ஒன்று!

நெ. து. சுந்தரவடிவேலு எம்.ஏ., எல்.டி.,

வானமண்டலம் விரிந்தது. அதில் கண்சிமிட்டும் தாரகைகள் கணக்கில் அடங்கா. அதில் ஒளிவிடும் ஞாயிறு ஒன்றே ஒன்று.

ஞாலம் விரிந்தது; பரந்தது. அதில் பிறந்து, இருந்து, மறைந்தவர்கள் கணக்கில் அடங்கார். அதில், வாழ்வாங்கு வாழ்ந்து ஒளிவிட்ட ஞாயிறு, தந்தை பெரியார் ஆவார்.

புல், சிறந்த புல்லாக வளரவேண்டும். நாணல், உயர்ந்த நாணலாக வளரவேண்டும். இவற்றின் கொள்ளுப் பேரனாகிய கரும்பு, இனிமை செறிந்ததாக வளரவேண்டும். ஒவ்வோர் உயிர்வகையும் அதன் இயல்பில் சிறந்து இருக்கவேண்டும்.

### அறிவுடைமைக்கு அடையாளம்

அரிமா அஞ்சுமானால், அது அரிமா அல்ல. புல்லைத்தின்றால், அது புலியல்ல. மாந்தர்தம் தனிச்சிறப்பு என்ன? அறிவுடைமை; ஆறாம் அறிவுடைமை; பகுத்தறிவு உடைமை. பகுத்தறிவைப் பயன் படுத்திவாழும் வாழ்வே மக்கள் வாழ்வு. சிந்திக்க அஞ்சுவோன் மனிதனல்ல. காரணகாரியங்களை ஆய்ந்து கண்டு, ஏற்றுக்கொள்ள வேண்டியவற்றை ஏற்றுக் கொள்வதும் தள்ள வேண்டியவற்றைத் தள்ளுவதும் பகுத்தறிவு வாழ்வு ஆகும். தனக்குத்துன்பம் தருவது பிறர்க்கும் துன்பந்தரும் என்பதை உணர்தலே அறிவுடைமைக்கு அடையாளம்.

என்னைச் சிலர் தாழ்வாக நடத்தும் போது, என் உள்ளம் பதைக்கிறது. நான் பிறரைத்தாழ்வாக நடத்தும் போது அவர்கள் நெஞ்சம்பதைக்காதா? இதை உணர்ந்த முழு மனிதர், ஒரு நிலைச் சமுதாயத்தை விரும்புவார்; நாடுவார்; அதற்காகப் பாடுபடுவார்.

உணவு இன்மை, உடை இன்மை, வீடின்மை என்னைத்துன்புறுத்துவது போலவே பிறரையும் வாட்டும், இது இயற்கைப் பொது விதி. எனவே, என்வறுமையை ஓட்ட எவ்வளவு துடிப்பு காட்டுகிறேனோ, அவ்வளவு துடிப்பினை கோடிக்கணக்கானவர்களின் வறுமையை ஓட்டுவதிலும் காட்டவேண்டும். அப்படிச்செய்ய முனையும்போதே, அம்முயற்சியில் எதிர்ப்படும் தொல்லைகளை ஏற்றுக்கொண்டு, சலியாது, தொடர்ந்து போராடும்போதே, ஒருவர் முழு மனிதத்தன்மையைப் பெறுகிறார்.

முழு மனிதத் தன்மையடைந்தோரில் பெரியாராக விளங்குபவர், நம் தந்தை பெரியார் ஆவார்.

பகுத்தறிவுப் பகலவனாக விளங்கிய பெரியார் ராமசாமி, தனிமனிதரல்லர். அவர் ஓர் பேரியக்கம்; புரட்சி இயக்கம்; ஈடுஇணையற்ற தொண்டின் தொடர்மலை.

### உலகப் பெரியாராக வளர்ந்தவர்!

விளையும் பயிர் முளையிலே. சிந்தனைப் புரட்சியில் உலகப் பெரியாராக வளர்ந்த, ஈ. வெ. ராமசாமி, பத்துப் பன்னிரண்டு வயதிலேயே கட்டுக்கடங்காதவராகக் காட்சியளித்தார், சாதிவேற்றுமை அடிப்படையில், இன்னார் வீட்டில் நீர் அருந்தலாம்; எவர் எவர் வீட்டில் நீர் அருந்தக்கூடாது என்பது போன்ற சாதிக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்தார். அந்த சாதியொழிப்புப் புரட்சியில் இருந்து சுரந்தது, பெரியாரின் கருத்து வெள்ளம். அக்கருத்து வெள்ளம், பெரியாரின் நீண்டவாழ்நாள் முழுவதும் வற்றாத சுனையாகப் பொங்கிற்று. அது, சாதி ஒழிப்பு பற்றியே நின்று விட்டதா? இல்லை.

மக்கள் வாழ்க்கையின் பல்வேறு கூறுகள் பற்றியும் பெரியாரின் சிந்தனை, புரட்சிகரமான கருத்துகளைப் பொழிந்தது.

உலகத்தில் வேறெங்கும் இல்லாத தனிக் கொடுமை, நம் இந்தியாவில் மட்டுமே உள்ளது.

சிலவாயிரம் ஆண்டுகளாகப் பிறப்பால் நம்மைப் பிரித்துவைத்து இழிவு படுத்தும் சாதி ஏற்றத் தாழ்வு முறையைக் கரைத்துவிட பெரியார் பட்டபாட்டிற்கு இணை எங்குமே இல்லை. ஆழப்பதித்துத் தழைத்திருக்கும் சாதி என்னும் நச்சுமரத்தின் வேர்கள் எங்கே உள்ளன? இந்து சமயம், சாத்திரம், புராணங்கள், சடங்கு முறைகள், ஆகியவற்றில் ஊன்றியிருப்பதைச் சுட்டிக் காட்டினார் பெரியார்.

கலப்புத்திருமணங்களை ஊக்குவித்து சாதிகள் அற்ற சமுதாயத்தை உருவாக்க, அரைநூற்றாண்டுகளுக்கு மேலாகப்பாடுபட்ட பெருமை, பெரியாரைச்சாரும். பெரியார் கண்ட தன்மான இயக்கத்தின் சார்பிலும் அதற்கு அப்பாலும் நாள்தோறும் கலப்புத் திருமணங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. குறிப்பிடத்தக்க எல்லா சாதிப் பெரிய குடும்பங்களிலும் கலப்புத்திருமணங்கள் தவிர்க்க முடியாதபடி நுழைந்து விட்டன. இருப்பினும் சாதியொழிந்தபாடில்லை. அப்போதைக்கப்போது, சாதி வெறி, இங்கும் அங்கும் தாண்டவமாடக் காண்கிறோம்.

*சாதிக் கோட்டையைத் தகர்க்கும் வீரர்!*

சாதி முறையைக் காக்கும் கோட்டைகள், இந்துக் கோயில்களே. பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகராகலாம் என்னும் நடைமுறை உள்ளவரை, சாதி ஒழியாது. எனவே, பயிற்சியும் தகுதியும் பெற்ற எவரும் அர்ச்சகராகலாம் என்னும் வகையில் வழிபாட்டு முறையை மாற்றும்படி போராடத் திட்டம் தீட்டியவர் பெரியார்.

ஆதாரமில்லாத, கற்பனையில், அச்சத்தில், அறியாமையில் முளைத்த சமய நம்பிக்கையை எந்த அளவிற்கு நாம் கைவிடுகிறோமோ அந்த அளவிற்கே நாம் மனிதர்களாக வளர முடியும்.

இமயம் போன்று உயர்ந்தவை பெரியாரின் சிந்தனைகள். அதன் நீளத்தைப் போன்றே நீண்டது பெரியாரின் பெருந்தொண்டு; புரட்சித் தொண்டு; வன்முறையற்ற தொண்டு.

புரட்சிகரமான கருத்துகளை இருந்த இடத்தில் இருந்தபடியே பேசுவதும் எழுதுவதுமே, பெரும் வம்பை விலைக்கு வாங்குவதாகும். நம் பழம் பெரும் நாட்டில், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக சிந்திப்பதையே மறந்துவிட்ட தற்குறி மக்களிடையே, அடி தெரியக்கலக்கும் புரட்சிக் கருத்துகளை, ஓயாமல், நாள்தோறும் பரப்புவதைவிட, தொல்லையான தொண்டு, ஏதும் இல்லை. அத்தகைய தொண்டினை பெரியார் ஆற்றினார். சிங்கத்தின் குகைக்குள்ளே சென்று அரிமாவைப் பிடித்து உலுக்குவதுபோல், பட்டி தொட்டியெல்லாம் தேடிச் சென்று, சாதிவெறியர்கள் இடையே, மூட நம்பிக்கைக்காரர்களிடையே, முழங்கி, வெற்றி வாகை சூடியவர் நம் பெரியார். அரசியல் விடுதலைக்காக, தமிழ் நாட்டில், பெரியார் ஆற்றிய தொடக்க காலத் தொண்டு அடிப்படையானது; ஆழமானது; உண்மையானது; எனவே, உறுதியானது. அவராலேயே எளிதில் அழிக்க முடியாத அளவு உறுதியானது.

அரசியல் விடுதலைக்காகப் பெருந் தியாகஞ் செய்த பெரியார், சமுதாய உரிமைக்காகச் செய்த தியாகங்கள் பலவாகும். எல்லாச் சாதியாரும் எல்லாப் பொது இடங்களிலும் நடக்கும் உரிமையை நிலை நாட்ட இருமுறை சிறை சென்ற தியாகி ஆவார், வைக்கம் வீரர் ராமசாமி.

*பொதுவுடைமையே பெரியாரின் குறிக்கோள்!*

அரசியல் உரிமை, சமுதாய உரிமைகளோடு முடங்கி விடுவதல்ல, மனிதவாழ்க்கை. பொருளியல் உரிமையும் சேர்ந்ததே நல் வாழ்க்கை. முதலாளித்துவமுறை உள்ளவரை எல்லார்க்கும் வாழ்வு என்பது கானல் நீர் என்பதை பெரியார் உணர்ந்தார், உற்பத்திச் சாதனங்களும் போக்குவரத்துச் சாதனங்களும் நாட்டின் பொதுச்சொத்தாக வேண்டும்; சமதர்ம பொருளியல் முறை உருவாக வேண்டும். இக்குறிக்கோளுக்காக, பெரியார் ஆற்றிய தொண்டும் அம்மா, பெரிது.

சோவியத் நாட்டிற்குச் சென்று வருவதற்கு முன்பே, 1930 இல் ஈரோட்டில் நடந்த இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டிலேயே தன்மான இயக்கத்தின் எதிர்காலப் பணி பணக்காரத் தன்மை ஏழ்மைத் தன்மை என்கிற முறையை ஒழிப்பதாகும் என்று நமக்கெல்லாம் திசை காட்டினார்.

1931 இல் நடந்த விருதுநகர் மாநாட்டில் சமதர்மக் கோட்பாடும் பொது உடைமைக் கொள்கையும் நமக்கு இலட்சியங்கள் என்று முடிவாக முரசு அறையப்பட்டது. அன்று தொட்டு வாழ்நாள் முழுவதும் சமதர்மப் பொது உடைமைச் சமுதாயத்தை உருவாக்கும் இலட்சியத்தை முழங்கிக் கொண்டே இருந்தார். பொது உடைமைப் பிரசாரஞ் செய்ததற்காக, சிறைத் தண்டனை பெற்றவர் பெரியார் என்பதை நினைவு படுத்துவது என் கடமை.

முதல் சுயமரியாதை மாகாண மாநாட்டிலேயே, வழிபாட்டிற்கு தாய்மொழியைப் பயன்படுத்துமாறு முடிவு எடுத்ததைச் சுட்டிக் காட்டவேண்டும்.

தமிழர் எழுச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பெரியாரும் அவருடைய இயக்கமும் வளர்த்த தன்மான உணர்வும் ஆற்றிய தொண்டும் காரணமாக உள்ள அளவு எவரும் எந்த இயக்கமும் இல்லை என்பதை அடக்கத்தோடு குறிக்க வேண்டியதும் என் கடமையாகும்.

சாதிக் கொடுமையினும் பெரிய கொடுமை நம் சமுதாயத்தின் தீய மூச்சாக உள்ள ஆண்—பெண் ஏற்றத் தாழ்வு, ஆண்-பெண் சமத்துவத்திற்குப் பாடுபட்ட பெரியார்களில் பெரியாராக விளங்குபவர், மாமனிதராம் தந்தை பெரியார் ராமசாமி ஆவார்.

*காலத்தை வென்ற பெரியாரின் கருத்துக்கள்*

நம் தந்தை பெரியார் ராமசாமியின் கருத்துகள் புரட்சிகரமானவை, தேவையானவை; நன்மையானவை; அனைவருக்கும் வாழ்வளிப்பவை. அவற்றில் பல, அய்ம்பது ஆண்டுகளுக்குப் பிறகே, அறிவாளிகளாகக் கருதப்படுபவர்களுக்கே புரியும். ஆயினும் அவை காலத்தைவென்று ஒளிவிடும்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நடத்திய கிளர்ச்சிகள் போராட்டங்கள் எண்ணற்றன. அவற்றிற்காக இருபத்தோருமுறை சிறை சென்ற, தன்னேரில்லாத தியாகப் பேரொளி, உலகப் பெரியார் ராமசாமி. எப்போதும் எங்கேயும் வன்முறைக்கு இடங்கொடாது அத்தனைப் போராட்டங்களையும் நடத்திய வெற்றிவீரர் தந்தை பெரியாருக்கு இணை அவரே ஆவார்.

தமிழர்கள் இன்று தலை நிமிர்ந்து நடப்பது பெரியாரால்; அவர்களின் கல்விக் கண் திறக்கப்பட்டது பெரியாரின் பாட்டால்; அவர்கள் நாடாள உயர்ந்திருப்பது பெரியாரின் நீண்ட தொண்டால்; அவர்களில் பலர், பெரும் பதவிகளில் இருப்பது பெரியாரின் தொடர் போராட்டங்களால்,

பெரியாரின்குறிக்கோள்களாகியசாதியற்ற சமுதாயம், சமதர்ம சமுதாயம், அறிவு வழி இயங்கும் சமுதாயம், இன்னும் உருவாகவில்லை. அவற்றிற்கான பணிகளைத் தொடர்ந்து, ஆற்றுவது, நம் தலையாய கடமை. நம் வழித் தோன்றல்களுக்குச் செய்ய வேண்டிய கடமை.

எனவே, பெரியார் வழி நடக்க, அயராது நடக்க, உறுதி கொள்வோம். எல்லோரும் ஒன்றாக, நன்றாக வாழும் நிலையை எட்டிப் பிடிக்கப் பாடுபடுவோம். அதற்கான விலை கொடுக்க முன் வருவோம். *

## 34 ஆண்டுகளுக்கு முன் . . .

7-1-45 ஞாயிறன்று மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் மாணவர்களல்லாத தோழர்கள் மு. இராமலிங்கம், அய்யாத்துரைத்தேவர், கிருபானந்தவாரி, ஏ.எஸ்.பி. அய்யர், கிருஷ்ணசாமி பாரதி முதலியோர் மட்டுமே பங்கெடுத்துக் கொண்ட "தமிழ் நாட்டு மாணவர் (?) மாநாடு" கூடியது.

மதுரைக்கல்லூரித் தோழர் கதிரேசனை "தோழர் மு. கதிரேசன் செட்டியார்" தலைவரென்றும், அமெரிக்கன் கல்லூரித் தோழர் க. இரா. சத்தியேந்திரன் "செயலாளரென்றும்" அவர்களின் ஒப்புமையின்றியே விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

தோழர் ஏ. எஸ். பி. அய்யர் தான் ஒரு தமிழனல்ல என்றும், மாணவர்கட்குச் சம்மந்தமற்ற ஓரிரு சொற்களைப் புகன்று விட்டுப் புறப்பட்டு விட்டார், மாநாட்டிலிருந்து. பிறகு வந்த வாரியார், "மெய்யன்பர்களே, அடியேன் ஆடி வீதியிற் சொன்னவாறு" என்று துவங்கி காலக்ஷேபம் தொடங்க, கூட்டத்திலே கலவரத்தின் அறிகுறி தென்பட, விரைவில் முடித்துக்கொண்டு வெளியேறி விட்டார்.

திராவிட மாணவர்கழகச்செயலாளர் க. இரா. சத்தியேந்திரன், தமிழ்ப்பண்புகளைச் சிதைக்கும் வாரியார், ஏ. எஸ். பி. அய்யர் போன்றாருக்கும் இந்த மேடை இடங்கொடுத்த விந்தையைச் சுட்டிக் காட்டி, அது தமிழன் இன்னும் தன் மானமற்றிருப்பதையே காட்டுகிறதென்று விளக்கினார். இன்னோரன்ன மாநாடுகளை மாணவர்கள் பெயரால் கூட்டிய மாநாட்டைப் பாழாக்குவதோடு மட்டுமல்லாமல் சொல் வாதத்தில் இறங்கி இருக்கும் சோக மிக்க நிலைக்கு வருந்தினார். நாட்டின் நைந்த நிலையைப்போக்குவதற்கு ஆக்கமளிக்கக்கூடிய ஒரே சொல்லாகிய 'திராவிடர்' என்ற சொல்லைப் பற்றிய வாதத்தை எழுப்புவது காலக்கொலைஎன்று காட்டினார். இந்தமாநாட்டைக்கூட்டியவர்கள், திராவிடர் இயக்கத்தைசொல்லாமற் சொல்லிநையாண்டி செய்ய முயன்றதைச் சாடினார், சரியான காரணங்காட்டி, இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதன் தவறை நன்றாக எடுத்துக் காட்டி அமரவே, மாநாட்டிலே தீர்மானம் வாபஸ் வாங்கப்பட்டது.

பெயர்களுக்குப் பின்னால் சாதியைக் குறிக்கக் கூடிய பட்டங்களை நீக்கிவிட வேண்டுமென்ற தீர்மானம் பின்னர் நிறைவேற்றப்பட்டது.



கருவை இராவண ஒன்னான்

பாராண்ட மன்னர்க்கும் நூறாண்டு நோன்பில்லை
ஓராண்டு பூராவும் உன்விழாவே—ஓராளாய்
ஊரார் வாழ உழைத்துச் சென்ற எம்
சீராளா உன்கொள்கை வாழி.

தொலை பேசி : 1167

கிணறுகளில் பக்கத்துளை, நேர்த்துளை
போட சிறந்த இடம்.



**சங்கர காசி வாட்டர் டிரில்லர்ஸ்,**

55, திண்டுக்கல் ரோடு,
(லைட்ஹவுஸ் கீழ்புரம்)
கரூர்-639 001 : தமிழ்நாடு



கூட்டுறவே நாட்டுயர்வு!

**திருத்துறைப்பூண்டி கூட்டுறவு நகர வங்கி லிட்., செ. 603**

திருத்துறைப்பூண்டி

தலைவர் : திரு. என். எஸ். இராமலிங்கம் பி ஏ , (Dip. in Pol. & Pub. Admn.)

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பெற்ற மூலதனம் (Authorised Share Capital) | ரூ. | 6,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (Paidup Share Capital) | ,, | 2,96,670 |
| பாங்கியின் ஷேம நிதி (Reserve Fund) | ,, | 2,28,175 |
| இதர நிதிகள் (Other Reserves) | ,, | 2,25,842 |
| அலுவல் நிதி (Working Capital) | ,, | 29,12,970 |
| டெபாசிட் (Deposits) | ,, | 20,03,295 |
| கடன் நிலுவை (Loans Outstanding) | ,, | 24,04,506 |

30-6-79 முடிய உள்ள ஆண்டின் மொத்த வரவு செலவு
ஒன்றரை கோடி ரூபாய்க்கு மேலாகிறது.

கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்சட் டிபாசிட்டுகள் பெற்றுக்கொள்ளப்படும்

| | |
|---|---|
| 91 தினங்களுக்கும் மேலும் | 5% |
| 6 மாதம் முதல் 8 மாதம் வரை | 5½% |
| 9 மாதம் முதல் 11 மாதம் வரை | 6% |
| 12 மாதம் முதல் 35 மாதம் வரை | 7% |
| 36 மாதம் முதல் 60 மாதம் வரை | 8½% |
| 61 மாதமும் மேலும் | 10% |

கரண்ட், சேவிங்ஸ், தினசரி டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட், ரொக்க சான்றிதழ்,
திருமண சேமிப்புத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும்.
20,000க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பாங்கியின்மூலம் பயனடைகின்றனர்.
எங்கள் சேவை மேலும் விரிவடைய பொதுமக்கள் ஆதரவையும்,
ஒத்துழைப்பையும் கோருகிறோம்.
மக்கள் தேவைக்கேற்ற சேவையே எங்கள் குறிக்கோள்.
ஏனைய விபரங்களுக்கு பாங்கிற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

வி. கணபதி பி. ஏ., காரியதரிசி


# திரிபுவாதங்கள்

— என். எஸ். சம்பந்தம் —

தந்தை பெரியார் அவர்கள் மறைந்து ஆறு ஆண்டுகள் ஆகியுள்ளன. ஆனால், அறுபது ஆண்டுக்காலம் கடந்துவிட்டதைப் போலவும், அய்யா அவர்களின் அணுக்கத் தொண்டர்கள் பலர் உயிரோடிருக்கும்போதே தந்தை பெரியார் அவர்களின் தத்துவங்களுக்கு புது வியாக்கியானங்களும் விளக்கங்களும் கொடுத்து, மக்களைத் திசை திருப்பும் முயற்சி யில் ஆட்சியில் உள்ளவர்களும் மற்றவர்களும் ஈடுபட்டிருப்பது விந்தைக்குரியதாயிருக்கிறது.

தந்தை பெரியார் அவர்களைப் பொறுத்த வரை அவருடைய எதிரிகள் இரண்டு முறை களைக் கையாண்டு தோல்வியுற்றார்கள். முதலில் எதிர்த்தார்கள். முடியவில்லை. பிறகு சட்டை செய்யாமலிருப்பதாகக் காட்டிக் கொண் டார்கள். அதிலும் பலனில்லாமல், அவருடைய கொள்கைகள் மூலை முடுக்கெல்லாம் பரவின. அவர் இல்லாமல் இருக்கும் இப்போது அவரு டைய கொள்கைகளுக்கு எதிரிகளாயிருப்பவர் கள் ஊடுருவல் செய்து, அவர் வாழ்நாள் எல்லாம் எந்தத்தத்துவங்களுக்காகப் போராடி வந்தாரோ அவைகளையே அழிக்கப்புகுந்திருக் கிறார்கள்.

இப்போது தமிழ்நாட்டை ஆண்டு வரும் அ. இ. அ. தி. மு. க. அரசு, தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை நாடு முழுவ தும் கொண்டாடி வருகிறது. தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்த அரசு கொண்டாடி வருவதும், தந்தை பெரியார் அவர்களின் பெயரை, கல்வி நிலையங்களுக்கும், புது மாவட்டத்துக்கும் வைப்பதன் மூலமே அவருடைய கொள்கைகளுக்கு வலுவூட்டிய தாக ஆகிவிடுமா? தந்தை பெரியார் அவர் களுக்கு நூற்றாண்டுவிழா அரசு கொண்டாடு வது காலத்தின் கட்டாயமே தவிர இந்த அரசுக்கு தந்தை பெரியார் அவர்களின் கொள்கைமேல் இருக்கும் பற்று காரணமாக அல்ல.

## தமிழக முதல்வரின் திரிபுவாதம்!

''கடவுளே இல்லை என்று சொன்ன பெரியார், அனைத்து ஜாதியினரும் அர்ச்சக ராகலாம் என எப்படிச் சொல்லியிருப்பார்? என்னால் நம்ப முடியவில்லை.''

''பெண்ணுக்குத்தான் தாலி கட்ட வேண் டுமே தவிர, சம உரிமை காரணமாக பெண், ஆணுக்குத் தாலி கட்டுவதை, பெரியாரே சொல்லியிருந்தாலும் அனுமதிக்க மாட்டேன்''

''பெரியார் புதிதாக எந்தக் கொள்கையை யும் சொல்லிவிடவில்லை. அந்தக் காலத்தில் சாருவாக மதம் என்று ஒன்று இருந்தது. அதைத்தான் பெரியார் சொன்னார்.''

''பொருளாதார முன்னேற்றம் வந்து விட்டால் படிப்பு தானாக வந்துவிடும். சமுதா யத்திலும், கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட தன்மை என்பதை பெரியார் ஒப்புக்கொள்ள வில்லை. பெரியாரின் கருத்தையே சட்டமாக்கி யுள்ளேன்.''

மேற்கூறியவை அனைத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் பல்வேறு சந்தர்ப்பங்களில்



கூறியவை. அமைச்சர் பெருமக்கள், மற்ற பிரமுகர்கள் பலர் பேசியவைகளைச் சிலவற்றை யும் கீழே தருகிறேன்.

'பெரியார் ஆளும் கட்சியை அணைத்தே தன் இயக்கத்தை நடத்தி வந்தார்.'

'நான் ஈரோட்டுப் பள்ளியிலும், காஞ்சிக் கல்லூரியிலும் பயின்றவன்.'

''பெரியார் மது விலக்கை உயிராக மதித்தார்''

''பெரியார் என்று ஒருவர் இருந்தார். அவரை உங்களுக்கு நினைவிருக்கும். அவருக்கு 95 வயது வரை பற்கள் விழாமல் இருந்தன, நான் அவரை அருகிலிருந்து பார்த்தவன்.''

''பெரியார் உயிருடன் இருந்த போதே அ. இ. அ. தி. மு. க.வை ஆதரித்தார். இன்று இருந்திருந்தாலும் ஆதரித்திருப்பார்.''

இப்படிப்பல கருத்துக்களை முத்தாக உதிர்க்கிறார்கள். அய்யா அவர்கள் பேசியவை அனைத்தும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. எழுதிய எழுத்துக்கள் அத்தனையும் நூல்களாக வெளிவந்துள்ளன. தந்தை பெரியாரோடு நீண்ட நெடுங்காலமாக உடனிருந்த தொண்டர்கள் பலர் உயிருடன் உள்ளனர். இப்படிப் பேசுபவர்களின் ஒவ்வொரு கருத்துக்கும் நாம் பதில் சொல்லத்தான் வேண்டுமா? சாருவாகத்தையும் படிக்காமல், பெரியாரையும் படிக்காமல் பேசுகிறவர்களுக்கு நாம் எப்படி பதில் எழுத இயலும்? அவருடைய எழுத்துக்களைத் தவிர அவருடைய பேச்சுக்கள் ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. அய்யா அவர்களின் எழுத்தும் பேச்சும் குழப்பமாகவோ, இருபொருள்படும்படியோ இருந்ததில்லை. இவ்வளவு இருந்தும் அய்யா அவர்களின் கருத்துக்களை மாற்றிப் பேசுவானேன்? அவர்களிடம் ஆட்சி இருக்கிறது. விளம்பர சாதனங்கள் இருக்கின்றன. பேசுகிறார்கள். தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்கள் அழிக்கப்பட வேண்டும் என ஆர்ப்பரிக்கும் கூட்டம் அதற்கு விளம்பரங்கள் கொடுக்கின்றன.

*சுயமரியாதைக்காரனுக்கு ஈரோடே எல்லாம்!*

ஈரோட்டுப்பள்ளி, காஞ்சிக் கல்லூரி என்பதெல்லாம் என்ன? இவர்கள் சொல்லும் காஞ்சிக் கல்லூரியின் முதல்வரான பேரறிஞர் அண்ணா அவர்களே, தந்தை பெரியார் அவர்களை, தமிழகத்தின் முதல் பேராசிரியர் எனக்குறிப்பிட்டுள்ளார். உண்மையான சுயமரியாதைக்காரனுக்கு, ஈரோடுதான் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் எல்லாம்.

தந்தை பெரியார் அவர்கள் நடைமுறைப் படுத்திவந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அரசு ஏற்றுக் கொண்ட போது நாம் உளமார வரவேற்று இந்த அரசைப்பாராட்டினோம். யாரோ இருபுலவர்கள் எழுத்துச்சீர்திருத்தத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் எதிர்த்தார்கள் என்பதற்காக 'அய், அவ்,' என்ற இரு எழுத்துக்களையும் பழைய மாதிரியே எழுதலாம் என மறு உத்திரவு போடப்பட்டது. இது தந்தை பெரியார் அவர்கள் செய்த எழுத்துச்சீர்திருத்தமா? அரசு செய்யும் எழுத்து சீர்திருத்தமா? நமக்குத் தெரியவில்லை.

தந்தை பெரியார் அவர்களைப் பொறுத்தவரை அவர் கொள்கைகளை பரப்பினார். தன்னுடைய எண்ணங்கள் ஆளும் கட்சிகளின் மூலம் நிறைவேற, வாய்ப்பு இருந்தால் பயன்படுத்திக் கொண்டார். தன் கொள்கைகளுக்கு எதிராக அரசில் இருப்போர் நடக்கும் போது பெரும் போராட்டங்கள் நடத்தினார். அவருடைய வரலாற்றை படிப்போருக்கு இந்த உண்மைகள் தெரியும். அவரையா ஆளும் கட்சிகளை அணைத்தே தன்கழகத்தை நடத்தினார் எனக்கூறுவது? தன் கொள்கைகளுக்கு ஊறு ஏற்படாதவரை எந்த ஆட்சியையும் ஆதரித்தே வருவார். பெருந்தலைவர் காமராஜரை ஆதரித்தபோது, அரசியல் சட்டத்தை எரித்து கழகத்தவர்கள் பல்லாயிரவர் சிறை சென்றனர். கலைஞர் ஆட்சிக் காலத்தில், இராவணலீலா நடத்தி அம்மா அவர்கள் வழக்கை சந்திக்க நேர்ந்தது.

*நமது கருவூலம்*

ஒருமுறை தந்தை பெரியார் அவர்களை, ''தங்களுக்குப்பிறகு யார்?'' எனக் கேட்ட போது, 'என் கொள்கைகளே' எனப் பதிலிறுத்தார். அதுதான் நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கருவூலங்கள்.

அய்யாவின் கொள்கைகளை மாற்றி பேசும் திரிபுவாதங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தந்தை பெரியார் அவர்களுக்கு ஆண்டு விழாக்கள் கொண்டாடி, அய்யா அவர்களின் கொள்கைகளை குழிதோண்டிப் புதைக்கும் பணி நடைபெறுகின்றன.

இதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கல்லவா உண்டு. *





# தமிழகத்தின் நல்வாழ்வுக்கான ஒளி!

பெரியார் பேருரையாளர் ந. இராமநாதன் M.A., B.O.L.

1978 செப்டம்பர் 17ஆம் நாள் தொடங்கி 1979 செப்டம்பர் 17ஆம் நாள் முடிய தந்தை பெரியார் அவர்களின் நூறாவது ஆண்டு நிறைவு பெறுகின்றது. இந்த நூறாவது ஆண்டின் நிறைவில் நம் மதிப்பிற்குரிய அய்யா அவர்களின் அறுபது ஆண்டுகட்கும் மேலான தன்னலம் கருதாது ஓய்வு ஒழிவு இல்லாமல் முடுக்கி விட்ட இயந்திரத்தைப் போலத் தொடர்ந்து மனித இனம் உய்யும் வகையில் அவர் ஆற்றிய தொண்டுகள் நினைவிற்கு வருகின்றன. அவ்வப்போது அரசியலாரும் பொதுமக்களும் அவருக்குக் கொடுத்த எதிர்ப்புக்களும் அந்த எதிர்ப்புக்களைத் துச்சமெனக் கடந்து வென்று விளங்கிய அவருடைய உளத் திண்மையும் உரையின் வன்மையும் நம் உளக் கண்முன் பளிச்சிடுகின்றன. இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நமக்கு அவர்கள் உரையினைப் படிக்கின்றபோது கருத்துக்களின் வன்மையில் சூழ் நிலைகளில் மட்டும் புலனாகவில்லை. அவரை நம்முடன் நேராகப் பேசுவதுபோலவே உணர்கின்றோம். நம் முன்னே தண்டூன்றி மிடுக்கோடு நடந்துவரும் தோற்றம் தெரிகின்றது. பற்றுக் கோடாகப் புலவர் இமயவரம்பனார் தோளில் கையைப் போட்டுக் கொண்டு தள்ளாடி வரும் தோற்றம் தெரிகின்றது. உண்மையில் நமக்குப் பெரியார் இறக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

*பெரியார் இருந்திருந்தால்...*

நாம் இதுகாறும் அதாவது கடந்த அய்ந்தாண்டுகளாகச் செய்த சிறு சிறு செயல்களையும் செய்யப்போகும் செயல்களையும் இதன் முழுமையான பயன்களையும் அவர் வாழ்ந்த ஒரு மணிக்காலப் பயன்களின் அளவோடு ஒப்பிட்டுச் சொல்ல இயலுமா? அந்த மாமனிதர் பேச வேண்டாம். அவர் இங்கும் அங்கும் மற்றவர் உதவியோடு உலாவவேண்டாம், அவர் மூச்சு மட்டும் ஓடிக் கொண்டிருக்கின்றது. படுக்கையில் படுத்தபடியே சென்னையில் பெரியார் திடலில் அல்லது திருச்சியில் அவர் மாளிகையில் இருக்கிறார் என்ற ஒன்றே நம் நாட்டில் நம்மவர்மீது விழுந்த மாபெருங் கேட்டையெல்லாம் ஒழித்திருக்குமே! எண்ணுங்கள்! கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டிருக்குமா? பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணா வழியில் வந்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழக அரசு—பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், காமராசரும், கலைஞரும் கண்ணை இமைகாப்பதுபோலக் காத்துவந்த வகுப்புவழி உரிமை என்னும் கம்யூனல் ஜி. ஒ நம் கண்முன்னே குற்றுயிரும் கொலையுயிருமாகச் சிதைக்கப்பட்டு உரு விழந்து இப்போது கிடப்பது போலக் கிடக்குமா? பெரியார் கூறியது போலப் ''பதவி பெறவும், பணம் பெறவும், பெரிய ஆள் ஆகவும் தன்னுடைய இழிவை மறைத்துக் கொள்ளவும்'' கட்சி மாறி—கொள்கைகளை மாற்றிக் கொண்டு குதர்க்கம் பேசும் இனத் துரோகக் கும்பல் இந்த நாட்டில் எழுந்துலவ முடியுமா? பெரியார் குடும்பத்தைக் கேலியோ கிண்டலோ செய்ய தமிழ்நாட்டில் கனவாவது கண்டிருப்பானா? திருச்சியில் பெரியாருக்கு எதிராக வாதாடிய அரசாங்க வக்கீல் பட்டபாட்டை எண்ணுங்கள்! இவைகளை இப்படிச் செய்யுங்கள் என்று அய்யா கூறியா செய்தார்கள்? இல்லையே! அய்யாவுக்கு இத்தகைய கொள்கைகள் உடன்பாடல்லவே! மற்றபடி என்ன? அவர் மூச்சு ஓடிக் கொண்டிருந்தது. அவர் தட்டுத்தடுமாறி முக்கி முனகிக் கொண்டு தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் முழங்கிக் கொண்டிருந்தார். அந்த முழக்கம் எல்லோர் காதிலும் கேட்டது! கயவர் காதிலும் கேட்டது; ஆதிக்கவாதிகள் வாழும் அனைத்திந்தியாவிலும் கேட்டதே!

*நமது பொதுச் செயலாளரும் — கலைஞரும்*

நாமும் ஒய்ந்து கிடக்கவில்லை. நம் மதிப்பிற்குரிய பொதுச் செயலாளரும், டாக்டர் கலைஞரும், உண்மைத் திராவிட இயக்கத்தினரும் உடனடியாக என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவையெல்லாவற்றையும் ஒழி

வில்லாமல் செய்து கொண்டு தான் இருக்கின்றோம். ஆயினும் என்ன? பெரியாரின் மூச்சுக் காற்றுக்கு இருந்த ஆற்றல் நம்மனைவர் முயற்சிக்கும் இல்லையே! இப்போது பெரியாரை எண்ணுங்கள்! அவர் ஆற்றலை எண்ணுங்கள்!

ஆயினும் நண்பர்களே! என்னுடைய உள்ளத்துக்கு இருள் சூழ்ந்த இச் சூழ்நிலையிலும் ஒரு ஒளி தோன்றுகின்றது, அது என்ன? பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் அரசியலிலும் சமுதாயத்திலும் அடையாளம் காணத் திராவிட இனத்துக்கு நீண்ட காலம் பிடித்தது. நீண்டகாலத்துக்குப் பிறகு நம் மதிப்பிற்குரிய அய்யாவையும், அண்ணாவையும் அடையாளம் கண்டு தெளிந்து கொண்டனர். நம்மதிப்பிற்குரிய அய்யா அவர்கள் எங்குச் சென்றாலும் எதை விரும்பினாலும் திராவிட இனமே ஒன்று திரண்டு அவருக்கு வேண்டியதை வழங்க அவர் விரும்பியதைச் செய்யக் காத்துக் கொண்டிருந்தது. பேரறிஞர் அண்ணாவை ஆட்சி செய்யும் அரியணையில் ஏற்றி மகிழ்ந்தது. இவர் ஆட்சியில் நமக்குக் கிடைக்க வேண்டிய பலன்கள் முழுவதையும் நாமடையவில்லை. நீண்ட காலப் போராட்டத்துக்குப் பிறகும் அடையவேண்டிய பயனை பேரறிஞர் அண்ணாவின் அரசுக்கு முன்னர் இருந்த அரசால் நாம் அடைய முடியவில்லை. ஆனால், அண்ணா அரசேறிய ஒரு சில மாதங்களில் அக்குறிக்கோள்கள் மளமளவென்று நிறைவேறிய எளிமையைக் கண்டு மகிழ்ந்தோம்.

*அந்த ஒளி யாது?*

அண்ணா மறைந்தார். அரசியலில் புயல் எழுந்தது. அய்யா அவர்கள் இருந்தது ஆறுதலாக அமைந்தது. அடுத்தத் தலைவர் யார் என்று அய்யா காட்டினார். கலைஞர் தலைமையில் ஆட்சி சீரும் சிறப்புமாக நடந்தது. சென்னையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேருரை நிகழ்த்திய அய்யா அவர்கள் யாரும் எதிர்பாராத நிலையில் திடுமென மறைந்து விட்டார்கள். அதற்குப்பிறகு வரவேண்டிய கெடுதிகள் என்னென்ன உண்டோ அவையெல்லாம் முறையாக வந்துவிட்டன. வந்த கெடுதிகள் எல்லாவற்றிலும் பெரிய கெடுதி இப்போது கேள்போல் பகையாக விளங்கும் தமிழக அரசு தான் என்பதைத் தமிழ் மக்கள் இப்போது உணர்ந்து விட்டனர். அவர்கள் உண்மையை உணரக் கொஞ்ச காலம் வேண்டுமல்லவா! பதவிக்கும், பணத்துக்கும், பெரிய ஆள் ஆகவும், தனக்கு ஏற்பட்ட இழிவை மறைத்துக் கொள்ளவும் இனத் துரோகிகளான கோடரிக்காம்புகள் பேசுகிற பேச்சும் எழுதுகிற எழுத்தும், மக்களை உண்மையை அறிய விடாமல் அலைக் கழித்து விட்டன. இத்தகைய துரோகிகளின் உண்மை வடிவத்தை மக்கள் இப்போது நன்கு புரிந்துகொண்டனர்.

ஆயினும், இப்போதுள்ள இருள் சூழ்ந்த சூழ்நிலையில் ஒளி தோன்றுவதாகக் குறிப்பிட்டேன். அந்த ஒளி திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் வீரமணி - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி இருவரும் இணைந்து செயல்படும் பாங்கில்தான் தோன்றுகின்றது. பெரியாரும்—அண்ணாவும், பெரியாரும்—கலைஞரும் இணைந்து செயல்பட்டது போல நமது பொதுச் செயலாளரும்—கலைஞரும் இணைந்து செயல்படும் பாங்கில்தான் தமிழின மக்களின் ஏன் திராவிட மக்களின் எதிர்காலம் கட்டுண்டு கிடக்கின்றது. எத்தகைய காரணங்கொண்டும் இணைந்து செயல்படும் பாங்கைக் குலைத்து



விடலாகாது. நம் மதிப்பிற்குரிய பொதுச் செயலாளர் அவர்கள் அய்யா அவர்களின் உணர்வுகளை செயல் திறத்தை முழுமையாகக் கொண்டு விளங்குகின்றார்கள். உண்டு-உறங்கி—உடுத்துச் சுகமாக வாழ்க்கையை நடத்திக் கொள்ளுதற்கு வேண்டிய செல்வத்தைப் பல வகையில் பெற்றிருந்தாலும், ஏழை—எளியவர் போலச் செல்லுமிடங்களில் கிடைத்தவற்றை உண்டு வாய்த்த இடத்தில் உறங்கி எளிமையான ஆடைகளை உடுத்திக்கொண்டு சிக்கனமாக வாழ்ந்து செயற்கருஞ் செயல்களைச்செய்து ஊருக்கும் உலகுக்கும் நாட்டுக்குமே நல்ல வழிகாட்டியாகப் பெரியார் விளங்கினார். அவரியல்பை அப்படியே மேற்கொண்டு ஊண் உறக்கம்பாராது ஓய்வு ஒழிவு இல்லாமல் ஊரைச் சுற்றி உரையாற்றிக்கொண்டு வரும் நம் பொதுச் செயலாளரின் தொண்டு வழிவழியாகத் தமிழகத்துக்கு அமைந்த பாங்கினைக் கடந்த ஓராண்டாக நெருக்கமாக இருந்து கண்டு இறும்பூது எய்துகின்றேன்.

✲





# பெரியாரே பெரியார்!

சங்கமித்ரா

தந்தை பெரியார் அவர்கள்—சிந்தனையாளர் வரிசையில் உலகத்துப் பெரியார்களுள் பெரியாராய் திகழுகின்றார். அவர் எழுப்பிய விடுதலை முழக்கம்—உலக மானிடத்தினுள்—மிகப் பெரிய எண்ணிக்கையான மக்கட்தொகைக்கு பலன் தருவதாகவும்—மிகவும் கொடியதான சமுதாயச் சுரண்டலுக்கு முடிவு காண்பதாகவும் அமைந்தது. இந்தியாவின் நாற்பது கோடி இந்துக்கள்—மதம் என்ற கூடாரத்திற்குள் அகப்பட்டு பார்ப்பனர்களால் சகிக்கமுடியாத கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதை—உலகில் புதிதாக மலர்ந்த சிந்தனைகளோ—புரட்சிகளோ, எதுவும் செய்ய முடியாமல் இருந்தது. ஏன் என்றால், இந்திய பார்ப்பனர்கள்—இதை மதத்தில் தலையீடு என்று கூக்குரலிட்டு தடுத்து வந்தார்கள்.

*சமத்துவத்தை கெடுக்க—மதம்*
*சாதியை பாதுகாக்க—கோவில்*

பார்ப்பனர்கள் மிகவும் திட்டமிட்ட செயலாக—மனித சமத்துவத்தைக் கெடுக்கின்ற அவ்வளவு ஏற்பாடுகளையும்—மதம் என்ற போர்வையில் மூடிவைத்திருந்தார்கள். இந்தியாவின் சாதி அமைப்பும், அதில் பார்ப்பான் மேல்சாதியாக இருந்ததும்—கடவுள் செய்த ஏற்பாடு என்று சொல்லி, பார்ப்பனர்கள் பிரசாரம் செய்து நிலைநாட்டியிருந்தார்கள். சாதியை ஒழிக்கின்ற எந்தத்திட்டமும், கீழ்சாதி மக்களுக்கு சமமான அந்தஸ்து அளிக்கின்ற எந்த ஏற்பாடும்—இதனால் மதத்தில் தலையீடு என்று பார்ப்பனர்களால்—சொல்ல முடிந்தது. அதே போல, பார்ப்பான்—தனி சாதி என்பதையும், உயர்சாதி என்பதையும் பார்ப்பனர்கள்—கோவிலின் கர்ப்பக்கிரகத்தில் நிலைநாட்டி விட்டார்கள். கோவிலில் மற்ற மதத்தினர் நுழைய முடியாதபடியும், கர்ப்பக் கிரகத்தில் மற்ற சாதியினர் நுழைய முடியாதபடியும், இந்த ஏற்பாடுகளில் அரசு தலையிட முடியாதபடியும் அதைப் பாதுகாப்பாக செய்து விட்டார்கள். அரசு, உலக நிறுவனங்கள், பெரும்பான்மை மக்கள்—ஆகிய எந்தச் சக்தியும் பார்க்கவும்—பரிசீலிக்கவும் முடியாத வகையில் பார்ப்பனர்கள் இப்படி தங்கள் மதத்தையும் சாதியையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

*ஒரு சுரண்டல் கூடாரத்தின் நடுத்தூண்!*

பார்ப்பனர்களைப் பொறுத்தவரை கடவுள்—என்பது ஒரு மாபெரும் சுரண்டல் கூடாரத்தின் நடுத்தூண் என்றால் அது மிகை இல்லை. கடவுளின் பேரால் மதமும், கடவுளின் பேரால் உயர்சாதித்தன்மையும்—அவர்கள் பெற்றது மட்டும் அல்ல, இதே அமைப்பின் காரணமாகவே—பெரும்பான்மை மக்கள்—உரிமை மறுக்கப் பட்டவர்களாகவும், பொருளாதார லாபங்களில் பங்கீட்டிற்கு அருகதை அற்றவர்களாகவும் ஆனார்கள். பார்ப்பனர் அமைப்பில்—கடவுள்—கடவுளைச்சுற்றி பார்ப்பனர்கள்—பார்ப்பனர்களுக்குப்பிறகு மற்ற சாதிகள்—பிறகு இழிந்த சாதிகள்—கடைசியில் தீண்டப்படாதவர்கள் என்று அமைந்த இந்த முழு ஏற்பாடே இந்து மதம். மைய ஏற்பாடு பொய்யான கடவுள்—என்றதால்—இதைச்சார்ந்து பின்னப்பட்ட சகல ஏற்பாடுகளும் பொய்களாகவே அமைந்தன. ஒரு பொய் ஏற்பாட்டை பாதுகாக்க மேலும் மேலும் பொய்யான ஏற்பாடுகளாக பார்ப்பனர்கள் செய்யவேண்டி வந்தது. கடவுளுக்கும் தெய்வமானவர்கள்—பார்ப்பனர்கள்; நான்கு சாதிகளும் கடவுள் செய்ததே; சாதியினர் அவரவர் தொழில்களைச் செய்வதே தருமம்; ஒவ்வொருவரும் தங்கள் சாதிப்படி தொழில்களையும் அதனால் கிடைக்கும் லாபங்களையும்—கடவுள்காணிக்கையாக—கடவுள் இஷ்டவிதியாக நினைத்துச் செய்ய வேண்டும்—என்று இந்த ஏற்பாட்டோடு, கல்வியை கற்பதும், கற்பிப்பதும் பார்ப்பனர் தொழிலாக ஆனது-அறிவு வாசலில் பார்ப்பனர் அமர்ந்து கொள்ள வழி செய்தது. இந்தச் சுரண்டல் ஏற்பாடுகளை ஆதரித்து எழுதப்பட்ட மனு நீதி—மகத்தான நீதிநூலாகவும், இவைகளை விளக்கப்படுத்தி எழுதிய மகாபாரதமும்—ராமா

யணமும், கீதையும்—பவித்திரமான இதிகாசங்களாகவும் பார்ப்பனர்களால் பிரசாரம் செய்யப்பட்டது. இவைகளின்படி ஆளுகின்ற ஆட்சிகளைப் பாராட்டி பாதுகாக்கப் படவும்—இவைகளுக்கு எதிரான ஆட்சிகள் தூற்றி ஒழிக்கப்படவுமான—சரித்திரத்தை பார்ப்பனர்கள் வளர்த்துக் கொண்டார்கள்.

### கண்ணுக்குத் தெரியாத பொய்மை மலை கருத்துக்கு உறைக்காத சுரண்டல்வலை

பார்ப்பனர்களின் இந்த அமைப்பு—மலை போல குவிந்து கிடந்தும் அது கண்ணுக்குத் தெரியாமல் இருந்தது. கடவுள் என்ற பொய்—அது தொடர்பான ஆத்மா, மோட்சம், பிதிர்லோகம், திதி, திவஷம், பேய், பிசாசு, பில்லி சூனியம், நாள், நட்சத்திரம், சடங்கு சம்பரதாயம், ஜாதகம், சோசியம், யாகம், யக்ஞம், ஓமகுண்டம், சுப்பரபாதம், சகஸ்ரநாமம்—என்று கோடிக்கணக்கான பொய்கள்—நூற்றுக் கணக்கான துறைகளாகப் பிரிந்து பார்ப்பனர்கள்—உடல் உழைப்பு இல்லாமல் சாப்பிட வழி செய்தது. சாதி என்ற பொய்—தருமம் என்ற பொய், சாதிக்கு ஒரு தொழில் என்ற ஏற்பாடு, எல்லாமே கடவுள் கடமை—என்ற பொய்—பெரும்பான்மை மக்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆட்படவும், பார்ப்பனர்கள் மட்டுமே பொருளாதாரப் பாதுகாப்புப் பெறவுமான வழியைச் செய்தது. கல்வி கற்கவும், கற்பிக்கவும்-பார்ப்பனர்களுக்கு வருணாச்சிரம நீதியில் அமைந்த கடமை—அவர்கள் அறிவு வாயிலில் அமர்ந்து புதிய லாபங்களையும்—புதிய அமுக்கப்பட்ட சாதிகள் புரட்சியில் குதித்துவிடாத பாதுகாப்பினை தருவதாகவும் ஒரே சமயம் பயன்பட்டது.

இப்படி நாலா பக்கங்களிலும் பரந்து விரிந்துக் கிடந்தாலும் பார்ப்பனச் சுரண்டல் வலை-பெரும்பான்மை மக்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் பிடிபடாமலே இருந்தது. புரட்சியில் குதித்த ஓரிரு அரசர்களும் தலைவர்களும் அசுரர்களாக சித்தரிக்கப்பட்டு—அவர்களை அழித்தவர்கள் அவதாரங்களாக உயர்த்தப்பட்டனர். இதனால் புரட்சியும் அஞ்சத்தக்கதாய் ஆனது.

### மாபெரும் சமுகச் சீர்கேடு உலகில் இல்லாத ஜீவகாருண்யக் கொடுமை

இதனால் நிகர விளைவு என்ன ஆனது என்றால், இந்தியா என்ற துணைக்கண்ட பெரும் பரப்பில்—நாற்பது கோடிக்கு மேற்பட்ட மனித ஜீவன்கள் அறிவுத் தெளிவும், கல்வி விவரமும், சமூகப் பயனும் அற்ற விலங்கு நிலைக்குத் தள்ளப்பட்டனர். பொருளாதாரச் சுரண்டலும், சமூகச் சித்திரவதைகளும், கல்வி மோசடிகளும் பார்ப்பனர்கள்—மற்றவர்கள் மீது சர்வ சுதந்திரத்துடன் செய்துவர முடிந்தது. ஒரே ஏற்பாட்டில்—ஒரு சிறுபான்மைக் கூட்டம் கோடிக்கணக்கிலான பெரும்பான்மை மக்களை கல்வி, பொருளாதார, சமூக ரீதியில் பல வழிகளிலும், பல நூறு ஆண்டுகளாகச் சுரண்டி, செல்லரிக்கச் செய்து அழிவு நிலைமைக்குக் கொண்டுவந்தது—உலக அரங்கில் இணையும், மாதிரியும் இல்லாத கொடுமை. இந்தக் கொடுமைகளில் தலையிடுவது — பார்ப்பனர்களைப் பொறுத்தவரை—மதத்தில் தலையிடுவதாகவும், கோவிலில் நுழைவதாகவும் இருந்தது. சூரிய அஸ்தமனமே இல்லை என்ற அளவுக்குப் பரந்து கிடந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கூட—பூணூல் பார்ப்பானின் சுரண்டல் ஏற்பாட்டில் தலையிடத் தயங்கி ஒதுங்கியே நின்று—காலம் வந்தபோது விட்டு ஓடினார்கள். எனவே, பார்ப்பனர் கொடுமை தொடர்ந்தது.

### லிங்கன் - புரட்சி நிறவெறிக்கு மட்டுமே

ஆப்பிரகாம் லிங்கன் ஈடுபட்டு செய்த புரட்சி—கருப்பர்களுக்கு நிறத்தின் பேரால் விளைந்த கொடுமைகளில் இருந்து விடுதலை வழங்குவது மட்டுமே. அங்கு தீண்டாமை இல்லை; கோவில்களில் சம உரிமையோடு பிரார்த்தனை செய்ய முடியாத கொடுமை இல்லை. கல்வி மறுக்கப்பட்ட—நிறுவன மயமாக்கப்பட்ட ஏற்பாடு (Institutionalised Arrangement) இல்லை. ஆனாலும்—லிங்கன் செய்தது மாபெரும் புரட்சி என்பதை மறுக்க வேண்டியதில்லை. லிங்கன்—மனித இனத்தின்—ஒருமைப்பாட்டை பிரகடனம் செய்த சிந்தனையாளர் என்ற வகையில் மரியாதைக்கும் பாராட்டிற்கும் உரியவரானார்.

### வர்ல்டேர் புரட்சி—பகுத்தறிவுக்கு மட்டுமே !

வால்டேர், இங்கர்சால், பாரட்லா—போன்ற பகுத்தறிவு சிந்தனையாளர்கள் செய்த புரட்சி—மக்களை மதவாதிகளின் மவுடீக சிந்தனையிலிருந்து பிய்த்து நல்வழிப்படுத்தும் அவ்வளவே ஆகும். கடைசி மாதா கோவிலின் கடைசி கல்—கடைசி பாதிரியின் தலையில் விழும் வரை பகுத்தறிவுப் பிரசாரம் தொடரும் என்று — அவர்கள் செய்தது — சந்தேகமே இல்லை — இருண்டுகிடந்த அய்ரோப்பாவில் ஒளி ஏற்பட வழி செய்தது. அவர்கள் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்களே. புது வாழ்வு என்ற அந்த மறுமலர்ச்சிக்குப் பிறகே—



இங்கிலாந்தில் தொழிற்புரட்சி போன்ற பொருளாதார மாறுதல்களும் ஏற்பட்டன. மதவாதிகளின் பிடிப்பு—ஆட்சியிலிருந்தும்—பொது வாழ்விலிருந்தும் நீங்க அவர்கள் செய்த தொண்டு பெரிதும் பயன்பட்டது. ஆனால் இவர்கள்கூட பாரம்பரியமான பிறவி காரணமான இழிவுகளை நினைத்தவர்களே இல்லை.

### மாவோ செய்த புரட்சி— பொருளாதாரத்தில் மட்டுமே !

மாசேதுங், லெனின், காரல் மார்க்ஸ்—என்ற பொதுவுடைமை சிந்தனையாளர்கள் செய்த புரட்சி—முதலாளித்துவத்தை ஒழிக்கும் குறிப்பிட்ட அளவிற்கே பயன்பட்டது. முதல் என்ற ஒன்று தனியாக கிடையாது; முதலாளி என்பவனும் கிடையாது. சேமிக்கப்பட்ட உழைப்பே முதல் — இதை சேமிக்கின்ற திருடனே முதலாளி—என்று மலர்ந்தது பொதுவுடைமைச்சிந்தனை. இன்று இரண்டு பொதுவுடைமை வல்லரசுகள் தோன்றும் அளவுக்கு இந்தச் சிந்தனைகள் உலகில் வலுவும் வளர்ச்சியும் பெற்றன. உலகம் முழுதும் உள்ள நாடுகளில்—தொழிலாளர் வர்க்கத்திற்கு வாதத்திறன்களை வளர்த்து—புது வாழ்க்கை நிலைகளை ஏற்படுத்தியது பொதுவுடமை சிந்தனைதான். ஆனால் — இதில்கூட பிறவி இழிவு என்ற நிலைமை கிடையாது. தீண்டாமை, பிறவியின் காரணமாகக் கல்வி பெற தகுதியின்மை—என்ற கொடுமைகளை—கம்யூனிஸம் அறிந்ததே இல்லை. இந்தத் தலைவர்கள் தெரிந்து கொண்டதே இல்லை.

### பெரியாரே—பெரியார்

இப்படி உலகத் தலைவர்களின் சாதனைகளைப் பரிசீலித்தால் — சில காலங்களில் சில இடங்களில், சில பிரச்சினைகளுக்கு இவர்கள் தீர்வு கண்டதே தெரியவரும். ஆனால் பெரியார்—பல ஆயிரம் ஆண்டுகளாக புரையோடிவிட்ட புண்ணுக்கு மருத்துவம் கண்டார். கடவுள் என்ற சொல்லின் பின்னால்—ஒரு விஷ விருட்சமே இந்தியாவில் வளர்ந்து கிடப்பதைக் கண்டார். ஒரே சமயத்தில் இந்த ஏற்பாடு—மத மவுடீகமாகவும், சமத்துவக் கேடாகவும், பொருளாதாரச் சுரண்டலாகவும், சமூகப் பித்தலாட்டமாகவும், கல்வி மோசடியாகவும், மாபெரும் மனித இனத் துரோகமாகவும் நடந்து வருவதைக் கண்டார். இதை ஒழித்துக் கட்டும்செயல்—மதவிரோதம், ஆட்சிக்கு விரோதம், வெகுஜன விரோதம் என்று அறிந்து—தெளிவடைந்தே இந்தப் போக்கில் இறங்கினார். பார்ப்பனர்களின் சுரண்டிலில் ஆட்பட்டு உணர்வுகள் மரத்துக்கிடக்கும் சமூகத் தொகுதிகளுக்கு—கடவுள் இல்லை — இல்லவே இல்லை என்ற கருத்தினை வலியுறுத்திப் பிரசாரம் செய்வது போன்ற ஜீவகாருண்யச் செயல் வேறு ஒன்று இல்லை என்று அவர் பிரகடனப் படுத்தினார். ஒரே சமயத்தில் பலமுனைச் சுரண்டலாகவும், உணர்வுமிக்கப் பகுதியாகவும் (Sensitive Area) இருந்த துறையில்—இறங்கி வெற்றிகண்டதால்தான்—பெரியார் பெரியாரில் பெரியார் என்று ஆகின்றார். அவர் மிகப் பெரிய மக்கட்டொகுதியில்—மிக நீண்டகாலம் நடைபெற்ற—மிக இழிந்த சுரண்டல்களை—மிகக் குறைந்த காலத்தில் களைந்தமையால் பெரியாரில் பெரியார் ஆகின்றார்.

### பெரியார் குண்டுவீச்சினால் சிதையுண்ட கூடாரங்கள்

பெரியாரின் குண்டு வீச்சினால்—பழமைக் கூடாரங்கள் சிதைந்து நொறுங்கின. சுரண்டல் அமைப்புக்கள் தகர்ந்து தவிடுபொடியாயின. பொய்யும் பித்தலாட்டமும் நல்லவண்ணம் அடையாளம் காணப்பட்டு — சமூகக் கேவலத்தை அடைந்தன. பாராட்டிப் போற்றி வந்த பழமைலோகம்—ஈரோட்டு பூகம்பத்தால் இடிந்து நொறுங்கியது. கடவுள் அடிப்படையில் பின்னப்பட்ட சுரண்டல் வலைகள்—பிய்ந்து நாசமாகின. இன்று, போற்றிப் பாதுகாக்கப்பட்ட கோயில்கள்—பாழடைந்து போகும் வண்ணம்—பார்ப்பனர்கள் அவைகளை விட்டு ஓடிவிட்டார்கள். உழைப்பது உனது கடமை—என்று தஞ்சை கல்லிடைகுறிச்சி பகுதிகளில் விவசாய பண்ணையார்களாக இருந்த பார்ப்பனர்கள் — இன்று பட்டணங்களுக்கு ஓடிவிட்டார்கள். வேதம் படிப்பதும்—அவர்கள் தொழில் என்று இருந்தது — இன்று யாரும் தடுப்பார் இல்லாமலே தடைபட்டுக்கிடக்கின்றது. சமஸ்கிருதம் தெய்வமொழி என்பது—இன்று யாரும் சொல்வார் இல்லாமலே காலத்தின் குப்பைக் கூடைக்குப் போய்விட்டது. இவைகள் எல்லாம்-பொய்கள் ; இவைகளைச் சொல்லிப் பிழைத்த பார்ப்பனர்கள்—பொய்யர்கள்— திருடர்கள் என்பது தெளிவாகிவிட்டது. இன்று கடவுள் பெயரால் காசுகேட்பவன்—ஒன்று திருடன் அல்லது பிச்சைக்காரன் என்ற விஷயம்—பெரும்பான்மை மக்களுக்குத் தெரிந்தே இருக்கின்றது.

### தென்புலத்தில் தந்தை இட்ட தீ !

இன்று பிற்படுத்தப்பட்டோர் வகுப்புரிமைப் போர் உக்கிரத்துடன் தமிழ் நாட்டில் நடத்தப்படுகின்றது. பிற்படுத்தப்பட்டோர் உரிமை கோரி உச்சநீதிமன்றம் வரைச் செல்லு

கின்றனர். கேரளத்து வழக்குகளும், கர்னாடகத்து ஒதுக்கீடுகளும், பீஹார் அரசு கவிழ்ப்புகளும், உத்திரபிரதேச அரசியல் சிக்கல்களும் இன்று தெளிவுபடுத்தும் ஒரே உண்மை—பார்ப்பனர் அல்லாதார் உரிமைதான் மத்திய அரசில்—இத்தனைக் குழப்பங்களுக்கும் இடையே தெளிவாக தெரிகின்ற உண்மை—பார்ப்பனர் அல்லாதார் எழுச்சியும் வளர்ச்சியும் தான் இன்று இந்தியாவின் பத்திரிகை பார்ப்பனர்கள் அத்தனைபேரும்—சஞ்சீவரெட்டியையும், சரண்சிங்கையும் திட்டித் தீர்ப்பதில்—பார்ப்பனரல்லாதார் எழுச்சி கண்டு பார்ப்பனர் படும் வயிற்றெரிச்சலையே காண்கிறோம். பார்ப்பனர் அல்லாதார்—பேசர்ப்பரணி பாடி புதுவுலகம் சமைப்பதை இனி எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. அன்று தென்புலத்தில்—தந்தை இட்ட தீ-இன்று நாடு முழுதும் பரவி-ஆழமாக, அகலமாக, கொழுந்து விட்டு எரிகின்றது. பார்ப்பன சுரண்டல் பேரமைப்பின் கடைசிதூண் கடைசி பார்ப்பனர் தலையில் விழுந்து சுரண்டலும், பேதவுணர்ச்சியும் கூண்டோடு ''கைலாசம்'' போகும்வரை—அது எரியும்! *


வாழ்க பெரியார்!



எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா வாழ்த்துக்கள்.

போன்: 274

**ராஜகுரு டிம்பர் டிப்போ,**
**ராஜகுரு மரம் அறுவை மில்**
ரயில்வே ஸ்டேஷன் ரோடு, திருத்துறைப்பூண்டி

**T. A. L. C. குருசாமி நாடார் கிரேண்ட் சன்ஸ் & Co.,**
இரும்பு, ஓடு & பெயின்ட் வியாபாரம்
திருத்துறைப்பூண்டி : : பிராஞ்சு: பேராவூரணி


வாழ்க பெரியார் புகழ்! வளர்க அவர்தம் கொள்கை!

கடந்த 1969-ம் ஆண்டு ஏப்ரல் 11-ம் நாள் தந்தை பெரியார் எங்கள் ஊருக்கு வந்தபோது என் மகனுக்கு 'புகழேந்தி' என்ற பெயரை தந்தை பெரியார் சூட்டியதை எண்ணி இன்றும் மகிழ்கிறேன். அவர் வழியில் என்னை இணைத்துக் கொள்வதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

என். ஆர். சந்திரன்,
27/1-415 ஏ. கே. பி. ரோடு,
ஆர். வி. புரம்,
நாகர்கோயில்—629001





# எதனால் பெரியாருள் பெரியார்?

திராவிடர் கழகப் பிரசார செயலாளர்: என். செல்வேந்திரன்

கால மாறுதல்களும், இயற்கையான மழையும் வெய்யலும், காற்றும் கட்டிடங்களைப் பழமையானவையாக்கிப் போகின்றன, காலப் போக்கில் இன்று வரை மனித அறிவின் வளர்ச்சிக்குச் 'சரி' எனக் கருதப்பட்டவைகள் எத்தனையோ மாறிவிட்டன. நேற்றைய தவறுகளை இன்றைய 'சரி' ஆக்கி இன்றைய 'சரி' களையெல்லாம் நாளைய தவறுகளாக்கிவிடுவது அரசியல் வாதிகளின் இயல்பு மட்டுமல்ல, காலத்தின் மாற்றத்திலும்கூட அப்படிப்பட்ட சில உண்டு. உலகத்தில் மிகப் பெரிய புரட்சிக்காரர்கள்—சிந்தனாவாதிகள்— அரசியல் மேதைகள்—விஞ்ஞான விற்பன்னர்கள் பலர் இருந்தனர்.

ஏசுவே ஒரு காலத்தில் சீர்திருத்தக்காரராகவே கருதப்பட்டவர். நபிகள் நாயகமும் அவ்வாறே. சித்தர்களும் அப்படியே.

சாக்ரடீஸ் போல், கலிலியோவைப்போல், சன்யாட்சன்னை போல் மிகப் பெரிய சிந்தனையாளர்கள் என்று எண்ணப்பட்ட பல பேர்.

காரல் மார்க்ஸைப் போல், காந்தியாரைப் போல் அரசியல், பொருளியல், சமுதாய சிந்தனையாளர் ஏராளம். ஏராளம் பேர். இவர்கள் அனைவரின் கருத்துக்களும் ஒரு காலத்தின் மிகப்பெரிய 'சமுதாய அச்சரங்களாக'வே இருந்தன.

## நாட்கள் நகர்ந்தன

நாட்கள் வளர்ந்தன. நாட்களோடு சேர்ந்து மனித சிந்தனையும் வளர்ந்தது. அணுகு முறைகள் மாறின. விமரிசனத்திற்கும் ஆராய்ச்சிக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட துறைகளின் பட்டியலும் வளர்ந்தது. மனிதக் கற்பிதங்களுக்கும், கவிஞர்களின் 'உவமைகளின் புகலிடமாக'வும் மட்டுமே இருந்து வந்த சந்திரனும், சூரியனும், நட்சத்திரங்களின் கூட்டமும் மனித விஞ்ஞான அறிவிற்கு மிக அண்மையில் வந்துவிட்டன. அணுவின் பலன்கள் ஆக்க சக்தியாய் பயன்படத் துவங்கின. புதிய வெள்ளம் பழைய தேக்கங்களை அடித்துக்கொண்டு செல்லுவதைப் போல் சமுதாய வாழ்வின் ஒவ்வொரு பதினைந்து ஆண்டும் மக்களின் ரசனையில் (உணவு, உடை, நகை) அரசியல் அணுகு முறையில், பொருளியல் போக்குகளில் மாற்றங்கள் விரும்பப்படுகின்றன. உலக முழுமையும் இதற்கு விதிவிலக்கல்ல.

விவசாய நாடு எனப்படும் இந்தியா வேகமாக கனரகத் தொழில்களை நோக்கி ஒரு இருபது ஆண்டுகள் நடை போட்டு மீண்டும் ''ஜெய்கிசான்'' கோஷத்தோடு விவசாயத்தை நோக்கி ஒரு 'விவசாயி' பிரதமரின் தலைமையில் நடக்கத் துடிக்கின்றது.

## புனர் பரிசீலனைக்கு ஆளாகின்றன

கட்டுப்பாடான வாழ்க்கை சட்டத்திற்குள் நடந்து கொண்டு இருந்த சோவியத், சீன மக்கள், இப்போது சுயேச்சையான மேற்கத்திய பாணியில் உல்லாசம் நிறைந்த வாழ்க்கை முறையை விரும்புகின்றார்கள்.

இப்படிப்பட்ட மாற்றங்களை விரும்புகின்ற உலக மக்கள் மத்தியில் மிகத் தீவிரமானதாகக் கருதப்பட்ட காரல் மார்க்ஸ், பெட்ரண்ட் ரசல் போன்றவர்களின் கருத்துக்கள்கூட இப்போது புனர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்தியாவின் சுதந்திரம் என்றழைக்கப்பட்ட அதிகார மாற்றத்திற்குக் காரணமானது என்று சொல்லப்படும் காந்தியாரின் எண்ணங்கள் பல எப்போதோ சரித்திரத்தின் குப்பைத் தொட்டிக்குள் போய்விட்டன.

## தத்துவத் தற்கொலைகள் அல்ல!

இப்படி, காலத்தின் கதிர்வீச்சு முன் மக்கிப் போனவை சில. புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், மக்களின் சுவைகளும், ரசனைகளும், அணுகு முறைகளும், தலைமுறை தலைமுறைக்கு முதிர்ச்சி அடைய முதிர்ச்சி அடைய

எத்தனையோ 'ஒரு காலப் புரட்சியாளர்கள்' செலாவணி ஆகாமல் போய் விட்டார்கள், அவர்களுடைய 'சிந்தனைப் பொக்கிஷங்கள்' பல பழம் பொருட்காட்சியகத்தில் சிறப்பு செய்கின்ற அங்கங்களாகி விட்டன. இன்னம் பல 'தேவார திருவாசகத் திருவந்தாதிகள்' பட்டியலுக்குப் போய் பல காலமாகிவிட்டன.

இவைகள் எல்லாம் ஏன் ?

இவைகள் வேண்டுமென்று செய்துகொள் ளப்பட்ட 'தத்துவத் தற்கொலைகள்' அல்ல.

அவைகளின் கர்த்தாக்களும், அதற்கு வியாக்கியானம் கூறப் புறப்பட்ட, அல்லது அதன் மூலம் ஆதாயம் தேடப் புறப்பட்ட 'அப் போஸ்தலர்'களும் எல்லா காலத்திற்கும் பொருந்தும் என்று சொல்லியே வந்தார்கள்—வருகிறார்கள். ஆனால், அவைகள் நிற்க முடியவில்லை. மேற்சொன்ன காரணங்களால், எத்தனையோ வலிமைமிக்க நிறுவனங்களும், கோடிக்கணக்கான பணமும், அரசின் வலிமை யும் கூட காத்து நிற்க முடியவில்லை. ஏனென் றால், அவர்கள் அத்துணைப் பேரும் தாங்கள் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட காலவரையறைப் பட்ட விஞ்ஞான அடிப்படையில், அரசியல் பொருளாதார அடிப்படையில் மட்டுமே சிந்தித் தார்கள். அந்த சமுதாய, பொருளாதார, விஞ்ஞான அடிப்படையின் கடைசி கால் மாறு கின்றபோது அதனால் நிற்க முடியவில்லை.

காலத்திற்கு முந்திய கருத்துக்கள்

தந்தை பெரியாரின் கருத்துக்கள் பல அய்ம்பது, நாற்பது ஆண்டு முதியவை.

அய்ரோப்பியக் கண்டத்தின் கையகலத் தீவு ஒன்றின் குடை நிழலில் உலக மக்கள் தொகையில் சரி பகுதி வாழ்ந்த நேரம்; இன்றைய ஏழையின் அவ்ஷதமான 'பெனி சிலின்' அய்ரோப்பிய அமெரிக்க கோடீசுவரர் களுக்கே கிட்டாத காலம்—

அவருடைய 'Test Tube Baby' கருத்து வெளியிடப்பட்டது அப்போதுதான். சுதந்திர இந்தியாவில் 'ஜனநாயகம்' இருக்காது; 'பார்ப் பன நாயகம்'தான் இருக்குமென்றார். கருத் தடையைப் பற்றிய பேச்சு, கூட்டுக் குடும்ப முறையை மாற்றி கூட்டு சமுதாய வாழ்க்கைப் பற்றிய அறைகூவல், திருமண விலக்கு—ஒப் பந்தம்—இப்படி எத்தனையோ.

புதிய கண்டு பிடிப்புக்கள், விஞ்ஞான மாற்றங்கள், ரசனை மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள், இவற்றுக்கு முன்னால் பலர் அடிபட்டு விழுகின்றார்கள். அய்யாவின் கருத் துக்கள் ஒவ்வொரு மாற்றம் வரும்போதும், பிற கோள்களுக்குப் போய் வரும்போதும், ஆண்—பெண் உறவு முறை ஏற்பாடுகள் மாறும்போதும் அவருடைய கருத்துகள் 'குன்றா இளமை' யுடன் நிற்கின்றன.

பெரியாருள் பெரியார் !

ஏன் ? தன்னைச் சுற்றி மட்டும் பார்க்க வில்லை அவர். அவர் பார்வைக்கு எல்லை யில்லை. பார்ப்பன சூத்திர இன அமைப்பை மட்டும் பார்க்கவில்லை. அதையும் தாண்டிப் பார்த்தார். மனிதகுல மொத்தமும் இன்னும் ஒரு நூற்றாண்டு கால வளர்ச்சிக்குப் பின்னரும் எளிதில் ஜீரணிக்கக்கூடிய கருத்துக்கள் அவ ருடையவை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட அவருடைய எத்தனையோ சிந்தனைகள் புதுக் கருக்கு அழியாமல் 'அன்றைய புரட்சி யாய்—புதுமையாய்' மிளிரும். அதனால்தான் அவர் பெரியாருள் பெரியார் !




பிற்படுத்தப்பட்ட மக்களின் உய்வுக்காக
அல்லும் பகலும் அயராது உழைத்த
தந்தை பெரியாரின் புகழும், கருத்துக்களும்
என்றென்றும் இம்மண்ணில் நின்று நிலைத்திட
விழைகின்றோம்.

ஆட்சிக்குழு,
யாதவர் கல்லூரி,
மதுரை-14.






# பெரியார் ஒரு சகாப்தம்

அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர்
ஜஸ்டிஸ் பி.எஸ்.சோமசுந்தரம்.

'உலகில், உண்மையில் சிறந்த தலைவர் களுக்கு மூன்று சிறப்புகள் இருக்க வேண்டும். ஒன்று, அவரைப் பற்றி உலகம் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்; இரண்டு, அவரது கொள்கைகள் எங்கும் எவராலும் எதிர்க்கப்பட வேண்டும், மூன்றாவது அவர் மிகவும் இழிந்த முறையில் தாக்கப்படவும், சபிக்கப்படவும் வேண்டும் அந்த மூன்று சிறப்புகளும், பெரியார் ஈ.வெ.ரா. அவர் களுக்கு உண்டு' என்று தமிழ் வல்லார் டி. கே. சிதம்பரனார் 1928 ஜூலை 20ம் நாள் படத் திறப்பு விழாவின்போது குறிப்பிட்டார். அவ ரது புயல் வாழ்க்கை எப்படி துவங்கி, எப்படி முடிந்தது பார்ப்போம். அவர் ஈரோட்டில் 1879 செப்டம்பர் திங்கள் 17ம் நாள் வெங்கட் டப்ப நாயக்கர்—சின்னதாயம்மையார் ஆகியோ ரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவரது பெற்றோர்கள் மிக எளிய நிலையி லிருந்து, தங்களது உழைப்பால் உயர்ந்து ஈரோட்டிலேயே, மிகவும் செல்வம் மிகுந்த குடும்பங்களில் ஒன்றாக, தங்கள் குடும்பத்தை உயர்த்தினர். இவரது மூத்த சகோதரர் கிருஷ்ணசாமி, இவரது சீர்திருத்த இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார். இவரது இளைய சகோதரிகள் பொன்னுதாயம்மாள், கண்ணம் மாள். 1903ல் திண்ணைப்பள்ளியில் சேர்ந்தார். ஆனால், 1908 ஆண்டோடு பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். 1916ல், மிக வும் இளம் வயதில் அம்மையார் நாகம்மையை மணந்தார். 1922ல், வீட்டை விட்டு ஆண்டி போல், காசி போன்ற வடநாட்டு நகரங்களில் திரிந்தார். பிறகு சொந்த ஊர் திரும்பி வந்து, வணிகத் துறையில் ஆர்வம் காட்டினார். 1911ல் தந்தையை இழந்தார். அதுமுதல் நகரத்தில், நகர சபைத் தலைவராக இருந்து பணியாற்றுகிற அளவு பொதுக் காரியங்களில் ஈடுபட்டார். 1919ல் காங்கிரசில் சேர்ந்தார். 1921ல் கள்ளுக்கடை மறியல் செய்தார். வைக்கம் சத்தியாக்கிரகம் செய்து தீண்டாமை ஒழிப்பில் முன்னின்று 'வைக்கம் வீரர்' என்ற பட்டப் பெயரே பெற்றார்.

ஏடுகள் துவக்கினார்

1924ல், காங்கிரசின் தமிழ்நாடு தலைவ ராகி, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரி னார். வ. வே. சு. அய்யர் நடத்திய குருகுல ஆசிரமத்தில் சாதி வேற்றுமையை எதிர்த்தார். காங்கிரசில் வகித்த பதவியை ராஜினாமா செய் தார். 1925ல் காஞ்சியில் நடந்த மாநாட்டில் காங்கிரசை விட்டு விலகினார். 'குடியரசு' 'புரட்சி' 'பகுத்தறிவு' 'விடுதலை' இதழ்கள் மூலம், சுயமரியாதைப் பிரச்சாரத்தைப் பலமாக நடத்தத் தொடங்கினார். 1929ல் செங்கற் பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டைக் கூட்டினார். 1931ல் சோவியத் ரஷ்யா சென்று வந்தார். பின் 1932ல் உலகின் பல்வேறு பாகங்களுக்குச் சுற்றுப்பயணம் சென்று திரும்பி னார். 1933ல் புரட்சிகரமாக எழுதியமைக்காக தண்டிக்கப்பட்டார். இந்த ஆண்டில்தான் தன் துணைவியை இழந்தார். 1934ல் நீதிக்கட்சி இவரது சமூக சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டது. 1938ல் மூதறிஞர் ராஜாஜி யால் கொண்டுவரப்பட்ட கட்டாய இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். அவர் சிறையிலிருக்கும் பொழுதே நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை எழுப்பி னார். 1944ல், நீதிக் கட்சி, திராவிடர் கழக மாக மாற்றப்பட்டது. 1947ல், சுதந்தர தினத் தையே துக்க நாள் என்று அறிவித்தார். திரா விட நாடு பிரிவினை நாள் கொண்டாடினார். 1948ல் தூத்துக்குடி மாநாட்டினைக் கூட்டி னார். பிறகுதான் 1949ல் மணியம்மையை மணந்தார். அவரை விட்டு, பேரறிஞர் அண் ணாவும், மற்றும் பலரும் விலகினர். 1950ல் வடநாட்டுக் கடைகள் முன் மறியல் செய்தார், 1952ல், இந்திப் பெயர்ப் பலகைகளில் தார்

கொண்டு அழித்தார். 1953ல் விநாயகர் சிலையுடைப்பு. 1954ல் குலக் கல்வி திட்டப் போராட்டங்களை நடத்தினார். பர்மாவுக்கு, புத்த மதப் பிரச்சாரத்திற்குச் சென்றார். மலேசியா சுற்றுப்பயணம் செய்தார். 1955ல், இந்தி எதிர்ப்பின் அடையாளமாக தேசியக் கொடியை எரிப்பேன் என்றார், 1956ல் ராமர் பட எரிப்பு. 1957ல், சாதிப் பெயருள்ள உணவு விடுதிகளில் மறியல், இந்திய அரசியல் சட்டப் பிரதி எரிப்பு. 1960ல் தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்படத்தை எரித்தார். 1962ல் திரு. காமராசர் தலைமையில் இயங்கிய காங்கிரசை ஆதரித்தார், 1967ல் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்ற பிறகு, பேரறிஞர்அண்ணா, இவரின் வாழ்த்துப் பெற்று பிரிந்தவர் கூடினர், 1970ல் எங்கும் பகுத்தறிவாளர்—சிந்தனையாளர் மன்றங்களைத் தோற்றுவித்தார். 1971ல் சேலத்தில் கடவுளர் படங்களை வைத்து, புராண இழிவுகளை வெளிப்படுத்தி ஊர்வலம். 1973ல், சாதி எதிர்ப்பு மாநாடு இறுதியாக 19—12—73ல் சென்னை தியாகராய நகரில் கடைசி கர்ஜனையைச் செய்தார். 20—12—73ல் சென்னை வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 24—12—73 காலை 7-40க்கு தனது இறுதி மூச்சை விட்டார், ஆம், இது ஒரு தனி மனிதரின் 'என் கதை' என்பதால் கூறவில்லை, இது தமிழகத்தின் சகாப்தத்தின் வரலாறு என்பதாலேயே கூறினேன். ஆம் தந்தை பெரியார் மறைந்தார். ஒரு சகாப்தம் முடிந்தது. தமிழகத்து வரலாற்றில் மிகப் பெரிய பாகம் அத்தோடு நின்றுவிட்டது.

### புரட்சிக்கவிஞர் பாடினார்!

ஒருமுறை புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெரியாரை 'உயர் எண்ணங்கள் மலரும் சோலை' என்று குறிப்பிட்டார். அந்த 'சோலை இன்று நாம் காண முடியாது மறைந்துவிட்டது. அவர் தமிழர் சமுதாயத்தை, சாதி பேதமற்ற, மத ஆதிக்கம் இல்லாத, மூட நம்பிக்கைகள் ஒழிந்த ஒரு புதிய சமுதாயமாக மாற்றியமைக்க முனைந்தார்; அவர் அதில் முழு அளவில் இல்லாவிட்டாலும் வெற்றி பெற்றே மறைந்தார்.

பெரியாருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேற்றுமை—தன் வெற்றியைத் தன் வாழ்நாளில் கண்டவர் அவர், மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு இருந்தது இல்லை.

அவர் தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்து, மேலும் நூறு ஆண்டுகள் ஓடி மறைந்து, இன்று நூற்றாண்டு விழா கொண்டாடி அதுவும் நிறைவு பெறும் நிலை வந்துள்ளது. ஆம், பெரியார் சகாப்தம் எனும் பெருமைக்குரிய சகாப்தத்தை நாம் திரும்பத் திரும்ப நினைவு கூர்ந்து அவர் விட்ட வழியில் நடைபழக முயன்று வருகிறோம். துவக்கத்தில் கூறியது போல் தந்தை பெரியார் ஒரு தனி மனிதரல்ல—அவர் ஒரு தத்துவம்—ஒரு வரலாறு—அவர் தனியானதோர் ஸ்தாபனம்—மறுமலர்ச்சி இயக்கம்—சகாப்தம். இதனை யாரே மறுக்க இயலும் ?

அவர் தமிழக அரசியலில், ஒரு ஆலமரம்; அதிலிருந்து விட்ட விழுதுகளைத்தான் பல்வேறு அமைப்புகளில் காண்கிறோம்.

அதைப் போலவே, தந்தை பெரியார் விட்டுச் சென்ற நினைவுச் சின்னங்கள் பேறிஞர் அண்ணாவும், அவரால் அமைக்கப்பட்ட அரசும், அந்தப் பெரியார் எனும் பெரிய சகாப்தத்தில் நாமும் வாழ்ந்தோம்—வாழ்கிறோம் என்ற பெருமை நமக்குக் கிடைத்தது. வாழ்வில் நாம் பெற்ற பேறாகும். அந்தக் களிப்போடு, பெரியார் நாமம் வாழ வாழ்த்துவோம். *

### தமிழனுக்கு என்ன மீதி இருக்கிறது ?

தமிழன் அறிவு மதத்தால் சரண்டப்பட்டுவிட்டது தமிழனின் செல்வம் மோட்சத்தின் பேராலும், பாவ மன்னிப்பின் பேராலும் சுரண்டப்பட்டுவிட்டது. இவற்றைச் சமாளித்து, கொஞ்சம் நஞ்சம் பணமும் புத்தியும் உள்ள தமிழ் மக்கள் பார்ப்பனக் கோர்ட்டாலும். பார்ப்பன உத்தியோகத்தாலும், பார்ப்பன வக்கீலாலும், பார்ப்பனப் புரோகிதத்தாலும், வேறு பல இழிவான காரியங்களாலும் சுரண்டப்பட்டாய்விட்டது. இனி, தமிழனுக்கு என்ன மீதி இருக்கிறது என்று கேட்கிறேன்.

—தந்தை பெரியார்

*("குடி அரசு," 5-12-1937)*



# அய்யா அவர்களின் மெய்யான பண்புகள்

## கவிஞர் கருணானந்தம்



கல்லுடைத்தும் மண்சுமந்தும் பாடு பட்டும்
கட்டைவண்டி ஓட்டி சிறு கடையை வைத்தும்
நல்லுழைப்பால் முன்னேறி நாண யத்தால்
நாநயத்தால் மஞ்சளிலே வணிகம் செய்தும்
பல்லாரும் போற்றுமாறு செல்வம் ஈட்டிப்
பண்புடைய வள்ளலெனும் தன்மை ஓங்க
இல்லையிவர் போலொருவர் எனப்பு கழ்ந்தே
எல்லாரும் நாயக்கர் பெருமை சொல்வார்

சின்னத்தாய் அம்மையார்க்கு மக்கள் நால்வர்
சீராட்டப் பெண்ணிருவர் இருவர் ஆண்கள்
சின்னவர்நம் இராமசாமி செல்லப் பிள்ளை
சீர்திருத்தப் போக்கினாலே பழைமைத் தாய்தான்
அன்னவரைத் தொட்டுவிட்டால் குளிக்கச் செல்வார்
ஆனாலும் அவர்மீதே கொள்ளை அன்பாம்
மன்னவர்போல் தன்கணவர் சீர்மி குந்தே
வாழ்ந்தாலும் முன்நிலைமை மறப்ப தில்லை !

அய்யாவுக் கொப்பாக அவரை ஈன்ற
அன்னையாரும் தொண்ணூற்றைந் தாண்டு காலம்
பொய்யாத நல்வாழ்க்கை வாழ்ந்துள் ளார்கள்
புகழ்மகனின் பொதுநலத்தால் மகிழ்ந்துள் ளார்கள்
மெய்யாகச் சொல்கின்றேன் இந்தத் தாயார்
மேதினியை நீத்தபோதில் அய்யா தீட்டும்
தொய்யாத கட்டுரைபோல் வாய்மை பேசும்
துணிவான எழுத்துவேறு கண்ட தில்லை !

எப்படியோ உச்சிநிலை எய்தி விட்ட
இழிமக்கள் சிற்சிலபேர் பழைமை மூடி,
'அப்பப்பா ! நான் ஒன்றும் ஆண்டி அல்லன் !
அரசபரம் பரை !' என்று பிதற்றும் நாளில் —

அப்பட்ட உண்மைகளைத், தம்மைப் பெற்றோர்
ஆதியிலே வறுமையினால் உழன்ற தெல்லாம்,
தப்பின்றி எடுத்துரைக்கும் மேன்மைப் பண்பைத்
தந்தைபெரி யாரிடமே காண்கின் றோம்நாம் !

தன்குடும்பம், தன்விடு, தனது மக்கள்
தன்சுற்றம், தன்சாதி தழைத்தால் போதும்
என்கின்ற அற்பகுணம் மிகுந்தோ ரைத்தான்
ஏராளம் சந்திக்கும் இற்றை நாளில்—
தன்தமையன் மூத்தமகன், தன் துணைவி,
தன்அன்னை மறைந்த தெல்லாம் துக்கம் அல்ல ;
'பன்னீர்செல்வம் மறைவே தாளாத் துன்பம் ;
பதறுகிறேன் ; கதறுகிறேன் !' என்றார் அய்யா !

முள்ளிருக்கும் பலாப்பழத்தின் தோலைத் தொட்டு
முகஞ்சுளிக்கும் அறியாதார், கீறிப் பார்த்தால்,
உள்ளிருக்கும் தேன்பிலிற்றும் சுவையைத் தின்றே
உருசியினைச் சுவைக்கின்ற பான்மை போலச்—
சுள்ளென்று சுடுகின்ற சொல்லைப் பாய்ச்சித்
துரோகியரைச் சாடுகின்ற அய்யா உள்ளம்,
கள்ளமிலாப் பாசத்தின் இல்லம் என்று
காட்டுதற்கே எண்ணற்ற செயல்கள் உண்டு !

தமையீன்றோர் யாரென்றும் தெரிந்தி டாமல்,
தமைக்கோர ஆளொன்றும் கிடைத்தி டாமல்,
சுமைபோல மகப்பேறு மனைகள் தோறும்
தொகைபெருகப் பிறந்திட்ட மழலை தம்மை—
இமைபோலக் காக்கின்ற கருணை கொண்டே
ஏந்திவந்து தாங்குகின்ற பாங்கு கண்டோர்,
தமையுமொரு குழந்தையாகக் கருதி, அய்யா
தயைகாட்ட மாட்டாரா ? எனநி னைப்பார் !

நாயினமோ தன்இனத்தை வெறுக்கும் ; ஆனால்
நன்றியுடன் மனிதனிடம் வால்கு ழைக்கும் !
தாயிதயங் கொண்டிருந்த நாய்க்குங் கூடத்
தன்கையால் சோறூட்டி வளர்த்தார் அய்யா !
சேயிதனைப் பிரிந்தபோது வருந்தி நின்றார் ;
தேக்கமுற்ற அன்பினுக்கோர் வடிகால் போலும் !
ஆயினும்நம் மக்களுக்கோ நன்றி கிட்டா
அரும்பணியைத் தெரிந்தேதான் தொடர்ந்து செய்தார்! *






ஆயிரங்கால் சிங்கமாக உலவிக் கர்ச்சித்தவர் தந்தை பெரியார்! அந்த சிங்கம் மறைந்தால்......ஆம்! அந்த இடம் வெற்றிடம்தான்! அதை நிரப்ப ஒருவர் பிறப்பது என்பது அதிசயமான ஒன்றுதான்!

ஆனால் அதே நேரத்தில் பெரியார் மறைவுக்குப்-பின்னர் என்ற சர்ச்சையை எழுப்புவோர், முக்கியமான மற்றொரு பகுதியை மறந்து பேசுவதுதான் வேடிக்கை!

### ஆயிரங்கால் சிங்கம்

ஆயிரங்கால் சிங்கமான அய்யாவிடம் ஒருவர் பயிற்சிப் பெறுகிறார் என்றால், அந்தப் பயிற்சிப் பெற்றவரின் வீச்சு விண்ணையும் மண்ணையும் பிளந்து தள்ளுமே!

### அம்மாவின் தலைமை

அந்த வீச்சை அருமைத் தலைவர் அம்மா அவர்கள் உருவத்தில் நாடு கண்டது, இந்தியாவின் ஒவ்வொரு பிடி மண்ணையும் ''இராவண லீலா'' நிகழ்ச்சியின் மூலம் அந்த வீச்சுக் குலுக்கிக் காட்டியது!

நெருக்கடிக் காலத்திலும் நிலை குனியாது நிமிர்ந்து நடந்த அவர்களின் பாங்கு. இந்திராக்களைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரித்தது!

தீமையை எதிர்த்து நடத்தும் யுத்தத்தில் தீரமாக தனது பாத்திரம் இருக்க வேண்டும் என்ற வீர உணர்வு அருமைத் தலைவர் அம்மா அவர்களிடம் குடியிருந்த பண்பை, உடல் பெரிதும் நலிவுற்ற நிலையிலும் இந்திரா காந்திக்கு எதிராகக் கொடி பிடித்துச் சென்ற அந்த வேகத்தில் கண்டோம்!

அடுத்து, எதிர்பாராத ஒருவித கடுமையான நெருக்கடி! அன்னையார் அவர்கள் இயற்கையால் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டார்கள்!

நாட்டு மக்கள் பெரியார் கண்ட இயக்கத்தை ஒரு அர்த்த புஷ்டியோடு பார்த்தார்கள். கருஞ்சட்டைத் தோழர்களை அவர்கள் பார்த்த நோக்கில் ஏதோ ஒன்று தொக்கி நின்றது!

உணர்வு தெரிந்த கால முதல் ஆயிரங்கால் சிங்கத்தின் கர்ச்சனைக் குரலையே அகரமாகக் கற்று 'அக்கேனா' வரை அதற்குள்ளேயே உழன்று கழன்று தவழ்ந்த எளிமையான—வலிமையான தலைமை ஒன்று வளர்ந்து வெளிப்பட்டதை பரிதாபத்திற்குரிய அவர்கள் பார்க்கத் தவறி விட்டார்கள் போலும்!

### அடையாளங் காட்டினார் அய்யா

தந்தை பெரியார் அவர்கள் தனது காலத்திலேயே அந்தத் தலைமையை அழுத்தந் திருத்தமாக அடையாளங் காட்டியது தவறாகப் போகவில்லை என்பதை இன்று நாடு கண் குளிரக் கண்டு களிப்படைகின்றது.

''...எம். ஏ., பி, எல்., பட்டம் பெற்றவர். நல்ல கெட்டிக்காரத் தன்மையும் புத்திக் கூர்மையும் உள்ளவர்......

இந்த நிலையில் சுயநலமில்லாது எந்த விதப் பொருள் ஊதியத்தையும் கருதாமல் பொதுத் தொண்டு செய்ய ஒருவர் வந்தார் என்றால், இதுபோல மற்றொருவர் வந்தார், வருகிறார், வரக்கூடும் என்று உவமை சொல்லக் கூடாத ஒரு மாபெரும் காரியம் என்றே சொல்ல வேண்டும்.''

(6-6-64 நாளிட்ட 'விடுதலை' ஏட்டில் தந்தை பெரியார் எழுதிய பொன் வரிகள்.)

'எக்ஸ்ரே' பார்வையுடைய தந்தையின் கணிப்பு யாரைக் குறித்தது என்பது அனேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

ஒருவரது புத்திக்கூர்மை பற்றியும், கெட்டிக்காரத்தன்மை பற்றியும், சுயநலமற்றத்

தன்மை பற்றியும் தந்தை பெரியார் திருப்திப் படும் அளவுக்கு இருக்கிறது என்றால் அந்தப் புத்திக்கூர்மை, அந்த கெட்டிக்காரத்தன்மை அந்தச் சுயநலமற்ற பெருநிலை எவ்வளவு மகத்தானதாக இருக்கவேண்டும் !

அந்த மூன்று குணநலன்களும் தந்தையை இழந்த தமிழ் நாட்டுக்கு நல்ல சேவகராக எச்சரிக்கை மணியாக பருவத்தே பொழியும் மழையாக இருப்பதை ஒரு கட்சி அல்ல ஒரு மாபெரும் இனமே இன்றையதினம் உணர்ந்து கொண்டு வருகிறது !

இது நமது பொதுச் செயலாளருக்குப் புகழல்ல—அவரை உருவாக்கிய அருந்தலைமை யாகிய அய்யாவுக்கு வந்து சேரும் புகழாகும் !

தந்தை பெரியார் அவர்களின் அறிவுக் கதிர்களை திசை யெட்டும் பரப்புவதிலே நமது தலைமை மேற்கொண்டுள்ள யுத்திகள் மிகவும் நுணுக்கமானவை மட்டுமல்ல — மேட்டுக் குடிமக்களின் கணிப்பிலே விழுந்த பலமான அடியுமாகும் !

பெரியாருக்குப் பின்னாலே மீண்டும் தங்களுக்கு மகுடம் கிடைக்கும் என்று நாவில் நீர் சொட்டச் சொட்ட வழிமேல் விழிபதித்துக் கிடந்த வேதியபுரம், விலாவில் வேல்தைத்தது போல் குற்றுயிராய்த் துடித்துக் கிடக்கிறது !

## பிரசார யுக்திகள் !

மாணவர் பயிற்சி முகாம்கள், முறையான பயிற்சிக்குப் பின்பு நாடெங்கும் மாணவர் அணியின் பிரசாரம், நடமாடும் நூல் விற்பனை யகம், பொருட்காட்சி அரங்கில் இயக்க நூல்கள் விற்பனை ஏற்பாடு, நாடெங்கும் மகளிர் மட்டுமே பங்குகொண்ட பிரசாரப் பாங்கு அறக்கட்டளை சொற்பொழிவு, அயல் நாட்டில் பிரசாரங்கள், ஆசிரியர் பகுத்தறிவுப் பிரசார வகுப்புகள், ஆசிரியர் பகுத்தறிவு அணி உதயம், சந்தைப்பிரசாரத்திட்டம் இன்னோரன்ன காலத்திற்கேற்ற முறைகள், கருத்துப் பிரசாரத் தில் கடல்போல் வீச்சை ஏற்படுத்தி உள்ளன.

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா தஞ்சையிலே நடப்பதையொட்டி, நாட்டின் முக்கிய நான்கு பகுதிகளிலிருந்தும் கருஞ்சட்டை தோழர்களின் வழிநடைப்பிரசாரத் திட்டதுக்கு ஏற்பாடு செய்துள்ள வித்தை விவேகமானது மட்டுமல்ல, பாமர மக்கள் மதியிலும் கருத்துக்களைப் பக்குவமாகப் பதியம் போடும் நல்ல கலையாகும்.

## இளைஞர் இயக்கம்

புரட்சிகரமான கருத்துக்களை ஏற்று சுமந்து செல்லும் தோள்கள் இளைஞர்களின் எஃகுத் தோள்களே !

கழகத்தில் இளைஞர் பிரிவை ஏற்படுத்தி, அவர்களை முடுக்கிவிட்டதன் மூலம், ஏராள இளைஞர்களை இயக்கத்தின் பால் ஈர்த் துள்ளது. அந்த சிங்கக்கூட்டம், சென்னையில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவிலே அணிவகுத்துச் சென்ற காட்சியைக் கண்டு வயிறெரிந்த அரசியல்வாதிகள் எல்லாம் கூட உண்டு. ஆயிரம் 'உண்மை' சந்தாக்களை சேர்க்கும் ஆக்கரீதியான பணியில் இளைஞர் களை இறக்கிவிட்டது நல்ல தோர் பயிற்சிக்கு ஏற்பாடாகும்.

இளைஞர் இயக்கக் கோரிக்கை வாரம் நடத்தி, இளைஞர்களுக்கு இன்றைய தினம் ஏற்படவேண்டிய சிந்தனையை நோக்கி அவர் களைச் செலுத்தியது, கோடானகோடி பிற் படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையே ஏன் ? என்ற அர்த்தம் வாய்ந்த துடிப்பு மிக்க வினாவை அவர்கள் மத்தியிலே எழுப்பியது—இவை எல்லாம் தேவையானது மட்டுமல்ல—ஒரு சமூகப் புரட்சி இயக்கம் மேற் கொள்ள வேண்டிய கடமையுமாகும்,

''ஸ்டேட் பாங்கிலே பார்ப்பனர் கொள்ளை !'' என்ற 'விடுதலை'யில் வெளி வந்த தொடர் புள்ளி விவரக் கட்டுரைகள் பார்ப்பனரல்லாத இளைஞர்களின் மத்தியிலே பொறி கிளப்பியுள்ளது.

## போராட்ட முறைகள் !

''பிராமணாள்'' பெயர் அழிப்புப் பணியை அறிவித்துப் போராட்டத்திற்கு வாய்ப்பு இல்லாமலேயே பார்ப்பனர்களைக் கொண்டே அதை அழிக்கச் செய்த பாங்கு ''பலே பலே !'' என்று பாராட்டும் தகுதிக்கு உரியது. உணவு விடுதி உரிமையாளர்க்கு முறைப்படி எழுதியும், அவரை நேரில் சந்தித்தும், சுமுகமான முறை யில், வேண்டிய வெற்றியே தவிர, வெற்று ஆர்ப்பாட்டம் அல்ல என்ற முறையிலே அணுகியது அபாரமான பொறுப்பும் பக்குவமும் வாய்ந்த புத்தி நுட்பமாகும்.

அதே நேரத்தில் அன்னை நாகம்மையாரை அவதூறாக எழுதிய ஆஸ்தான கவியை எதிர்த்துப் நேரிடையாகவே அறப்போரில் குதித்து, சிறைத் தண்டனையை ஏற்றதன் மூலம் நாட்டு மக்கள் மத்தியிலே நல்லாதரவை யும் அனுதாப உணர்வையும் உண்டாக்கியது.

## பசுவதைத் தடைச்சட்ட எதிர்ப்பு

இந்தியாவிலேயே பசுவதைத் தடை சட்டத்தை எதிர்ப்பது என்பதை மக்கள்



பிரச்னையாக்கிய பெருமை நமது தலைமைக்கே உண்டு. அனேகமாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஒரு மேடையிலே கொண்டு வந்து நிறுத்தி, இந்திய நடுவணரசின் இந்து மத வெறி வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

நாட்டு மக்களின் சிந்தனையை இப் பிரச்னைபால் ஈர்க்க நாள் குறித்து, நாடெங்கும் ''மாட்டுக் கறி உண்ணும் விரதம்'' ஏற்பாடு செய்த நேர்த்தி இருக்கிறதே, அந்த நேர்த்தி யில் அன்று அய்யா அடையாளங்காட்டிய புத்திக் கூர்மை பளிச்சிடுகிறது !

## இந்தி எதிர்ப்பு மாநாடு

ஆபத்து நேருமுன் அபாய சங்கிலியை உரிய நேரத்தில் இழுப்பது என்பதுதான் புத்திசாலித் தனமாகும். சென்னை பெரியார் திடலிலே அனைத்துக்கட்சித் தலைவர்களையும் ஒன்று சேர்ந்து இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தி தமிழ் மண்ணின் குரலை உரியவர்களுக்கு உரிய நேரத்தில் எட்டச் செய்திருக்கிறது !

## பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக்குரல்

பிற்படுத்தப்பட்டவர்களை இடுப்பொடியச் செய்யும் தமிழக அரசின் புதிய உத்திரவுபற்றி செய்தித்தாட்களில் வந்த சில மணி நேரங் களிலேயே, பிற்படுத்தப்பட்ட சமுதாய தலை வர்களை எல்லாம் பெரியார் திடலிலே கூட்டி, உடனடியாக அதுபற்றிக் கருத்துத் தெரிவித் தும், சேலம், சென்னை ஆகிய இடங்களில் அனைத்துக்கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட ''பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாடு'' நடத்தியும் துல்லியமாகவும், துரிதமாகவும் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, அதற்கான பரிகாரங்களில் ஈடுபட்ட பரிபக்குவம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நேரடி ஒளி கிரணங்களில் கிடைத்த வளர்ச்சியாகும்.

கட்சி மாச்சரிய சிறைகளை உடைத்து இனநலன் என்ற பொதுவுணர்வுக் கண்ணோட் டத்தோடு அனைவரையும் ஒன்று சேர்க்கும் தாய்வீடு திராவிடர் கழகம்தான் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

மனந்திறந்து அனைவரும் பாராட்டும் அளவுக்கு நமது தலைமையின் மனந்திறந்த செயல்பாடுகள் அமைந்துள்ளதை எண்ணி, இயக்கத் தோழன்-தொண்டன் ஒவ்வொருவரும் தலை நிமிர்ந்து ஏறு நடைபோடலாம் !

தந்தை பெரியாருக்குப் பிறகு இயக்கம் இருக்குமா என்ற வினா எழும்பிய காலம் உண்டு! தந்தை உருவாக்கிய இயக்கம், அவரது மறைவுக்குப்பிறகும் மகத்தான சக்தியாக எழுந்து நிற்கிறது. இந்நிலை ஏற்பட்டதற்கும் காரணம் தந்தை உருவாக்கிச் சென்ற தலைமை தான் !

இழைகூட நுழைய முடியாத அளவுக்கு நாம் கடைபிடிக்கும் கட்டுப்பாட்டின் நெருக்கம் நமது தலைமையின் மேன்மை மிகுந்த வழி காட்டுதலினால் பெரும் வெற்றிகளை நமது இனத்தின் காலடிகளில் கொண்டு வந்து குவிக்கும்.

கட்டுப்பாடு என்றால் கருஞ்சட்டை, கருஞ்சட்டை என்றால் கட்டுப்பாடு என்கிற பொருள் அகராதிகளில் ஏறும் வண்ணம் ஏறு நடை போடுவோம் !

வாழ்க பெரியார் !

*

## பார்ப்பனரில் 3 பிரிவுகள்

பார்ப்பனர்க்குள்ளாகவே தங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு அரசாங்கத்தை எதிர்க்கும் தேசியம் என்னும் பேரால் ஒரு பிரிவும், சர்க்காரை ஆதரிக்கும் உத்தியோகம் பார்ப்பது என்னும்



பேரால் ஒரு பிரிவும், மதங்களைக் காப் பாற்றும் வைதீகம் என்னும் பேரால் ஒரு பிரிவுமாகப் பிரிந்து, மூன்று துறைகளையும் சுவாதீனப்படுத்திக்கொண்டு அவைகளுக்குத் தாங்களே கர்த்தர்களாய் இருந்துகொண்டு மற்ற மக்களை எந்தத் துறையிலும் முன் னேறாதபடி தொல்லை விளைவித்து வருகிறார்கள்.

—தந்தை பெரியார்
''குடி அரசு,'' 14-7-1935




# PERIYAR AND HIS GREAT ACHIEVEMENTS

Pro. A.M. DHARMALINGAM M.A., L.LM

The centenary of Periar's birth anniversary has been marked by a rise in the propagation of his revolutionary mission and an evaluation of his great achievements. Efforts to translate some of his speeches and writings into Kannada and Hindi have already materialised. Six small books in Kannada, being translations of Periar's works have been published by the translator, Mr. Velayudham of Bangalore, alias VEMANNA, who has been publishing his translations in Kannda in a liberal weekly of Bangalore, by name, JANA-PRAGATHI, whose editor Mr. Kalle Sivothama Rao is a great admirer of Periar. A Hindi knowing Tamil scholar has translated some speeches of Periar into Hindi and the same has been published by Mr. V. Anaimuthu, President of the Periar Equal Rights Movement and widely circulated in the Hindi States of Bihar and Uttar Pradesh. The birth centenary of Periar has been celebrated of Patna and other cities of Bihar under the lead of Mr. Ram Avadesh Singh, M. P. during September and October 1978. It is reported that over 50,000 posters containing a picture of Periar and his main slogans in regard to rationalism and the upliftment of the Backward Classes and other weaker sections of the society, were pasted all over Bihar, followed by speeches, rallies and demonstrations. The movement for reservation of seats in colleges and jobs in the public services in Bihar took an aggressive and favourable stand during the centenary celebrations in this northern State that had not known such demonstrations ever before A few leaders are now openly proclaiming in the north that Periar's philosophy and the mission of his life are as much relevent in the North as in the South.

For the first time in the annals of the Capital city of India, Periar's birth centenary was celebrated in Delhi on the 23rd March 1979, followed by a rally of the backward classes with delegates drawn from Tamilnad, Kerala, Bihar, Uttarpradesh, Haryana, and Delhi. A memorandum was presented to the then Prime Minister, Mr. Morarji Desai by the All-India Backward Classes, ST and SC and religious minorities Federation demanding among other things, extention of reservation for the STs and SCs beyond 1980, reservation for the backward classes and the minorities in proportion to their population both in the Centre and the States. All these activities had their base in Periar's teachings.

Periar's life work has a special and unique significance in that he has been the only great leader who transformed the outlook of his people, particularly in Tamilnad, during his own lifetime and saw to it that his own followers seized power and formed a government in Tamilnad.

Englishmen and other Europeans advocated rationalism under the guise of agnosticism or deism under great pressure of the orthodox theists and to some

extent succeeded in establishing freedom of expression. Voltaire, (1694-1778) though he believed in God, did not support organised religion, found many loopholes for attack on Catholicism, failed to believe in immortality and the Bible and the priesthood. He shook the power of the Catholic Church in Italy France and Spain and was in large measure responsible for the enlightenment and humanism of western Europe in the second half of the 18th century. But the rationalists could never go so far as to capture government in France. Charles Bradlaugh (1833-91) the great atheist of England braved many fights with the clergy and the orthodox and fought the establishment through his paper. THE NATIONAL REFORMER against all restrictions on the press and speech and did succeed in getting some of the statutes repealed. One of the Acts of Parliament passed before his death repealed the laws against disbelief, which prevented him from entering Parliament though elected twice by the people. Bradlaugh roused the intellectuals and ushered in the age of reason, but the church and the State stood the shocks though compelled to revise some of their obsolete notions.

Jeremy Bentham, the most outspoken atheist of England (1748-1832) through his voluminous writings made himself responsible for a hundred reforms in the laws of England which had been stagnating in old notions weighted against the poor and the illiterate. From parliamentary reforms to jail reforms, from women's liberties to workmen's amelioration, Bentham laboured hard to make England modern. His atheism was primary for all his attacks on religion and orthodox society and though the people resisted his radicalism during his lifetime, it bore fruit after him. However, he saw to it that the first Reform Rill that enlarged the franchise of English people was passed into law in 1832, the year of his death. There were noble lords to follow him and initiate the reforms, but here again the rationalists could not sweep the parliament. In fact as late as 1907, it was not possible for Bertrand Russel (1872-1956) to get elected to the Parliament because of his rationalist beliefs. These are a few cases to show that some great rationalist minds that changed the thinking of the people and made them scientific, could not affect the conservatism of the governments.

Robert Green Ingersoll (1833-1899) the great American rationalist and agnostic, and one of the greatest lawyers of America, had a remarkable knowledge of human affairs and never-failing tact, resourcefulness and common sense. He became an agnostic in his rejection of the problematical. He asserted that ideas about god and immortality are so speculative and arbitrary that negative opinions are not merely defensible but legitimate. He declined to go beyond the known and the knowable. It is said that he revolutionalised American theology and that as a result of his attacks on god, religion, and theology, doctrines that were held to be sacred and certain, came to be held by the intellectuals either doubtingly or rejected altogether. American Christianity, is steadily though reluctantly tending to regard the Bible as man-made and therefore full of mistakes, exaggerations and misconceptions about nature and realities and Ingersoll is responsible for this change in attitudes. He concentrated his severe attacks on the monstrous doctrines of hell and heaven. Yet in 1868, Ingersoll was defeated for the Governorship of the Illinois State by a man who stood for election for the very purpose of defeating an infidel. His impact on the politics of his country was therefore not very significant, unlike that of Periar, who in his own lifetime has the great distinction of seeing his rationalist followers occupy political power. Even the orthodox people are not scared of agnostics and atheists who seek the popular vote at the periodical elections, because of Periar's tremendous propaganda for rationalism and self-respect.

It was left to Periar in the twentieth century to witness the fruition of his half century labour for self-respect and rationalism, in the seisure of political power by his close followers in spite of the fact Periar opposed entry into the legislature. He was always of the opinion that political power corrupts people and makes them soft pedal of ignore rationalist principles in their anxiety to play to the gallery and win their votes But Annadurai and his friends were convinced that the stage has been reached in Tamilnad for the self-respectors and rationalists to take to politics and seize power in order to translate some of their principles into practical work. Barring the communists, nowhereelse have non-communist rationalists, came to political power by the democratic processes of propaganda and election.

As one of the first acts of the D.M.K. Government, Annadurai got the Hindu Marriage Act, 1956 amended to provide for the validity of Swayamariyadai Tirumanams or Self-Respect marriages, which had been introduced and popularised by Periar for the last fifty years. Free from religious ceremonies and devoid of meaningless rituals, Periar made the marriage a purely secular and simple one in which the bride and the bridegroom exchange garlands preceded by the garlanding or tying of the Thali on the bride's neck. This simple ceremony is followed by a speech from the Chairman of the occasion to explain the significance of the reform. Alongside this secular type of marriage, Periar's propaganda for self-respect, gave rise to another type of marriage in which the deity is invoked and some essential ceremonies are followed, but which eliminates the Brahmin priest and the Sanskrit language. Some Tamil pandit or social worker performs the marriage in a traditional green pandal. Chief Minister Annaduari declared in the Legislative Assembly that the Amendment to the Hindu Marriage Act was a tribute to Periar paid by the rationalist government that came to power for the first time in modern history. The government was not only rational, but also Tamil Though Tamil has not yet succeeded in becoming the official language of the State in all spheres: the lower levels of the administration have made wide strides in Tamil.

Sanskrit is yet to be eliminated from the temples in Tamilnad in order to enthrone Tamil and until this is done, Tamil will not find its proper place in the land. However, the present AIADMK government of Mr. M. G. Ramachandran, have reformed the Tamil script on the lines long indicated by Periyar and effectively followed by his paper, VIDUDHALAI and other publications. This reform has been enthusiastically welcomed by the scholars and the people and it is certainly a tribute of the new government to the teachings and memory of Periar. *


*With best compliments from :*

**DAS & BROS.,**

Dealers in Surgical and Laboratory Equipments

**20, Naineyappa Maistry Street,**

**Madras-600 003.**

**Rep : V. GOPAL DAS**

# PROPHET OF FREEDOM

— M. PRABHA

Freedom is Amritha itself,
Freedom is life itself,
Thraldom, for those who have
self-respect
Is more fearful than death.

(*Kumaran Asan*)

Let us put a question: What would have been the present condition of Tamil Nadu if Periyar was never born? And, in Kerala, what would have been the present condition if Narayana Guru was never born? Narayana Guru was born as early as in 1854, what was the condition of man and of society at that time? Periyar was born a hundred years ago and what was the social structure then, how did man live, what the pattern of human behaviour, what were the norms and principles that the people observed in their day to day life, how did people approach social and human problems— these are interesting questions indeed. We know that there was not much difference. Kerala then consisted of two Indian States, Travancore and Cochin which were ruled by two Hindu Maharajas. And there was also the District of Malabar which formed a part of the Madras Presidency. Brahmins used to be the advisors of the Hindu rulers and they were under the impression that it was their primary duty to carry on the administration in strict accordance with the commands contained in the Smritis etc. The modern humanist ideas were never to have any influence in matters of administration. In other words, the Hindu traditions, customs and practices were followed scrupulously People were grouped into castes and sub-castes: one's fate was determined by the accident of birth which put him in one caste or another. You had privileges and rights if you were born as a member of the so-called upper castes. If not, you would have only duties and obligations. You could not dress like those belonging to the higher sections of people. You cannot live near those persons. You cannot build houses as those persons used to build. You cannot cook the dishes that those persons cooked. You cannot walk along certain roads and streets and lanes. You cannot worship the temples where they worshipped. You cannot worship the gods whom they worshipped. You connot approach them, you should not even be seen by them. Distance used to be measured not by yard or some other measure, but by the distance of pollution. That is to say, a Nair should not approach a Namboodiri beyond a certain distance, and a member of another caste which is supposed to be inferior to the Nair has to keep a longer distance and so on. If you go beyond that distances, they are polluted, and they will have to canduct some ceremonies to purify themselves and those who pollute them will have to pay very dearly for that. And note, it was not only the Namboodiri who would be polluted; excepting those who were in the lowest rung of the ladder of caste every body else will be polluted. And every one had ot observe the pollution-distance with respect to others. Over and above these the lower-caste people could not get themselves educated. And even if one manages to get educated he can never aspire to be appointed under Government. Some hundred years ago, some members of the lower castes appealed to the Travancore Government praying that their children may be admitted to the Government schools and the reply given was to this effect: "If they are to be admitted the Brahmin boys and others may leave the schools, so the lower-caste boys cannot be admitted." This would show how anxious the Government were to safeguard the interests of the Brahmins and what concern they had for the welfare of the lower-caste people. All these would show in no uncertain terms that the low-caste people enjoyed no rights, at all. They had only sufferings and miseries, and they had to suffer because they did not behave well during their previous births! we Know that the Hindu belief is that one will have to be born in a lower-caste for the sins that he commits in a particular birth.

The position in Cochin was the same, probably in a little more agravated form because the Namboodiris were more powerful there. In the Malabar area too this Brahmin domination was there, but was not so acutely pronounced; obviously because of the British influence there. While the Maharajas were under the impression that it was their duty to carry on administration on the advice of the Brahmins as enjoined in the Smritis, the Britishers had no such approach; of course, their staff consisted mainly of Brahmins and their influence was no doubt, not negligible. The British policy itself was not to interfere in matters of religion except when they found certain practices inhuman.

In the other parts of the Madras Presidency the position was more or less like that of the Malabar area. But there was a very substantial difference, the Tamil Brahmins were a powerful force in the administration. Their Influence was all-pervasive even in the public sphere. Kathleen Hess, in her book entitled 'The Future of Religions' would say that in the history of the world you can never see another instance where a community managed to maintain its importance uninterruptedly for such a long period. And how was that? They were shrewd enough to see that all other people were deliberately kept in darkness and ignorance; education was denied to them, and to the Brahmins everything good was considered to be theirs. They had, for their support all the Vedas, Puranas, Smritis and Srutis. All these extolled the Brahmin, and he was the god that walked on the earth They created a cloud of superstition in the minds of the people and made them bow to the Brahmin in the name of fate, and the so-called dharma. Of all the dharmas, varnasrama dharma which had the sanction of the Gita was the most important and the common man was made to believe that any breach of the duties laid down in the name of caste would entail eternal punishment; it was a sin to question the dictates of the vedas etc; it was the paramount duty of men to bow his head before all that is said in the sacred books. In other words, we were having in India what we may call the Brahmin imperialism before which even the British imperialism which involved the worst form of tyranny would fade into insignificance. It may also be noted that the cruellest form of exploitation was being perpetrated in the name of religion and caste. The fact that even today, after we have been enjoying the benefit of democracy and education and ancillary advantages, men are cowed down by ancient beliefs, would show what a mighty power the Hindu religion was excercising over the common man.

I remember what Nirad Chaudhuri was saying about the Hindus: "Life-long observation has convinced me that there is a streak of insanity in the Hindus and that nobody will arrive at a correct appraisement of Hindu private and public behaviour on the supposition that they have a normal personality this madness lurks within their ordinary workaday self like a monomania and the nature of the alienation can even be defined in the psychiatrist's terms it is partly dementia praecox and partly paronia. In all Hindu activities, especially in the public sphere, can be detected clear signs of either a feebleness of mental faculties or a perver-

sion of them" (Coninent of Circe. p. 127) We can easily see that this madness is the result of the absurd beliefs that exist in the minds of the people and it is common knowledge that absurd ideas make pepole abnormal. As in the case of every other religion, in Hinduism as well there are umpteen outmoded and unscientific ideas which control their pattern of thought and behaviour. They negate the human values which rationalist thought envisages and create numerous problems which make human life well-nigh miserable. And we are aware that superstitions are the basic structure of all religions; the tenets and beliefe are strongly coloured by them and they also corrupt the human mind.

We have here to try to learn what precisely is superstition. Voltaire in his his Philosophical dictionary (quoted in The Psychology of Superstition by Gustav Jahoda) would say as follows: "It is hard to mark out the boundaries of superstition. A Frenchman travelling in Italy finds almost everything superstitious, and is hardly wrong. The Archbishop of Canterbury claims that the Archbishop of Prais is superstitious; the Presbyterians levy the same approach against his Grace of Canterbury, and are in their turn called superstitious by Quakers, who are the most superstitious of men in the eyes of other Chrisitians." There is much truth in what Voltaire says because to everyman his own superstitions are not at all superstition. If we would attempt to define, we can see that a superstition is an irrational or unfounded belief in general; or the unreasoning awe or fear of something unknown, mysterious or imaginary; a tenet, scruple, habit etc founded on fear or ignorance. When we proceed on this basis we can see that there are many practices, customs, habits etc which are obviously without any basis We have lucky days and unlucky days, auspicious moments, rahukalam and gulikakalam, lucky periods of life and unlucky periods, people run after palmists, soothsayers, astrologers, miracle men, babas, we consult varaphalans and horoscopes. And for the matter of that, recently the various contesting political parties and their men were offering poojas, performing homams and what not to propitiate their dieties for helping them to continue in power or get into power as the case may be. (What a pity that the fate of more than sixty crores of Indians is decided by these types of people !) Likewise we find that what we call 'god' is only a figment of imagination and the religions are only some artificial structures built upon the foundation of 'god', and caste also is the creation of man. All these are superstitions.

There is a good deal of resemblance between the approaches of Narayana Guru and Periyar. Narayana Guru was leading the life of a recluse or sanyasi to begin with, and in his later days whatever he was saying was always noted for its rationalist content. Periyar did not become a religions man; but in his 25 th year he happened to develop a rather religious trend and went about in North India, visited some temples and later he came back and began interesting himself in social and other activities. It is well-known that travel helps man to see life at close quarters as also from different angles. What one can learn from such travels goes a long way to mould his character and shape his perspective. As we know everyone is very much influenced by his home, his parents, elders, teachers etc. What is taught by them takes deep roots. That is how we find our people going about with a good deal of superstitions. Some people have a pronounced tendency to look at things with an open mind. They alone can understand man and his problems in a wider ambit. This tendency has for its basis a spark of genius which kindles the spirit of freedom. And this freedom is the pith and substance of human progress.

Every thinker has pointed out in abundant measure that individual excellence and sublimity of character which constitute the personality of an individual owe much to what is known as human values. Our society will become ideal only when all our people are able to imbibe at least a little of the human values. The depravity of our national character and the abject poverty of individual morality are due to the lack of these values. Those who have cared to study the life and contributions of Periyar will easily see that he was inspired by a unquenchable spirit of freedom, that he was a champion of liberty, he was an unsurpassed prophet of freedom.

All those who knew Periyar, all those who have been inspired by him, and all those who have cared to guage the depth of his profound love for mankind will at once see that all his activities did have as his mainspring the spirit of freedom. All great men have extolled the values of freedom, great poets have sung its virtues and so, it is in the fitness of things if we try to examine it in some detail.

Freedom is the greatest of the possessions of mankind. If we glance through the history of mankind we can see that consciusly or not, it was always fighting for that. That also shows that there have been forces which always were working in such a way as to curb it if not totally deny it. Even today we have such forces and they are countless The desire of man to keep others in bondage has been an eternal phenomenon, and the methods and devices adopted therefor have been countless. The most important among them is the freedom of thought because it is from this freedom that all other freedoms sprout. No country can progress unless and until the people of the country become free. We are aware that eventhough India became free-free from foreign domination-the people have not yet become free. Of course, our Constititution provides for certain rights: but, they will be of no use at all unless the people themselves are made aware of the values of those rights.

The expression freedom is not easily defined, but we can describe it. When I say that I have a certain freedom what it means is that it is not subjected to the arbitrary will of another In other words, another person cannot restrain me from excercising that right. Thus it relates to a relation of one man with other men. Robinson Crusoe, when he was alone in a solitary island cannot be said to have any right, because there is no restraint at all from any quarter. Likewise, it relates to some matter. As we know, we have the freedom of thought, expression, freedom of movement, freedom from arbitrary arrest, freedom of religion, freedom to excercise franchise; in some countries, the people have the right to bear arms and we know that Colonies claimed the right to rule themselves or by their own laws. We also speak of personal freedom, political freedom and freedom from want, freedom from fear and so on.

All these are relevant and important. In the early stages of society these freedoms were never recognised. It was only as a result of the growth of social consciousness that men developed the ideas of freedom: social and political philosophers found from experience that society will stagnate and injustice prevail if men are not allowed certain freedoms. They could realise the value of constructive thought and useful action. We want the people as a whole to be happy, the concept of happiness changes from time to time, and that means that people should have the freedom to act in accordance with the ideas they consider as right. May be, they commit mistakes, but all the same, it is from the activities of human beings that knowledge and experience accumulates. Civilisation and culture can never be had unless we examine the values and utility of knowledge and experience. Our personal affairs, social activities and political matters are of

great moment, particularly becuase our lives have become more and more intertwined with those of others. We had our conservative ideas, the onslaught of liberal thought has pulled down many of them and created in their places ideas which we find more useful or less harmful.

In India we know that religion has been excercising its pernicious influence resulting in slavery and backwardness. India is notorious as a land of religions. Foreigners have wondered how people could tolerate such things: of course, they also have their religions, but in India the position is miserable. It has always crushed the spirit of reason, which is the elan vital that throbs in every constructive change. Freedom and reason are inextricable are together, change in man, and social progress kind always complled and guided by reason. Also controlled by it. Mankind never had a protector other than reason. Reason points out to man what is good and what is bad, what is wrong and what is right, what is proper and what is improper, what is useful and what is useless. Reason has played and it will play a very important role in shaping society: for the matter of that, our ideas regarding democracy, socialism, secularism and so forth have their basis in reason and nothing else. But for reason, man would have continued to be an animal. It was when the primitive man lighted the lamp of reason that he began seeing his position in the Universe; he began marching forward. Reason is the most precious possession of man. We can build an ideal society only on the basis of reason.

Periyar was well aware of this. Whatever he said, whatever he did was inspired by the spirit of reason. Only those who accept the supremacy of reason can rise to his full height as a man. He could. That is why he was universally acclaimed as a great leader-Periyar. In his book entitled Thamizhar Thalaivar, Thiru Swami Chidambaranar has quoted the opinions of very many eminent persons about Periyar. Almost all of them would in clear terms say what a hard-boiled rationalist Periyar was.

We respect Periyar. It is not blind-respect. We try to understand him. We can see, when we look at him with a critical eye, that the spirit of freedom built up on the strong foundations of reason was his strength. He never wanted us to be slaves. So what is our duty on this occasion? To take a vow that we will always hold aloft the lamp of reason and dispel the darkness that shrouds us. Let that lamp burn eternally and shed its powerful light so that the world may blossom into an ideal place where all human values rule. *

"Best wishes for the Centenary Celebrations of Thanthai Periyar"

**The Tiruppur Cloth Printing Mill,**

22, Thiru Venkatasamy Chetty Street,
Erode-638 001.

**Specialist in:**
All kinds of Dyeing, Screen Printing, Bleaching, Processings of all varieties and export varieties also.



# THE AYYA I HAVE KNOWN

— Dr. T. JAYAVELU

Pre-independent India was a coglomerate of vast groups of people ranging from Stone Age Culture to mostly Agricultural Civilisation. However there were islands of advanced culture introduced or imposed by the West. The Islamic rule of over 600 years and the British rule of over 200 years have done hardly any good to improve the situation. It is in the British phase of political life that India assumed the political extant that it is today, held by force of military or missionary combinations. The outcome of this has been some political awakening with much of emotionalism. Otherwise the cultural complex of the various componants of the Indian Society has been little altered. The western type of education had been the privilege of a few of the upper crest of the society, the bulk of it going to the socially dominant caste the so called "brahmin."

A country such as this was inherited on independence with middle-age traditions, and a peculiar caste system that was unique in itself, known to the world only during the Mosaic times and long forgetten by the west. This deep rooted caste system or "varnasrama dharma" as it is known dearly to the caste Hindu, surviving over two thousand years of history, has a strangle hold on the people unshakable even to this day. The caste structure with the "brahmin" on top as the intellectual with high cultural and social advantages, and the "sudhra" or serf or slave at the bottom had its beginning in the pre-buddistic eras. Buddhism and later Vaishnavism have done little to metigate this evil. The culture complex of the caste groups have been defined and made inalianable by birth; the "brahmin" apportioning to himself the best of education and material prosperity; the "sudhra" being given the ignominy of untouchability and isolation with attendant offer of jobs of degrading and inhuman nature. It was in the order of things that the "brahmin" and others in the descending order of the caste structure have always attempted to maintain their special prerogative in the society to the detriment of the castes below. The caste system permiating the warp and woof of the social, cultural and economic pattern of the country has completely stagnated the progress of the country, and left us as interesting field specimens of anthropological curiosity.

The democratic system and adult franchise that we adopted on independence have only aggravated exploiting of the caste system to the advantage of the already secure castes. There was hardly a leader on the scene who had a fair and clear understanding of the problem and who could approach it with out a care for personal or political gains.

But one there was, and that fortunately in Tamilnadu-E. V. R. called by us all claiming king'ship as "AYYA" or father. Sage like in appearance and human even to the lowly he was a selfless social leader of the highest order. To the last day he shunned politics and power and suffered misery on this account. The band of workers he created are equally selfless and daring. His one unaltered aim in life was to see

equality for all in a casteless society. This exposed him to relentless criticism from a lot of pseudo-intellectuals whose main obssession was religion and caste.

My association with him has been unfortunately short, less than a decade. I found in him a profound thinker like Bertrand Russell with an amazing simplicity of understanding of the complex problemes of the Indian scene. His main attack on "puranic" gods was deliberate and purposeful. He well realised that the monotheistic Upanishadic god is for highest intellectuals of the "brahminic" order, and the polytheistic gods of the "puranic" group with all the human weaknesses and ritual fanfare, for the mass of cultural backwash. He was aggrived that even in the matter of god there was inequality and apportioning according to caste. He openly declared war against such a system of god, advocating and demonstrating iconoclasm. His warfare on "puranas" and "ethikasas" was a natural corollary. In short it was a fight against ignorance and senseless prudery of tribalism.

As a great humanist his wrath on untouchability and isolation was mighty and justified. He often repeated that just as a deep seated disease required drastic measure for a cure, so also a deep seated social evil. This bare fact has been hardly understood by the shallow thinking pseudo-intellectuals. How can it be otherwise when the country is full of Bhavanthams who believe in "babbas" and ballistics unbiased. Ayya was Paine and Dickens rolled into one. Yet the pseudo-intellectuals claim that he had no appeal to them. This is thinking in vacuum. Their main fear has been that their secure fortress of castism and all the built-in safty system of gods, mythology and attendant philosophy are being smashed to smithereens and they are helpless to salvage the wreckage.

Ayya realised early in his campaign that simple eloquence of delivery of his thoughts to the masses will not be permanent unless a foundation in education is built. Education provokes thought, and thought dispels obscurantism. His valient efforts for free mass education and safe-guards in job security have yielded remarkable results. Castes that were condemned as sub-human have shown the vigour to disprove and shake up the very foundations of the will of god to keep them in permanent ignorance and poverty. Castes of intermediate order have equally thrived and proved their mettle. Today there is a threat to the continuance of these safe-guards in the name of economic imbalance The very people who talk of this imbalance have not raised a little finger when the mass of people in the name of caste have been kept in abysmal ignorance and poverty. On the contrary they prospered on it, and but for Ayya they would have continued to enjoy it. Extinction of caste and leveling of culture are certainties in the next few decades if the safe-guards are continued uninterrupted.

It is well known in history that nations that practiced slavery did not allow the social right of marriage to a salve. This is what exactly is being practiced on the "sudhra" even to this day. It the Hindu marriage the "sudhra" mala (female is of no consequence according to the Hindu) is temporarily elevated to the higher caste of "vaisiya" and married by a "brahmin" priest. This the only valid marriage to a "sudhra" and it had the backing of law. This provoked the righteous indignation of Ayya to take cudgels against the evil. He performed simple, inexpensive but dignified "self respect" marriages which during his life time had the legislative approval.

Yet another thought provoking saying of Ayya is his reference to the Tamil language as the language of the tribal-"kattumerandi mozhi". This caught the pundits in the raw. A little thinking would have put things in the correct perspective. Should Tamil, a great language with immense classical literature lie supine and indifferent to the evils of caste and religion? The vigour of a language is the index of the vigour of the people. His main task has been to vigourise the dead-alive people and their language. His advocacy on linguistic reform is revealing.

I have heard lamentations from the north that they do not have one like Ayya in their midst to voice their dumb millions. I think this is the greatest compliment that could have been paid to him. I am proud to cherish his memory put dread to go to his memorial to remind me that he is no more. *



*With Compliments from :*

VASANTHI AGENCIES,

35, KANDAPPA ACHARI ST., PURASAWALKAM,

**MADRAS - 600 007.**

(Phone : 661563)

*Stockists of* : HIGH QUALITY PRINTING INKS.

WILSON, NORTON, GPS, ANGEL.

PROMPT DELIVERIES !

*With best compliments from :*

Tel : "RICE"

Phone { Office : 4072 / Resi : 4478

CST. No. 8/1-7-57

TNP & RDL. No. 230
TNFDL. No. 27
SL. No. 11
RC. No. 310029
Wheat L. No. 9
TRMI. (R) L. No. 68

**M. G. ANGAPPA CHETTIAR,**

**Sri Jayalakshmi Rice and Oil Mills**

**POST BOX NO. 54.**

**168, SATHY ROAD, ERODE-638 001.**




# GREAT ATHEIST REVOLUTIONARY

Dr. G. VIJAYAM M.A., Ph.D.,

Periyar E. V. Ramaswami was one of the greatest leaders of our country. His greatness lay in the fact that he was a practical man who moved people along with him to the path of rationalism and atheism. He was not an armed chair philosopher. He was a man with a vision and at the same time devised programmes to create new awareness among people to fight injustice and oppression. The Centenary celebrations are fitting tribute to the man who waged a relentlees war against religion, old customs, superstitions and exploitation.

Periyar went to the root of human misery in the society. He clearly realised that belief in god and religion were responsible for perpetuation of injustice, oppression and inequalities. Hence, he took up the challenge to fight these inequalities and evils so that people can be liberated from centuries of bondage and would lead to a life with dignity.

Periyar reminded people that religion is slavery. He also said that fear was the reason for religion. "No religion is without superstition. Superstition is belief in miracles and supernatural", he declared. He had also stated that "no religion can exist according to reason. Religion means you accept superstitious beliefs."

In reality, god was man's imagination. Soon the concept of god came handy to the privileged sections of society to perpetuate inequalities. The fear of hell and the lure of haven turned people other wouldly and kept common people under subjugation. Thus god and religion turned into instrument of oppression in the hands of upper castes. 'Religion is opium to the people. It destroyed reason and their innate abilities. Thus man has become a slave of his own creation.

Periyar in his youth witnessed how religious institutions were deceiving people. His wanderings in the Himalayas and in the holy places of North India gave him a greater insight into the role of religion in increasing human misery and poverty of the common people. With this knowledge, not only Periyar moved away from religion once for all, but also it became his life mission to expose the misdeeds of religion.

Periyar decalred in unequivocal terms the dangers of religion: "Roots of evil in society are to be found in religion. Religion, or superstition, has prevented the development in society." With this warning Periyar decided to give a shock therapy to society which was in deep slumber. The programmes of Ravanalila, garlanding of idols with chappals, burning of Manusmruti were symbolic. They intended to create awareness among the religious people that they should give up blind faith and that they should adopt a rational path.

Phone : 445345

*Dealers in* :

Philips Radios
Godrej Steel Furniture
Type writers
Godrej Refrigerators
Prestige Pressure Cooker
Bharat & Solidaire T V
Usha Fans & Sewing Machines
Sumeet Mixers
Chandra Wet Grinders
Vijay Appliances
Syscom Automatic Voltage Stabilizer
Racold Appliances Sofa Cum Bed
Office Furniture

**HAPPY HOUSE**

**574-(31-33) ANNA SALAI**
**TEYNAMPET KAMARAJ BHAVAN, MADRAS–600 006.**

*With best compliments from:*

**GANESH MEDICAL STORE**
**279-A, Kamarajar Road,**
**ATTUR-POST, SALEM-Dist.**

**STOCKIST FOR :**

1. GLAXO LABORATORIES
2. PFIZER LIMITED
3. I. D. P. L.
4. SAN DOZ
5. CITADEL FINE PHARMACEUTICALS LTD.,
6. EAST MEDIA PHARMACEUTICALS LTD.,
7. BURROUGHS WELLCOME
8. MINIMIX PHARMACEUTICALS (P) LTD.,

Periyar not only opposed religion, but gave great importance to science and scientific approach to live. His aim was to inculcate scientific attitude among people.

Periyar viewed life as an integrated one. Hence he devoted his time for the eradication of the caste system. He intended to give a voice to the down-trodden so that they can rebel against the unjust system.

New value system is needed for building a new society. He thus championed self-respect marriages on a large scale. Not only Brahmin priest was dispensed with but encouragement was also given to marry intercaste. The self-respect marriages were done at the socalled inauspicious hours. Thus the socalled Rahukala and other irrational practices were opposed openly. He also discouraged 'thali' and other religious symbols of marriages. It was a radical departure from the tradition. He said: "The self-respect marriage is a revolt against Dharma Sastras, against religious rites and ceremonies."

Morality is a social necessity Social outlook is the basis for the survival of human race. They have nothing to do with religion. He emphasised that rationalism must improve morality. Thus Periyar had a new direction to people to march ahead.

Old value system should be replaced with a new one to suit to the needs of present day society. When Gora organised the beef and pork function at Atheist Centre, Vijayawada on the Silver Jubilee of Indian Independence, Periyar not only supported the idea but he personally participated in beef and pork parties later on when they were held in Tamilnadu.

Periyar grew young with his age. His long life was a saga of courage, serifice and struggles. He toiled hard to convey the message of atheism and rationalism in the nook and corner of the State and thus save people from the cluches of religion. He was a harbinger of change.

It is the responsibility of the younger generation to carry forward the work of Periyar with great determination. A new trend has set in different countries; religious revivalism. Communalism and casteism are raising their ugly heads. Hence utmost care is needed to safeguard the gaims of rationalism and atheism. This is the time to think and act collectively.

The Centenary celebrations of Periyar give us an occasion to redeicate ourselves to the cause of atheism and rationalism. Periyar will live in the hearts of people for ever, as a great atheist revolutionary.

*With best compliments from* :

Phone: 87511

**KUGA PROCESS**

Specialists: Tri-Colours, Half-Tone, Line Blocks, Cartan Publicity Blocks

2/17, MEERAN SAHIB STREET,
Madras–600 002.

KAIN CHITHRA SUPERIOR
1500

*With best compliments from :*

# City Palayacat Company

MANUFACTURERS OF HANDLOOM LUNGHEES

**IMPORTERS - EXPORTERS**

No. 63, Muthumari Chetty Street, MADRAS-600 001.

Phone : 22506 Grams : KODEE

**ASSOCIATED WITH :**

## Chithra Palayacat Company

HEAD OFFICE :

142, Beach Street,

PENANG, : : MALAYSIA

BRANCH :

159, Arab Street, SINGAPORE-7.

Phone : Penange : 64330 Singapore : 363986.








நூற்றாண்டு






















உரிமை















32





# வாழ்ந்தோம்!  வாழ்வோம்!!

கழக அமைப்புச் செயலாளர்: கோ. சாமிதுரை எம்.ஏ; பி.எல்.,

தந்தை பெரியார் 100வது நிறைவு ஆண்டில் நாம் வாழ்ந்தோம் என்ற பெருமை நமக்குண்டு. அவர் வாழ்க்கை நெறியை நாம் புரிந்து கொண்டால் நாம் வாழ்வாங்கு வாழ்வோம். அவர் வாழ்க்கையே ஒரு வாழ்க்கை நெறி. அந்த நெறியில் வாழ்பவருக்கு வாழ்க்கையில் கஷ்டம் என்பதே வரமுடியாது. எதிர்பாராமல் இயற்கை கோளாறால் உடல்நலம் பாதிக்கப்படலாமே தவிர வாழ்க்கைப் பாதையில் வேறு கஷ்டம் வரவே முடியாது.

நன்றி பாராமல் சமுதாயத்தொண்டு செய்ய வேண்டும் என்றார். அதனால் சமுதாயத் தொண்டு செய்தோம் என்ற மகிழ்ச்சி. அதனால் உடல் பூரிப்படைகிறது. செழிப்பு உண்டாகி உடல் நலம் அடைகிறது. நம் கடமையை செய்தோம் என்ற மனத்திருப்தி. நன்றி எதிர்பாராததால் அது ஒரு நடப்பு லட்சியமாகப் போய்விட்டதால் வாழ்க்கையில் சலிப்பே வராமல் போய்விடுகிறது. மற்றும் நன்றி பாராட்டை பெறுவதாலும் எந்தவித நன்மையும் கிடையாது. கடவுளை வணங்குவதால் நன்மை கிடைக்கும் என்பது எவ்வளவு முட்டாள்தனமோ அதுபோல நன்றிபாராட்டை பெறுவதால் நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும் ஆகும். வீண் பிரமை அவ்வளவுதான்.

## கடவுளை—மற மனிதனை நினை !

ஒரு அமைப்பில் இருப்பவருக்குக் கட்டுப்பாடுதான் முக்கியமென்றார். ஆகவே கட்டுப்பட்டு வாழ்வதால் நமக்கு என்று எவ்வித சபலமோ ஆசாபாசமோ ஏற்பட இடம் இல்லாமல் போவதால் எவ்வித மனக்கவலையோ கிலேசமோ இல்லாமல் சுதந்தர மனிதனாக வாழமுடிகிறது. ஒரு மனிதனுக்கு இருக்கும் பெருமை எல்லாம் தான் கொள்கைவாதியாக வாழ்ந்தான் என்பதைவிட தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அமைப்புக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தான் என்பதுதான். அதில் இருக்கும் சுதந்தரம் கட்டுப்பாடற்ற கொள்கைவாதிக்கு கிடையாது.



கடவுளைமற மனிதனை நினை என்பதால் உலகில் எந்த பாகத்தில் இருக்கும் மனிதனும் நமக்கு நண்பனே ! கடவுள் என்று ஒன்று இல்லாததால் நமக்கு எதிரியே இல்லை. உலகில் அத்துணை மனிதர்களும் நமக்கு நண்பர்களே.

பகுத்தறிவு வாதி என்பவன் சராசரி மனித வாழ்க்கையை நடப்பு லட்சியமாகக் கொண்டவன் என்பதால் அவனுக்கு வாழ்க்கையில் கஷ்டமே வரமுடியாது. ஒரு மனிதன் சம்பாதிக்க முடிகிறதோ—இல்லையோ, செலவு என்பதே இல்லாமல் செய்துவிட்டதால் மனிதன் மிகவும் மகிழ்ச்சியாக வாழமுடிகிறது. வருவாய் போதாமல் இருப்பதற்கும், கடன்காரர்களாக இருப்பதற்கும் காரணம், நமது பலவீனத்தின் பயனான பேராசையும் அவசரமுமேயாகும்.

ஜீவசுபாவம் அவரவர் உடலின் அமைப்பைப்பொறுத்தது. அதாவது, நாய்க்கு விசுவாசம் இருப்பது போலவும், பூனைக்கு வஞ்சகம், திருட்டு வாழ்வு இருப்பதுபோலவும், கழுகுக்கு தூரப்பார்வை இருப்பது போலவும், ஆந்தைக்கு இருட்டில் பார்வை இருப்பதுபோலவும், சரீர, இந்திரிய, தாது, கரண அமைப்புப்படித்தான் குணங்கள், செய்கைகள், சக்திகள் இருக்கின்றன என்பதால் அதை தந்தை பெரியாரால் நாம் புரிந்து கொண்டதால் நாம் யாரிடமும் நெருங்கி அந்தந்த ஜீவசுபாவத்தைத் தெரிந்து நம்மை அதற்குத்தகுந்தபடி மாற்றிக்கொள்ள முடிவதால் நமக்கு விரோதிகளால் கஷ்டம் ஏற்படுத்த முடியவில்லை. கணவன், மனைவியும் இந்த ஜீவசுபாவத்தைப் புரிந்துகொண்டால் வாழ்க்கையில் சலிப்பே வராது.

## அரசியல் பக்கம் திரும்போம் !

முகசவரம் செய்துகொள்வது, ஏன் குளிப்பதுகூட, நேரத்தை எடுத்துக் கொள்கிறதே என்பதை பெரியார் சொன்னதால்-நாம் புரிந்து கொண்டிருப்பதால் காலத்தின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொண்டு உழைப்பதால்

கொங்கு மண்டலத்திற்கு ஒரு
புதுமைப் படைப்பு

V

கிளாத் சென்டர்
பிரகாசம் சாரி சென்டர்
டெக்ஸ்டைல் சென்டர்
அசோகா ரெடிமேட் ஸ்டோர்ஸ்

பிரகாசம் சர்க்கிள்,

கோயம்புத்தூர்-1.

போன்: 23935
34465

எல்லாம் வரவு ஆகவே இருப்பதால் எவ்வித கஷ்டமும் வரமுடியாது.

அரசியலே கூடாது என்று சொல்லிவிட்டதால் நமக்குப் பதவி ஆசையோ, அதனால் கட்சி மாறும் எண்ணமோ சபலத்திற்கு ஆளாகும் அவசியமோ இல்லாமல் போய்விடுகிறது.

ஆகவே, நன்றி எதிர்பாராமல் ஒரு அமைப்பில் கட்டுப்பாட்டோடு மற்றவரின் ஜீவசுபாவம் தெரிந்து மனிதனை மதிக்கக் கற்றுக்கொண்டு பகுத்தறிவுவாதியாகக் காலத்தை வீணாக்காமல் அரசியல் பக்கம் திரும்பாமல் வாழ்வதை லட்சியமாகக் கொண்டுவிட்டால் நாம் 100வது ஆண்டு நிறைவு விழாவில் வாழ்ந்தோம் என்பதோடு இனியும் மற்றவர்களைவிட சிறப்பாக வாழ்வோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

*

# GREETINGS

Dear Shri Veeramani,

Many thanks for your printed letter regarding the Completion celebration of the Centenary of Thanthai Periyar at Thanjavur on 15th, 16th and 17th September, 1979. I am afraid, I will not be able to attend the same owing to previous engagement.

Thanthai Periyar was a great son of our country and he has rightly diagonised the disease with which our countrymen were suffering and therefore our country is suffering. It is absolutely true that because of the Hindu scriptures and Hindu customs all our poor and downtrodden people were deliberately made ignorant and superstitious so that they can serve like slaves the necessities of Caste Hindus specially the Brahmins. It is unfortunate that we are still suffering from the same disease even after 30 years of independence.

I find this disease is more at present in North India than South India. This does not mean that we have to fight only in North India against the poisonous Caste System and the Religious scriptures of the Hindus in North India. We have to fight also against this devil in South India. Thanthai Periyar fought against this vicious system and died for this great cause.

I and all our down trodden people here are happy that the Govt. of Tamil Nadu have also been celebrating the Centenary of Thanthai Periyar as a State function in all important places of Tamil Nadu as a mark of honour to the great Social Revolutionary.

I wish your Completion celebration of the Centenary of Thanthai Periyar a thumping success.

With kind regards,

**Justice R. R. BHOLE,**
Member All India Backward Classes Commission,
Former Judge High Court,
8, Sarang General Bhosale Road, Bombay.

வாழ்க பெரியார் !

வளர்க பகுத்தறிவு !

தங்கவேல் பீடி புகைக்கும் நண்பர்களுக்கு எமது வேண்டுகோள் ! தமிழ்நாட்டில் இலட்சக் கணக்கான மக்கள் விரும்பி புகைப்பது தங்கவேல் பீடி ; சுகாதார முறைப்படி விஞ்ஞான ரீதியில் நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிப்பது தங்கவேல் பீடி ; தங்கவேல் பீடியை எப்போதும்போல வாங்கிப்புகைத்து மகிழ்ச்சி அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.




இங்ஙனம்,

**K. K. சின்னராசு.**

உரிமையாளர் :

**தங்கவேல் பீடி கம்பெனி**

சோலையார்பேட்டை, (வ. ஆ.)

**தமிழ்நாடு.**

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளில் எங்களின் இதய வாழ்த்துக்கள் !



**மாப்பிள்ளை நாயக்கர் அண் கோ.,**

மஞ்சள் மண்டி,

**நேதாஜி ரோடு,**

**ஈரோடு.**




# வேம்பு இனிக்காது!

—அ. இறையனார் எம்.ஏ.

''யாருக்குத்தான் தெரியாது வேம்பு இனிக்காது என்பது ?''—கேட்பவர்கள் இல்லாமலில்லை. ஆயினும் இந்த இயல்பான உண்மையைக் கூட அடிக்கடி நினைவுபடுத்தியாக வேண்டிய அவலநிலை தரணியிலேயே நம் தமிழ் இனத்துக்குமட்டும் உண்டு !

''வாயில்—நாக்கில்—குற்றம் இருந்தாலொழிய வேம்பு இனிக்காது; தேன் கசக்காது. பிறவியில் மாறுதல் இருந்தாலொழிய புலி புல்லைத் தின்னாது; ஆடு மனிதனைத் தின்னாது. அதுபோலவாக்கும் நம் பார்ப்பனர்கள் தன்மை'' எனும் தமிழினத்தலைவரின் வரலாற்றுப் புகழ்மிக்க கூற்றில்தான் எத்துணை ஆழமான பொருள் ! சென்னை உயர் முறை மன்றத் தீர்ப்பாளர் முன்னிலையிலேயே அய்யா அவர்கள் இப்படித் தமது தீர்ப்பினைப் பதிவு செய்தது திடீரெனச் சீற்றங் கொண்டு அல்ல ; நிறைந்த பட்டறிவின் அடிப்படையில் தேர்ந்த சிந்தனையுடன்தான் உலகில் எவராலும் வெல்லமுடியாத மெய்ப்பொருட் பொய்யா மொழியாக நிலைபெற்றுவிட்ட சொற்றொடரை வார்த்தார்.

## பார்ப்பனர்கட்கு அய்யாவின் அறிவுரைகள் !

நாட்டில் பெரும் தலைவராய் விளங்கி பார்ப்பனரின் கொடுமைப் பண்புகளை எதிர்த்துக் காங்கிரசிலிருந்து வெளிவந்து தனி இயக்கம் உருவாக்கிய தந்தையவர்கள், ''நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்பதெல்லாம் எங்களையும் சமமாகப் பாவியுங்கள், எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவு படுத்தி எங்களைக் கொல்லாதீர்கள் என்பதேயன்றி வேறில்லை'' (3'-7-'26 அன்று திருவல்லிக்கேணிக்கூட்டத்தில் பேச்சு) என்று தம் நிலையைத் தெளிவு படுத்தினார் ஆனாலும் ஆரியம் ஆணவத்திலேயே மிதந்து ஆர்ப்பரித்தது.

முதலாம் இந்தி மறுப்புப் போரின் விளைவாக நாட்டில் நிலவிய ஒரு விழிப்புச் சூழ்நிலையில், ''பார்ப்பனர்களும் தமிழர்களும் ஆங்கிலேயர்களால் ஆளப்படுகிற பொதுக் குடிகள் என்று சொல்லக்கூடியதைத் தவிர வேறு எந்த வகையிலும் ஒற்றுமைப்பட்டவர்கள் அல்ல'' எனும் பேருண்மையைப் (31-5-39 'விடுதலை'யில் சித்திரபுத்திரன் கட்டுரை) பெரியாரவர்கள் எடுத்துக்காட்டியதைப் பார்ப்பனர் எச்சரிக்கையாகக் கொண்டு புதிய நோக்கும் புதிய போக்கும் கொண்டாரில்லை. மாறாக, ''நீங்கள் எங்களோடு ஒன்றுபடாவிட்டாலும் நாசமாய்ப் போங்கள். எங்களுக்குள்ளாவது ஒற்றுமை ஏற்பட்டு வருவதைத் தடைசெய்யாதீர்கள்'' (29-9-48 ல் தில்லையில் பேச்சு) என்று அய்யா நொந்து பேசக்கூடிய அளவுக்குத்தான் நிலைமை மேலும் சீர் கெட்டது !

சில ஆண்டுகட்குப்பின் ஒரு பார்ப்பனர் சங்கத்தில், ''திராவிடர் கழகமும் நானும் சொல்வதெல்லாம், விரும்புவதெல்லாம் இந்த நாட்டிலே நாங்களும் கொஞ்சம் மனிதத் தன்மையோடு சமத்துவமாக இருக்கவேண்டும் என்பதுதான்'' (5–1-53 ல் இலட்சுமிபுரம் யுவர் சங்கப்பேச்சு) என நம் உரிமைக்காவலர் பண்பாடு ஒளிர அறிவித்ததை 'அவாள்' கூட்டம் பொருட்படுத்தாமல், தொடர்ந்து இந்நாட்டுப் பெரும்பான்மை மக்களின் நலன்களுக்குக் கேடான செயல்களை நேரடியாகவும் மறைமுகமாயும் புரிவதில் சற்றும் தயக்கம் காட்டவேயில்லை !

இவற்றை யெல்லாம் உண்ணியே அறிவியல் அணுகுமுறையுடன் அய்யா அவர்கள் பார்ப்பனரின் மாறாத்தன்மையை உயர்மன்றத்தில் உறுதிப் படுத்தினார், தக்க உவமைகள் காட்டி. அவர்தம் கணிப்பு எவ்வளவு துல்லியமானது என்பதைப் பார்ப்பனர்தம்

நடவடிக்கைகள் அய்யத்திற்கிடமின்றி மெய்ப்பித்து வருகின்றன.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உயர்ந்த குடியினர் என்று பொருள்படும் ஆரியர் எனும் பெயரையே தங்கட்குச் சூட்டிக் கொண்டவர்கள் அந்த இனவுயர்வுக் கருத்தை இன்றுவரை நிலைநாட்ட முயலத் தவறுவதில்லை. ''யோக்கியனாக இருந்தால் பார்ப்பான் வந்து சொல்லட்டுமே நமக்குள்ளே சாதிபேதமில்லை, நாமெல்லாம் ஒன்றுதான் ; உன்னைத் தொடமாட்டேன் என்று சொன்னது தவறு என்று சொல்லிப் பூணூலை அறுத்து எறிந்துவிட்டு வரட்டுமே!'' (3-9-71 ல் அவலூர்ப்பேட்டைப்பேச்சு) என நம் காவலர் அறைகூவல் விடுத்திருக்க, உண்மையின் விலையைக் கண்டுபிடிக்க கிளம்பிய கோமாளி ராமன் உட்பட அத்தனை பார்ப்பனரும் முப்புரிநூல் அணிந்து கொள்ளக் கூச்சப்படுவதேயில்லை.

## மனுவின் அதர்மச் சட்டம் !

அன்று, ''பிராமணர்களை வழிபடாததால் சத்திரியர் வரவர சூத்திரத்தன்மை அடைந்தார்கள்'' என்று மனு(அ)தர்ம நூலிலேயே (அத். 10, சு.43) அறுதியிட்டு,''தென்னிந்தியாவிலுள்ள திராவிடர், சத்திரியர் எனும் நிலையிலிருந்து கீழிறக்கப்பட்டுவிட்டார்கள்' ' என உறுதி செய்த பார்ப்பனர், இன்று, ''சாதி என்பது மதசம்பந்தமுடையது. சட்டத்திலும் மத நூல்கள் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன. இப்பிறப்பின் தன்மை முற்பிறப்பில் செய்த கருமத்தின் விளைவே என்று அறநூல்கள் கூறுகின்றன. அதனால் ஒருவன் தன் சாதி அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள முடியாது'' (தமிழ்க் கலைக் களஞ்சியம்; சாதியும் சட்டமும்) என்பதாகச் சட்ட ஏற்பும் வழங்கி, தங்களின் சாதியுயர்வு நிலையை வலுப்படுத்திக் கொள்ளத்தான் வழி பார்க்கிறார்கள்.

தி. மு. க. ஆட்சியின்போது 'ஒன்றே குலம்' எனும் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட எல்லா (சாதி) மக்களும் சான்றிதழ் பெற்றுக் கோயில் அர்ச்சகராகலாம் எனும் சட்டத்தை எதிர்த்து அவர்தம் இனத்தலைவர் இராசகோபாலாச்சாரியின் ஊக்கவுரையோடு இந்திய மீவுயர் மன்றத்திற்கே சென்ற பார்ப்பனர், ''ஆகமங்கலால் அதிகாரம் வழங்கப்படாதகை பட்டால் கடவுள் உருவம் தீட்டுப் பட்டுவிடும்'' என்பதாகத் தீர்ப்பும் வாங்கி இந்நாட்டு 97 விழுக்காட்டு மக்களை, 'சாமி'யைத் தீண்டத்தகாத — 'தீட்டு'க்குரிய இழி பிறவிகளென பறையறை செய்துவிட்டார்கள் என்றால் இவர்களைப் போலப் பண்பாடற்ற கொடிய மாந்தர் வேறெவரேனும் இருக்க முடியுமா ?

இனி இந்நாட்டையாண்ட மன்னர்களை, ''குளித்த குதிரையும் காமவிகாரப்பட்ட காளை, மதங்கொண்ட யானை, படித்த சூத்திரன் ஆகியோர் ஆபத்தானவர்கள்'' எனும் தரும சாத்திரக் கட்டளையை மதித்துப் போற்றயொழுகச் செய்து, பெரும்பான்மை மக்கள் கல்வி எய்த வியலாமலும் அதன் விளைவாக எந்த உயர்ந்த அரசுப்பொறுப்புக்களிலும் அமர முடியாமலும் செய்வதிலே எப்போதும் குறியாகவிருந்திருக்கிறார்கள்.

## தமிழ்ப் புலவருக்குத் தண்டனை!

மதுரையில் திருமலை நாயக்கரின் ஆட்சியின்போது, 'ஸகஸ்ர சீர்ஷ புருஷ' என்னும் வேதசுலோகம்பற்றிய விளக்கம் தெரிய விரும்பிய தமிழ்ப் புலவரொருவரை, மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆட்சியதிகாரத்தை அரசனிடமிருந்து ஏற்ற பார்ப்பன-குரு, கழுவில் ஏற்றி உயிரைக் குடித்துவிட்டு, ''வேதத்துக்குப் பொருள் கேட்கும் சூத்திரனுக்கு இதுதான் விடை'' என்ற செய்தி நமக்குப் பலப்பல உணர்த்துகிறது.

அத்தகைய வழிவந்த ஆரிய வஞ்சகர் அய்யாவின் விடாப்பிடியான முயற்சியால் நமக்குக் கிடைத்த வகுப்புரிமை, சட்டப்படி செல்லாது என்றாக்குதற்காக வழக்குத் தொடுக்க, எந்த அல்லாடி கிருட்டினசாமி குடியரசுச் சட்டத்தை வடித்தாரோ அந்தக் 'கில்லாடி அய்யர்' நேரில் வழக்கு மன்றம் நுழைந்து, விளக்கங்கள் அருளி வெற்றிக்கொடி நாட்டினார்.

அப்போது உரிமைக் காவலராம் அய்யா அவர்கள் குமுறியெழுந்து போராடி வகுப்புரிமைக்காக அரசியற் சட்டத்திலேயே அடிப்படை அமைத்துக் கொடுத்திராவிட்டால் தமிழினத்துக்கு விடிவு காலம் ஏற்பட்டிருக்குமாவென்பதை எண்ணிப் பார்த்தால்தான் ஆரிய சூழ்ச்சி வெளிப்படும்; அய்யாவின் அருமையும் புலப்படும்.

## 'இந்து'க் கூட்டத்தின் பரம்பரை ஒப்பாரி !

'இந்து'வும் அதன் பந்து-மித்திரர்களும் பிற்படுத்தப்பட்டோருக்கும் — ஏன், தாழ்த்தப்பட்டோர்க்குங்கூட — தனியொதுக்கீடுகள் கூடவே கூடாதென்றும், ஒதுக்கீட்டுமுறை தரமுள்ளோரைத் தடுத்து, தகுதியற்றோரைப்



புகுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்குக் கேடு விளைவிக்கின்றன என்றும் வாய்க்கும் போதெல்லாம் அலறிக் கொண்டிருப்பதைத் தங்கள் கடமையாகவே கருதுகின்றனரே. உயர்மன்ற நடுவர் இராமமூர்த்தி அய்யர் தான் ஓய்வுபெறும் கட்டத்தில், ''அய்கோர்ட் நீதிபதியை நியமிக்கத் தற்போதிருக்கும் முறையை அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்துவிட வேண்டும். அரசியல் செல்வாக்கு காரணமாகத் தகுதியற்றவர்கள் நீதிபதிகளாய் வந்து விடுகிறார்கள்'' என வெளிப்படையாய்த் திருவாய் மலருவதன் தீயநோக்கம் எளிதாய்ப் புரியக் கூடியதே.

மேலும், தமிழர்கள் தங்கள் நடவடிக்கைகளுக்குத் தம் தாய்மொழியைப் பயன்படுத்த இயற்கையாக விரும்புவதை, தமிழகத்திலேயே பிழைத்துக்கொண்டிருக்கும் பார்ப்பனர் எதிர்த்துக் கெடுக்க முனையாமல் இருப்பதில்லை.

கோயில்களில் வடமொழியில்தான் 'அர்ச்சனை' நடைபெற வேண்டும் என்னும் கட்டாய நிலையைப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பு தோற்றுவித்த அந்தச் சூழ்ச்சியாளர்கள் இன்னும் அந்த நிலை எந்த மாற்றமுமின்றி நீடிக்க வேண்டுமென்பதற்காக எதனையும் செய்கின்றனர். வடசென்னை 'ஏகாம்பரேசுவரர்' கோவிலில் அன்றைய அறநிலைய அமைச்சர் கண்ணப்பனார் தலைமையில் தமிழ் அர்ச்சனைத் தொடக்க விழா நடந்தபோது வழிமறித்துக் கூச்சலிட்ட பழிகாரக் கூட்டம் இந்திய மீயுயர் மன்றத்தின் துணையோடு தமிழ்நாட்டில் தமிழர் எழுப்பிய கோயில்களில் தமிழிலே வழிபாடு நடக்கவொட்டாமற் பண்ணி இழிபுகழ் ஈட்டிக் கொண்டது.

தமிழ் நிலத்தின் இசைமேடைகளில் தமிழ்ப் பாடல்களே பாடப்பெறுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டித மு. கதிரேசனார், சி. வேதாசலனார் ஆகிய சான்றோரால் கொண்டுவரப்பட்ட தமிழிசைத் தீர்மானத்தை ஏற்கமறுத்து எதிரோலை தந்தவர்கள் இராமாநுஜ ஆச்சாரி, மயிலேறு அய்யர், ஸ்ரீநிவாச அய்யர், சுந்தரம் அய்யர், நரசிங்கராயர், வெங்கடராம சாஸ்திரி ஆகிய மேற்குல மேதைகளே.

தமிழகத்தில் பிறந்து, தமிழகத்தில் பிழைத்து, தமிழகத்திலிருந்து அமெரிக்கா சென்று 'புதிய அனுபவங்கள்' பெற்ற சிவசங்கரி என்னும் பார்ப்பன எழுத்தாளர் எம். எசு. சுப்புலட்சுமி இசைவாணிக்குக் காஞ்சிப் பெரியவாள் யாத்தருளிய 'மைத்ரீம் பஜத' எனும் வடமொழி வரிகளைப் பாடிப் பாராட்டு மழையில் குளித்ததை அவரே பெருமிதத்துடன் வெளியிட்டிருப்பது நமக்கு ஓராயிரம் உண்மைகளை உணர்த்திக் காட்ட வல்லதாகும்.

## அய்யா புகழைக் கண்டு அக்கிரகாரத்தின் வயிற்றெரிச்சல் !

இவ்வாறு நாட்டின் பெரும்பான்மையினரிடமிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு அதே நேரத்தில் அம்மக்களின் வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலும் ஊடுருவி, ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கும் சுரண்டல் கும்பல், மக்கள் தலைவர்களைப் பற்றி எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நோக்கினால் இவர்கள் மாந்தப் பிறவிகள்தாமா என வியக்காமல் இருக்க வியலாது !

தமிழினத்தின் மீட்பர் அய்யா அவர்களைப் பற்றி, ''இவரைத் தந்தை என்றும் அழைப்பவர்கள் இருக்கிறார்கள்'' என்பதாகச் சீர்கெட்டு எழுதும் சிவராமன்கள் முதல், ''பெரியார் நூற்றாண்டு விழாவில் பெரியார், பெரியார், பெரியார், பெரியார், பெரியார், பெரியார் என்று ஓயாமல் ஜெபம்'' செய்யப்படுவதாக, தன் மை தீரும்மட்டும் மனவெறி ஆறும்மட்டும் கிறுக்கித் தள்ளும் 'சோ'க்கள்வரை, மக்களிடையே கருத்துக்களை உருவாக்கும் இடங்களில் அமர்ந்திருப்போர் 'அக்கிரகார அம்மாமி'களால் எப்படி வளர்க்கப்பட்டிருக்க வேண்டு



மென்பதைக் கடுகளவு அறிவுள்ளோரும் கற்பனை செய்துவிட முடியும்.

குடியரசுத் தலைவரின் ஆட்சியெனும் பெயரில் தமிழகத்தில் கோலோச்சிய ஆர். வி. சுப்பிரமணியம் என்ற ஆரிய அதிகாரியைக் கொண்டு, பள்ளிப் பாட நூற்களில் தமிழர் தலைவர்களாம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பற்றிய சிறப்பான செய்திகளை யெல்லாம் நீக்கிவிடப் பார்ப்பனர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மறைவானவையன்று.

மறைமலையடிகள், புரட்சிக் கவிஞர், அன்னை மணியம்மையார் ஆகிய பெருமக்கள் மறைந்த வேளைகளில் அவர்களின் பெயர்களைச் செய்தித் தலைப்பூக்களாக அல்லாமல் செத்துப் போனோர் பட்டியலில் (Obituary) வெளியிட்ட மவுண்ட் ரோட் மகாவிஷ்ணு'வின் நாகரிகம்(!) அவர்களுக்கே உரிய அழியாத் தன்மையல்லவா ?

திராவிடப் பெருங்குடி மக்கள் தங்கள் நன்றியுணர்வின் சான்றுச் சின்னங்களாக ஆங்காங்கே அய்யா—அண்ணா படிமங்கள் நிறுவி வருவதைக் கிண்டல் படம் போட்டுத் தன் தினவைத் தீர்த்துக் கொள்ளுகிறது ஒரு 'மொட்டை'யென்றால் அந்தத் துணிச்சலைப் பற்றிக் கணித்தறிதல் நம் கடமை.

*பார்ப்பனர்—குற்றப் பரம்பரையினர் !*

இவை போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளையும், 'குற்றப் பரம்பரையினர்' என நம் அறிவாசானால் பட்டம் சூட்டப்பட்ட இந்த இனத்தின் போக்குகளை மாற்றுவதற்கு, இந்தப் புரட்சிக் காலத்தில்கூட எந்தப் பார்ப்பனரும் தனியாகவோ, குழுவாகவோ நல்லெண்ணத்துடன் இயங்க முனைந்தது கிடையாது என்னும் பேருண்மையினையும் ஆராய்ந்து பார்க்கும் எவரும் அய்யாவின் தெளிவான முடிவைப் பெரும் படிப்பினையாக ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஆம், வள்ளுவரின் 'கயமை' அதிகாரப் பண்புகளையெல்லாம் மிஞ்சிவிட்ட பார்ப்பனரினம் எனும் வேம்பு—ஒரு வேளை பல தலைமுறைகட்குப் பிறப்பு மாற்றத்திற்கு உட்பட்டாலொழிய இனிக்கவே இனிக்காது ; இனிக்க முடியாது. 'இனிக்கிறதே' என ஏமாளித் தமிழர் எவரேனும் இயம்பினால் அவரது நாக்கிலே குற்றமிருக்கிறது என்றுதான் பொருள் ! *


கையாலாகாதவனுக்கு கடவுள் துணை. அறிவில்லாதவனுக்கு ஆண்டவன் செயல். தவறை உணரமுடியாதவனுக்குத் தலை விதி.

கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்லிக் கொண்டு நேர்ட்டதற்கெல்லாம் கடவுள் மீது பழி போட்டுக் கொண்டு திரிகின்றவன் ஒரு மூடன்.

—தந்தை பெரியார்

Tel : YEMAR

Phone : 285, 285A, 748, Resi 548

**M. ராம்சிங்**

நெல், அரிசி வியாபாரம் & கமிஷன் மளிகை,

தேனி.

**R. சந்திரா**

நெல் & அரிசி வியாபாரம்

தேனி,

தினேஷ்சிங் கமிஷன் ஏஜென்ஸி

பருத்தி கமிஷன் மளிகை

தேனி.






# சூத்திரர்களின் கல்வித்தடை - ஓட்டம்





சூத்திரன் படிக்கக் கூடாது படித்தால் நாவை அறுக்க வேண்டும் என்பது மனு தர்மம்

1922 திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் மனு தர்மத்தைக் கொளுத்த வேண்டும் என்றார் தந்தை பெரியார்.







1937-39-ல் ராஜகோபாலாச் சாரியாரின் ஆட்சி காலத்தில் 2,500 பள்ளிகளை இழுத்து மூடினார். கட்டாய இந்தியைப் புகுத்தினார்.




பெரியார் போர்க்கொடி தூக்கினார். கட்டாய இந்தியை விரட்டினார்.


மருத்துவக் கல்லூரியில் சேர சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்று பார்ப்பனர் ஆட்சியில் நிபந்தனை வைத்திருந்தனர்.
சமஸ்கிருதம்
மருத்துவக் கல்லூரியில் சேர எவரும் சமஸ்கிருதம் படிக்க வேண்டாம்
பனகல் ராஜா முதலவராக இருந்த நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் இது ஒழிக்கப்பட்டது.
1950-ல் கம்யூனல் ஜி.ஓ.வை பார்ப்பனர்கள் ஒழித்துக் கட்டினர்.
கம்யூனல் ஜி.ஓ
பெரியார் போராடி இந்திய அரசியல் சட்டத்தை முதன் முதலாக திருத்தச் செய்து கம்யூனல் ஜி.ஓ.வைக் காப்பாற்றினார்.
கம்யூனல் ஜி.ஓ


சிலேட்டு புத்தகத்தை நான் எடுத்துக்கிறேன் உங்கப்பன் தொழிலே நீ செய்.
1954-ல் ஆச்சாரியார் குலக்கல்வித் திட்டம் கொண்டுவந்தார். அப்பன் தொழிலைத் தான் பிள்ளை செய்ய வேண்டும் என்றார்.
அக்கிரகாரத்துக்கு தீ வைக்க பெட்ரோலும், தீப்பந்தமும் தயாராக இருக்கட்டும் என்றார் அய்யா! ஆச்சாரியார் பதவியை விட்டு ஓடினார்.
தமிழர் கல்வி முன்னேற்றத்தைத் தடுக்க 'மார்க்' தகுதி திறமை என்று பார்ப்பனர் ஏற்பாடு
என்டா நீ சுப்பாணி மகனில்லியோ
'மார்க்' தகுதி திறமை மோசடிகள் பற்றி தந்தை பெரியார் தோலுரித்துக் காட்டினார்.
ஏதோ சூது நடக்குது இதைத் தடுக்கலேன்னா தமிழன் முன்னேற மாட்டான்






என்னை மனிதனாக்கிய தந்தைக்கு
வணக்கங்கள்

**இராம. அரங்கண்ணல்**
தயாரிப்பாளர்
ஆண்டாள் புரொடக்ஷன்ஸ்
சென்னை.

வெற்றிமுரசுகொட்டும் தெலுங்கு
காவியம்! 425 நாட்களாக பெங்களூரில்
இன்றும் ஓடிடும்

**மரோசரித்ரா**
(தெலுங்கு)

By
**கே பாலசந்தர்**

இப்பொழுது சென்னை சபையரில்
தினசரி மதியம் 11-30 மணி காட்சி
நடைபெறுகிறது.



தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில்
எங்களது நல்வாழ்த்துக்கள்!



M. N. ஜெயராமன் (சிற்பி) தொலைபேசி: 843203
**M/s. நாகப்பா & கோ.,**
2, நரசிங்கபுரம் தெரு, அண்ணா சாலை, சென்னை-600 002.
காரைக்குடி மற்றும் திருச்சி, தஞ்சாவூர், தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு,
சேலம், கும்பகோணம், திருவண்ணாமலை, சென்னை ஆகிய ஊர்களிலுள்ள
அய்யா சிலைகளை சிறப்பாக தயாரித்துக் கொடுத்துள்ளோம்.





ஓய்வுக் காலத்தை மகிழ்வுடன் கழிக்க

ஐ ஓ பி யின்

நிரந்தர வருவாய்த் திட்டம்

**இத்திட்டத்தின் சிறப்புகள் :**

* விரும்பும்வரை மாத வருமானம்
* வருடமொருமுறை போனஸ்
* 63 மாத வருவாய்க்குப் பிறகு எப்போது வேண்டுமானாலும் கணக்கை முடித்து அசல் திரும்பப் பெறுதல்

விபரங்களைப் பெற அருகிலுள்ள

ஐ ஓ பி - யின் கிளையை அணுகுங்கள்

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா



# பெரியார் விதைத்த பகுத்தறிவுக் கொள்கைகள்

# பூத்து மணம் பரப்பி புகழ் பெருக்கும் நாள் இதுவே

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி ஆகும். மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.

தீண்டாமை என்பதே, சாதி காரணமாக ஏற்பட்டதே தவிர, அதற்கு வேறுகாரணமோ ஆதாரமோ இல்லை. சாதியை வைத்துக் கொண்டு தீண்டாமை ஒழிய வேண்டும் என்பது சிறிதும் அறிவுடைமையாகாது என்பது எனது கருத்து.

எந்தத்துறையில் ஆகட்டும், சிந்திக்காதே 'நம்பு' என்று சொல்லி, சிந்திக்கவிடாமல் தடுப்பது, மனிதனை மிருகத்தை விடக் கீழான நிலைக்குக் கொண்டு செல்வதாகும்.

தமிழர்களான கவிஞர்கள், கட்டுரையாளர்கள், அறிவுப் பிரசாரம் செய்பவர்கள், எழுத்தாளர்கள மற்றும் நடிப்புத் துறையில் உள்ளவர்கள் முதலிய யாவரும் தங்கள் கலைகளை மக்களுக்குப் பயன்படும் தன்மையில், கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

—தந்தை பெரியார்

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை.

தந்தை பெரியார் அவர்களின்
நூற்றாண்டு நிறைவு விழாவாகிய
இவ்வரலாற்று சிறப்பு நாளில்
எங்களின் இதய வாழ்த்துக்கள் !

# ஸ்டார் டாக்கீஸ்

## (STAR TALKIES)

A. P. T. ரோடு, ஈரோடு.

**S. R. சந்தானம் & S. R. சாமி**

உரிமையாளர்கள்

வானளாவி நிற்கும்
டான்சி கோபுரங்கள்...
கட்டுமானங்கள்!

பல்வேறு மாநில மின்சார வாரியங்களுக்கு டிரான்ஸ்மிஷன் கோபுரங்களையும், தபால் மற்றும் தந்தி துறைக்கு மைக்ரோவேவ் கோபுரங்களையும் வழங்குவதில் டான்சி முன்னணியில் உள்ளது. அத்தகைய டான்சி கோபுரங்கள் நாடெங்கிலும் ஆங்காங்கே வானளாவி நிற்கின்றன.

கட்டுமானங்களைத் தயாரித்து வழங்குவதிலும் டான்சி பெரும் புகழ்பெற்ற நிறுவனமாகத் திகழ்கிறது. தொழிற்சாலை எதுவாக இருப்பினும், அதற்கு ஏற்ற கட்டுமானங்களை திறமையுடன் உருவாக்கி அமைக்கும் ஆற்றலும் அனுபவமும் பெற்றுள்ளது டான்சி



தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
1-ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014



டான்சியின்
விண்முட்டும் சக்தி!



ADG இண்டஸ்ட்ரீஸ்
எவர்சில்வர் பாத்திரங்கள் தயாரிப்பாளர்

டிரங்கு, பீரோ, லேத் ஒர்க்ஸ்,
டிரில் ஒர்க்ஸ் சிறந்த முறையில்
செய்யப்படும்.



விவரங்களுக்கு:
ADG இண்டஸ்ட்ரீஸ்
32 இராகவ முதலியார் தெரு திருப்பத்தூர் (வ. ஆ)
போன்: 511



Regd. No. 4789 "விடுதலை பெரியார் மலர்" 17-9-1979 விலை: ரூ. 10-00
"VIDUTHALAI—PERIYAR MALAR"

# இளைஞர்களே, போர் முனைக்கு வாருங்கள்

அன்புள்ள மாணவர்களே !

பிற்காலம் உங்களுடையது. நீங்கள் "படிப்பதும்", "படித்ததும்" உங்[illegible] வயிற்றுப் பிழைப்புக்கோ, வாழ்வுக்கோ வகை செய்து கொள்ளுவதற்கு மாத்திரமல்ல. நாட்டை[illegible]ருங்கள், நாட்டில் உங்கள் இன நிலைமையைப் பாருங்கள். திராவிடர் (தமிழர்) கு[illegible]ரர்களாக இருந்து வருவதும் திராவிடநாடு மிலேச்ச நாடாக கருதப்பட்டு வருவதும் ம[illegible] உரிமை இல்லாதிருப்பதும் நீங்கள் அறியாததா? இதற்கு இதுவரை "தெய்வீ[illegible]பெற்ற" பெரியார்களும் உங்கள் சமீப முன்னோர்களும் என்ன செய்தார்கள். இன்[illegible]ரபுக்கள், புலவர்கள், பெரும் பதவியாளர்கள்தான் ஆகட்டும் இவர்கள் என்ன செய்த[illegible] குறைந்த அளவு இந்த இழி நிலைக்கு நம்மை ஆக்கியவர்களையாவது அவர்களது [illegible]ளையாவது வேலைத்திட்ட நடப்பு முறையையாவது விலக்கினார்களா, வெறுக்கவாவ[illegible]ய்தார்களா? வெறுக்காதவர்களால் விலக்க முடியுமா? இப்படிப்பட்ட இவர்கள் சந்ததியில் [illegible]ந்த நமக்கு மான உணர்ச்சி வர இடமில்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அப்படி நமக்கு மான உணர்ச்சி ஏற்பட்டாலும் அது இயற்கைக்கு விரோதம்தான்.



ஆனாலும், நாம் செயற்கரிய காரியம் செய்ய முற்பட்டவர்கள்; இயற்கையை மாற்ற முடியும் என்பவர்கள்; இதற்கு இந்தக் காலமே வசதி என்று கண்டவர்கள்; இப்போது நாம் செய்யாவிட்டால் இனி செய்வதற்கு ஆட்களும் சந்தர்ப்பமும் கிடையாது என்றும் கருதுகிறவர்கள். ஏனெனில், இன்று நம்மக்கள் நிலை அப்படிப்போய்க் கொண்டிருக்கிறது. ஆதலாலேயே, இந்த நிலையை மாற்ற நாமே அருகர்கள். வெற்றி பெறினும், தோல்வி உறினும் நாமே உழைத்துப் பார்க்க வேண்டியவர்களாய் விட்டோம். விழியுங்கள், எழுந்திருங்கள், ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்கள் தனிப்பட்ட வாழ்வைக் காரித் துப்புங்கள். உங்கள் இனத்தை மனிதத் தன்மையை தாக்குங்கள். நம் நாட்டை மேன்மையும் வீரமும் பொருந்திய நாடாக்குங்கள். நாடு நகரம் பட்டி தொட்டி எல்லாம் தன்மானக் குரலெழுப்புங்கள்.

கோழைகளையும், தந்தல வீணர்களையும் நல்லுருவாக்குங்கள். [illegible]ன் மக்களை ஆண்மையுள்ளவர்களாக ஆக்குங்கள். கீழ் மக்களை, தீண்டப்படாதவர்கள் [illegible]ன்பவர்களை மேன் மக்களாக ஆக்குங்கள். இவை உங்களால் முடியும்; கண்டிப்பாக மு[illegible]ம். அதுவும் இப்போதே முடியும்; இப்போதுதான் முடியும்.

இவை முடிவதற்கு முன் சுலபத்தில் குடும்பத்தினராக ஆகாதீர்கள் [illegible] ஆகாதீர்கள். [illegible] வாருங்கள்; போர் முனைக்கு வந்து வரிந்து கட்டி நில்லுங்கள்.

—தந்தை பெரிய[illegible]
('குடி அரசு' 15-4-19[illegible]4)

பெரியா[illegible]யமரியாதைப் பிரசார ஸ்தாபனத்தின் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்களை ஆசிரியராகவும், பிரசுரதாரராகவும் கொண்டு, சென்னை திராவிடன் அச்சகத்தில் (50, ரண்டால்ஸ் ரோடு, சென்னை-600007) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

129520


வாழ்க பெரியார் !



தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு நாளில்
எமது நல்வாழ்த்துக்கள் !

தந்தை வழியில் தளராது உழைப்போம் !

எங்களிடம் நாவிற்கு ருசிகரமாய்
சுகாதாரமுறையில் தினசரி தயாராகும்
அதிரசம், முறுக்கு, மிக்சர்
இனிப்புச்சேவு, பக்காவடை
நவதானியம், நெய்கடலை, தெக்கத்தி
மிட்டாய்கள் கிடைக்கும்.



தமிழக எண்ணெய்ப் பலகாரம்

உரிமையாளர்: பே. தேவசகாயம்

தயாரிப்பு & விற்பனை நிலையம்:
H.O. 92, திருப்பரங்குன்றம் சாலை, மதுரை-11.
கிளை: 261, மேலமாசி வீதி, மதுரை-1.


